மாலைகளைத்தரிப்பதற்கு ஏந்படுத்தப்பட்ட காலங்களிலேயே மாலைகளை அமைத்துக்கோயிலுக்குக்கொண்டுபோய் அன்போடு சாத்திச் செய்யவேண்டிய அர்ச்சனைகளைத்தடுமாறாகச் செய்து உருகிய மனதையுடையவராய்ச் சுவாமியின் பதத்தை அடைவதற்கு மிகுந்த உறுதியாய்ச் சிறந்த ஐந்தெழுத்தையும் இடைவிடாமல் நாவினால் உச்சரிக்கும் உணர்வினையுடையவராயிருந்தார் —(ஈ-து) (௬)

அன்னவடிவுமேனமுமாயறிவானிருவரறியாமன் . . .. *
மன்னும்புகழ்ஊருறைவானவர்த்தமானவிச்சரத்து .. .. *
நன்னர்மகிழ்ச்சிமனங்கொள்ளநாளுர்பூசைசெயுவாமே .. [ர்
பன்னும்பெருமையஞ்செழுத்துப்பயின்றேபணிந்து பாவிஞ

(இதன்பொருள்.)

முடியும் அடியும் அறியும்படியாகப்-பிரமாவும்-விஷ்ணுவும் அன்னமும் பன்றியுமாக உருக்கொண்டு தேடியும் அறியப்படாமல் நிலைபெற்ற நருப்புகளூரில் வாசஞ்செய்கின்ற சுவாமியை அவர்கள் திருவருளும் வர்த்தமானவிச்சரம் என்னுங் கோயிலில் மனது அதிசந்தோஷத்தை அடையவந்தாளும் பூசைசெய்து மன்செய்து எல்லாராலும் புகழப்படுகிற பெருமையையுடைய ஐந்தெழுத்தையும் செபித்து வணங்கிக்கொண்டு வந்தார்.— (ஈ-து) (௬௪)

தள்ளுமுறைமையொழித்திடவித்தருதியொழுகுமறையவர்தா
தெள்ளுமறைகண்முதலானஞானஞ்செம்பொன்வள்ளத்தி [ர்
வள்ளிபகிலமீன்றளித்தவம்மைமுலைப்பாலுடனுண்ட ... .. *
பிள்ளையார்க்குநன்பருமாம்பெருமையுடையாராயினார் .. *

(இதன்பொருள்.)

வேதாகமங்களில் விலக்கியிருக்கின்றவற்றை யாவரும்நீங்க அவர்களுக்குக்காட்டும்பொருட்டு இப்படிப்பட்டதருதியில் தாம் நடக்கின்ற முதுராயனார்-தெள்ளியவேதமுதலான வைகளை ஓதுங்கே யறியத்தக்க ஞானத்தை யெய்தப்பொன்னு,

செய்யப்பட்ட கிண்ணத்திலிருந்து அன்னி உலகமெல்லாம் படைத்துக் காத்தருளிய பார்வதியாரது முலைப்பாலோடு கலந்த சம்பந்தசுவாமிகளுக்குச் சிவேதிராகிய பெருமையையும் அடைந்தார்.—(எ-று) (கூ)

அந்நாளமருந்திருமுருகாறுநாற்புகலிப்பிள்ளையார் .... ..*
பொங்குமணத்தின்முன் செய்தபூசையதனுட்புக்கருளிச் ...*
செங்கண்டலேறுயர்த்தவர்தாஞ்சிறந்தவருளின் பொருளின்
தங்கள்பெருமானடிநீழற்றலையாதிலமைசார்வுற்றார் ....[தத்

(இதன்பொருள்)

அவ்வாறு இருக்கும் முருகநாயனார்-அழகுபெற்ற சீகாழியில் அவதரித்த சம்பந்தமூர்த்திசுவாமிகளது சிறப்பாகிய திருக்கலியாணத்தில் முன்செய்த பூசாபலத்தினால் அவ்விடத்திற்குச்சென்று சிவத்தலங்களையும் வல்லமையும் உடைய சிவிபத்தை வாகனமாகக்கொண்ட பரமசிவன்-மேன்மைபொருந்திய சிருபையாகிய பொருளை அனுக்கிரகம்பண்ணின திருவிளையாடலை தமக்கிறைவராகிய ஆண்டவரது திருப்பாதநிழலில வாசஞ்செய்யும்தலைமையாகிய நிலைமையை அடைந்தார்.—(எ-று) (கூ)

அரவமணிந்தவரையாளாரிச்சித்தவர்தங்கழனிழற்கீழ் .....*
விரவுபுகழார்முருகனார்மெய்மைத்தொண்டின்றிறம்போற்றிக்
காவிலவர்பால்வருவாரைக்கருத்திலுருத்திரங்கொண்டு....*
பாவுமன்பர்பகுதியார்பணித்தபெருமைபரவுற்றேன் ....*

(இதன்பொருள்.)

பாம்பினைத்தரித்த இடையை உடைய கைலாசபதியை அர்ச்சனைசெய்து அவரது திருப்பாதநிழலின்கீழ் அடைந்திருக்கின்ற திருப்புகழூர் முருகநாயனார்செய்த மெய்மையான திருத்தொண்டின் பெருமையைப்புகழ்ந்து மனதில்களங்கமில்லாத வரிடத்தில் வந்தருள்செய்கின்ற சுவாமியை மனதோடு உருத்திரத்தைக்கொண்டு ஸ்தோத்திரஞ்செய்கின்றபகுதிநாயனார்-பாவுகின்ற பத்தியின் பெருமையைக்குறித்துச் சொல்லத்தொடங்கினேன்.—(எ-று) உருத்திரமாவது-யசுர்வேதத்திலுள்ள காண்டத்தில் பரமசிவனை ஸ்தோத்திரம்செய்யும் ஒருபாகம்.

முருகநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆ. திருவிருத்தம்-தொகை ௩.

உருத்திரபசுபதிநாயனார்புராணம்.

நிலத்திலோங்கியநிறைந்தெழும்பெருநதிநீத்த . . . . *
மலர்த்தடம்பணைவயல்பருபொன்னிநன்னாட்டுக் . . . . . *
குலத்திலோங்கியகுறைவிலாநிறைகுடிகுழுமிக் . . . . . *
தலத்தின்மேம்படுந்தகுதியதுபெருந்திருத்தலையூர் . . . . . *

(இதன்பொருள்.)

பூமியில் உயர்வுபெற்ற அதிகமாகவருகின்ற காவேரி நதியின் வெள்ளம் பசுபக்களையுடைய தடாகங்களிலும் வயல்களிலும் புகுந்து செல்கின்ற தன்மையுற்ற சோளதேசத்தில் குலத்தாலுயர்ந்து யாதொன்றிலும் குறைவில்லாமல் நிறைவடைந்த பிராமணர்களுடைய குடிகள் நெருங்கி எல்லாவிடங்களிலும்பேரீபட்டணத்தை உடையது பெருமைபொருந்திய திருத்தலையூர்என்னுங்கிராமமாம் —(எ-று) (உ)

வானளிப்பனமறையவர்வேள்வியின்வளர்தீ . . . . . *
தேனளிப்பனநறுமலர்ச்செறிசெழுஞ்சோலை . . . . . *
யானளிப்பனவளஞ்சுகந்தாடுவார்க்கவ்வூர் . . . . . *
தானளிப்பன்தருமமும்வேள்வியுஞ்சாலையும் . . . . . *

(இதன்பொருள்)

பிராமணர்கள்செய்யும் யாகத்தில் ஆகுதியாக்வளர்கின்ற அக்கினியானது மழைபெய்யும்படிசெய்கின்றது- வாசனைபொருந்திய புஷ்பங்கள் நெருங்கிய செழிப்பாகிய சோலையானது தேனைப்பொழிகின்றன- பசுவானது பஞ்சகௌவ்யங்களை விருப்பி யாடுகின்றவர்களுக்கு அதைக்கொடுக்கின்றது- அவ்வூரிலுள்ளவர்கள் தர்மத்தையும் கொடையும் பெருமையையும் கொடுக்கின்றார்கள் —(எ-று) தருமம்-தானஞ்செய்தல் முதலானவைகளாம். கொடை-வித்துவான்கள் முதலியவர்களுக்குக்கொடுத்தலாம். பெருமையைகொடுத்தலாவது - யாவர்க்குத் தெரிவிக்கின்றார்களென்பது. (உ)

அங்கண்மாநகரதனிடையருமறைவளர்மைத் . . . . . *
தங்கவேதியர்குலத்தினிற்றோன்றியதுயோர் . . . . . *
செங்கண்மால்விடையார்செழும்பொன்மலைவல்லி . . . . . *
பங்கினாரடிமைத்திறம்புரிபசுபதியார் . . . . . *

(இதன்பொருள்)

அழகிய இடத்தையுடைய அந்தநகரத்தில் அரிதாகிய வேதங்
களை ஓதுதலால் சிறந்தபிராமணர்குலத்தில் அவதரித்த பரிசுத்த
ராகிய சிவந்தகண்களையுடைய விஷ்ணுவாகிய ரிஷபத்தைவா
கனமாகக்கொண்டவரும் செழுமைபொருந்திய பொன்னை
ய இமாசலராசன் புத்திரியாராகியபார்வதியாரைப் பாகத்
தில் உடையவருமாகிய பரமசிவனுக்கு அடிமைத்திறத்தைச்
செய்கின்ற பசுபதியாரென்று ஒருவரிருந்தார்.—(எ-று) (௬)

ஆயவந்தணரருமறையுருத்திரங்கொண்டு.... ....*
மாயனாரறியாமலர்ச்சேவடிவழுத்துந் ....*
தூயவன்பொடுதொடர்பினிலிடையறாச்சுருதி ....*
தேயநெஞ்சினராகியதொழிலிலைதின்றார் .. ..*

(இதன்பொருள்)

அப்படிப்பட்ட உருத்திரபசுபதிநாயனார் அரிதாகியவேதச
ம்பந்தமாகிய உருத்திரமந்திரத்தைக்கொண்டு விஷ்ணுவால்
அறியப்படாத தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்கு
கின்ற பரிசுத்தமாகிய அன்புடனே தொடர்ச்சியாக இடைவி
டாமல் ஓதி இளகினமனத்தையுடையவராகிய தொழிலில் சிற
ந்தவராவார்.—(எ-று) (௭)

சுனையில்கம்பலைபுள்ளொலிகறங்கிடமருங்கு ....*
பிரசமென்சுரும்பறைந்திடக்கருவரால்பிறழ .. .. *
நிரைநெடுங்கயநீரிடைநெருப்பெழுந்தனைய ....*
விரைநெகிழ்ந்தசெங்கமலமென்பொய்கையின்மேவி....*

(இதன்பொருள்.)

தாமரையில் பட்சிகள் முழக்கத்தை உண்டாக்கப் பக்கத்தில் தே
னையுண்ணவந்த வண்டுகள்முழங்கப் பெரியவரால மீன் துள்
ளுகின்ற அலைகளையுடைய நீண்டகுளத்திலுள்ள ஜலத்தில் நெ
ருப்பின்சுவாலையெழும்பினதுபோன்ற வாசனைவிரிந்த செந்
தாமரை மலர்களையுடைய தடாகத்துக்குப் போய்.—(எ-று)

தெள்ளுதண்புனல்கழுத்தளவாயிடைச்செறிய... .. ..*
வள்ளுறட்புக்குநின்றுகையுச்சிமேற்குவித்துத் ....*
தள்ளுவெண்டிரைக்கங்கைநீர்தரித்தசடையார் .....*
கொள்ளுமன்பினனாருத்திரங்குறிப்பொடுபயின்றார்.....*

பாடுபெற்றசிருருத்திரபசுபதியாரால் .. ..*
கூடுநாமமுநிகழ்ந்தனனுவலயம்போற்ற . .. . *

(இதன்பொருள்.)

மிகுந்த அன்போடு உருத்திரத்தை ஓதியதன்மையினால் தர்த்தனஞ்செய்தருளுகின்ற சுவாமியின் திருவடிகளின் அருகில் அடைந்தார்-ஆதலால்அந்தஅடியார்க்குப்பெருமைபொருந்திய சிறப்பை உடைய பசுபதியாரென்கிற நாமமும் உலகத்தார் புகழும்படியாக உண்டாயிற்று.—(எ-று) (கூ)

அயில்கொண்முக்குமிமிப்படையார்மருங்கருளாற் .... . .*
புயிலுருத்திரபசுபதியார்திறம்பாசி ....*
யெயிலுடைத்தில்லை யெல்லையினானைப்பொவாராஞ் . ....*
செயலுடைப்புறத்திருத்தொண்டர்திறத்தினைமொழிவாம் ..*

(இதன்பொருள்.)

கூர்மையைப்பெற்ற மூன்றுகவராயிருக்கும் சூலாயுதத்தை உடையவர் பால் அன்புசெய்கின்ற உருத்திரபசுபதிநாயனாருடைய அடிமைத்திறத்தை ஸ்தோத்திரம்பண்ணி மதில்சூழ்ந்த தில்லைமாநகரத்தி னெல்லையில் நாளைப்போவார்என்கிற புறத்திலிருந்து வணங்குகின்ற அடியவருடைய பத்தியின் முதிர்ச்சியைச்சொல்வாம்.—(எ-று) (ம)

உருத்திரபசுபதிநாயனார்புராணம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-தூசஎடு.

திருநாளைப்போவார் நாயனார்புராணம்.

பகர்த்துலகுசீர்போற்றும்பழையவளம்பதியாகும்.... .. *
நிகழ்த்தபுனற்கொள்ளிடம்பொன்செழுமணிகடிகைக்காத்தா
மூலத்துதரவிருமருங்குமுளரிமலர்க்கையேற்கும் . ... .. [ன்
அகன்பணைநீர்த்தன்னாட்டுமேதகுநாட்டாதனூர் .. .. *

(இதன்பொருள்)

உலகத்தார் விரித்துச்சொல்கின்ற சிறப்பினையுடையதாய்ப் புராதனமாகிய நகரமாயிருக்கின்றது-பிரகாசிக்கின்றநீரையுடை

ய கொள்ளிடநதியானது பொன்னையும் காந்தியுள்ளமணிகளை யும் அலையாகிய கையினால்வாரிக்கொடுக்க-இருபுறத்திலும் தா மரை தனதுபுஷ்பமாகிய கையினால் ஏற்றுக்கொள்கின்றவிசா லமாகிய வயலகளையுடைய சோழநாட்டில் மேற்காநாட்டில் ஆச்னூரானது —(எ-று) (க)

நீற்றலர்பேரொளிநெருங்குமப்பதியினிறைகரும்பின் .. *
சாற்றலைவன்குலைவயலிற்றகட்டுவரால்லெழப்பகட்டே .. .. *
சாற்றலைவன்கொழுக்கிழித்தசால்வழிபோயசைந்தேதிச் .. *
சேற்றலைவன்கருவுயிர்ககமுருகுயிர்க்குஞ்செழுங்கயலம் . . . *

(இதன் பொருள்.)

திருநீறுதரித்தலால்-விரிந்த பெரிய ஒளியானது நெருங்கிய அ நீதநகரத்தில் முற்றியகரும்பின்சாற்றினால் அலைகின்ற வளிய நெற்குலைகளையுடைய வயலில்-தகட்டுவழுவையுடைய வரால் மீ னானது எழும்ப எருமைக்கடாக்கள்பூட்டிய ஒப்பற்ற கலப் பையினுனியிலிருக்கும் கொழுவினால்கிழிக்கப்பட்ட சால்வழி யாகப்போய் அசைந்து ஏதிசசேற்றில்நண்டுகள் கருவையின- செழுமைபொருந்திய தாமரைப்பூ தேனைச் சொரியும்.— (எ-று) (உ)

நனைமருவுஞ்சினைபொதுளிநறுவிரைசூழ்செறிதளிரிற் .... *
நினைசாரமணைடலம்வருந்செழுந்தருவின்குலம்பெருகிக் *
கனைமருவியலைந்தசையககளிவண்டுபடைசூழப் .... *
புனன்மழையோமதுமழையோபொழிவாழியாபுஞ்சோலை

(இதன்பொருள்)

அரும்புகளையுடைய கிளைகளில் நெருங்கி நல்ல வாசனையுந்து மேலடாகத்தில் இருக்கும் தளிர்களால் சூரியனுடைய வட்ட மாகியவழுவத்தைத்தடவுகின்ற செழுச்சியமியவிருட்சகூட் டங்கள் நிறைந்து கீழ்ப்புறத்தில் மேகக்கூட்டங்கள் அலைந் து சஞ்சரித்தலாலும் வண்டுகள்சுற்றிமொய்த்தலாலும், புஞ்சோ லைகள் பொழிதல் ஒழியவில்லை அப்படிப்பொழியப் படுவது நீர்மாரியோதேன்மாரியோ அறியோம்.—(எ-று) புனன்மழை யோ மதுமழையோ வென்றது- தூரத்திலிருந்து அச்சொரிந் த லைப்பார்த்தோர்சொல்லியதாம் - ஓகாரங்களைநீக்கி- ஐகாரவு ருபை விரித்துரைசொல்வதுமுண்டு. (ங)

பாளைவிரிமணங்கமழும்பைங்காய்வன்குலைத்தெங்கின் .... *
ஞளநிரம்பிச்சமுட்டித்தடங்கிடங்கினெழப்பாய்ந்த ....*

வாளைபுதையச்சொரிந்தபழமிதப்பவண்பலவி ..... .*
வீளமுதிர்கனிகிழிதேனிதத்திலெழுந்துகளும் .... *

(இதன்பொருள்.)

பாளைகள்விரிந்து மணக்காதின்ற பசுமையாயிகாய்கள் நிறைந்த குலைகளையுடைய தென்னமரங்களின் அடிப்பறமானது அதிரும்படி முட்டி-அகலமாகிய குளங்களிலிருந்து எழும்பிப்பாய்ந்த வாளைமீனானது புதைந்துபோகும்படி அத்தென்னமரங்கள் சொரிந்த நெற்றுக்கள்மிதக்கப்பின்பு பலாமரத்தினது நீண்டு முதிர்ந்த பழங்கள் வெடித்துச்சொரிந்த தேன் பிரவாகத்தினால் மேலே யெழும்பிக் குளிந்தது விளையாடும்.—(எ-று)

(ச)

வயல்வளமுஞ்செயல்படுபைந்துடைவயிடைவருவளமும் .. *
வியனிடமெங்கணுறிறையமிக்கபெருந்நிருவினவாம் .... *
புயலடையுமாடங்கள்பொலிவெய்தமலிவுடைத்தா .... . *
யயலிடைவேறடிநெருங்கக்குடிநெருங்கியுளவவ்வூர் .... *

(இதன்பொருள்)

வயல்களால் உண்டானவளங்களும் வைத்துவளர்க்கப்பட்ட பசுமைபொருந்திய சோலைகளால் உண்டாகியவளங்களும் அகன்ற இடமெங்கும் நிறைய அதனால் மிகுந்தபாகியத்தையுடைய மேகங்கள்தவழும்மேல்வீடுகள்சிறப்படையச்சந்தோஷமுடையதாய்ப்பக்கத்தில் அடிக்கொருகுடியாக நெருங்கியுள்ளது அந்தவூர்.—(எ-று) அடிநெருங்கக்குடிநெருங்குதலாவது-நடுவில் நடுவில் இடம்விடாமல் நெருங்கக்கட்டியிருப்பது.

மற்றவ்வூர்ப்புறம்பணையின்வயன்மருங்குபெருங்குலையிற் .. *
சுற்றம்விரும்பியகிழமைத்தொழிலுழவர்களைதுவன்றிப் .. *
பற்றியபைங்கொடிச்சுவரமேற்படர்ந்துபழங்கூரையுடைப் *
புற்குரம்பைச்சிற்றில்பலநிறைந்துளதோர்புலைப்பாடி .... *

(இதன்பொருள்.)

மேற்சொல்லிய வளங்களையுடைய அந்தவூரின் வயல்களின்புறத்தில் ஒப்பற்றகுலையாகச் சுற்றத்தாரால் விரும்பப்பட்டுத்த மக்கு உரிமைத்தொழிலாகிய உழுதுநாற்று நடுதல்முதலானவற்றை உடைய உழவர்களதுகூட்டம்நெருங்கிப் பசுமைபொருந்திய கொடிகொடியானது மேலே படர்ந்திருக்கின்ற விழலால்மேயப்பட்ட பழங்கூரையையுடைய சிறுகுடிசைகள் அனேகம்நிறைந்திருக்கின்றது ஒரு தீண்டாதார்சேரி.—(எ-று)

கூருகிர்மெல்லடியளகின்றுறம்பார்ப்புக்குழுச்சுழலும் ... *
வார்பயின்றுன் றினிலின்றவவர்ருகிர்நாய்த் துள்ளுபறழ் ... *
சாரிரும்பின்சரிசெறிகைக்கருஞ்சிறுர்வார்த்தோட .... .. *
வாரிதுமென்ருரைப்படக்குமவாக்கசைத்தவிருப்புமணி. *

(இதன்பொருள்)

கூர்மையாய் மென்மைபொருந்திய அடியையுடையகோழிப் பேடுகளின்சிறிய குஞ்சுகளின் கூட்டங்கள் சுழன்றுகொண்டிருக்கும்வார்தொங்குகின்ற முற்றத்தில்நிற்கும் கூரிய நகத்தையுடையநாய்களின் துள்ளுகுட்டிகள்கரியஇரும்பினுந் செய்யப்பட்டகாப்பினைகையிலதரித்த திண்டாதார்பிள்ளைகள் பிடித்துக்கொண்டோட- அவர்களிடம்பிறிகட்டிய ஒருப்புமணியினுசையானது அந்தச்சிறுநாய்களின்குரைக்கின்ற ஓசையை அடக்கும்.—(எ-று) (எ)

வன்சிறுதோன்றிசையுழத்திமகவுறக்குறிழன்மருதுந் .... *
தண்சினைமென்பெடையொடுங்குந் தடங்குழிசிப் புறைநீழன்
மென்சினையவஞ்சிறுர்விசிப்பறைதூங்கினமாவும் ... [கும்
புன்றலைநாய்ப்புனிற்றுமுலைப்புடைத்தெங்கு முடைத்தெங்

(இதன்பொருள்.)

உறுதியான சிறியதொளிமேல் உழத்தியர்கள் பிள்ளைகளைத் தூங்கும்படி செய்தற்கிடமாகிய நிழலையுடைய மருதமரமும், ஆகிய மெலவியபேடைகள் ஒடுங்குகின்ற- அகலமாகியபானையைப்புதைத்திருக்கும் நிழலையுடைய கிளைகள்பொருந்திய வஞ்சிமரங்களும், வாரினுற்கட்டப்பட்ட பறையானது தொங்குகின்ற கூடடமாகிய மாமரங்களும், சிறியதலையை உடைய நாய்க்குட்டிகளுக்கு இருப்பிடமாகிய பள்ளத்தைப் பக்கத்தில் உடைய தென்னமரங்களும், எங்குமுடைத்தா யிருக்கின்றது—(எ-று) உழத்தியர்-திண்டாதாருடையபெண்கள். (அ)

செறிவலித்திண்கடைஞர்வினைச்செயல்புரிவைகறையாமக் .. *
குறியளக்கவழைக்குஞ்செங்குமிவாரணச்சேக்கை ....*
வெறிமலர்த்திண்சினைக்காஞ்சிவிரிநீழன்மருங்கெல்லா .... *
நெறிகுழற்புன்புலமகளிர்நெற்குறுபாட்டொலிபரக்கும் . *

(இதன்பொருள்.)

மிகுந்தபலத்தையுடைய கடையர்கள் தங்களுடைய வேலையைச்செய்வதற்குப் புறப்பட விடியற்காலமாயிற்றென்று தெரிவிக்கக்கூவுகின்ற சிவந்த உச்சிக்கொண்டையையுடைய கோழி

ளுக்குப் படுக்கையிடமாகிய வாசனைபொருந்திய மலர்களையு
டைய கிளைகளுள்ள காஞ்சிமரத்தினது அகன்ற திழலின் இட
மெல்லாம் நெறித்தெழுந்த தலைமயிரினையுடைய பெண்கள்
நெல்லுக் குத்தும்போது பாடுகின்ற பாட்டுமுழங்கும்.—
(எ-று) வாரணம்-கோழி. (௧)

புன்னாந்தண்புனற்கலிக்கும்பொய்கையடைப் புடையெங்குத்
தாள்ளாந்தாணடையசையத்தளையவிழ்பூங்குவளைமது. . . . . *
ள்ளாம்பைங்குழற்கதிர்நெல்மிலைசிய புன்புலைசியர்கள். . *
ருண்டுகளிதுங்கக்கறங்குபறையுங்கலிசகும் . . . . . *

(இதன்பொருள்)

ட்சிகள் முழங்குகின்ற தீரையுடைய குளங்களின் இடமெல்
ம் அப்பறவைகளின்கால்கள்படுதலால் இதழ்களின் கட்டுவி
நீலோற்பலமலர்களிலிருந்து தேன்சிந்தும்கரியகூந்தலி
மிதற்கதினை அலங்காரமாகத்தரித்த சிறிய உழத்தியர்கள்-
ள்ளைக்குடித்து மயக்கங்கொள்ளப் பறையென்னும்வாத்திய
மு முழங்கும்.—(எ-று) (௨)

*

இப்படித்தாகியசடைஞரிருப்பில்வரைப்பினில்வாழ்வார் . *
மெய்ப்பரிவுசிவன்கழற்கேவிளைத்தவுணர்வொடும்வந்தா . . *
ப்பதியிலார்ப்புலைமையான்றதொழிற்றாயத்தா . . . . . *
நாப்பிலவர்தத்தனுமொன்வொருவருளராஞர் . . . . . *

(இதன்பொருள்)

இத்தன்மையையுடைய திண்டார்குலத்தில் அவதரித்து அவர்
களுடைய இருப்பிடத்தில் வாழ்கின்றவர்-பரமசிவனுடைய பா
தத்தே உண்மையான அன்பைச்செலுத்துகின்ற அறிவை
டையவர்-அவ்வூரின் வெட்டிமைத்தனமாகிய காணியாட்சி
யையடையவர் ஒருவரும் ஒப்பில்லாதவர் இப்படிப்பட்ட தத்
ஞரொன்று ஒருவரிருந்தார்.—(எ-று) (௩)

றத்தனார்வுதொடங்கியபின்பிறைக்கண்ணிப்பெருந்தகைபா
றத்தபெருங்காதலினுந்செம்மைபுரிசிந்தையராய் . . . . [ம்
றத்துமயனிலைவின்றிவருபிறப்பின்வழிவந்த . . . . . *
ற்றம்புரிகொளகையராயேயடித்தொண்டிலெறிநின்றார் . . *

(இதன்பொருள்)

றத்துவிவேகம்வந்தபின்பு சந்திரனைத்தரித்த பரமசிவனிட
தில்வைத்த மிகுந்த அன்பினால் நல்ல வழியில் நடக்கு மன

தினையுடையவராய் மறந்தும் வேறுநினைப்பு இல்லாமல் சுவ
மிகையே தியானஞ்செய்துகொண்டு தமது குலாசாரத்து
கு ஏற்றபடிசெய்யவேண்டிய தர்மத்தைச்செய்யுந் தன்மை
யை உடையவராய் ஆண்டவருடைய பாதத்துக்கு விரும்புந்
தொண்டுசெய்வதில் சிறந்தவரானார்.—(எ-று) (௩௨)

ஊரில்விடும்பறைத் துடவையுணவுரிமையாக்கொண்டு .... *
சார்பில்வருந்தொழில்செய்வார்தலைநின்றார்தொண்டினும் .. *
கூரிலைமுச்சுடுமிப்படையண்ணல்கோயிறொறும் .... ..
டேரிகையேமுதலாயமுகக்கருவிபிறவினுக்கும் .. ..

(இதன் பொருள்)

ஊரில் வெட்டிமைக்காக விட்டிருக்கும் மானியமாகிய நிலத்தி
ல் விளையுந் தானியத்தைத் தமக்கு உரிய உணவாகப்பெற்று
கொண்டு அவர்சார்பிற்குச்செய்யவேண்டியவேலையைநட
த தொண்டிற்சிறந்தவராய்க்கூர்மைபொருந்திய மூன்றுகண
யிருக்கும் சூலாயுதத்தைத்தாங்கிய பரமசிவன் வீற்றிருக்கு
கோயில்களிலெல்லாம்பேரிவாத்தியமுதலாகிய * ஒருமுகக்க
ருவிக்கும்- மற்றைமத்தளமுதலாகியஇரண்டுமுகக்கருவிகளு
க்கும்.—(எ-று) (௩௩)

போர்வைத்தோல்விசிவாரொன்றினையவும்புகலுமிசை ....
நேர்வைத்தவிணைக்கும்யாழுக்குநிலைவகையிற் ....
சேர்வுற்றதத்திரியுந்தேவர்பிரானர்ச்சனைக்கட் .... *
கார்வத்துடன்கோரோசனமுமிவையளித்துள்ளார் ...

(இதன் பொருள்)

போர்வையாயிருக்கிறதோலும்- கட்டுகிறதற்காகவேண்
டுவாருமாகிய இப்படிப்பட்டவைகளும்- இசையைக்காட்டுந
ற்றலவிணைக்கும் யாழ்வாத்தியத்துக்கும்அதற்கு ஏற்றவை
யாகிய வேண்டிய நரம்புகளும்-தேவர்களுக்கு நாதராகிய ப
ரமசிவனது அர்ச்சனைக்குக் கோரோசனமும் - ஆசையோடு
கொடுக்கின்றவரானார்.—(எ-று) (௩௪)

இவ்வகையாற்றற்றொழிலினியன்றவெலாமெவ்விடத்துஞ் .. *
செய்வனவுக்கோயில்களிற்றிருவாசற்புறநின்று .... *
மெய்விரவுபோல்புமிகுதியினாலாடுதலு.... ..... *
மல்வியல்பிற்பாடுதலுமாய்நிகழ்வாரந்தாளில் .... *

* ஒருமுகக்கருவி- ஒருபக்கத்தில் முகக்கப்படுவது.

(இதன் பொருள்)

இந்தப்பிரசாரம் தம்முடைய தொழிலால் நடத்தேறிய எல்லா வற்றையும் எல்லாக்கோயில்களுக்கும் கொடுத்தலும்- கோயில்களின் திருவாசலின்புறத்தில் நின்றுகொண்டு உண்மையாக அடைந்த உயர்ந்த அன்பின்மிகுதியால் ஆனந்தக்கூத்தாடுவதும்-அத்தன்மையாகவே சுவாமியைப்பாடுதலுமாகிய குணங்களைப்பொருந்தி வாழ்ந்துகொண்டிருந்தார் அந்தநாளில் ஒரு நாள் —(எ-று) (௩௫)

திருப்புன்கூர்ச்சிவலோகன் சேவடிகண்மிகநினைந்து . . . . . *
விருப்பினொடுந்தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே . . . . *
யருத்தியினாலொருப்பட்டக்காதனூர்தனினின்றும் . . . . . *
வருத்தமுறுங்காதலினால்வந்தவர்ஊர் மருங்கணைந்தார் . . . . . *

(இதன் பொருள்)

திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் கைலாசபதியின் பாதங்களை மிகவும்நினைந்து அன்புடனே நாம் செய்யவேண்டிய திருப்பணிவிடைகளைச் செய்வதற்காக ஆசையோடு பிடிப்பாய் அந்த ஆதனூரிலிருந்து எப்போதுபோலேனென்றும் எண்ணம்வருந்த அந்தத்திருப்புன்கூருக்குவந்துசேர்ந்தார் (எ-று)

சீரோதுமிசைபாடித்திருத்தொண்டர்திருவாயி . . . . . *
னேரோரும்பிடவேண்டுமெனநினைந்தோர்க்கதுநேர்வார் . . *
காரோதுமெயிற்புன்கூர்க்கண்ணுதலார்திருமுன்பு . . . . . *
போரோற்றைவில்லங்கவருள்புரிந்தருளிப்புலப்படுத்தார் . . . . *

(இதன் பொருள்)

திருநாவலூர்ப்போவார்-சுவாமியின் சிறப்புற்ற கீர்த்தியைப்பாடித் திருவாசலில் நின்றுகொண்டு சுவாமியைநேராகவே தரிசித்துக் கும்பிடவேண்டுமென்று நினைத்தார்- அவர்க்கு அப்படியே அருள்செய்யவிரும்பி- மேகங்கள் தவழ்கின்ற மதிலையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருக்கும் சுவாமி தமது சன்னிதிக்குமுன்னேயிருக்கின்ற வலிமைபொருந்திய தந்திகேசரை விலகும்படிசெய்து காட்சிகொடுத்தருளினார்.—(எ-று)

சிவலோகமுடையவர்தந்திருவாயின்முன்னின்று . . . . . *
பவலோகங்கடப்பவர்தம்பணிவிட்டுப்பணிந்தெழுந்து . . . *
சுவலோடுவாலையப்போவார்பின்பொருளுழ . . . . . *
ல்லவலோமேபெற்றதுகண்டாதரித்துக்குளந்தொட்டார் . . . . *

(இதன்பொருள்)

சிவலோகத்தையுடைய பரமசிவனது ஆலயத்தின் திருவாசல் முன்னே நின்று பாவம்நிறைந்த இந்தலோகத்தினின்றும் நீங்கப்போகின்ற திருநாளைப்போவார்-தம்முடைய பணிவிடையையிட்டு வணங்கியெழுந்திருந்து முதுகின்புறத்தில் வாரானது அலையும்படி போய்க்கொண்டிருப்பார்-பின்பு ஓரிடத்தில் ஒருபள்ளமிருப்பதைக்கண்டு ஆசையோடு குளமாகவெட்டினார்.—(எ-று) (௩அ)

வடங்கொண்டபொன்னிதழிமணிமுடியார் திருவருளாற் . . .*
றடங்கொண்டகுளத்தளவுசமைத்ததற்பின்றம்பெருமா . . . .*
னிடங்கொண்டகோயில்புறம்வலங்கொண்டேணிந்தெழுந்து*
நடங்கொண்டுவிடைகொண்டுதம்பதியிணண்ணினார் . . . . . .*

(இதன்பொருள்.)

பொன்போலும்திறமுள்ளகொன்றைப்புஷ்பங்களாற்கட்டப்பட்ட மாலையைத்தரித்த அழகியமுடியை உடைய பரமசிவன் அனுக்கிரகத்தினால் தாம்கண்டபள்ளத்தை விசாலமாகிய குளத்தினளவாகவெட்டி யேற்படுத்தினபின்பு தமக்குப் பிராணாயக சுவாமியினது இடமகன்ற கோயிலைப்புறத்தில் வலங்கொண்டு வணங்கி யெழுந்து ஆனந்தத்தால் கூத்தினைச்செய்து உத்தரவுபெற்றுக்கொண்டு தம்முடைய ஊருக்குவந்தார். (எ-று) (௩கூ)

இத்தன்மையீசர்மகிழ்பதிபலவுஞ்சென்றிறைஞ்சி . . . . . .*
மெய்த்தகிருத்தொண்டுசெய்துவிரவுவார்மிக்கெழுந்த . . . .*
சித்தமொடுத்திருத்தில்லைத்திருமன்றுள்சென்றிறைஞ்சி . . . .*
யுய்த்தபெருங்காதலுணர்வொழியாதுவந்துதிப்ப . . . . . .*

(இதன்பொருள்.)

இவ்வாறாகப்பரமசிவன் களிப்புற்றிருக்கும் பலஸ்தலங்களுக்கும்போய் வணங்கி-உண்மையான திருப்பணிவிடைகளை அங்கங்குசெய்து இனிச்சுவாமியை அடையப்போகிற திருநாளைப்போவார்-விரைவாயெழுந்த மனதோடு சிதம்பரத்தில் நடனசபைக்குப்போய் வணங்கும்படி தூண்டுகின்ற பெருமை பொருந்திய ஆசையோடுகூடிய விவேகமானது அடிக்கடி தோன்றிக்கொண்டிருப்ப.—(எ-று) (௩௩)

அன்றிரவுகண்டுயிலார்புலர்ந்ததற்பினங்கெய்த . . . . . .*
வொன்றியணைதருதன்மையுறுகுலத்தோடிசைவில்லை . . . .*

யென்றிதுவுமெம்பெருமானேயுலகப்போக்கொழிவார் .*
நன்றுமெழுங்காதன்மிகநாளைப்போவேனென்பார் . . . . .*

(இதன்பொருள்.)

அன்று இராத்திரியில் நித்திரைகொள்ளாதவராய்ப் பொழுது விடிந்தபின்பு சிதம்பரத்துக்குப் போனால் கோயிலுக்குப் போகும்படியான யோக்கிதை நம்முடையசாதிக்குப்பொருந்தவில்லையேயென்று விதனமுற்று இப்படிப்போகக்கூடாமையும்-எமது ஆண்டவருடைய திருவுள்ளத்தாலேயே என்று போகாமல்நின்றார்-பின்பு தன்னுயுண்டாகிய ஆசையானது தூண்ட - நாளைக்குப்போவேனென்று சொன்னார்.—(எ-று)

நாளைப்போவேனென்றுநாள்கள்செலத்தரியாது . . . . .. *
பூளைப்பூவாம்பிறவிப்பிணிப்பொறியப்போவாராய்ப் . . . . *
பாளைப்பூங்கமுகுபூத்தபழம்பதியினின்றுபோய் . . . . : . . *
வாளைப்போதுமெழும்பழனஞ்சூழ்தில்லைமருங்கணைந்தார். .*

(இதன்பொருள்)

நாளைக்குப்போவேனென்றுசொல்லி அனேகநாள் ஒழியச்சபாநாதனைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் ஆசையை அடக்கக் கூடாதவராய்ப்பூளைப்பூவையொத்தநிலையாமையை உடைய பிறப்புகளால் உண்டாகிய சம்பந்தம் நீங்கும்பொருட்டுப் போகின்றவராய்ப் பாளையை உடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமையுற்ற தம்முடைய ஊரில் நின்றும்புறப்பட்டு ஆண் வாளைமீனானது எழும்பிவிளையாடும்வயல்களையுடைய சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார்.(எ-று)

செல்கின்றபொழுதுந்தத்திருவெல்லைபணிந்தெழுந்து. . . . . *
பல்குஞ்செந்தீவளர்த்தபயில்வெள்ளியெழுப்புகையு. . . . . *
மல்குபெருங்கிடையோதுமடங்கணெருங்கினவுங்கண் . . . . *
டல்குந்தங்குலநினைந்தேயஞ்சியணைந்துலர்நின்றார் . . . . . *

(இதன்பொருள்)

திருநாளைப்போவார்- சிதம்பரத்துக்குப்போனபொழுது அந்தன் எல்லையைக்கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச்செலுத்த அக்கினியையவளர்த்து ஆகுதிசெய்கின்ற யாகத்தால்உண்டாகிய புகையும்-மிகுந்த பிராமணப்பிள்ளைகளின்கூட்டம்வேதமோதுகின்ற அடிக்கடி நெருங்கியிருக்கு மடங்களையுங்கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தை நினைந்து பயந்து உள்ளேபோவதற்குப் பயந்துபோகாமல் நின்றுவிட்டார்.(எ-று)

நின்றவரங்கெய்தரியபெருமையினை நினைப்பார்முன். .... *
சென்றிலையுங்கடந்தார்சூழெயிற்றிருவாயிலைப்புகுந்தார். ... *
குன்றனையமாளிகைகளொடுங்குலவும்வேதிகைக. ..... *
ஒன்றியமூவாயிரமங்குளவென்பாராகுநிகள் .... *

(இதன்பொருள்)

எல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார்-தாம்உள்ளே அடையக்கூடாத அகக்கோயிலின் பெருமையை நினைப்பாராகி முதலில் அந்த எல்லையையுங்கடந்து ஊரைச்சுற்றியிருக்கு மதிலின் திருவாசலை அடைந்தார்- அங்கே நின்னைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும் ஓமங்கள் செய்யப்படுகின்றனவென்று சொல்லிக்கொள்வார்.—(எ-று) சுவாமியைப்பூசிக்கின்றதில்லைமூவாயிரவருடையவீடுகளே மாளிகைகள் மூவாயிரமென்றார். வேதவிதிப்படி யாகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியில் தாம்போகக்கூடாதபடியால் அதைநினைத்து தடைபட்டவர்-அங்கு-ஆகுதிகளுளவென்றார். (உ௬)

இப்பரிசாயிருக்கவெனக்கெய்தலரிதென்றஞ்சி .... *
யப்பதியின்மதிற்புறத்திலாராதபெருங்காத .... *
லொப்பரிதாய்வளர்ந்தோங்கவுள்ளுருகிக்கைதொழுதே .. *
செப்பரியதிருவெல்லைவலங்கொண்டுசெல்கின்றார் .. .... *

(இதன்பொருள்.)

இந்தப்பிராமணர்களுடைய வீடுகள் இந்தன்மையாயிருக்க-எனக்கு அவ்விடத்திற்குப்போதுதலரிதென்று பயந்து அந்த ஸ்தலத்தின் மதிலின்புறத்தில் அளவற்ற பேரன்பு சுமானமில்லாமல் வளர-மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையை வலஞ்செய்துகொண்டு போவார்.—(எ-று)

இவ்வண்ணமிரவுபகல்வலஞ்செய்தங்கெய்தரிய .... *
கவ்வண்ணநினைந்தழிந்தவடித்தொண்டரயர்வெய்தி .. .... *
மைவண்ணத்திருமிடற்றார்மன்றினடங்கும்பிடுவ .... *
செவ்வண்ணமெனவெழுந்தேயேசறவிலொடுத்துயில்வார்.. *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துகொண்டு உள்ளே போகக்கூடாத தன்மையைநினைத்து வருத்தப்பட்ட உயர்வு பொருந்திய அடியவர் வேசாரிகரியதிறமுள்ள கழுத்தினையுடைய சுவாமி-கனகசபையில் ஆடுகின்ற கூத்தை எப்படித்தரிசிக்கலாமென்று விதனத்தோடும் நித்திரைசெய்வார்.(எ-று)

இன்னறருமிழிபிறவியிதுதடையென்றேதுயில்வா .... .. *
ரந்நிலைமயம்பலத்துளாடுவாரதிந்தருளி .... *
மன்னுநிருத்தொண்டரவர்வருத்தமெலாந்தீர்ப்பதற்கு . .. *
முன்னணைந்துகலவின்கண்முறவுலொடுமருள்செய்வார் .. *

(இதன்பொருள்.)

தன்பத்துக்கு ஏதுவாகிய இந்த இழிந்த பிறப்பானது தடையாயிருக்கின்றதென்று நித்திரைசெய்தார்-அப்போது அவருடையமனதில் தோன்றிடதோற்றத்தை யம்பலத்தில் நடனஞ்செய்கின்ற சபாநாதர் அறிந்து அந்த அடியவருடையவருத்தமெல்லாந்தீர்க்கும்படி சொப்பனத்தில் அவர்க்குமுன்னேவந்து புன்னகையுடனேயருள்செய்கின்றார்.—(எ-று) (உஎ)

இப்பிறவிபோய்நீங்கவெரியினிடைநீமூழ்கி .... *
மூப்புரிநூன்மார்பருடன்முன்னணைவாயெனமொழிந்த .. *
வப்பரிசேதிலலைவாழந்தணர்க்குமெரியமைக்க .... *
மெய்ப்பொருளானாரருளியம்பலத்தேமேவினார்.... .. *

(இதன்பொருள்.)

மெய்ப்பொருளாயிருக்கின்ற கடவுள் இந்தப்பிறப்பு ஒழியும்படி நீ நெருப்பிலமூழ்கி யெழுந்து மூன்றுபுரியாகிய பூணூலைத்தரித்த மார்பினையுடைய பிராமணர்களோடு நம்முடைய சபைக்குமுன்னேவந்து சேரென்று அருள்செய்து அந்தப்பிரகாரமே கனவில் தில்லையில்வாழும் பிராமணர்களுக்கும் நெருப்பினைவளர்க்க- கட்டளையிட்டு அம்பலத்தில்எழுந்தருளினார். (எ-று) (உஅ)

தம்பெருமான்பணிகேட்டதவமறையோரொல்லாரு ... .. *
மம்பலவர்திருவாயின்முன்பச்சமுடனீண்டி.... .....*
யெம்பெருமானருள்செய்தபணிசெய்வோமென்றேத்தி .. *
தம்பரிவுபெருகவருத்திருத்தொண்டர்பாற்சார்ந்தார் .... *

(இதன்பொருள்.)

தமது பிரானாகிய சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்ட தவம்பொருந்திய பிராமணர்களெல்லாரும் அம்பலவாணரது கோயிற்றிருவாசலின் முன்பு கூடிப்பயத்தோடு நம்முடைய ஆண்டவரருள்செய்த ஊழியத்தைச்செய்வோமென்று வணங்கி அன்புமேற்பட்டு இருக்கும் திருநாளைப்போவாரிடத்தில் அடைந்தார்கள்.—(எ-று) (உக)

ஐயரோயம்பலவரருளாலிப்பொழுதணைந்தோம் .... *
வெய்யவழலமைத்துமக்குத்தரவேண்டியெனவிள்ப .... *
நையுமனத்திருத்தொண்டர்நாணுய்ந்தேனெனத்தொழுதார் *
தெய்வமறைமுனிவர்களுந்தீயமைத்தபடிமொழிந்தார் .... *

(இதன் பொருள்.)

ஐயரோ நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்விதாகிய அக்கினியைமூட்டி உமக்கு அதில் முழுகும்படி கொடுக்கவந்தோமென்றுசொல்ல-இளையமனைவியுடைய திருநாளைப்போவார் அடியேன் கடைத்தேறினேன் என்று அவர்களைத் தொழுதார்-தெய்விகமாகிய வேதத்தையுணர்ந்த பிராமணர்களும் தீவளர்த்தோமென்றுசொன்னார்கள்.—(எ-று) (௬௮)

மறையவர்கண்மொழிந்ததற்பின்றென்றிசையின் மதிற்புறத்து
பிறையுரிஞ்சுந்திருவாயின்முன்னாகப்பிஞ்ஞகர்தம் .... ..[ப்
பிறையருளான்மறையவர்கணெருப்பமைத்தகுழியெய்தி .. *
யிறையவர்தாண்மனங்கொண்டேயெரிசூழவலங்கொண்டார்.

(இதன் பொருள்.)

அப்படிப் பிராமணர்கள்சொல்லினபின்புதென்திசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனானது தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்குந் திருக்கோபுரவாசலுக்குமுன்னே சுவாமியின் நிறைந்தகிருபையோடுகூடியகட்டளையால் வளர்த்திருக்கின்றநெருப்பின்குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனதில்நியாயித்து அக்கினியைச்சுற்றி வலமாகவந்தார். (எ-று)

கைதொழுதுநடமாடுங்கழலூன்றியழல்புக்கா ... . *
மெய்தியலப்பொழுதின்கண்ணெரியின்கணிம்மாயப் .... *
பொய்தகையுமுருவொழித்துப்புண்ணியமாமுனிவடிவாய் *
மெய்திகழ்முந்நூல்விளங்கவேணிமுடிகொண்டெழுந்தார் *

(இதன் பொருள்)

கையினாற்கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களை மனதில் உறுதியாகநினைத்து அக்கினியில்புகுந்தார்-அப்படிச்செய்தபோது அந்தநெருப்பில் இந்த உலகசம்பந்தமாகிய நிலையில்லாதஉடலத்தையொழித்துப்புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின்வடிவமாய்த் தேகத்தில் பூணூல்விளங்கச் சடைமுடியோடு எழுந்தார்.—(எ-று) (௬௨)

செந்தீமேலெழும்பொழுதுசெம்மலர்மேல்வந்தெழுந்தம் ...*
வந்தணன்போற்றொன்றிருந்தாரந்துபிறாதம்..... .....*
வந்தெழுந்தநிருவிகம்பிலவானவர்கண்மகிழ்ந்தார்த்துப் ...*
பைந்தணர்மந்தாரத்தின்பனிமலர்மாரிகள்பொழிந்தார் ..*

(இதன்பொருள்)

சிவத்தை நெருப்பில்நின்று எழுந்தபொழுது செந்தாமரைப்புஷ்பத்தின்மேல் உதயமாயெழுந்த பிரபாபோல் பிரகாசித்தார்-பெருமைபொருந்திய ஆகாயத்தில் அந்தரதுந்துபியின் கோஷமானது உண்டாயிற்று-தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சி பொருந்திய மலர்களை வருஷமாகச்சொரிந்தார்கள் — எ-று) பிரமனுக்கு இடம் பொற்றாமரையாயிருந்தாலும் சான்றோர் செய்யுள்களில் செந்தாமரையென்று சொல்லப்பட்டிருப்பது பொன்னிறத்துக்குச் சிவப்புநிறம் வழங்குகின்ற படியாலென்க. செம்பொன் என-மாற்றுயர்விலும்வரும். (௩௪)

திருவுடையதில்லைவாழந்தணர்கள்கைதொழுதார் ....*
பரவரியதொண்டர்களும்பணிந்துமனநிலவிபயின்றார் ....*
அருமறைசூழ்திருமன்றிலாடுகின்றகழல்வணங்க .... *
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர் .. ..*

(இதன்பொருள்)

ஞானசம்பந்தையுடைய தில்லைவாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள்-பரவுதற்கரிய மற்றைச் சிவபத்தர்களும் தொழுது மனதில்களிப்படைந்தார்கள்-வேதங்கள் முழங்குகின்றகனகசபையில் ஆடுகின்றபாதத்தைவணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராயே ஒருவேதமுனிவர் வருகின்றார்.(எ-று) (௩௫)

தில்லைவாழந்தணருமுடன்செல்லச்சென்றெய்திக் .... ..*
கொல்லைமான்மழுக்கரத்தார்கோபுரத்தைத்தொழுதிறைஞ்சி*
யெல்லைபோயுட்புக்காருலகுய்யநடமாடு ....*
மெல்லையினைத்தலைப்பட்டார்யாவர்களுங்கண்டிலரால் ....*

(இதன்பொருள்)

திருநாளைப்போவார்-தம்முடனேகூடச்சிதம்பரத்தில்வாழுகின்றபிராமணர்களும்வரப்போய்முல்லைநிலத்தில் இருக்கும்ஆண்மானைத்தரித்த கரத்தையுடைய சுவாமியினதுகோபுரத்தைப்பணிந்து விரைவாகப்போய் உள்ளேபுகுந்தார்-உலகத்தார் ஈடேறும்பொருட்டு நர்த்தனம்பண்ணுகின்ற சபையை அடை.

த்தார்பின்பு அவர்யாவரும் காணாதவர்களானார்கள் (ச்-து) சுவாமியின்கையிலிருக்கு மான் தாருகாவனத்து ரிஷிகள் சுவர்மினை வெல்லும்பொருட்டு அபிசார ஓமஞ்செய்து பிறப்பித்து அநுப்பப்பட்டதா யிருந்தாலும் அதன்சாதிக்கிடமாகியஇடத்தை விசேஷணமாக்கிக் கொல்லைமான் மறிச்சாத்தாரொன்றாம். (௬௫)

அத்தணர்களதிசயித்தாரருமுனிவர் துதிசெய்தார் .... .. *
வத்தணைந்தநிருத்தொண்டர்தம்மைவினைமாசறுத்து ... ..*
சுத்தாத்தாமரைபுரையுந் தனையடிகளெழுதிருக்க .... .. *
வத்தமில்லாவாண்தப்பெருங்கூத்தாருள்புரிந்தார் ....*

(இதன்பொருள்)

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள் - அரியமுனிவர்கள் ஸ்தோத்திரஞ்செய்தார்கள் - மூடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாதர் - தமதுகட்டளையால்வந்தடைந்த திருநாளைப்போவார்க்குத் தீவினையாகிய களங்கத்தைநீக்கி - அழகாகிய தாமரைமலரையொத்த இரண்டுபாதங்களையுந் தொழுதிருக்கும்படி அருள்செய்தார் —(எ-று) (௬௬)

மாசுடம்புவிடத்தீயின்மஞ்சனஞ்செய்தருளியெழுந் .....*
தாசில்மறைமுனியாகியம்பலவர்தாளடைந்தார் ... . *
தேசுடையசழல்வாழ்த்தித்திருக்குறிப்புத்தொண்டர்வினைப்*
பாசமறமுயன்றவர்செய்திருத்தொண்டின்பரிசுரைப்பாம் ..*

(இதன்பொருள்)

தமக்கு முன்னிருந்த உடலமாகிய மாசுதீரும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்ற பிராமணமுனிவராகிய தடேசருடைய திருவடியை அடைந்தவராகியதிருநாளைப்போவாருடைய பதத்தைப்புகழ்ந்து தீவினையாகியசம்பிரதிபந்தம்படி முயன்றதிருக்குறிப்புத்தொண்டநாயனார்திருத்தொண்டின் தன்மையைச் சொல்வோம்.—(எ-று) (௬௭)

திருநாளைப்போவார்நாயனார்புராணம்-
மு ற் றி ற்று.

ஆ திருவிருத்தம்-௪௮௩.

திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணம்.

செயமாறப்லுயிர்களுக்கெல்லையில்கருணைத் ....
தாயருடனியாயினதலைவனாத்தழுவப்... ....
பாயுநான்மறைபோற்றநின்றருந்தவம்புரியத் ....
தூயமாதவஞ்செய்ததுதொண்டைநன்னாடு.... .... ..

(இதன்பொருள்)

அனேகம் உயிர்களுக்கு ஒப்பற்றகிருபை உண்டாகஉலகமாதா வாகியபார்வதியார்பிரிந்திருந்ததமது நாயகராகியபரமசிவனை அடையும்பொருட்டுப்பொருள் நுட்பமாகுக்கும்படி ஆழ்ந்திருக்கும் நான்குவேதங்களும்புகழ அருமையாகிய தவசுசெய்யப்பரிசுத்தமாகிய தவஞ்செய்திருப்பது தொண்டைநாடாம்—(எ-று) (க)

நன்மைதீயநடுநிலையொழுக்கத்துநயந்து ....
தன்மைமேவியதலைமைசாலபெருங்குடிதழைய.... .... ..
வன்மையோங்கெயில்வளம்பதிபயின்றதுவரம்பின் .... ..
றொன்மைமேன்மையினிகழ்பெருந்தொண்டைநன்னாடு ..

(இதன்பொருள்.)

நன்மைமிகுந்த நடுவுநிலைமையாய் ஒருகாரியத்தை நடத்துவதில் விருப்பத்தைக்கொண்ட தலைமையாகிய பெரியகுடிகள் திருத்தியடையவலிமைபொருந்தியமதிற்காவலையுடையவரமுள்ள நகரங்களுக்கு இடமாயிருக்கின்றது-தெறியோடு பழமையும் மேன்மையுமாகிய இவைகளால்விளங்கும் தொண்டைநாடு—(எ-று) (உ)

நற்றிறம்புரிபழையனூர்ச்சிறுத்தொண்டர்நவைவந் .... ..
றுற்றபோதுதம்முயிரையும்வணிகனுக்கொருகாற் ....
சொற்றமெய்மையுந்துக்கியச்சொலையேகாக்கப் .. ..
பெற்றமேன்மையினிகழ்ந்ததுபெருந்தொண்டைநாடு ..

(இதன்பொருள்)

நற்செய்கைகளைச்செய்யும் பழையனூரில் வாசஞ்செய்துகொண்டிருக்குஞ்சிறுத்தொண்டர்செய்கின்ற அடியவராகிய வேளாளர்கள்-ஒருஅபாயம்நேரிட்டபோது தங்கள்சீவனையும் ஒருவர்த்தனனுக்

ரு ஒருதரந்தாங்கள்சொல்லியசத்தியவார்த்தையையும்ஆலோசித்து உயிரை உயர்வாகநினையாமல் அந்தச்சொல்லையேகாப்பாற்றும்படி பழிக்குப்பழிகொடுத்த மேன்மையிற் சிறப்புள்ளதாயிருக்கின்றது தொண்டைநாடு.—(எ-று) வணிகனுக்குச் சொல்லியவார்த்தையின்பொருட்டு உயிரைக்கொடுத்ததாவது-ஒருவன்தான்தோறும் பிறமங்கையரிடஞ்சென்றுநட்புற்றிருப்பதை அவன்மனைவி அறிந்து தடுத்துத் தன் வசமாகும்படி வேண்டிய உபாயங்கள் சொல்லியுங் கேளாமலிருந்ததுமன்றித் தன் எண்ணத்திற்கு இவள் ஓரிடையூறாயிருக்கின்றாளென்று கொல்லவும் நினைத்து-ஒருநாள் அடுத்த ஊரில் நடக்கும் ஒருசிறப்பைத் தன்மனைவிக்குக்காட்ட விருப்பமுள்ளவள்போன்று சவடுசெய்து அழைத்துக்கொண்டுபோய் தடுக்காட்டிற் கொன்றுவிட்டான்-மறுபிறப்பில் அவள் ஒருபிசாசாகி-புருஷன்செட்டியாகப்பிறந்தான். அவனிடத்திற்குச்சோறிடநூலுணர்ந்த ஒருவன்வந்து சாதகம்பார்த்து நீ வடதிசைநோக்கிச் சென்றால் ஒருபேயாக் இறப்பாய்-அதுதவறாது ஆயினும் நான் மந்திர உருவேற்றியிருக்கும் இந்தவாளைக் கொடுக்கின்றேன் இது உன்னிடத்திலிருக்கிறவரையாசகும் அந்தப்பேய் உன்னை அணுகாது என்று கொடுத்துவிட்டுப்போயினான் - சிலநாட்பொறுத்து அந்தச்செட்டி தன்னூரிலிருந்து பதையனூரிலிருக்கும் வேளாளரிடத்துக்குத் தனவர்த்தகத்தைக் குறித்துப் போகும்போது நீலியென்னும் அந்தப்பேய் முற்பிறப்பில் செய்த பழிக்குப் பழிவாங்கும்பொருட்டு அவன்மனைவிபோல் வேஷங்கொண்டு பிலிதொட்ட வர்த்தகன்சிலகுறிகளால்பேயென்றறிந்து கையிலிருக்கும்மந்திரவாளின் வலிமையினால் பயப்படாமல் அந்த ஊரிலுள்ள சாராளர் கூட்டத்திற்சேர்ந்தும்-நீலி-அவர்களைநோக்கி எம்முயகராகிய இவர்வெறுநாளாக என்றேறுபேச்சம்இன்றி விரோதப்பட்டிருக்கின்றார்-நானெவ்வரவுவிழ்ப்பழித்து வேண்டிக்கொண்டாலும் எள்ளளவும் இரக்கமற்றுவெறுப்புற்றார்-ஐயோ என்னபாவஞ்செய்தேன் நீதிமான்களாகிய நீங்கள் அவருக்குள்ள கோபத்தைநீக்கி இம்மனைடபத்தி லுள்விட்டால் அவளையும் என்னையும் போகவிடுவீர்களாயின் சிலவார்த்தை யவரோடுபேசி தான் போகிறேனென்றுசொன்னவுடனே செட்டி- இவளை யென்மனைவியாக நினைக்கவேண்டாம்-ஒருவியபேய் என்னைக்கொல்லவந்திருக்கிறது என்றான் - அதற்கு நீலி - ஐயா- இவர் என் கணவரொ

ன்பதை யுங்களுக்குத் தெரிவிக்கிறேனென்று தன் இடுப்பிலி
ருந்த மாயக்குழந்தையைக் கீழேவிட்டது - அது-யாவரிடத்
துஞ் செல்லாமலசெட்டியினிடத்துக்குப்போய்மேல்விழுந்து
வினையாடிற்று அப்போதுவேளாளர்கள் செட்டியாரேநீர் என்
பொய்சொல்லுகிறீர் - உம்முடைய தாயகி இவ்வளவு துன்பமு
றுகின்றபடியால் இவ்வுள்ளேபுகுந்து ஒரு வார்த்தைசொல்லி
வாருமென்றுவலியுறுத்த அவன்கையிலவாளைப்பிடித்துக்கொ
ண்டுசென்றானாக - நீலி - ஐயா - சத்தியம் நீங்கள் வாக்கிலவைத்துக்
கொள்ளாவிட்டால் நான் இறந்துபோவேனென்று கூவிற்று -
அவர்கள் அம்மொழியை நிசமாகவெண்ணிக் சத்தியம் வாங்கி
க்கொண்டவுடனே வணிகன் பயந்து இந்த ஆயுதமிருக்கிறபடி
யாற்றான் நான் இதுவரைக்கும்பொழுதிருக்கிறேன் - இல்லாவிட்
டால் இந்தயமன்வாயிற்பட்டுக்கொள்ளுமேனன - வேளா
ளர்கள் - நீர் ஒருவரிற்றவலையில் இறந்தால் நாங்கள் எழுபதின்
மருமக்களுமுமக்காக உயிர்விடுகிறோமென்று தேற்றி உள்ளே அனு
ப்புவிக்கார்கள் - மகிமையுடைப்புகுந்தகணப்பொழுதிலேயே அந்த
ப்பேய்வணிகனைக்கொன்றுவிட்டு அவன் தாய்போல் வேஷங்
கொண்டிருக்கிறவளாளைநோக்கி உங்களிடத்துக்குவந்த என்மக
லை என்ன செய்கிறீர்களென்று அழுது அலறிக்கேட்க - அவர்கள்
செட்டிவருவானென்று வெகுதூரம் காத்திருந்தும்பயன் அ
டையாமையால் கிழவியின் துன்பத்தைப்பார்த்துப்பொறுக்
கக்கூடாமல் கதவைத்திறந்து பார்க்கும்போது அவனுடலம்
[illegible]டாகக்கிழிக்கப்பட்டிறந்து கிடப்பக்கண்டு இந்த எழு
பதுவேளாளரும் தாங்கள் சொல்லிய பேச்சுத்தவறாமல் தீயி
ற்குதித்து உயிரைக்கொடுத்தார்கள் - என்பதாம். நீலியெல்லு
ம்பம் வாசஞ்செய்த ஒருமரத்தை வெட்டும்படி கட்டளையி
ட்ட எழுபதின்மரு மறுபிறப்பில் எழுபது வேளாளராகவும்,
வெட்டினவன் ஒருசெட்டியாகவும் பிறந்தபடியால் இவர்களை
அது பழிவாங்கிற்றென்றுஞ் சிலர் சொல்கின்றார்கள். (ரு)

மாறுகொடுபன்னாயனார் நீலிசெய்த வஞ்சனையால்வணிக
னுயிரிழப்பத்தாங்கள் . . . . . .*
கூறியசொற்பிழையாது துணிந்துசெத்தீக்குதியிலெழு
பதின்மர்களு முழுகிக்கங்கை . . . . . .*
யாறணிசெஞ்சடைத் திருவாலக்காட்டுப்பனண்டமுறறி
மிர்ந்தாடுமெடியிலச்சேமெய்ப் . . . . . .*

பேறுபெறும் வேளாளர் பெருமையெம்மாற் பிரித்தல
விட்டிவளவெனப்பேசலாமோ. என்பதனானுமுணர்க.)

துஞ்சவருவாருத்தொழுவிப்பாரும்வழுவிப்போய் .... *
நெஞ்சம்புகுந்தெனனினைவிப்பாருமுனைநட்பாய். .... *
வஞ்சப்படுதொருத்திவாளுள்கொள்ளும்வகைகேட்... .. *
டஞ்சும்பழையனூராலங் காட்டெம்மடிகளே. (என்றுந் திரு
ஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரத்தானும்.)

இன்னும்புகழ்ந்திந்தவோர்பழிக்காமற்றெழுபதின்மர் ... *
துன்னுந்தழல்புக்கொளித்ததெல்லாஞ்சுருதிப்பொருளா ... *
புன்னும்புரிசைத்திருவாலங்காட்டிலுரைப்பதுக .... *
மன்னுந்தமிழில்வகுத்ததன்றோ தொண்டமண்டலமே. (என்
பதனானுமுணர்க.)

ஆணையாமடிநீறுகண்டடிச்சேரனென்னுஞ் .... *
சேணுலாவுசீர்ச்சேரனார்திருமலைநாட்டு .... *
வாணிலாவுபுண்ணியவர்கண்மைத்துனகமேண்மை ... ... *
பேணுநீடியமுறையதுபெருந்தொண்டைநாடு.. .. .... *

(இதன் பொருள்.)

ஆடையவெளுப்பதற்கு உழமண் மூட்டைகொண்டுபோகும் ஒருவண்ணானுடம்பில் அம்மண்ணகலிவுற்று வெண்மைநிறம் உண்டாகக்கண்டு அதைச் சுவாமிகட்டளையிட்டிருக்கும்தலைமையான திருநீறு தரித்திருக்கிறதாகப் பாவனைகொண்டு அடியேன்சேரனென்று அந்தாஜகனைவணங்கினவராகியதேசமெங்கும் பாவனவீர்த்தியையுடையசேரமான் பெருமாள் நாயனார் அரசு செய்துகொண்டிருந்தமலைநாட்டில் ஒளிவீசும் ஆபரணங்களையுடைய வணிகர்கள் மைத்துனராயிருக்கும் உறவைவிரும்பமுறைபாராட்டியது பெருமைபொருந்தியதொண்டைநாடு.—

(ஏ-று) மலைநாட்டிலுள்ளவணிகர் தொண்டைநாட்டாரைமைத்துனமுறைகொண்டதாவது-ஒருகாலத்தில் சேரநாட்டிலிருந்த வணிகஜாதியார் ஒருகலகநிமித்தம் தங்களிருப்பிடத்தில் நின்றும் வேறுதேயத்திற்குக் குடிவாங்கினார்கள் - அப்போதவர்களுமரபில் ஒருபெண் தெரிபட்டுத் தொண்டமண்டலத்திலிருக்கும் வேளாளர்களிடத்தில்வந்து வளர்ந்துகொண்டிருந்தது பின்பு அந்தவணிகர் கலகம் ஒழிந்து தங்கள் ஊர்களுக்குவந்தவுடனே சிதறிப்போயிருந்த தங்கள்மரபினர் யாவரும்வந்தடைந்தார்களோவென்று கணக்கிட்டு நோக்கும்போது ஒரு

திருக்குறிப்புத்தொண்டநாயனார்- சரு

பெண் குறைந்திருக்கக்கண்டு- தேடிக்கண்டுபிடிக்கத் தேய-மெங்குந்திரிந்து-காஞ்சிமண்டலத்தில்வந்து அந்தப்பெண்ணைக்கண்டு அவளை யழைத்துக்கொண்டுபோகும்படி வளர்த்தவர்களைக்கேட்க அவர்கள்-நாங்கள் பெண்போல் வளர்த்து யாதொரு குறுதுமின்றிக்காத்தோம்-ஆதலினால்-நீங்கள் குறைவாகநினையாமல் உங்கள் சாதியிற்சிறந்த ஒருபிள்ளைக்கே மணஞ்செய்துகொடுக்கஒப்புவிக்களாயின் அனுப்புவோமென்றார்கள்- அதற்கு அவர்கள் சம்மதித்து அந்தப்படியேசெய்து தொண்டைநாட்டானைச் சம்பந்திமுறைகொண்டாடினார்கள் என்பதாம். (ச)

கொத்தலர்சோதை வியன்சோ மண்டலக் கொம்பைத்தம்
வைத்திருந்தாங்கவடன்கெளிர்தேடிவரவவர்க்கே ... .. [பால்
யத்திருமேவார்க்கும்வரிசையுமாற்றியுடனுஞ்செல்லு .... *
மைத்துனகமேண்மை பகட்டத்தன்றோ தொண்ட மண்டலமே. (எண்பதனுலறிக.)

கறைவிளங்கியகண்டர்பாற்காதல்செய்முறைமை .... .. *
நிறைபுரிந்திடநேரிழையறம்புரிந்ததனுற் . .. . *
பிறையுரிஞ்செயிற்பதியில்பெருந்தொண்டைநாடு. .... *
முறைமையாமெனவுலகினின்மிகுமொழியுடைத்தால் .. .. *

(இதன்பொருள்)

விக்ஷத்தினிடமறையானது விளங்குகின்ற கழுத்தையடைய பரமசிவனிடத்தில் நிறைவாக ஆசையுற்ற பார்வதிதேவியார் முன்னைமையோடு முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தபடியால் சந்திரன் உதயம்தொண்டுபோகின்ற மதிலையுடைய காஞ்சிபுரம்விளங்குதற்கிடமாகிய தொண்டைநாடு எல்லாநாடுகளைப் பார்க்கிலும் முறைமையை உடையதாமென்று உலகத்தில்சிறந்த ஒருவார்த்தையை உடைத்தாயிருக்கின்றது.—(ச-று) (கு)

தாவில்செம்மணியருவியாறிழிவனசாரல் .... *
பூவில்வண்டினம்புதுநறவருந்துவபுறவம் .... *
வாவிநீள்கயல்வரம்பிறவுவகைப்பனமருதம் .... *
நீவிநித்திலம்பரத்தியருணக்குவநெய்தல்..... .... *

(இதன்பொருள்)

தொண்டைநாட்டிலுள்ள மலைகளின்சாரலிலிருந்து குற்றமற்ற மாணிக்கமணிகளோடு அருவியாறுகள் இறங்குகின்றன - முல்லைநிலத்தில் முல்லைமுதலாகிய மலர்களில வண்டுக்கூட்டங்க

ள் புதியதேனை உண்பன - மருதநிலத்தில் தடாகங்களி லிருக்கும் தீண்டகயல்மீன்கள் கலாயிலுள்ளமரங்கள்ஒடியத் தாவுகின்றன - நெய்தல்நிலத்தில் பரத்தியர்களால் முத்துக்கள் பரப்பிக் காயப்போடப்படுகின்றன.—(எ-று) (சு)

குறவர்பன்மணியரித்திதைவிலைப்பனகுறிஞ்சி .... *
கறவையானினாமாலுடன்பரிவனகானம் .... *
பறவைதாமலையிருந்திறவருந்துபழனஞ் .... *
சுறவமுணமருப்பனங்கயர்வனகழிசூழல் .... *

(இதன்பொருள்.)

குறிஞ்சிநிலத்தில் புனங்களானவை பலரத்னங்களையும் அரித்தெடுத்துத்தினைமுதலியவிலைப்பதற்கிடமாயிருக்கின்றன - முல்லைநிலத்தில் கறவைகள்ஆக்களும் மந்தைமாடுகளும் மான்களோடுசஞ்சரிக்கின்றன - மருதநிலத்தில் பட்சிகள் தாமரையிலையிலிருந்து இறைமீனைத்தின்கின்றன - கழிலையுடைய நெய்தல்நிலத்தில் சுறாமீனினுடைய முட்கள் வெயில்வருதலின் அறிகுறியாகவிலக்கப்பட்டு உச்சவஞ்செய்யப்படுகின்றன.—(எ-று) (எ)

கொண்டல்வானத்தின்மணிசொரிவனகுலவளைப்பாற் .... *
றண்டிண்ணிக்கொன்றைபொன்சொரிவனதளவயற்பால் .... *
வண்டலம்முதுநீர்மன்றுகால்சொரிவனவயற்பாற் .... .. *
கண்டலம்முள்ளுறைகரிசொரிவனகலங்கடற்பால் ..... *

(இதன்பொருள்.)

மேகங்கள் ஆகாயத்திலிருந்து உயர்வாகிய மலைகளின்மேல் முத்துக்களைச்சொரிகின்றன - முல்லைநிலத்தின்பசுங்கயிலில் குபேர்ஸ்திரியாகிய பூங்கொத்தினையுடைய கொன்றைகள் தமதுமலராகிய பொன்னைச்சொரிகின்றன - மருதநிலத்தில் நீர்விளையாடச்செல்கின்ற வாய்க்கால்கள் அந்நிலத்துச் சிறுபெண்கள் விளையாடி இறைத்துவிட்ட முத்துக்களைத் தள்ளிக் கரையில் ஒதுக்குகின்றன - கடலினிடத்தில் தாழுஞ்செடிகளையுடைய துறையினிடத்தில் கப்பல்களியானை முதலாகியபொருள்களைக் கொண்டுவருகின்றன.—(எ-று) (அ)

தேனிறைந்தசெந்தினையிடிதருமலைச்சீறூர் .... *
பானிறைந்தபுறிபதத்தனமுல்லைநீள்பாடி .. .... *
தூநிறலன்னநெய்கன்னலின்கனியதண்டுறையூர் .... *
மீனிறைந்தபேருணவினவேலைவைப்பிடங்கள் .... .. *

(இதன் பொருள்)

மலையின்சாரலாகிய குறிஞ்சிநிலத்திலிருக்கும் சிறிய ஊரிலுள்ளோர்கள் தேன்வார்த்துப் பிசைந்த சிவப்பாகிய தினை அரிசி மாவை வந்தவர்கட்குக் கொடுப்பார்கள் - முல்லைநிலத்திலிருக்கும் நிண்ட இடையர்பாடிகள் பால்வார்த்துக் கலந்த புல்லரிசிச்சோற்றை யுடையனவாயிருக்கின்றன - குளிர்ச்சி பாருந்தியதீர்த்தலறனையுடைய மருதநிலத்தூர்கள் பரிசுத்தமாகிய நெல்லரிசிச்சோறு - நெய் - கருப்பஞ்சாறு - பழங்களினவினையுடையனவாயிருக்கின்றன - சமுத்திரத்தினருகிலிருக்கின்ற நெய்தல்நிலத்தூர்கள் மிகுதியும் மீன்களையே யுணவாக வுடையன. (எ-று) (க)

குழல்செய்வண்டினங்குறிஞ்சியாழ்முரல்வனகுறிஞ்சி .. ...*
முழவுகார்கொளமுல்லைகண்முகைட்பனமுல்லை .... *
மழலைமென்கிளிமருதமர்சேல்கையமருத .. .. *
நிழல்செய்கைதைகரும்பெய்தலங்கழியன நெய்தல் ..... *

(இதன் பொருள்)

குறிஞ்சிநிலத்தில் குறத்தியர்களுடைய கூந்தலிலிருக்கும் வண்டுகள் குறிஞ்சியாழி னிசைபோல தொனிசெய்கின்றன: முல்லைநிலத்தில் மேகங்கள்முழங்க முல்லைச்செடிகளரும்புவிடுகின்றன - மருதநிலத்தில் மழலைச்சொற்களையுடைய கிளிகள் மருதமரங்களைத் தாக்கு இடமாகவுடையன - நெய்தல்நிலங்கள் நிழல் கொடுக்கும்படி உயர்ந்ததாழைகள்சூழ்ந்தநெய்தல்மலர்கள்பூத்திருக்கும் கழியினையுடையன.—(எ-று) (௨)

மல்குமப்பெருநிலங்களில்வரைபுணர்குறிஞ்சி.... .. .... *
யெல்லையெங்கணுமிறவுளமோனன்முனமினைக்கும் .... .. *
பல்பெரும்புனம்பயிலவனபடர்க்கிறைததோகை.. .. .... *
சொல்லுமப்புனங்காப்பவுஞ்சுரிகுழற்றோகை .... *

(இதன் பொருள்.)

செறிப்பாகிய மூன்சொல்லிய நால்வகைநிலங்களில் மலையைச்சார்ந்த குறிஞ்சிநிலத்தினுடைய இடங்களிலெல்லாம் குறவர்கள் தினைப்பயிரிடுகின்ற பல புனங்களிருக்கின்றன - அவைகளில் தழைத்த சிறிய தோகையையுடைய மயில்கள் சஞ்சரித்துக்கொண்டிருப்பன - சொல்லப்பட்ட அந்தத்தினைப் புனத்தைக் காக்கின்றவர்களும் சுருண்டிருக்கும் கூந்தலையுடைய மயில் போன்ற சாயலைப்பெற்ற குறமாதர்களாம்.—(எ-று) (௩௧)

அங்கண்வான்மிசையரம்பையர்கருங்குழற்சுரும்பு .. ..*
பொங்குபூண்முலைக்கொடிச்சியர்குழன்மூழ்கிப்போகாச் .. *
செங்கண்மாலவிடையார்திருக்காளத்தியென்று .... *
மங்குவகுழ்வரைநிலவியவாழ்வினுன்மல்கும்.... .....*

(இதன்பொருள்)

அழகிய இடமகன்ற தேய்வலோகத்தில் வாழ்ந்திருக்கும் அரம்பையுமுதலிய மாதர்களினுடைய கூந்தலிலுள்ள வண்டுகள்பிரகாசத்தைத் தருகின்ற ஆபரணத்தைத்தரித்த ஸ்தனங்களையுடைய குறத்திகளது கூந்தலில்விழுந்து வாசனைமிகுதியால் அவைகளை விட்டுப்போகாமலிருக்கும் சிவந்தகண்களையுடையவிஷ்ணுவாகிய ரிஷபத்தையுடைய பரமசிவன்வீற்றிருக்கும் திருக்காளஹஸ்தியென்கிற மேகங்கள்மொய்க்கின்ற மலையானது நிறைந்த பலவளங்களால் பெருமையை யடையும்—(எ-று)

வேறுவேறுகுறிமையவரரம்பையர்பிறந்து , ...*
மாதில்வேடருமாதருமாகவேவலங்கு.. .. ..*
மாறுசூழ்சடையண்ணலார்திருவிடைச்சுரமுங் ....*
கூறுமேன்மையின்மிக்கதந்தாட்டிவண்குறிஞ்சி .... *

(இதன்பொருள்)

வெவ்வேறுவகையாக எண்ணப்பட்டிருக்கின்ற தேவர்களும், தேவமாதர்களும், மாறுபாடில்லாத வேடர்களும் வேட்டுவச்சிகளுமாகப்பிறந்து வளைந்துகுவிகின்ற கங்கைதங்கிய சடையையுடைய சுவாமியீற்றிருக்குந் திருவிடைச்சுரமென்னும் ஸ்தலமும் பிரசித்தமாகச்சொல்லப்படும் மேன்மையிற் சிறந்திருக்கின்றது-அந்நகரத்தொண்டைநாட்டிலுள்ள வளம்பொருந்திய குறிஞ்சிநிலத்தில்—(எ-று) (ய௩)

அம்பொன்வார்குழற்கொடிச்சியருடனரமகளீர் .... *
வம்புலாமலர்ச்சுனைபடிந்தாடுநீள்வரைப்பி .... *
னும்பர்நாயகர்திருக்கழுக்குன்றமுமுடைத்தால் ... . *
கொம்பர்வண்டுகுழுங்குறிஞ்சிசெய்தவங்குறையுளதோ ....*

(இதன்பொருள்)

அழகாகிய பொன்னிறமுள்ள அசோகுமுதலிய புஷ்பங்களைத் தரித்த நீண்டகூந்தலினையுடைய குறத்திகளோடு தேவஸ்திரீகள் வாசனைபொருந்திய மலர்களிருக்கும் சுனையிற்படிந்து மூழ்குகின்ற நீண்ட இடங்களையுடைய தேவர்களுக்கு நாயகரான

கிய சுவாமி யெழுந்தருளியிருக்கும் திருக்கழுக்குன்றத்தையும் பூங்கொம்புகளில வண்டுகள்மொய்க்கின்ற குறிஞ்சிநிலம் உடைத்தாயிருக்கின்றது-ஆதலால் அதுசெய்த தவங்குறையுள்ளதென்று சொல்லலாமோ.—(எ-று) (மசு)

கோலமுல்லையுங்குறிஞ்சியுமடுத்தகில்லிடங்க.... .... ..*
ணீலவாட்படைநீலிகோட்டங்களுநிரந்து..... .... ..*
காலைவேனிலிற்கடும்பகற்பொழுதினைப்பற்றி.....* ....*
பாலையுஞ்சொல்லலாவனவுளபரன்முரம்பு.... ....*

(இதன்பொருள்.)

அழகாகியமுல்லைநிலமும்-குறிஞ்சிநிலமும்- நீலநிறமுள்ள வாளாயுதத்தைக்கொண்ட காளியினது பல கோயில்களுண்டாய்ப் பருக்கைக்கற்களையுடைய மேடுகள் அடுத்த சில இடங்களையுடையனவாயிருத்தலால் வேனிற்காலத்தில் பகற்பொழுதுமிகுந்த உஷ்ணமாயிருப்பதைப்பற்றிப்பாலைநிலமென்றுஞ்சொல்லப்படுகின்றன.—(எ-று) நீலிகோட்டம்-காளிகோயில்-முரம்பு-மேடு. (மரு)

சொல்லுமெல்லையிலம்புறத்தன்னுணர்ச்சுருங்கலைக்கும் ... *
பல்பெருமுன்றற்கானியாறிடையிடைபரந்து.. .. ..*
கொல்லைமெல்லிணர்க்குருந்தின்மேற்படர்ந்தபூம்பற்றர் ..*
முல்லைமென்புதன்முயலுகைத்தடங்குறிண்முல்லை .. ....*

(இதன்பொருள்)

வண்டுகள்முழங்கும் பூங்கொத்துகளை அலைத்துக்கொண்டு வரும் வெள்ளமாகிய நீரையுடைய எல்லையின்புறத்தில் ஓடுகின்றனவாகிய பலகாட்டாறுகள் கரைபுரண்டு ஊரின்நடுவில்நடுவில்பரவுதலால் மேடாயிருக்குங் கொல்லைகளில மிருதுவாகிய பூங்கொத்தினையுடைய குருந்தமரத்தின்மேற் பற்றல்போற்படர்ந்திருக்கு முல்லைக்கொடிகளின் சிறியபுதரிலிருக்கும்முயல்கள் அந்தநீருக்குப்பயந்து எழும்பித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளத்தக்க இடத்திற்சேரும் நீண்ட முல்லைநிலத்தில். (எ-று) (மசு)

பிளவுகொண்டதண்மதிநுதற்பேதையொயிற்றைக்..... ..*
களவுகொண்டதுதளவெனக்கள்வலர்தூற்று ... .*
மளவுகண்டவர்குழனிறங்கனியுமக்களவைத்.....*
ளவுகண்டெதிர்சிரிப்பனதமக்குமுன்டென்று ... .*

(இதன்பொருள்)

ருவிர்ச்சிபொருந்திய மூன்றாம் பிறையை ஒத்த நெற்றியையுடைய இடைச்சிகளின் பதிகளினழகை மூல்லையரும்புகள் திருமுடிக்கொண்டனவென்று வளைசிவக்கச் அலர்தூற்றுகின்றன-அத்தன்மையய மூல்லைசெடிகள் அதிர்த்துமேதிசொன்னஸ்ரீகளின் கூந்தலினிறங்பேசல் கருமையைகொண்ட களாவின்பழங்களை நோகக்கிரிகின்றன-அவைகளுக்கும் தமக்குச்சொல்லியதுபோல் திருட்டுத்தனம் வன்றென்று — எ-று) அலர்தூற்றல்-பழிகூறலும், மலர்கொண்டார்-கிரிதல-நலகதலும் புகழ்தல்லுமாம் தமக்குமுன்னென்றது-களபழக்கூந்தலின் கருமையைத்திருடினாகள் சொல்லிக் கவலை எய்தல-செலக்கூறும், அருப்பிற்கும், கவலைசெடிகளு, பழக்கிரிக்கு முதல்கிளைபொற்றுமைநயம்பரி-அரேபதமாக்கக்கிறார். (பஎ)

மங்கையர்க்குவாள்விழியிவளைதோற்றமான்றாக்க .... .. *
வெங்கரும்மற்றவரிடைக்கிடைமலர்கொடாடியவாகு .... *
மங்கன்முலைபின்றெரிவிமைறாழ்தரமுலைக்கிருஞ்.. .. *
செங்கணமாமெழுதுவிவன்மதிக்கிருமுலைகாயின.. .... *

(இதன்பொருள்)

மாதர்களுக்கு வளிவாருக்கிய கண்ணிவியக்கிய தோற்றமான்கூட்டம் எவ்வளவுதுமிக் கண்கவரு அவர்களுடைய இடைகளுக்குத்தோற்ற மூங்கிலைகள் எல்லாம் படாதிருக்கவும்-அழகியஇடைகளையுடையமூங்கிலிடத்தில் மலருதலையும்மென்று அருமையாகியதனிற்றோல்லப்பட்டமுகுளங்கள் கிவர்தலன்னையுமடைய விகாரமொழுப்ப பிலவன் விரிருப்பதற்கிடமாகிய திருமுல்லைவாயிலும்-இருக்கின்றது — எ-று) நகவும்-படர்தற்கிருக்கவும்-இருக்கின்றன என்னுஞ்சொற்கள் வருவிக்கப்பட்டன. (பஅ)

நீறுசேர்திருமேனியர்நிலாத்திகழ்முடிமேன் .... *
மாறில்கங்கைதான்வாகருமுஞ்சலத்தாலவிந்த .... .. *
ஏறுமீதுகருமொளிமலர்க்கண்ணகமதனை .... *
வேறுதனமெருவைப்பெனவிளங்குமாமுலையை.. .. .. *

(இதன்பொருள்)

கிருதிமறைத்தரித்த திருமேனியையுடைய கயிலாசபதியினது சந்திரன்பிரகாசிக்கின்ற முடியின்மேல் குதிக்கப்பெற்ற கங்கையான

துவார்க்கின்றமஞ்சனநீரைக் கொடுக்கப்பெற்றுக்கொண்டு எப்பொழுதுநீருறுகின்ற பிரகாரமாகிய திருவாறலென்னும்ஸ்தலத்தை ஒப்பற்ற தனது இடமாகப்பெற்று முல்லைநிலம்விளங்குகின்றது.—(எ-று) (கூ)

வாசமிகுமல்லிகையுமுல்லைசூழ்மருதம் .. ..
வீசுதனைமிகுமாறுபிரமக்குயாத்தொழிப்.. .. ..
பாசவடத்தடத்தாமரைப்பழனங்களைமருங்கும் .... ..
தூசலவலைகளைக்குளக்கரைமேலியும்டுகுவ . .. .

(இதன்பொருள்.)

வாசனைபொருந்தியமிகுதியாகிய மலர்கள்நிறைந்த முல்லைநிலத்தையுடைய மருதநிலத்தில் மோதுகின்ற தெளிவாகிய அலைகளையுடைய ஆறுகளையுடைய வெள்ளம்புரண்டோடிப் பகைமையாகிய ஆலம்பூத்த அகன்ற தாமரையையுடைய தடாகங்களின் கரையிலுள்ள பிரிந்தகன்ற வலியகலைகளையுடைய குளங்களின் கரைகளிலும் பாயுமென்றவாறு.—(எ-று) (உய)

துக்கமாதவன்சுரபியின்திருமுலைசொரிபால் ....
பொக்குநீர்த்தமாய்நந்தமாகவனமிசைப்போந்தே . ...
பாகமலர்தனிலன்னந்தனமடிலைமணிகள் ....
பங்கயத்தடத்துறைப்பவன்தழுவுறுபாலி ....

(இதன்பொருள்.)

உபகாரியாகிய தவக்கொழுந்தையுடைய அகலிகையானது காமதேனுவின் முலைகளினின்றும் சொரிகின்ற பாலானது-பெருமைபொருந்தியபாலாகிறதனாலே நீர்க்கமாய்ந்தநீர்ப்பசுத்தையுடையதாகக் கொண்டு மேய்விடத்திலிருந்தகன்றுகளுக்கு ஊட்டுவாளாய் மிகுத்தனக்கட்டைகளோடு நீர்க்கட்டைகளோடு ரதத்தினங்களையும் தாமரைத்தடாகங்களில் கொண்டுவந்து நிறைக்கும்படி இறங்கி வருகின்றது. (எ-று) (உக)

பிரளைதவப்பெருகுபால்சொரிமுலைத்தாய்போல் .... ..
மவ்வளிவேனிலின்மலைத்திடர்புகைத்துளகவருட.... ... ..
வெள்ளநீரிருமருங்குகால்வழிமிதத்தநிப் ... .
பள்ளநீள்வயத்பருமலையுடைப்பதுபாலி.... ....

(இதன்பொருள்.)

ஊழிநீர்தையானது தடவமிகுந்தபாலைச்சொரிகின்ற முலையையுடைய தாய்போல உழவுர்தன் வேனிற்காலத்தில் மணல்மேடுகள்

ளைக்கையினால் தோண்டிவார ஊறியவெள்ளநீரானது இரண்டுபக்கங்களிலுமுள்ள வாய்க்கால்களிலும் நிறைந்து எறிப்பள்ளமாகிய வயல்களின் நீர்மடையையுடைப்பதற்குக் காரணமாயிருக்கின்றது பாலாறு.—(எ-று) (உஉ)

புனையவாகியபதிபரந்தகன்பணைமருங்கிற் .... *
கனைநெடும்புனனிறைந்துதண்கரைப்பெருங்குளங்கள் .... *
புனையிருங்குடிமதகுவாய்திறந்திடப்புறம்போய் .... .. *
வினைஞர்ப்பொலியெடுப்பநீர்வழங்குவவியன்கால் .... *

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பாலாறுஎன்னும் பாவுதலால் விசாலமாகியவயலைச்சார்ந்த பகுதியிருக்கும் வலியகரைகளையுடைய குளங்களில் ஒலியையுடையமிகுந்த நீர்நிறைந்து பெருமைபொருந்திய குடிகள் அவைகளுக்குக்கட்டப்பட்ட மதகுகளின் வாயைத்திறக்கப் புறத்திலும்போய் உழுகிறவர்கள் கூச்சலிடப்பெரியகால்கள் நீர் ஓடும்படியிருக்கின்றன.—(எ-று) (உகூ)

மாறில்வண்பகட்டேர்பல்நெருங்கிடவயல்கள் .... *
சேறுசெய்பவர்செந்நெலின்வெண்முளைகிள்ளி .... *
நாறுவார்ப்பவர்பறிப்பவர்நடுபவரான .... *
வேறுபல்வினையுடைப்பெருங்கம்பலைமிகுமால் .... *

(இதன்பொருள்.)

மாறுபாடில்லாத வளம்பொருந்திய எருமைக்கடாக்கள் பூட்டிய பல ஏர்களைக்கொண்டு நெருங்க வயல்களைச்சேறுசெய்கிறவர்களும், சம்பாநெல்லின் வெண்மையாயிருக்கிற முளைகளை விளைத்து நாறாக வளர்ப்பவர்களும், அந்தநாற்றைப் பறிப்பவர்களும், நடுகிறவர்களுமாகிய இவர்களுடைய பலவகையான தொழில்களினால் ஒருபெரியமுழக்கமுண்டாயிருக்கும்.(எ-று)

வரும்புனற்பெருங்கால்களைமறித்திடவாளை .... *
பெருங்குலைப்படவிலங்குவபிறங்குநீர்ப்பழன .... *
நெருங்குசேற்குலமூழ்த்துவநீள்கரைப்படுத்துச் .... .. *
சுருங்கைநீர்வழக்கறுப்பனபருவராற்றொகுதி.... .... *

(இதன்பொருள்)

நீர்வருகின்ற பெரியகால்வாய்களைக் குறுக்காக வாளைமீன்கள் அணைபோல் மறிக்க - அந்தநீர் ஓரத்திலிருக்கும் பெரிய க

திருக்குறிப்புத்தொண்டநாயனார்- ௫

னா உடைபட்டுப்போகும்படிவிலக்கிப்போகின்றன-பிரகாசமுள்ள ஜலத்தையுடைய புறத்திலுள்ள வயல்களிலிருக்கும்பெருங்கிய மீன்கூட்டங்கள் அவ்வுடைபட்ட கரைவழியாகநீர்வாராமல் ஒன்றின்மேலொன்றாகப்படுத்து அடைக்கின்றன-அதன்பிலபரிப்பவராலமீன்களின்கூட்டம் மதகினிருந்து நீர்வரவொட்டாமல அடைக்கின்றன —(எ-று) ௬ருகுகை- தொனை.

களைத்தடம்பணையெழுந்தசெந்தாமரைதழுவி .... .. *
விளைத்தசுவைவிளைவுபடுப்பவிடையெங்கும் ... . *
விளைத்தபாசொளிவிளங்குநீள்செம்பொ லூர்வேள் .. .. *
வளைத்தபமாமதிம்பான்றுளமருதநிலைப்பு.... .. .. *

(இதன்பொருள்)

எவ்விடத்திலும்தளைகளாயிருக்கின்ற அகலமாகிய வயல்களில் முளைத்த செழுமையொருந்திய தாமரைபடர்தலால் அவைகளை-சூழ்கொண்டிருப்பதலால் இவைப்பை அவிழ்க்கைக்கு ஏதுவாகச்செய்துகொண்டிருப்பன- அவை நீலநிறமுடைத்தாய் விளங்கும் ஆகாயத்தில் பரிவேஷத்தால் வளைக்கப்பட்ட பூரவைசந்திரனைப்போன்றிருக்கின்றன-விசாலமாகிய மருதநிலத்தில் (எ-று) இப்பாட்டில் பாசொளியெல்லாது நீலநிறத்தது.(உ௬).

ஓங்குசெந்தெனின்படையனவுயர்கலைழக்கரும்பு... .. .. ..*
பூங்கருப்பம்பம்பிலைவேலபூகமட்பூகப் ....*
பாங்குநீள்குலைதெங்குலபங்கதலிவன்பலவுந் .... *
தூங்குதங்கலைசுதநீள்வேலியசோலை.... .. .. *

(இதன்பொருள்)

வளர்கின்ற செந்நெற்பயிர்களின் பக்கத்திற் கரும்புகளிருக்கின்றன-கரும்புகளின்புறத்தில் கமுகமரங்கள் நெருங்கியிருக்கின்றன-அக்கரும்புகளின் பக்கத்தில் நீண்ட குலையினையுடைய தென்னமரங்களிருக்கின்றன-பசுமைபொருந்தியவாழைகளும் வளமாகியபலாமரங்களும்-தித்திப்பாகிய பழங்கள் தொங்குகின்ற மாமரங்களும்-ஆகிய இவைகளின்சோலைவேலியாயிருக்கின்றன.—(எ-று) கலைழக்கரும்பு- மீமிசச். (உஎ)

நீடிதண்பணையுமித்தநீண்மருங்கினெல்லின் .... *
கூடுதுன்றியவிருக்கையவிருந்தெதிர்கொள்ளும்.. .. .. *
பீடிதங்கியபெருக்குடிமனையறம்பிறங்கு ....
மாடமோங்கியமறுகுகண்மல்லன்மூதூர்கள் ....

(இதன்பொருள்)

த விருந்தாளிகளை யெதிர்கொண்டு உண்பதற்கு அழைக்கி ன்றபெருமையொருந்திய இல்லறமானது விளங்கும் பெரிய ரு கூடங்களையுடையனவாய்மாளிகைகள் நிறைந்த வீதிகளையுடைய வரை யொருந்திய புராதனமாகிய ஊர்கள் குணிச்சியாகிய தீ ண்டலையுடையனவாய் நார்புறத்தை யுடையனவாயும் நெற்களஞ் சியங்களுள்ள இருகலைகளையு உடையனவாகியும் விருகவலறன — (எ-று) (உஅ)

தொடலைநாண்மறைமுசற்பெருங்கலையொலிதுவன்றி.. .. *
பிண்டிமுயலுடுத்தாகுதி வேள்வியிலெழுந்த . .. . *
மல்குதண்புகைமழைகருமுகிற்குலம்பரந்தன .... *
செல்வமாமலகியதிருமறையவர்செழும்பதிகள் .... *

(இதன்பொருள்)

பதிமையாகிய நான்குவேதங்கள் முதலாகிய பெருமையொரு ந்திய மதிறநூல்களை யோதுதலால் உண்டாகிய ஒலிநிறைந் து இல்லறகளதாடதி யாகத்தில் செய்யுமி ஆறுதிகளால உண் டாகிய மிகுந்தபுகையானது மழையைப் பெய்கின்றமேகக் கூ ட்டம்போல்பரவும்படி பாகதியாந்தமைந்திருக்கும் பிராமண ர்களின் செழுமையொருந்திய ஊர்களிருக்கலறன.—(எ-று)

தீனுதீங்கி - தநிக்காலியாயவுணர்க்கு .. .. *
நாதர்தாமருளடிந்தனுதல்வினைப்பயன்செய் .. .. *
மாதர்சேர்வன்றியுமபுடைமறையவர்வலம் .. .. *
பூதிசாதனம்பொற்றிய பொற்றிருலுவிளங்கும் .... *

(அதன்பொருள்.)

நிலைமையொருந்திய காலியென்கிற வசுரனுக்கு உண்டாயிருந் த தீமையை நீக்கப் பரமசிவன் அனுகிரகஞ் செய்வதற்கிடமான ந ல்வினையே தமகருப்பிரயோசனமாகச்செய்கின்ற கற்புள்ளம் ஆவிகளை உடையவர்களாகியநற்குலத்திற்பிறந்த பிராமணர்க ள்வாழ்கின்றதிருவலஞ்சுழியென்னுமிடமானது விபூதியையு மனு பவத்தையுமடைகின்றதற்குக்காரணமாகிய மற்றைக்கிரியைகளை யும் அறுவகைத்தருமங்களையுங்கொண்டுவரும் அழகினாலுவிளங்கும் (எ-று)

அருவிதந்தசெம்மணிகளுப்புறவிலாயமலரும்... ... .*
பருவியோடைகணிறைந்தநிறபாவியின்கரையின் .. .. *
மருவுசங்கைவாழ்சடையவர்மகிழ்ந்தமாற்பேறும் .... .. *
பொருவிலாமிலுஞ்சூழ்ந்ததப்புறம்பணையருகும்.. ... *

(இதன்பொருள்.)

மலையருவிகளால் வாரிவரப்பெற்றகுளிர்பொருந்திய மணிகளும் காட்டிலிருந்து அரிக்கப்பட்டமலர்களும் பெரியதாமலாமலர்களையுடையஇலைகளில் நிறைந்து ஒழுகின்ற பாலாற்றின்கரையில் இருக்கும் சங்கரதக்கிய சலையை உடையபரமசிவன் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியிருக்கின்ற திருமாற்பேறென்னும் ஒப்பற்றஸ்தலமாகிய இருக்கின்றது வயலகளைப்புறத்துள்ள மருதநிலத்தில்.—(எ-று) வி-மலர்-குறுகிநின்றது.

விரிந்தபுலமெங்கணுமெல்லாகுளிரிதிரைதரிக .... *
மருங்கணாட்டியிலிலாலயமனேகமுடனேந்துக ....*
பருங்கைமாலைனையுமரித்தவிருத்தவப்பாகூர் ....*
மருங்குசூழ்தவப்புரிந்ததன்மேமுறமருதம் ... .*

(இதன்பொருள்.)

விரிந்த அலைகளையுடைய நதிகளின் அருமையாகிய கரையிலிருக்கும் அனேகம் ஸ்தலங்களையும் தன்னிடத்திலுடைத்தாய்ப் பரியமானையை உரித்த பரமசிவன் எழுந்தருளியிருக்கும் திருப்பாகூர் என்னும் ஸ்தலமும் தன்னிடத்திலிருக்க மருதநிலத்தவர்செய்திருக்கிறபடியால் இதைப்பார்க்கிலும் விசேஷமாகச்சொல்லவேண்டிய பெருமை என்ன இருக்கின்றது (எ-று)

பூமருப்புனல்வயற்களம்பாடியபொருநர் ....*
தாமருங்கிளையுடன்றடமென்மலர்மலைந்து ....*
மாமருங்குதன்னணிமுளின்மருதயாழ்முரலுங் ....*
காமர்தண்பணைப்புறத்ததுகருங்கழிநெய்தல் ....*

(இதன்பொருள்.)

மலர்கள்மருவியிருக்கும் நீரையுடைய மருதநிலத்தின் போர்க்களத்தைக்குறித்துப் பாடிய உழவர்கள் நெருங்கிய சுற்றத்தாரோடு குளங்களிலிருக்கும் மெல்லிய மலர்களைத் தரித்துக்கொண்டு மாமரத்தின்கீழ குளிர்ச்சியாகிய நிழலிலிருந்து மருதயாழ்வாசிக்கின்ற அழகாகிய கழனிகளின் புறத்திலிருக்கின்றது-கருமையாகிய நெய்தற்பூவையுடைய கழி (எ-று)

தூயவெண்டுறைப்பரதவர்தொடுப்பனவலைகள் .. ..*
சேயநீள்விழிப்பாத்தியர்தொடுப்பனசெருந்தி .. ..*
பாயபொளத்தளவர்களளப்பனவுப்புச் ....*
காயமென்னடையளத்தியாளப்பனதாளம் .. ..*

(இதன்பொருள்)

நெய்தல்நிலத்தின் பரிசுத்தமாகிய மணற்றுறையில் செம்பட வராலவலைகள் பின்னப்படுகின்றன-செவ்வரிபாய்ந்த நீண்ட கண்களையுடைய நெய்தல்நிலப்பெண்கள் செருந்தியென்னும மலர்களை மாலையாகத் தொடுப்பார்கள்-பெரிய அளங்களில் அளவர்கள் உப்பளங்கிண்ருர்கள்-மயில்போன்ற சாயலையும் பிருதுவாகிய நடையையும் உடைய அபரத்தியர்கள் முத்துக்களை அளக்கின்ருர்கள்.—(எ-று) (௩௪)

கொடுவிளைத்தொழிலுளையர்கள்கொடிப்பனகொழுமீன் ..*
பிடிபணைத்தொடைநுளைச்சியர்கொடிப்பனபவளம் ....*
தொடுகடற்சங்குதுறையவர்குளிப்பனவலர்தம் .. .. *
வடிவகிர்க்கண்மடங்கையர்குளிப்பனமணற்கேணி .. ..*

(இதன்பொருள்)

கொடியவினைகளைச்செய்கின்ற நுளையர்கள் கொழுமையாகிய மீன்களை விரிகின்ருர்கள்-மணற்கேணிகளிலிருந்து நுளைச்சியர்கள் பவளத்தினை விரிகின்ருர்கள்-அக்கடலின் துறையில் வாசஞ் செய்கின்றவர்கள் சக்கராலமேற்கொண்டட்பட்ட சமுத்திரத்தில் முழுகிச் சங்குகளை பெறுக்கின்ருர்கள்-அவர்களுடைய மாவடிவைப்பிளந்தாலொத்த கண்களையுடைய மனைவிகள் மணற்கேணி பிற்குளிக்கின்ருர்கள் —(எ-று) (௩௫)

கழிப்பனநிரைமேலோதிமுன்சூழ்ந்துகொண்டணைய. .. .. ..*
கழிக்கரைப்பொதிபொன்னவிழ்ப்பன்மலர்ப்புன்னை .. . .*
விழிக்குநெய்தலின்விலாமலர்கட்சுருப்புன்னைக் .. ..*...*
கழிக்கரைப்பொதிசோறவிழ்ப்பனமடற்கைதை .. .... *

(இதன்பொருள்)

கழிப்பயுடைய நீர்நிறைந்த கடல்வெள்ளமானது சூழ்ந்து தன்னுள்ளே கொள்ள - அக்கடற்கரையிலிருக்கும் புன்னைமரங்கள் பொன்னிறமாகியபுஷ்பங்களை மலர்கின்றன-கண்போல்தோன்றுகின்றவர்களை யுற்றநெய்தற்பூவினுள்ள வண்டுகள் உண்ணும்பொழுது கழிக்கரையிலிருக்கும் மடலையுடைய தாழையானது தமது மலர்களிலிருந்து சோறுகளைச் சொரிகின்றன.—(எ-று)

சோறவுது-தாழம்பூவில்பொடிகளையடக்கிக்கொண்டிருக்கும் ஒருவகைக்குலை (௩௬)

காயல்வண்கரைப்புறைதெறியடைப்பனகனிமுட் .. .. ..*
சேயதண்ணறுஞ்செழுமுகைசெறியுமுண்டகங்க .. .. *
ளாயநுண்மணல்வெண்டடையைமறைப்பனவன்னற் .. .. *
தாயமுன்றுறைச்சூழல்சூழ்ஞாழலின்றாது .. .. *

(இதன்பொருள்)

கழிகளின் வளமாகிய கரையின் சிறுவழியை முட்கள் நிறைந்த சிவந்த குளிர்ச்சியும் வாசனையுமுள்ள முதிர்ந்த பூங்சுலைகளையுடைய தாழஞ்செடிகள் அடைக்கின்றன - அன்னந் தாவினையாடும் துறையையுடைய நெய்தல்நிலத்தினிருக்கும்ஞாழற்பூக்களின் தாதுக்கள் கடற்கரையின் சிறியமணலைக்கண்வெண்மையை மறைக்கின்றன.—(எ-று) (௫௭)

வாம்பெருந்திரைவளாகமுன்குடிபயில்வளைப்பிற் .... .. *
றும்பரப்பியகயல்களின்விழிக்கயலதவிரக .. . . *
காம்பினேர்வருந்தோளியர்கழிக்கயல்விலைசெய் .... *
தேம்பொதிந்தசின்மழலைமென்மொழியசெவ்வழியாழ் .. *

(இதன்பொருள்.)

தாவிவீசுகின்ற பெரிய அலைகளையுடைய கடலின் அருகிடத்திலுள்ள நெய்தல்நிலத்தில செம்படவர் குடியிருக்கும் இடங்களில அவர்களாலபரப்பிக்காயப்போடப்பட்டிருக்கும் மீன்களை மீன்களால்-மூங்கிலையொத்த தோள்களையுடைய நுளைச்சியர்கள் தங்கள்கணவர்களுக்கு உண்டாகிய குறைவுநீங்கும்படி தாம் கழிக்கயலைகளை விலைகூறுகின்ற தேன்போல இனிப்பாகிய சிலமழலைச்சொற்களினிசைக்கு ஒப்பச்செவ்வழியாழ்வாசிக்கப்படுகின்றன.—(எ-று) (௩அ)

மருட்கொடுந்தொழின்மன்னவனிறக்கியவரியை .... .. *
றெருக்கிமுன்திருவொற்றியூர்நீங்கலென்றெழுது .... .. *
மொருத்தர்தம்பெருங்கோயிலினொருபுறஞ்சூழ்ந்த .. .. *
திருப்பரப்பையுமுடையதத்திரைக்கடலலைவப்பு .... *

(இதன்பொருள்.)

மயக்கமும் கொடுமையுமாகிய தொழிலையுடைய ஒரு அரசன் எல்லாக்கோயில்களுக்கும் படித்திட்டத்தைக்குறைப்பித்தான் ஆகையிதது-திருவொற்றியூர் நீங்கலாகவென்று எழுதியொற்றி பற்றபரமசிவன் வீற்றிருக்கும் கோயிலுக்கு ஒருபக்கத்தில் சூழ்ந்திருக்கும் பரிசுத்தமாகிய இடத்தையுமுடையது மேற்

சொல்லிய அலைகளையுடைய கடலின் அருகிடமாகிய நெய்தல்நிலம்.—(எ-று) (௩௧)

மெய்தரும்புகழத்திருமயிலாபுரிவிரைசூழ் .... *
மொய்தயங்குதண்பொழிற்றிருவான்மியூர் முதலாப் .... *
பைதருபணியணிந்தவர்பதியெனைப்பலவால .... *
நெய்தலெய்தமுன்செய்தவத்நிறைதவஞ்சிறிதோ .. .. *

(இதன்பொருள்)

மெய்ம்மையாகிய புகழையுடைய திருமயிலையம்-வாசனைபொருந்திய நெருங்கிய குளிர்ச்சி பொருந்திய சோலையையுடைய திருவான்மியூருமுதலாகப்படத்தையுடையபாம்பினைத்தரித்ததபாமசிவனாவீற்றிருக்கும் மற்றைத்திருப்பதிகள் அனேகமிருக்கின்றன-நெய்தல்நிலமானது அலைகளைத் தன்னிடத்திலுடைத்தாயிருக்கமுன்செய்ததவம் குறைவானதோ.—(எ-று) மயிலாபுரி-மருஉமுடிபு. (சம)

கோடுகொண்டெழுந்திரைக்கடற்பவளமென்கொழுந்து ...*
மாடுமொய்வலாச்சந்தனச்சிலைமிசைவளரு .... *
நீடுநெய்தலுங்குறிஞ்சியும்புணர்நிலப்பலவா .... *
லாடுநின்கொடிமாடமாபலலைமேயலையே ....*

(இதன்பொருள்)

அலைகளையுடைய சமுத்திரத்தில் கொம்புகொம்பாய் எழுந்திருள்ளமிருதுவாகிய பவளத்தினது கொழுந்துகள் பக்கத்தில் நெருக்கமுற்றமலைகளிலிருக்கும் சந்தனமரங்களின் கொம்புகளிலே வளரும்படி நீண்டநெய்தல்நிலமும்-குறிஞ்சிநிலமும்-திணைமயக்கமாகப்புணர்ந்த நிலங்கள்பலவாம், ஆனால் நீண்டகொடிகளாடுகின்ற மேல்விடுகளையுடைய மலைநகரத்திற்கு ஒத்திருக்கின்றன.—(எ-று) மல்லை-மாவலிபுரம்-அதுபலையையுடைத்தாய்க்கடற்கரையிலிருக்கின்றமையால்-மலையேயலையவென்றார். (சக)

மலைவிழிப்பனவெனவயற்சேல்வளைப்பாறைத் .... *
தலையுகைப்பயந்தவெக்செறுவிடைநெடுங்கருமான் .... .. *
கலைகுதிப்பனகரும்பகட்டேர்திகர்ப்பவுமா .... *
நலைபுனற்பணைகுறிஞ்சியோடணைவலவணைகம் .... *

(இதன்பொருள்.)

மருதநிலத்திலிருக்கின்ற சேல்கள் மலைகள் விழித்துக்கொண்டிருப்பதுபோல்தோன்ற-மலையின்பாறைகளில் தாவிவிழவும்

தளைகளாகத்தடுத்திருக்கும் வயல்களையுடையமருதநிலத்தில்கரிய ஆண்மான்கூட்டங்கள் குதிப்பது அந்நிலத்திலுள்ள எரிந்தகட்டிலும் கரிய எருமைக்கடாக்களையொப்பவுமாகிநீர் உலவுகின்ற வயல்களையுடைய மருதநிலம் குறிஞ்சிநிலத்தோடு மயங்கியிருக்கின்றது-இப்படியமைந்தகவிடங்களில்.(எ-று முல்லைநிலத்துக்குரிப்பொருளாகிய மானைக் குறிஞ்சிநிலத்ததாகச்சொல்லியிருக்கின்றது. கருமானென்பதைப் பன்றியென்பாருமுளர்.

புணர்ந்தவானிலாட்புறவிடைக்குறுமுயல்பொருப்பி .... *
னணைந்தவான்மதிமுயலினையினமெனவணைந்து .... *
மணங்கொள்வாலவெல்லையில்வாகுபோர்மஞ்சனவரைக்கா .. *
ரிணைந்துமுல்லையுங்குறிஞ்சியுங்கலப்பனவெங்கும் .... .. *

(இதன்பொருள்)

மாட்டிமத்தைகள் நெருங்கியிருக்கும் முல்லைநிலத்தில் தங்கியசிறியமுயலானது குன்றத்துவலையில உராய்ந்துபோகின்ற பெருமைபொருந்திய சந்திரனிடத்திலுள்ள முயலைத்தன்சாதியென்று சேர்ந்தும் வாசனைபொருந்தியமுல்லைநிலத்தில் இருக்கும் வரகுபோர்கள்கரிய நிறத்தையுடைய மேகங்கள்தவழும் மலைகளைஒத்தும் முல்லைநிலமும் குறிஞ்சிநிலமும்கலந்திருப்பனஎவ்விடத்தும் — (எ-று) (௪௫)

கவருமீன்குவைகழிபவர்கானவர்க்களித்துச் .... *
சிவலுஞ்சேவலுமாறியுஞ்சிறுகழிச்சியர்க .... *
ளவலாரியலுங்கெயிற்றியர்ப்பவளமுத்தளந்து .... *
முவரிநெய்தலுங்கானமுங்கலந்துளவொழுக்கம் ..... *

(இதன்பொருள்)

நெய்தல்நிலத்திலுள்ளவர்கள் தாங்கள்பிடித்தமீன்குவியலைமுல்லைநிலத்து இடையர்களுக்குக்கொடுத்துக்கலுதாரியையுஞ்சேவலையுமபெற்றுக்கொண்டும் சிறியநெய்தல்நிலப்பெண்கள் அவலாவினாக்கும்-தினைக்கும்-இடைச்சிகளுக்குப் பவளத்தையுமுத்தையும் அளந்தும் கடற்சார்பாகியநெய்தலும் முல்லைநிலமும்த்தனைமயக்கமாகியஒழுக்கத்தால் நெருங்கியுள்ளன (எ-று)

இச்செய்யுளில்-கானவலாகக்குறிஞ்சிநிலத்ததாரென்றும்- எயிற்றியரை வேடச்சிகளென்றும் உரைகூறின்-அகப்பொருளாகுமாறுபடுதலால்-இடையரிடைச்சிகளென்றும். (௪௬)

அயனறும்புறவினிலிடைச்சியரணிநடையும் .... *
தியனெடுமணையுமுத்தியர்சாயலுமிரும்பி .. .. *

பியலுமன்னமுந்தோகையுமெதிரொதிர்பயில .... *
வயலுமுலையுமியையவணபலவுளமருங்கு .... *

(இதன் பொருள்)

சமீபத்திலிருக்கும் வாசனைவீசு முல்லைநிலத்து இடைச்சியர்களுடைய அழகுற்றநடையையும் அகலமாய்நீண்டுள்ள வயல்சூழ்ந்த மருதநிலத்துமாதர்களுடைய உடலின்சாயலையும் இச்சிந்து அழகுள்ள அன்னமும்-மயிலும் எதிரொதிராகச் சஞ்சரிக்க மருதநிலமும் முல்லைநிலமும் அடுத்திருக்கும் இடங்கள்பலவுண்டு தொண்டைநாட்டில் — (எ-று) (சரு)

மிருமோதிமங்கொழித்தவெண்டாளமுங்கமுகின். .. .. *
பவளமுக்கவும்விரவுசிற்பரத்தியர்பணைமென் .... *
றோளுழத்தியர்மகளிர்மாறுமுன்றொகுகு .. ..*
நீளுநெய்தலுமருதமுங்கலந்துளநிலவுகள் .... *

(இதன் பொருள்)

போய்த்திரும்பி வரும் அலைகள் கொழித்த வெண்மையாகிய ரூதிகுக்களும்-கமுகம்பாளைகள்வரும்புகளும்- ஒன்றுக்கொன்று கிடக்கின்றபடியால் பரதத்தியர்களும் ஏர்க்களமேறாமல் நெல்லிடிக்கிற பெண்களுடைய பள்ளச்சேரிகளும் இவைகள் தம்முத்துக்கள் என்றும்பாளைகள் என்றும்தெரியாமல் கலக்கமிட்டுப் பிரித்துச்சேர்த்துக்கொள்ளுகின்ற நீலநெய்தல்நிலமும் மருதநிலமும்கலந்துள்ள நிலங்கள் இருக்கின்றன.—(எ-று)-அம்காரியம். அங்கு ஒழித்தமெனினும்பொருந்தும். (சரு)

ஆபதானவித்தமைதியிற்றத்தமக்கடுத்த .. .. *
மேயசெய்தொழில்வேறுபல்குலங்களின்விளங்கித் .....*
தீயவென்பகைகளைவிலுறினைவிவாச்சிறைதைத்... .....*
தூயமாந்தர்வாழ்தொண்டைநாட்டியல்புசொல்வதாத்தோ*

(இதன் பொருள்.)

இப்படிப்பட்ட குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்கின்ற நால்வகைப் பட்டமைவு பொருந்திய நிலங்களில் வாசஞ்செய்து வெவ்வேறுதொழில்களைச்செய்கின்ற அனேகசாதிகளால் விளக்கமுற்றுத் தீமையாகிய காரியங்களைச்செய்யச் சொப்பனத்திலும் நினையாதமனதையுடைய பரிசுத்தமுள்ள மனிதர்களுக்கு இருப்பிடமாகிய தொண்டைநாட்டினுடைய சிறப்பைச்சொல்லுதற்கு ஓர் அரவுள்ளதோ.—(எ-று) (சஎ)

இவ்வளந்தருபெருந்திருநாட்டிடையென்று ....*
மேய்வளந்தருசிறப்பினுலகெலாம்வியப்ப .... *
வெவ்வுகந்தருளுமுள்ளதெலாமியாவருமேத்துங் .. .. *
கைவிளங்கியநிலையதுகாஞ்சிமாநகரம் ....*

(இதன்பொருள்)

இப்படிப்பட்ட வளங்களையுடைய பெருமைபொருந்தியதொண்டைநாட்டில்எப்பொழுதுங்குறைமற்ற சிறப்புண்டாயிருத்தலால் - உலகத்தாரெல்லாரும் சந்தோஷப்பட எந்தவுகங்களினும் உள்ளதென்றுயாவருமெச்சுகின்ற ஒழுக்கத்தால் விளங்குந்தன்மையை உடையதுகாஞ்சிநகரம்.—(எ-று) (௪௮)

ஆனதொண்டைகாரர்பிகைதம்பெருமானை ....*
மானவர்ச்சனையாலொருகாலத்துவழிபட் .... *
மேனமில்லறமனேகமுலகுய்யவைத்த ... .*
மேன்மைபூண்டவப்பெருமையையறிந்தவாவிளம்பில் ....*

(இதன்பொருள்.)

அப்படிப்பட்ட பழமையாகிய காஞ்சீபுரமானது பார்வதியார் தமது பிராணுகிய பரமசிவனைப் பெருமைபொருந்திய அருச்சனையினால் முன்னொருகாலத்தில் வழிபாடுசெய்து சூரிதமத்ரு அரீனகதருமங்களை உலகத்தார் முழைக்கும்பொருட்டு வளர்த்த சிறப்பை உடைய அதன்பெருமையை அறிந்தபிரகாரம் சொல்லப்படுகிறதால்.—(எ-று) (௪௯)

வெள்ளிமால்வரைக்கயிலையில்வீற்றிருந்தருளிக் ....*
கள்ளுவார்புனல்வேணியாரருள்செயத்தொழுது .. ....*
தெள்ளுவாய்மையினுகமத்திறனெலாந்தெரிய ... .. --- *
வுள்ளவாறுகேட்டருளினுனுலகையாளுடையாள் .. .. ..*

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய வெள்ளியங்கிரியில் வீற்றிருந்து ததும்பி ஒழுகுந்தன்மையையுடைய கங்கையைத்தரித்த சடையினராகியசுவாமி-கிருபைசெய்யவணங்கித்தெளிந்துகடைத்தேறுவதற்குக்காரணமாயிருக்கும் வாக்கியங்கள் அடங்கியுள்ளவலிமையை உடைய ஆகமங்களெல்லாம் தெரியும்படி உள்ளபடி கேட்டறிந்து கொண்டார் உலகத்தையாளுகின்ற பார்வதியார்.—(எ-று) (௫௦)

எண்ணிலாகமமியம்பியவிறைவர்தாம்விருப்பு . . . . *
முண்மையாவதுபூசனையெனவுரைத்தருள ... . *
வண்ணமார்தலமபர்ச்சனைபுரியவாதரித்தாள் .... *
பெண்ணினல்லவளாயின்பெருந்தவகொழுந்து .. .. .. *

(இதன்பொருள்)

அளவில்லாத ஆகமங்களைத் திருவாய்மலர்ந்தருளியபரமசிவன் தாம் உண்மையாகப் பூசையையேவிரும்புவோமென்று சொல்லக்கேட்டுத் தெய்வத்தன்மையை உடையமாதர்களில் உயர்ந்தவளாகிய பெருமைபொருந்திய தவத்துக்குக் கொழுந்து போன்றுள்ள பார்வதியார் பரமசிவனையர்ச்சனைசெய்யவிரும்பினாள்.—(எ-று) (கூச)

நுண்ணியுணர்வுறைதாதலைநோக்கிநாயகன்திருவுள்ளத்து மகிழ்ந்த, பங்கணையுமுறவுறுந்தான்றவமுத்தமென்கொனவின்பாலெனவுறவிவவ, விங்குமாதுநீ மொழிந்தவாகமத்தினியல்பினுவுனைபர்ச்சனைபரிபப், பொங்குதென்றமென்றுரைபெறுன்றிலைறஞ்சிப்போகமார்த்தபூணமுலையினள்போற்ற . . . . *

(இதன்பொருள்.)

பரமசிவன்தமது கேவியார்தம்மனதில்-பூசைபண்ணமிகுந்த ஆசைகொண்டிருக்கிறதை அறிந்து திருவுள்ளத்தில்விருப்பமுண்டாய் அழகுபொருந்துற தலையுண்டாகி உனக்கென்னவேண்டியதென்று கேட்க-இப்போது நாதரே நீர்கட்டளையிட்டவாகமத்தால்விதிப்படி உம்மை அர்ச்சனைசெய்ய எனக்கு ஆசை மேன்மேலுற்விர்த்தியாகின்றதென்று வணங்கிப் பார்வதியார் விண்ணப்பஞ்செய்ய—(எ-று) போகமார்த்த பூண்முலையினள்-மேன்மையானபோகத்தை அடைந்த-அணிகளையுடைய விதனங்களையுடையவளாம். (கூஉ)

தேவதேவனு மதுதிருவுள்ளஞ்செய்துதென்றிசை மிக்கசெய்தவத்தால், யாவருந்தனையடைவதுமண்மேலென்றுமுள்ளதுமாஞ்சி மற்றதனுண், மாவமர்ந்தநம்மிருக்கையிலணைந்துமன்னுபூசனைமகிழ்ந்துசெய்வாயென், றேவலவம்பெருமாட்டியும் பணியாவிலைசவுகொண்டெழுந்தருளுதற்கிலைசந்தாள். . . .. .. *

(இதன்பொருள்)

தேவர்களுக்கெல்லாம்நாயகராகிய பரமசிவனும் அம்மொழியைத் திருவுள்ளங்கொண்டு ஏற்றுத்தென்திசையானது செய்ததவமிகுந்ததுபோலத்தால் எப்படிப்பட்டவர்களுந் தன்னை

யடையும்படி பெருமையுள்ளதும் பூலோகத்தில் என்றும் அழியாமலிருப்பதுமாயுள்ளதுகாஞ்சிபுரமாம் அதில் மாமரத்தின் கீழிருக்கும் நாம்மிடத்தில் குருந்து நிலையான ஆராதனதனைச் செய்யென்றுகட்டளையிட எமது பிராட்டியார் பார்வதியாரும் பிரியக்கூடாமையினால் வருதலைக்கொண்டு பின்பு எழுந்து போவதற்குச் சம்மதித்தார்.— எ-று) (௫௬)

எதமில்பலயோனியெண்பத்துநான்கு நூறாயிரந்தனுள்ளவத்த பேதமுறிப்பாந்தருணமக்கருணைப்பிரான்மையாழிந்த வாகமழி பேணப், போதுநீரையிறைஞ்சுமுதலள்போதப்பொருப்பி ஸ்வேந்தனும்விருப்பில்வந்தெய்தி, யாதவர்புரிந்தருளுதற்க மைத்தவளத்தொடு பரிசனங்களைவிடுத்தான் .. .. *

(இதன்பொருள்.)

பார்வதிதேவி குற்றமறிற எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதங்களையும்காப்பாற்றுகின்றகருணையையுடையபரமசிவன் ஏருளிச்செய்த ஆகமமார்க்கத்தின்படி நடக்க விருப்பிப் போகவேண்டுமென்னுமனதோடு தொழுதுபுறப்பட இமவத் பர்வதராசனும் விருப்பத்தோடு வந்தலடந்து மகத்காரியதனை செய்கிறதற்கு அமைத்தவளத்துடனே பரிசனங்களை அனுப்பு வித்தான்.—(எ-று) (௫௭)

தன்னுடன் ஆயிரவானவர்முதலாச் சூழ்ந்துடன்செல்கம் காஞ்சி யினையடைத்தன்னேநேர்வரும்பதும்யாநாகந்தம்பிராட்டிதாட லைமிசைவைத்தே, யன்னையாயுலகனைத்தையுமீன்றாயாடியனே னுறைபிலமதனிடையே, மன்னுமேகாயில்கொண்டருளுவாயெ ன்னமலைமடந்தைமற்றதற்கருள்புரிந்து .... *

(இதன்பொருள்)

பார்வதிதேவியார்-தேவர்கள் முதலாகச்சொல்லப்பட்ட பல வகைப்பட்ட சீவராசிகளும், நாற்புறமுஞ் சூழ்ந்துவரக் காஞ்சீபுரத்துக்குவந்தவுடனே தனக்குத்தாமே ஒப்பாயிருக்கின்ற அஷ்டமாநாகத்தில் ஒன்றாகிய பதுமனென்னும் பாம்பு அம்மையின் திருவடிநிழலைச் சிரசில் வைத்துக்கொண்டு தாயாகி எல்லாவுலகத்தையு மீன்ற தலைவியே அடியேனுக் வாசஞ்செய்கின்ற பிலத்தினிடத்திலேயே ஸ்தானமாகவிருந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க-அதற்குச் சம்மதித்தருள்செய்து.(எ-று) பிலம்-பூமியிலுள்ளமுழை (௫௮)

அங்குமன்னுலகத்துயிர்தழைப்பவளவிலின்பத்தினருட்கருவி ருக்கித், துங்கடங்கியபுரிசடையார்குருத்திருந்தபூசனைவிரும்பி

னள்செய்ய, வெங்குநாடவுந் திருவிளையாட்டா லேகமாமுக லெதிர்படாதொழியப், பொங்குமாதவஞ்செய்து காண்பதற் கேபுரிவுசெய்தனள்பொன் மலைவல்லி . .. . *

(இதன்பொருள்)

அக்காஞ்சீபுரத்தில்- நிலைபெற்ற உலகத்தில்உள்ள உயிர்களெல்லாம் விருப்பமடையும்பொருட்டு அரவறுதலின்றி நிலைபெற்றுக் கொடுக்கும் கிருபைக்கு இடமாயிருந்து-சந்நிதானத்தரித்த முறுக்காகிய சடையையுடையபரமசிவனுக்கு ஒருதிருத்தமாகிய புகழையுடைய பூசை செய்ய-எவ்விடத்தும் ஒப்பற்றகடவுளாகியபரமசிவன் கடைந்த திருவிளையாட்டினால் தரிசனங்கொடுக்காமல் மலைறயர்-மிகுந்த தவகுபண்ணக்காண்பதற்காக விரும்பினர்- இமாசலராசனது புத்திரியாராகிய பார்வதியார்.— (எ-று) (ருஎ)

நெஞ்சமிசனைக்காண்பதேவிரும்பிநிரந்தரந் திருவாக்கினி னிசழ்வ, தஞ்செழுந்நிலமேயாகவாருடைய வர்மைசெம்மலர்க் லைகுவிந்ததுளிர், தஞ்சமாகியவருந்தவர்புரியுததரிப்பரோ வாடனிப்பெருங்கனவர், வஞ்சநீக்கியமாவின் மூலத்தில்வந்து தோன்றினாரிமயமகள்காண .... *

(இதன்பொருள்)

எம்போல்வாரை ஆட்கொண்டவராகியபார்வதிதேவி சுவாமியைக்காண்பதே முக்கியமாக மனதுவிரும்பவும்எப்பொழுதுந் திருவாயில் ஐந்தெழுத்துமாத்திரமே உச்சரிக்கப்படவும் சிவந்தகுலவையொத்த மலையக்கூப்பித்தொழுது அன்பிற்கேதுவாகிய அருமையானதவத்தைத்செய்யவும் ஒப்பற்ற பரமசிவன் தரியாதவராகிக குற்றமற்ற நாயகத்தினடியில் இமவந்பர்வதராசகுமாரியாகிய அவ்வுமாதேவி இனிக்காணும்பொருட்டு வந்து தோற்றமுற்றார்.—(எ-று) (ருஎ)

கண்டபோதிலப்பெருந்தவப்பயனுங்கம்பமேவிய தம்பெருமானை, லண்டுலாம்முழுக்கந்தரைமுன்னுழ்வணங்கிவந்தெழுமாலைசமுஞ்பொங்கக், கொண்டகாதலின்விருப்பளவின்றிக்குறித்தபூசனைகொள்கைமேற்கொண்டு, தொண்டையங்கனிவாயுமை தங்கைதூய்வர்ச்சனைதொடங்குதல்புரிவாள் .. .. *

(இதன்பொருள்.)

தாஞ்செய்ததவத்திற்கு ஒப்பற்றபயனாகி ஏகம்பத்தை அடைந்த பெருமானாகிய கைலாசபதியைபார்த்தபோது வண்டுகள்

உலகவுகின்றகத்தையாயுள்ளகூத்தலையுடைய பார்வதியார்தாமு ம்படிவணங்கிக்-காணவேண்டுமென்று முன்உண்டாயிருக்கும் ஆசை அதிகமாகத் தாங்குறித்திருந்த பூசையைச்செய்யவேண் டுமென்னுள்ள ஆசைக்கு ஒரு அளவில்லாமல் கொவ்வைப்பழ ம்போன்றவாயுள்ள அம்மை பரிசுத்தமாகிய அர்ச்சனைசெய்ய விரும்புவார்.—(எ-று) (கூஅ)

உம்பர்நாயகர்பூசனைக்கவர்தரமுறைத்தவாகமத் துண்மையே தலைநின், றெம்பிராட்டியர்ச்சனைபுரிவதனுக்கியல்பெலவாழ்தி ருச்சேடியரான, கொம்பனார்கள்பூம்பிடகைகொண்டணைக் குலவுமென்றளிரடியிணையொதுங்கி, யம்பிகாவனமாந்திருவ னத்திலானதுநறும்பூமலர்கொய்தாள்.. .. .. *

(இதன்பொருள்)

தேவர்களுக்குநாயகராகிய பரமசிவனாரைப் பூசைசெய்வதற் காக அவரருளிச்செய்த ஆகமத்திலிருக்கும் உண்மையாகியவி திகளையே தலைமையாகஎண்ணி எமகுத்தாயாராகியபார்வதி அர்ச்சனைபண்ணுதற்குத்தொண்டுசெய்யுந் தன்மையை உடை ய கொம்புபோன்றபாங்கிமார்கள் புஷ்பகூடையை எடுத்து க்கொண்டுவரப் பிரகாசிகின்ற மேன்மையாகிய தளிர்போ ன்ற பாதங்களால் சிறுகற்களுக்கு ஒதுங்கிநடந்து அம்பிகாவ னமென்கிற அழகாகியவனத்தில மலர்ந்திருக்கும்பரிசுத்தமா கிய மலர்களைக்கொய்தாள்.—(எ-று) (கூக)

கொய்துபன்மலர்கம்பைமாநதியிற் குலவுமஞ்சனநிலவுமெய் ப்பூச்சு, நெய்தருங்கொழுந்தூபதீபங்கணிறைந்தசிந்தையினி டியவன்பின், மெய்தரும்படி வேண்டுவவெல்லாம் வேண்டு போதினிலுதவமெய்ப்பூசை, யெய்தவாகபுவிதியெலாஞ் செ ய்தாளுயிர்கள்யாவையுமீன்றவெம்பிராட்டி ....*

(இதன்பொருள்.)

பலமலர்களைப்பறித்துத் திருமஞ்சனமாகக் கம்பையாற்றினி லாயும்திருமேனியில்தரிக்கும் பிரகாசமுள்ளசந்தனத்தையும், நெய்வார்த்தேற்றும்தீபங்களையும்; நெருங்கியபரிமளப்புகை யை உடையதூபங்களையும், களிப்பினால்நிறைந்தமனதில் நிலை பெற்றஅன்போடுமற்றும்உண்மையாகவேண்டியபூசாதிரவிய ங்களையெல்லாம்வேண்டுங்காலங்களில்பரிசனங்கள்உதவ ஆகம விதிப்படி மெய்ம்மையான வழிபாடாகச்செய்யவேண்டியஎல்

லாஞ்செய்தார் - எல்லாவுயிர்களையுமீன்ற எமது தாயாராகிய பார்வதிதேவி.—(எ-று) (சுய)

கரந்தரும்பயனிதுவெனவுணர்ந்துகப்பமேவியவும்பர் தாயகர்பா, னிரந்தகாதல்செய்ளத்தனாகிநீ தன்மைகளியாவையுப்பெருக, வரந்தரும்பொருளாபலைவலலி மாதிலாவகைமலர்ந்தபரன்பாற், சிரப்பணிந்தெழுபூசைநாடோறுந் திருவுளங்கொளப்பெருகியதன்றே .... *

(இதன்பொருள்)

இப்படிப்பூசைசெய்வது மகிழ்பெற்ற பேறென்று அறிந்து எகம்பத்தில் வீற்றிருக்கும் தேவாதிதேவராகிய பரமசிவனிடத்தில் ஆசைகொண்டமனமுடையவராய்சிறந்தநன்மைகள்யாவுமுண்டாக யாவர்க்கும் வரத்தைக்கொடுக்கும் மலையரையன் மகளாராகிய பார்வதியார் மாறுபாடில்லாமல்விளங்கிய பெருமைபொருந்திய அன்பினால் தலையினாலே வணங்கிச்செய்கின்ற பூசை எந்நாளும் செய்யும்படி விருத்தியாயிற்று.(எ-று)(சுக)

நாளுமும்பெருவிருப்பொடுநயந்து நங்கையர்ச்சனைசெய்யும்பொழுதில், தன்மிக்கவேலார்திருவிளையாட்டிற்கணங்குழைக்கருள் புரிந்திடவேண்டி, யோதமார்கடலேழுமொன்றாகி யோங்கிவானமுமூழ்படப்பரந்து, மீதுசெல்வது போல்வரக் கம்பையவெள்ளமாற்றிருவுள்ளமுஞ்செய்தார் ....*

(இதன்பொருள்)

சுவாமியும் மிகுந்த ஆசையோடுநயந்து-பார்வதியார் தம்மைப்பூசைசெய்யும்பொழுதில் அவர்க்கு அருள்செய்யவிரும்பி இஷ்டங்கொண்டருளிய ஓர்திருவிளையாட்டாக வெள்ளம்நிறைந்த எழுசமுத்திரமும் ஒன்றாகித் தேவலோகமுங் கீழாகும்படி எழும்பிப்பரந்து மேலேவருவதுபோலக் கம்பையாற்றில் வெள்ளம்வரும்படி நினைந்தருளினார்.—(எ-று) (சுஉ)

அண்ணலாரருள்வெள்ளத்தைநோக்கியங்கயற்கண்ணி தம்பெருமான்மேல், விண்ணெலாங்கொளவரும் பெருவெள்ளமீதுவந்துறுமெனவெருக்கொண்டே, யுண்ணிலாவிய பதைப்புறுகாதலுடன்திருக்கையாற்றழுவக்கடிதிலாமை, தண்ணிலாமலர்வேணியினாரைத்தழுவிக்கொண்டனடன்னையேயொப்பாள் .. *

(இதன்பொருள்)

கைலாசபதியின் கட்டளையால்வருகின்ற வெள்ளத்தை அழிய

மீன்போன்ற கண்களையுடைய ஒப்பற்ற பார்வதியார்பார்த்து ஆராயமுழுதும் கொள்ளும்படிவரும் இத்தப் பெரியபிரவாக மானது தம்முடைய ஆண்டவன்மேலும் வருமென்றுபயந்து மனதில்நின்றும் பலவதத்தெழும்புகின்ற ஆசையோடு திருக் கைகளால் வரவொட்டாமல் மறிக்க- அதுதிலலாமையைக்கண் டு குளிர்ச்சிபொருந்திய சந்திரனவிளங்கும் சடையை உடைய சுவாமியை தழுவிக்கொண்டார்.—(எ-று) (௬௩)

மலைக்குலக்கொடிபரிவுறுபயத்தான்மாவின்மேலிய தேவர் நா யகரை, முலைக்குவட்டொடுவளைக்கையா னெருக்கிமுறுகாத லாலிறுகிடத்தழுவச், சிலைத்தனித்திருநுதிருமுலைகளுஞ்செந் தளிர்கரங்களுக்குமெத்தெனவே, கொலைக்களிற்றுரிபுனைந்த தம்மேனிகுழைந்துகாட்டிநார்விழைந்தகொள்கையினார் .. *

(இதன்பொருள்)

பார்வதிதேவி சுவாமியின்திருமேனிக்கு அபாயம்வருமென்கி ற துன்பத்தோடு பயமும் உண்டாகி ஆண்டவனைச்சிகரம்போ ன்ற ஸ்தனங்களாலும், வளையலையணிந்த கைகளாலும் நெருக் கி அதிகவாசையால இறுகத்தழுவும்போது தேவியினுடைய அழகிய கொங்கைகளுக்கும் சிவந்த தளிர்போன்றகைகளுக்கு மெத்தென்று-கொலைசெய்யும்வலிமையை உடைய ஆனையின் தோலைப்போர்த்த தம்முடைய திருமேனியைக் குழையும்படி செய்தார் விருப்பங்கொண்டசுவாமி.—(எ-று) (௬௪)

கம்பர்காதலிதழுவமெய்குழையக்கண்டிநிரீபவஞ் சரிப்பவுமான, வும்பரோமுதல் யோனிகளெல்லாமுயிருய்யாக்கையுமுருவி யொன்றாகி, யெம்பிரானாடிக்குமெல்லியராகுமொன்று மேகம் பொன்றெடுத்தேத்த, வம்புலாமலர் நிறையவிண்பொழியக கம்பையாறுமுன்வணங்கியதன்றே .. .. *

(இதன்பொருள்.)

ஏகம்பர் தமதுமனைவியார் தழுவுதலால் திருமேனிகுழையப் பார்த்துச் சரமும்அசரமுமாகிய தேவர்கள்முதல் எழுவகைப் பட்டஜீவராசிகளும்-உடலமும் உயிரும் உருகி ஒருதன்மைப் பட்டுச் சுவாமியைமது தாயராகியபார்வதிதேவியார்க்குமென் லைமையானதேகத்தை உடையவராகுமொன்றுஸ்தோத்திரஞ்செய் யவும்- வாசனைபொருந்திய மலர்கள் ஆகாயத்திலிருந்து நி றையும்படிபொழியவும்-கம்பையின்வெள்ளமானது சுவாமியி ன்திருவடி அளவும்வந்துவணங்கி அடங்கிவிட்டது.—(எ-று)

புதியாகிய புனிதநீறுடிப் பொங்குகங்கைதோய்முடிச் சடைபு னைந்து, காதிலவெண்குழைகண்டிகைதாழக்கலந்தயோகத்தின் மருவியாகருத்தா, வாதிதேவனூராயுமாதவஞ்செ டவ்வரங்கொ லோவதிலமீன்றளித்த, மாதுமெய்ப்பயன்கொடுப்பவேகொ ண்டுவளைத்தமும்புடன்முலைச்சுவடணிந்தார் .. .. *

(இதன்பொருள்.)

மேன்மைபொருந்திய கடவுளாயிருந்தும் பரிசுத்தமாகியவிபூ தியை உத்தூளனமாகத்தரித்துப்பொங்குகின்றகங்கை தங்கு ம்படியான முடியில சடைகளைப் புனைந்துகொண்டு திருச்செ விகளில் வெண்மைபொருந்திய குழைகளும் - கண்டிகையும் தாழும்படியிருந்து யோகம்பொருந்திய கருத்துக்கொண்டு செய்த சிவத்தன்பனாலேதானோ-உலகத்தையெல்லாம்பெற் று இரட்சித்தபார்வதிதேவிதேஸ்பரிசமுண்டாகப்பெற்றுவ ளையின்தழும்போடு ஸ்தனங்கள்பதிந்த குறியையுங் கொண்ட ருளினார்.—(எ-று) (சுஎ)

கோதிலாவமுதனையவண்முலைக்குக்குழைந்ததம் மணவாளநற் சோல, மாதுவாழவேகாட்டிமுனின்று வரங்கள்வேண்டுவ கொள்கவென்றருள, வேதகாரணராயவேகம்பர்விநாமலர்ச் செய்யதாமரைக்கழற்கீ, ழேதநீங்கியபூசனைமுடிந்ததின்மை தானறிவிப்பதற்கிறைஞ்சி. .. .. *

(இதன்பொருள்)

குற்றமற்ற அமிர்தத்தையொத்ததேவியினது ஸ்தனங்களுக்குக் குழைவுற்ற தமது நன்மைபொருந்திய தம்மணவாளக்கோல த்தை-பார்வதியார்தரிசனஞ்செய்யக் காண்பித்து முன்னே நி ன்று நீவேண்டியவரங்களைக் கேட்டுக்கொள்ளென்று அருளிச் செய்ய அம்மை வேதங்களுக்குக்காரணராயிருக்கின்ற ஏகாம் பரநாதரது வாசனைபொருந்திய சிவந்ததாமரை மலர்போன் ற பாதத்துக்குகீழ் குற்றமறச்செய்யும் பூசையானது முடி யாமலிருப்பதை அறிவிக்கும்படியாகவணங்கி.(எ-று) (சுஎ)

அண்டர்நாயகரொதிர்நின்றுகூறுமளவினாலஞ்சியஞ்சலிகூப்பி க், கொண்டவிற்றையின்பூசனையின்னுங்குறைநிரம்பிடக் கொ ள்கவென்றருள, வண்டுவார்குழன் மலைமகள்கமலவதனநோக் கியமலர்கணெற்றியின்மேன், முண்டநீற்றர்நின் பூசனையென் றுமுடிவதில்லைநம்பாலெனமொழிய. .. .. *

(இதன்பொருள்)

தேவர்களுக்கு நாயகராகிய கைலாசபதி எதிரேநின்று கட்டளையிட்ட அளவில் வண்டுகள்சூழ்ந்த நீண்ட கூந்தலையுடைய பார்வதியார் பயத்தோடு அஞ்சலிகூப்பி அடியேன்செய்ய யத்தனித்த பூசையின்குறையைநிறைவடையும்படி யருள்செய்யவேணுமென்றுசொல்லத் தேவியார்முகத்தைப்பார்த்தருளிக் ணவிளங்கும் நெற்றியின்மேலவிபூதியின் உத்தூளனத்தையுடைய சுவாமி-நம்மிடத்தேசெய்யும் உன்னுடையபூசை முடிகிறதில்லையென்றுசொல்லல்— (எ-று) (௬௮)

மாறிலாதவிப் பூசனையென்று மன்னவெம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி, யிறிலாதவிப்பதியிலுளெலலா வறமும் யான் செயவருள்செயவேணும், வேறுசெய்வினை திருவடிப்பிழைத்தலெழியவிங்குளார்வேண்டினசெயினும், பேறுமாதவப் பயன் கொடுத்தருளப் பெறவும்வேண்டுமென் றுளன்பிறப் பொழிப்பாள் .. .. *

(இதன்பொருள்)

மாறிப்போகாமல் இந்தப் பூசையையென்றுஞ் செய்யும்படி எமதுபிரானே திருவுள்ளங்கொண்டருளி நாசமில்லாத இந்த ஸ்தலத்தில்எல்லாத்தருமங்களையும்அடியேன்செய்யக்கிருபை செய்யவேண்டும். தேவரீர் திருவடிகளுக்குச்செய்யுங் குற்றம் நீங்கலாக இந்தநகரத்திலுள்ளோர்கள் தங்கள் மனதின்படி வேண்டிய தீவினைகளைச்செய்தாலும் மகத்தாகியதவஞ்செய்தலால-பெறவேண்டியபயனை அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்யவேண்டுமென்றார் பிறப்பொழித்த பார்வதிதேவி. (எ-று)

விடையின்மேலவர்மலைமகள்வேண்டவிரும்புபூசனை மேவிவீற்றிருந்தே, யிடையறாவறமாக்கும்வித்தாகவிக பரத்திருநாமி நெல்லளித்துக, கடையராகியமூயர்ந்தவராகியுங்காஞ்சிவாழ்பவர்தாஞ்செய்தீவினையுந், தடைபடாதுமெய்நெறியடை வதற்காந்தவங்களாகவுமுலந்தருள்செய்தார் .... *

(இதன்பொருள்.)

ரிஷபவாகனத்தில்மேற்கொண்ட பரமசிவன் - பார்வதியார் வேண்டிக்கொண்டு பூசைசெய்ய விரும்பினபடியால் அங்கே யிருந்து ஏகம்பத்தில்வீற்றிருந்து இடைவிடாமல் இவ்வுலகத்துக்கும்பரலோகத்திற்கும்பயனாகத்தருமத்தைவளர்க்கும்பொ

குட்டு இருநாழிநெல் அருளிச்செய்து-கீழ்சாதியாராகியும். உயர்ந்தசாதியாராகியும், காஞ்சீநகரத்தில் வாழ்கின்றவர்கள் செய்தபாவங்களும்-தடையிலாமல் மெய்மையாகிய மோட்சத்தையடைவதற்குக் கருவியாகிய தவங்களாகவும் விரும்பிஅருளிச்செய்தார்.—(எ-று) (எய)

எண்ணரும்பெருவரங்கண்முன்பெற்றங்கெம்பிரானட்டிதம்பிரான்மகிழ்ந்தருள, மண்ணின்மேல்வழிபாடுசெய்தருளினையறம்பெருகுங்கருணையினால், நண்ணுமன்னுயிர்யாவையும்நல்கநாடுகாதலினீடியவாழ்க்கைப், பண்ணியதிருகாமக்கோட்டத்துப்பொலியமுப்பதோடிரண்டறம்புரக்கும் ....*

(இதன்பொருள்.)

எமது தாயாராகிய உமாதேவியார் பெருமைபொருந்திய அனேகவரங்களைமுதலில்பெற்றுக்கொண்டு சுவாமி மகிழ்ச்சியடையப் பூசைசெய்து உலகத்தில் இல்லறத்தை நடத்தவேண்டுமென்று உண்டாகிய கிருபையோடு நிலைபெற்றனவாயிருக்கும் எல்லாவுயிர்களும் நாளுக்குநாள் பெருக-ஆசையோடுநெடுநாள்வாழ்க்கையாகப் புண்ணியவடிவுமான திருக்காமக்கோட்டத்தில் வீற்றிருந்து முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தார்.— (எ-று) காமக்கோட்டம்-காமாட்சிதேவிவீற்றிருக்குங்கோயில். (எக)

அலகிலீடவத்தறப்பெருஞ்செல்வியண்டமாந்திருமனைக்கிடுந்தீப, முலகில்வந்துறுபயனறிவிக்கவோங்குநாண்மலர் மூன்றுடனொன்று, நிலவுவாண்டினுக்கொருமுறைசெய்யநீடு தொன்மையாளிறைந்தபேருலக, மலர்பெருந்திருக் காமக்கோட்டத்துவைத்தநல்லறமன்னவேமன்னும் ....*

(இதன்பொருள்.)

இப்படிப்பட்டதென்று அளவிடக்கூடாத நெடியதவத்தையும், தருமத்தையும் உடைய பார்வதியார் தமது அண்டமாகிய பெரியவீட்டிற்கு இடுகின்ற சூரியனாகிய விளக்குப்போல் உலகத்தில் பிறக்கும்பயனை அறிவிக்கத தெய்விகத்தால் உயர்ந்த அழகுற்ற நான்குபுஷ்பங்கள் வருஷத்திற்கு ஒருதரம்-மலரச்செய்து நாட்பட்டுவருந் தெய்வத்தன்மையோடு திருக்காமக்கோட்டத்தில் பெருமைபொருந்திய உலகத்தில் நிறைந்து வாழ்பவரெல்லாரும் சுகத்தையடையத் தருமங்கள்வளர்க்கப்படும்.—(எ-று) (எஉ)

திங்குதீர்க்குநற்றீர்த்தங்கள்போற்றுஞ்சிறப்பினுற்றிருக்காமக் கோட்டத்தின், பாங்கின்றுன்றுலகத்திலுள்ளோரும்பரவுதீர்த்ததமாம்பைம்புனற்கேணி, வாங்குவிதணடியைவேலை மேகலை சூழ்வையகந்தனகெய்தியபடியா, யோங்குதன்வடிவாய் நிலைறத்தென்றுமுள்ளதொன்றுலகாணியென்றுளதால். ...*

(இதன்பொருள்)

மூழுகினவர்களுடைய பாவங்களைதீர்க்கும் மேன்மைபொருந்திய தீர்த்தங்களுக்கெல்லா மேலாகிய சிறப்போடு திருக்காமக்கோட்டத்தில நற்குணத்தையுடைய மூன்றுலகத்துள்ளவர்களும் வந்து ஸ்நானஞ் செய்யுந் தீர்த்தமாகிய பிரகாசமுள்ள நீரையுடைய ஒருகேணியானது வளைந்து தெளிந்த நீருருவமாகிய அலைகளையுடைய சமுத்திரமாகிய ஆடைசூழ்ந்த பூமியிலுள்ளவர்களுக்கு மோட்சத்திற்கு ஏறக்கிடைத்தபடியாக உயர்ந்தநீர்வடிவாகவேயிருந்து உலகாணியென்றுபேர்பெற்றுச் சாசுவதமாயுள்ளது.—(எ-று) (எக)

அந்தமின்றிநல்லறப்புரிந்தளிக்குமம்மைசன்றிருக்காமக்கோட்டத்தில், வந்துசந்திரர்சூரியர்மீதுவழிங்கொளாத தன்மருங்குபோதலினார், சந்தமாதுரமயங்கியெம்மருங்குஞ்சாயைமாறியதன்றிசைமயக்க, மிந்தமாநிலத்தையொலங்காணவென்றுமுள்ளதொன்றின்றுமங்குளதால் ....*

(இதன்பொருள்)

கெடுதலில்லாமல் தருமங்களைச்செய்து உயிர்களைக்காப்பாற்றும் அம்பிகைவீற்றிருக்கும் காமக்கோட்டமென்னும் கோயிலில் சந்திரசூரியர்வந்து அக்கோயிலின்மேலேபோகாமல் பக்கத்திற்போகின்றபடியால் புலப்படுகின்ற திக்குகள் தெரியாமல்மயங்கி-எட்புறத்திலும் தீழல்போகாமல் மாறியிருக்கின்ற அவ்விடத்தின் திசைமயக்கமானது பெருமையுற்ற இவ்வுலகத்திலுள்ளோர் யாவருங்காணும்படி ஒப்பர்றதாகவென்றுமுள்ளது இக்காலத்திலும் அங்கு அவ்வண்ணமேயிருக்கின்றது. (எ-று) (எச)

கன்னிதன்னெடுங்காப்புடைவளாப்பிற்கர்ஞ்சியாற்றிருநதிக்கரைமருங்கு, சென்னியிற்றிறையணிந்தவர்விருப்பு திருப்பெரும்பெயரிருக்கையிற் றிகழ்ந்து, மன்னுவெங்கதிர் மீதெழும்போதுமறித்துமேல்கடற்றலைவிழும்போதுந், தன்னிழற்பிரியாதவண்காஞ்சித்தானமேவியமேன்மையுமுடைத்தால்... *

(இதன்பொருள்.)

பார்வதியார்-வெகுநாளாக தன்குகாதிருக்கின்ற காஞ்சிபுரத்தில் காஞ்சியென்றுபேர்பெற்ற நதியினுடைய கரையினிடத்தில் சிரசில் மூன்றும்பிறையைத்தரித்த பரமசிவன் விரும்பிவீற்றிருக்கும்பேர்பெற்ற ஒருஇடத்திலிருந்து விளக்கி - வெப்பமாகியகிரணங்களைப்பொருந்திய சூரியதேவன் உதயகிரியில்நின்றும் எழுப்பும்போதும்ஆறுக்கதையடைந்து மேல்கடலில் அமிழ்த்தும்போதும்நிழலானது தன்னிடத்திலிருந்து புறத்தில்செல்லாத வரம்பொருந்திய காஞ்சியென்னும் விருக்ஷமிருக்கின்ற பெருமையையும் உடைத்தாயிருக்கின்றது அந்நகரம். (எ-று) (எரு)

மலரடிகளாற்றுதித்தருந்தவம்புரிந்துமாறிலாரியமந்தலைநின்று
முறைமையாலிவரும்பூசனைசெய்யமுனிவர்வாலவர் முதலுயிர்
கொல்லா, நிறையுமனபிணுலர்ச்சனைசெய்யநீடுகாமங்களவர்
கருளி, யிறைவர்தாமவிழ்ந்தருளியபதிகவெண்ணிறத்தவத்திரு
நகரமொல்லை ... .*

(இதன்பொருள்.)

முனிவர்கள் வேதங்களால் துதிபண்ணி அருமையாகிய தவங்களைச்செய்து மாறாதநியமத்தை விரதமாகக்கொண்டு முறையோடுகூடிய பூசையைச்செய்தலாலும் தேவர்கள்முதலான உயிர்களெல்லாம் நிறைந்தபத்தியுடனே மலர்கள் முதலியவற்றால் அருச்சனைசெய்தலாலும் அவரவர்களுக்குமிகவும் விரும்பினவைகளைக்கொடுத்தருளிப் பரமசிவன்விரும்பிவீற்றிருக்கும் ஸ்தலங்கள் அளவில்லாதனவாம்-அத்தகரத்தின்எல்லையிலை—(எ-று) (எங)

மன்னுகின்றவத்திருநகர்வளாப்பின்மண்ணின்மிக்கதோர் நன்மைமிகுலே, துன்னும்யானையைத்தூற்றில்வாழ்முயல்முன்றாக்கவெய்தியதொலைவிலூக்கத்தாற்; றன்னிலத்துநின் றகற்றுதல்செய்யுந்தானமன்றியுந்தனுவெழுந்தரணி, யெந்நிலத்தினுமீண்டுபருமிறவாத் தானமென்றிவையியல் பினிலுடைத்தால்.

(இதன்பொருள்.)

நிலைபெற்ற அத்தக்காஞ்சிபுரத்தின் எல்லையில் பூவுலகத்தார் செய்த தவப்பேற்றினால் பலங்கொண்ட ஒருயானையைத் தூற்றுகியஇடத்திலிருந்த ஓர்முயலானது அழிவில்லாத சத்தியோடுதூரத்தித் தன்னிடத்தில்நின்றும் போகும்படி செய்யும்ஸ்தானம் இருப்பதல்லாமலும்உயிரிழந்துகிடக்கின்றஉடலானது

மறுபடிச் சீவனையடையும் இடமும் - எந்தத்தேசங்களிலும் காண்பதற்கு அரிதாய் மனிதர் எப்பொழுதும் இறவாத இடமுமாகிய இலைகள் இயல்பாகவுள்ளன — எ-று தனுவெழுந்தாணி-உயிரில்லாத உடலைக்கொண்டெழுந்து போட்டவுடனே உயிருண்டாக்கும்பூமி. இறவாத்தானம்-மனிதர்கள் சாங்காலம் ஒருவகையாக அறிந்துபோய் அவ்விடத்திலேயே வாசஞ்செய்தால் அவர்கள் எப்பொழுதும் இறவார்களென்பதாம், இந்த இடங்களெல்லாம் மகாத்துமாக்களன்றிமற்றையாவர்க்கும் புலப்படாமலிருக்கும். (எஎ)

நண்டுதீவினையாவையநீக்கியின்பமேதருபுண்ணியதீர்த்தம்
வேண்டினார்தமக்கட்டகிதமியதாயிவிளங்குதீர்த்தமல் மங்கல
தீர்த்த, நீண்டகாட்புடைதீர்த்தமூன்றுலகினிழ்ந்த சாருவ
தீர்த்தமுமுதலா, மாண்டுநீடியதீர்த்தமெண்ணிலவும மரநா
ட்டவராடுதலொழியார் ....*

(இதன்பொருள்)

இவ்வுலகத்தில் தீவினைகளெல்லாம் போக்கி யின்பத்தையே கொடுத்தலால் பேர்பெற்ற புண்ணிய தீர்த்தமும் வேண்டினவர்களுக்கு விரும்பியபொருளைக் கொடுப்பதாகிப் பிரகாசித்தலாற் பேர்கொண்ட இஷ்டசித்திதீர்த்தமும் நல்ல சுபத்தைக் கொடுக்கின்றமங்கலதீர்த்தமும்என்றும்-மனிதர்களைரட்சித்தலால் பேர்கொண்டகாட்புடைதீர்த்தமும்- மூன்றுலகத்திலுள்ள தீர்த்தங்களெல்லாம் ஒன்றாகச்சேர்ந்திருந்த சர்வதீர்த்தமுமுதலாக மாட்சிமைப்பட்டு நிலைபெற்ற எண்ணிறந்த தீர்த்தங்களில் தேவர்கள் ஸ்நானஞ்செய்தலையொழியார்கள். — (எ-று)சர்வதீர்த்தம்-முதல்நீண்டு ரகரத்தில் உகரம் எழுந்து ப்பேறாகவந்தது. (எஅ)

நாளதொன்றினின்மூன்றுபூமலருந் தமனியச்சொற்றாமரை
த்தடமு, நீளவார்புனல்குடந்தலைசையோடிநீர்கரக்குமாநதியுமினி
டு, நாளலர்ந்தசெங்குவளைபைங்கமலநன்பகற்றிருப்பாடலமை
ன்றிக், காளமேகமொப்பானுறைவளாப்பிற்கண்படாதகாயா
ப்புளியுளதால் :... ....*

(இதன்பொருள்.).

ஒருநாளில் மூன்றுபுஷ்பங்கள் மலர்கின்ற பொற்றாமரையையுடைய குளமும்-நீளும்படியோடுகின்ற நீரானது கீழுள்ளிருந்து மேலுள்ளதிசைக்கு ஓடிமறைந்து போகின்ற ஒரு ஆறுடனே மத்தியானவேளையில் பருவம்நிறைந்து செவ்வாவிலல

நாயும் அழகுபொருந்திய தாமரைப்பூவையும்-மலர்கின்றஒரு பாதிரிமர மிருக்கிறதுமன்றிக்கரியமேகம்போன்ற நிறத்தையுடைய அம்பிகைகளிற்றிருக்கும் அந்தநகரத்தில்மனிதர்கண்ணுக்குத் தோன்றாத காயாப்புளியமரமும் ஒன்றுஇருக்கின்றது. (எ-று) (எகு)

சாயைமுன்பிணிக்குங்கிணறொன்றுகஞ்சமுண்ணிலஞ்சாந்தடமொன்று, மாயையின்றிவத்துள்ளஎந்தார்கள்வானரத்துருவாப்பிலமொன்று, மேயவவ்வுருநீங்கிடக்குளிக்கும் விளங்குபொய்கையுமொன்றுவிண்ணவரோ, டாயவின்பமுய்க்கும்பிலமொன்றோடனையவாசியவதிசயம்பலவால் .. .. *

(இதன்பொருள்.)

நிழலைப் புறத்திற்போகவொட்டாமல் தன்னிடத்திலேயே பிடித்துக்கொள்ளுகிற கிணறு ஒன்றும்-எளிதாகக்குடித்தால் விஷமாய்க்கொல்கின்ற நீரையுடையதடாகம் ஒன்றும்- தன்மையதியும் சத்தியிலலாமல் வந்து சேர்ந்தவர்கள் வானரத்தின் உருவத்தை அடைகின்ற பிலம் ஒன்றும்-அப்படியடைந்த குரங்கினுருவம் நீங்கும்படி குளிக்கின்ற காந்தியுள்ள பொய்கையொன்றும் - தேவர்களோடு இன்பத்தை அனுபவிக்கும்படி சொர்க்கலோகத்துக்குக்கொண்டுபோய் விடுகின்ற பிலம்ஒன்றுமாகிய இவைகளுடனே இப்படிப்பட்டபல அதிசயப்பொருள்களும்இருக்கின்றன.—(எ-று) (அ௫)

அஞ்சுவான்கரத்தாறிழிமதத்தோரானைநிற்கவுமலையிருட்டிரியுமஞ்சுநீள்வது போலுமாமேனி மலர்ப்பதங்களில் வன்சிலம்பொலிப்ப, நஞ்சுபிலகெயிற்றரவமெற்றலையிருமமூன்றிலைப்படையுடைப்பிள்ளை, யெஞ்சலின்றிமுன்றிரியவுங் குன்றமெறிந்தவேலவன்காக்கவுமிசையும் .. .. *

(இதன்பொருள்.)

பெரிய ஐந்துகைகளையும் ஆறுபோற்பாய்கின்ற மதத்தையும் உடைய விக்கினேசுரர்காவலாக நிற்கவும் - புஷ்பம்போன்ற பாதங்களில் வளமான சிலம்புகள்கிடந்துஒலியுண்டாக்க அர்த்தராத்திரியில் திரிகின்ற நீண்ட மேகம்போல நிறத்தையும் நஞ்சு ஒழுகுகின்ற பற்களையுடைய பாம்புகளைமாத்திரம் அணிந்து மற்றொன்றையுந்தரிக்காத இடையினையும் உடைய மூன்றுகவராயிருந்து பயத்தை உண்டாக்குகின்ற சூலாயுதமேந்திய வயிரவர் இடைவிடாமல் திரிந்துகொண்டுகாக்கவும்- வி

ரவுஞ்சமலையை வேலால் தகர்த்த குமாரசுவாமி ஒருபுறங்காக்கவும்-அத்தநகரம் ஓரிடைபூறு மடையாம விருக்கின்றது.—(எ-று) (அ௭)

சத்திநிபாதசித்தயோகிகளுஞ்சாதகத்தனித்தலைவருமுதலா, நித்தமெய்நிய வாயண்மெய்ந்தவர்கணிடவாழ்தருப் பாடியுமனேகஞ், சித்தர்விஞ்சையரியக்கர்கந்தருவர் திகழ்ந்துமன்னுவார்செண்டுகையேந்தி, வித்தகக்கரிமேல்கொளுங்வாரிமேவு செண்டணைவெளியுமொன்றுளதால் .... *

(இதன்பொருள்.)

அனேகசத்திகளும், மேலாகிய சித்தர்களும், யோகிகளும், மோக்ஷத்தை யடைவதற்குவேண்டிய விரதத்தைச்செய்யும் ஒப்பற்ற ஞானிகளும், எக்காலத்தும் இருக்கும்படி ஆயுள் விருத்தியை அடைவதற்கு மெய்மைபொருந்திய தவஞ்செய்தவர்களுமாகிய இவர்கள்முதலாக உள்ள மந்திறையோரும் வாழ்கின்ற இடங்களும் பலவாயிருக்கின்றன-சித்தர்-வித்தியாதரர்-யக்ஷர்-கந்தருவர் முதலானவர்களும் அந்தநகரத்தில் வாசஞ்செய்வார்கள்-செண்டாயுதத்தைக்கையிற்பிடித்துச்சிறந்த யானையை வாகனமாகக்கொண்ட ஐயனார் உலாவிவருகின்ற ஒரு வெளியுமிருக்கின்றது.—(எ-று) (அ௨)

வந்தனை நித்தவர்தம் முருமாயமதுளாளைத்தாங்காண் பிடமுளது, சிந்தைதயோகத்துமுனிவர் யோகினிகள் சேருமிடயோகபீடமுமுளதென்று, மந்தமிலலறம்புரிபவள் கோயிலான் பேரகபீ முமுளதாகு, மெந்தையார்மகிழ்காஞ்சிநீடுலகமெலலையிலலனவுள்ளவாறிவார் .... *

(இதன்பொருள்.)

வந்துசேர்ந்தவர்களுடலம் ஒருவருக்குத்தோன்றாமல் மறைய அவர்கள்மாத்திரம் மற்றவர்களைக்காணகிற இடமொன்றிருக்கின்றது-யோகஞ்செய்கின்ற நற்சிந்தையை உடைய முனிவர்களும், யோகினிகளும், சேருகின்ற யோகபீடமும் ஒன்றிருக்கின்றது-கெடுதலிலலாமல் தர்மத்தைவளர்க்கின்ற காமாட்சிதேவி வீற்றிருக்குங்கோவிலில் ஒப்பற்ற யோகபீடம் என்றபேர்பெற்றதொன்றிருக்கிறது - எமது ஆண்டவர்வீற்றிருக்கும் காஞ்சிபுரத்தினது நீண்ட எல்லைக்குள் அளவற்ற அதிசயங்கள் உண்டு அவைகளையாரறிவார்கள்.—(எ-று) (அ௩)

தூண்டுசோதியொன்றெழுந்திருடிரக்குஞ் சுரர்கள்வந்துசூழ
ருத்திரசோலை, வேண்டிநூர்கடம்பிறப்பினை யொழிக்குமெய்
நெறிக்கணின்றூர்கடாவிருப்பிச், தீண்டில்யாவையுஞ் செம்
பொருக்குமதோர்சிலையுமுண்டுமைசெய்வதற்கரிதா, லாண்ட
நாயகிசமயங்களாறுமகிலமேபாலியுமவிக்குமந்நகரம்.....*

(இதன்பொருள்)

தூண்டினதுபோற்பிரகாசிக்கும் ஒருசோதியுண்டாகி இருளை
ப்போக்கித்தேவர்கள்வந்துசூழ்ந்துகொள்வதற்கிடமாகிய உ
ருத்திரசோலையென்று பேர்பெற்ற ஒருபூங்காவனமும்-பிறப்
பினையொழிக்கும்பொருட்டு மெய்ம்மையாகிய சைவசமயமா
ரிக்கத்தில் விரும்பி அனுசரித்து நின்றவர்கள் விருப்பங்கொ
ண்டு எவைகளையாவது கொண்டுபோய்த் தீண்டும்படிசெய்
தால் அவற்றைப்பொன்னாக்குகின்ற ஒருகல்லும் உண்டு - அத
ன்பெருமைசொல்லுவதற்கு அரிதாகும் - ஆட்கொண்ட நாயகி
யாகிய பார்வதிதேவி அறுவகைப்பட்ட சமயங்களையும் எல்
லாவுயிர்களையும் காப்பாற்றுகின்ற அந்தநகரத்தில்.—(எ-று)
தீண்டில் என்பது-பிறவினைப்பொருளில்வந்தது. (அச)

என்றுமுள்ளவிந்நகர்கலியுகத்திலெங்குவேற்கரிகாற் பெருவ
ளத்தோன், வன்றிறற்புலிபிடையமாலையைமேலவைக்கவேகு
லோன்றனகிதல்வளைமை, சென்றுவேலன்முன்கணிரைசெ
ரியத்திருந்துசாதநாள்குட்பவுத்துக், குன்றுபோலுமாம
தில்புடைபோக்கிக்குடியிருத்தினகொள்ளகையின்விளங்கும்.*

(இதன்பொருள்)

எக்காலத்திலுமுள்ள இக்காஞ்சீபுரமானது கலியுகத்தினுதியில்
விளங்குகின்ற மேலைத்தனிதத கரிகாற்சோழராலவர் வெற்றியி
ன்பொருட்டு வலியுள்ள தமது புலிக்கொடியைப் பெருமை
பொருந்திய இமயமலையினுச்சியில் நாட்டும்படி போகும்
போது அவரிடத்துக்கு ஒருவேடன்போய்க்கண்டு இந்த ஸ்த
லத்தின் பெருமையைச்சொல்லச் சுற்றளவில் நான்குகாதது
ரம் உட்பட்டிருக்கும்படி ஒருபட்டணமாக நிருமித்து மலை
போல் உயரமாகிய மதிலொன்று நாற்புறத்திலும் சூழ்ந்திருக்க
உண்டாக்கி அனேகங்குடிகளை அவ்விடத்தில் வாசம்பண்ணு
ம்படி செய்த பெருமையோடுவிளங்கும்.—(எ-று) (அரு)

(வேறு.)

நல்காஞ்சிமென்சினைப்பூங்கொம்பராடல் சார்ந்தசையுவதன்
மருங்குசுரும்புதாழ்ந்து, பன்காஞ்சியிசைபாடும் பழனவே

விப்பனைமருதம்புடையுடைத்தாய்ப்பாரில்திகழ், திண்காஞ்சிநக
ர்தொச்சியிஞ்சிசூழ்ந்தசெழுங்கிடங்குதிருமறைகளொலிக்குந்
தெய்வ, ண்காஞ்சியல்குன் மலைவல்லிகாக்க வளர்கருணைக்கட
லுலகஞ்சூழ்ந்தான்மாலூம். .. ..*

(இதன்பொருள்.)

குளிர்ச்சிபொருந்திய காஞ்சிமரத்தினது மெல்லிய பூங்கொத்
துக்களையுடைய கொம்புகளைச்தாட அலைகளிடத்து வண்டு
கள் விழுந்து காஞ்சியென்னும் இராகத்தைப் பாடுவதற்கிட
மாய்க்கிளைகளுள்ளமருதமரங்கள் வேலியாகச்சூழ்ந்தவயல்க
ளைச் சுற்றிலுமுடைத்தாகி உலகத்திற்சிறந்த காஞ்சிபுரத்தின்
வன்மையாகிய தொச்சியையுடைய மதில்சூழ்ந்த செழுமை
பொருந்திய அகழியானது தெய்விகமாகி ஒலிக்கின்ற வேத
வடிவமாகிய காஞ்சியென்னும் ஆபரணத்தைத்தரித்த இடை
யையுடையபார்வதியார்காப்பதனால் அவருடையகிருபையாகி
ய கடலானது அந்நகரத்தைவளைந்திருப்பதுபோலும்(எ-று)

தொச்சியென்பது-உலகவழக்கில்கொத்தளம் (அசு)

கொற்றலர்பூங்குழலிமையக்கொம்புகள்பரிகொள்ளும்பூசனை
குறித்ததுநாளங்காக்க, மற்றிரமாமதிலகழியவாதுந்தந்தவாய்
மையாகமவிநியின்வருப்புப்போலு, மந்தமில்சீர்க்காஞ்சியை
வந்தடைந்தார்க்கல்லியடைகளங்கமறுப்பர்தொன்றறிந்துழு,
வந்தணைந்தகன்கறுப்புமுவர்ப்பறிக்குமாகடலும் போலுமல
ர்க்கிடங்குமாதோ. ....*

(இதன்பொருள்)

கொத்துக்களாய் மலர்ந்த புஷ்பங்களையுத்தரித்த கூந்தலையுடை
ய பார்வதியார் ஏகம்பனைப் பூசைசெய்யும்படி எற்படுத்திக்
கொண்ட கிடத்தைக் காப்பாற்றுமாறுபோருட்டுச்சுவாமியினால்
அருளிச்செய்யப்பட்ட மந்திரங்களே மதிலாகவும், உண்மை
யான ஆகமங்களே அகழியாகவும் விளங்கிய ஏற்பாடுபோல்
அந்நகரத்தைச்சூழ்ந்திருக்கிற மதிலும் அகழியும் தோன்றுகி
ன்றன--மலர்களையுடைய அந்த அகழியின்னும் எப்படியிருக்
கின்றதெனின், கெடாதசிறப்பினையுடைய காஞ்சிநகரத்தை அ
டைந்தவர்களுக்கல்லாமல் தாங்கள் அடைந்திருக்கிற களங்கத்
தைப்போகக்கொள்ளுகிறது அரிதென்று அறிந்து எல்லையி
லுறுபுறமுஞ்சூழ்ந்து தன்னிடத்திலுள்ள கறுப்பினையும் உவ
ராயும் நீக்கிக்கொண்ட பெரியகடல்போலும் இருக்கின்றது.
(எ-று) (அஎ)

ஆங்குவளரொயிலினுடன்விளங்கும்வாயிலப்பதியில் வாழ்பெரி யோருள்ளம்போல, வோங்குநிலைத்தன்மையவாயகிலமுய்ய வுமைபாகரருள்செய்த வொழுக்கமல்லாற், றீங்குநெறியடை யாததடையுமாகிச்செந்நெறிக்கணிழ்வாய்மைதிருந்துமார்க் கந், தாங்குலவு நிலவிவளசொளியாலென்றுந்தட நெடுவானள ப்பனவாந்தகையவாகும்..... .. . . *

(இதன்பொருள்)

மதிலிடத்தில் விளங்குகின்ற கோபுரவாசல்கள் அந்தநகர த்தில் வாசஞ்செய்கின்ற பெரியவர்கள்மனதுபோல் உயர்ந்த தன்மையை உடையனவாய் உலகத்திலுள்ளோர் நற்கதியை அ டையும்படி பரமசிவன் அருள்செய்த ஆகமத்தில் விதித்த நல் லநடக்கையல்லாமல் தீமையாகிய நடத்தைதெரிவதற்கு ஓர் தடையாகியும், நேரானவழியில் நடக்கும்படிசெய்கின்றமெ யீடைபொருந்தி விளங்குகின்ற சோதியோடு தாம் நிலைப ரவணங்கி அகன்று நெடுந்தாயிருக்கும் ஆகாயத்தை அளப்பத ற்கு ஒழுந்த கன்மையை உடையனவாயிருக்கும்.—(எ-று) உ மைபாகரருள்செய்த செந்நெறிக்கணிகழ்வாய்மை திருந்து மார்க்கவொழுக்கம் எஸ்றும்- வளரொளியாலதங்குலவ நில வியென்றும் பயைபுசெய்துகொள்க. செந்நெறிக்கணிகழ்வா ய்மை- ஆகமமென்றுகொள்க. (அஅ)

மாறுபெறலருங்கனகமாட நீடுமணிமறுகுநெடுந்தெருவும் வள த்திலவர்க, வாறுபயிலாவணவீதிகளுமற்றுமடைந்தநகரணி வரைசணவுபோகிக, கூறுபடுநவகண்டமன்றிமலைக்கொண் டவலைகந்கண்டமாயென்ன, வேறுறுமண்ணுலகுதனிலுள தாலென்னவிளங்கியுமாலோகநிலைமேவிற்றன்றே ... ...*

(இதன்பொருள்)

களங்கமற்ற பொன்மயமாகிய மேல்விடுகளின் அழகிய வரி சைகளும், நீடைதெருக்களும், வளமாகிய பண்டங்கள் எளி தானவிலைபிடிக்கும் கடைவீதிகளும், பின்னுமுள்ளனவு ம்பொருந்திய அந்தநகரமானது-தொடர்ச்சியாகியமலைகளை நடுவில் ஒழுங்காக ஏற்படுத்தி- வேறுவேறாகப் பிரிக்கப்பட்டி ருக்கும் நவகண்டங்கள்போலல்லாமல் அனேககண்டங்களாக வகுக்கப்பட்டு அத்தன்மையையுடையமற்றொரு பூவுலகத்தை ப்போல்பிரகாசிக்கின்றது - அதுவல்லாமலும் மாலோகமெ ன்னுஞ்சொல்லுந்தன்மையையும் அடைந்தது.(எ-று) காஞ்சிபுர

தீதிலிருக்கும் ஒவ்வொருவீதியும் ஒவ்வொரு கண்டம்போலவும், மேல்வீடுகளின்வரிசை கண்டங்களுக்குமிடையுள்ளபலைவரிசைபோலவும், விளங்கின வென்க. (அ௯)

பாகமருங்கிருபுடையுமுயர்ந்துநீண்டபடிகொளிமாளிகைநிரைகள்பயின்மெல்கூந்தலும், ரேகையர்தங்குழாமலையத்தூக்குமுத்தின்சுடர்ககோவைகளுளிர்நீர்மைதுறைந்தவீதி, மாகமிடையொளிதழைப்பமன்னிநீடி மருங்குதாரலையலைய வரம்பில்வண்ண, மேகமிடைகிழித்தொழுகுந்தெய்வககங்கைமேனதிகள்பலமண்மேலவிளங்கியொக்கும் .... *

(இதன்பொருள்)

ஓரமாகிய இருபுறத்திலும் உயர்ந்தும் நீண்டும் பரவுகின்றகாந்தியையுடைய மேல்வீடுகளில் வரிசைகளில்வாசஞ்செய்கின்ற மெல்லியகூந்தலையுடைய மாதர்கூட்டங்கள் அவ்வுப்பரிசைகளில் அலையுறபடி தொங்கவிட்டிருக்கும் முத்துமாலைகளின் ஒளிர்சுசியையுடைய காந்திவிசிய வீதியாலது ஆகாயத்தில் விளங்க நிலைபெற்றுள்ள நட்சத்திரங்கள் அலைந்துகொண்டிருக்க-ஒப்பிலலாத கரியநிறத்தையுடைய மேகங்களின் தலைமயிர்கிழித்துக்கொண்டிறங்கும் ஆகாயகங்கையின் பலபிரிவுகள் பூமியின்மேல் விளங்குவன்போன்றிருக்கும்.— எ-று தொங்கியமுத்துமாலைகளே-ஆகாயகங்கையின் வீழ்ச்சிகள்போலாகவும், அவைகளிலொளி-வெள்ளம்போலவும், அசந்திடமாகிய வீதி-அந்தப்பிரவாகத்தை அடக்கிக்கொண்டிருக்கிற. ஆறுகள் போலவும் தோன்றினவென்க-மேகமிடைகிழித்தொழுகுங்கங்கை-அபூதத்திலவந்தது. (௩௮)

கிளரொளிச்செங்கணகமயந்தானும்மாடுகீழ் நிலையோர் நீலச்சோபானம்பூணக,கொளவமைத்துமீதொருபாதிகன்னசாலை ஞலவயிரத்தாலமைத்தகொள்கையாமேல், யளவில்சுடர்ப்பிழம்பானார்தம்மைமதேடியசுழ்ந்தேனபாலனுமன்னமாகி, வளர்விசும்பிலெழுந்தானும்போலநீடு மாளிகைகளுளமரறுமறுகுதோறும். .... *

(இதன்பொருள்)

வீதிகள்தோறும் இருக்கின்றசில உப்பரிகைகள் மிகுந்தஒளியையுடைய மாந்தரயர்ந்த பொன்மயமாகச் செய்யப்பட்டுக் கீழ்நிலையில் நீலமணிகளிழைத்த வரிசையாகிய படியை உடைய

யனவாகி மேலே சிரேஷ்டமாகிய வச்சிரங்களைப்பரித்து அமைந்த சாளரத்தையுங் கொண்டிருப்பதனால் பரமசிவனுடைய அடியையும்முடியையுங்காணும்பொருட்டுப்பன்றியின் உருவங்கொண்டு தோண்டிய விஷ்ணுவும், அன்னப்பறவையாய் மேலேயெழும்பிய பிரமதேவனும், இவர்கள்கலகத்தையொழிக்கத் திரட்சியுள்ள சோதியாயெழுந்த பரமசிவனும்போல்திருக்கின்றன.—(எ-று) இச்செய்யுள் - வழுவமைதி. கொண்டுகூட்டுப் பொருள்கோள். (கஉ)

மின்பொலிபன்மணிமிடைந்ததளமாட மிசைப்பயில்சந்திரகாந்தம்விசும்பின்மீது, பொன்புனையுஞ்செக்கர்நிறப் பொழுதுதோன்றும்புனிற்று மதிகண்டிருகிப்பொழிந்தநீரால, வன்புலியினுரியாடைத்திருவேகம்பர்வளர்சடையு மிளம்பிறையுங் கண்டுகும்பிட், டன்புருகிமெய்பெழியக்கண்ணீர்வாரு மடியவருமனையவுளவல்லிலாத ....*

(இதன்பொருள்)

மின்னல்போலொளிவிடுகின்ற பலமணிகளினழுத்த வெண்மைபொருந்திய மேல்வீடுகள் - தமதுவெளிப்புறத்தில் பதித்திருக்கும் சந்திரகாந்தச்சிலைகள் ஆகாயத்தில் பொன்போலுஞ் செம்பநிறம்பாந்த மாலைப்பொழுதில் உதயமாகிய அர்த்தசந்திரனைக்கண்டு இளகிச்சொரிந்த நீரினால் வலிமையுள்ள புலித்தோலையாடை யாகவுடைய ஏகாம்பரேசுரரது வளர்ச்சியாகிய சடையையும், இளமையுற்ற பிறையையுந்தரிசித்துக் கைகூப்பி அன்பினாலே உருகி உடல்முழுதும் நிறையும்படி கண்ணீர் சொரிகின்ற அடியவரையும் ஒத்திருந்தன - இப்படி அளவற்ற மேல்வீடுகளிருந்தன.—(எ-று) (கூஎ)

முரிவுறிஞ்சுங் கொடிதொடுத்தமுடியவாகு முழுப்பளிங்கின் மாளிகைகண்முற்றுஞ்சுற்று, நிகரில்சராசரங்களெல்லா நிழலினாலே நிறைதலினானிறைதலஞ்செயிமையப்பாவை, நகிலுழுத்வடும்வளைத்தழும்பும்பூண்டதாயகனார் நான்முகற்குப்படைக்குதலுக், மகிலமோனிகளெல்லா மமைத்துவைத்தவரும்பெரும்பண்டாரநிலையனையவாகும் ....*

(இதன்பொருள்)

மேகங்கள் உராய்ந்துசெல்கின்ற கொடிகளைநாட்டிய சிகரங்களையுடைய உளிங்குக்கற்களினாலேயே கட்டப்பட்ட பெரிய வீடுகளின் உட்புறமுழுவதும் புறத்திற்செல்கின்ற ஒப்பற்ற

காடனென்பவனுர் எதிராகப்போய்க் கும்பிட்டு அரணியை தீக்கொண்டு நெருப்புண்டாக்கிவைத்தேன் கொடுமையுடைய பன்றியினது அவயவங்களையெல்லாம் உமது அடையாளப்படி பார்த்துக்கொள்ளும் திரும்பிநாம்போகிறதற்கு இப்போது நீர்மிகவும் தாமசப்பட்டிருக்கவேண்டிய தென்னவென்று சொன்னதும் அவ்விடத்தில் நின்ற நாணன். (ஈ-று) (௩௬௫)

அங்கிவன்மலையிற்றேவர்தம்மைக்கண்டணைத்துக்கொண்டு..*
வங்கினைப்பற்றிப்போதாவலுடும்பென்னநீங்கா .. . ..*
விங்குமதுதேவர்தின்னவிறைச்சிகொண்டேகப்போந்தா..*
னங்குலத்தலைமைவிட்டானலட்டுட்டான்தேவர்கெலருன் .*

(இதன்பொருள்.)

நாங்கள்போன அவ்விடத்தில் திண்ணர் மலையிலிருக்கின்ற சுவாமியைப்பார்த்துக் கட்டிக்கொண்டு மரப்பொந்தினைப் பற்றிவிடாத வலிய உடும்புபோல் நீங்கமாட்டாதவராய் அந்தச்சுவாமி உண்ணுகிறதற்கு இறைச்சிகொண்டுபோக இவ்விடத்தினின்றும்வந்தார்- நம்முடையகுலத்துக்குத் தலைவராகி யிருப்பதையும்விட்டார்- கடவுளுக்கு வசமானார் என்று சொன்னான். (ஈ-று) (௩௬௬)

என்செய்தாய்திண்ணநீதானென்னமால்கொண்டாயெங்கள்.*
மூன்பெருமுதலியலலையோவெனமுகத்தைநோக்கார்....*
வன்பெரும்பன்றிதன்னைவெரியினில்வதக்கிமிக்க.....*
வின்புறுதசைகள்வெவ்வேறம்பிலுலீர்ந்துகொண்டு.... ..*

(இதன்பொருள்.)

காடன் இந்தமொழியைக்கேட்டுத் திண்ணரே என்னகாரியஞ் செய்தீர் - எப்படிப்பட்ட பைத்தியங்கொண்டீர் - எங்களுக்கு முன்னே பெருமைபொருந்திய முதல்மையா யிருந்தவர

ன்றோ ஆன்று சொல்ல - அவன் முகத்தைப்பாராமல் வஞ்சமி
பொருந்திய பெரியபன்றியை நெருப்பினில் வதக்கிச் சிறந்த
இனிப்பாகிய மாமிசங்களை வெவ்வேறாக அம்பினால் கிழித்தெ
டுத்துக்கொண்டு.—(எ-று) (௮௬௭)

கோலினிற்கோத்துக்காய்ச்சிக்கொழுந்தசைபதத்தில்வேவ *
வாலிபகுவைமுன்காண்பான் வாயினிலதுக்கிப் பார்த்துச் .. *
சாலவுமினியவெல்லாஞ்சருகிலையினைத்தகல்லை ..... *
யேலவேகோலிகூடவதன்மிசையிடுவாரானார் ..... *

(இதன்பொருள்.)

அம்பிலே கொழுமையாகிய இறைச்சியைக்கோத்துநெருப்பி
லேகாய்ச்சிப்பதமாகவெந்து கொண்டிருக்கும்போது உயர்ந்
த உருசியாயிருக்கிறதோவென்று முன்னமேஅறிந்துகொள்ள
வாயினிற்போட்டு அதுக்கிப்பார்த்து மிகவும் இனிப்பாயிருக்கி
றமாமிசவிசேஷமெலாம்பழுப்பாகிய இலைகளால் இணைக்கப்
பட்டகல்லையைச் சுற்றிலும் விளிம்பு இருக்கும்படி நன்றாகத்
தைத்து அதனிலவெந்த தசையை உட்டார்.—(எ-று) (௮௭௧)

மருங்குநின்றவர்கள்பின்னுமயன்மிகமுதிர்ந்தானென்னே. *
யரும்பெறலிறைச்சிகாய்ச்சியதுக்கிவேறுமிழாநின்றான் ... *
பெரும்பசியுடையனேனும்பேச்சிலனெமக்குப்பேறு .... *
தரும்பரிசுணரான்மற்றைத்தசைபுறத்தெறியாநின்றான். ... *

(இதன்பொருள்.)

அருகில்நின்றவர்கள் பிற்பாடும் சொல்கின்றார்கள் என்ன ஆ
ச்சரியம்பைத்தியமிகவுங்கொண்டார் - அதெப்படியெனின்-
பெறுதற்கருமையாகியமாமிசத்தை நெருப்பிற்காய்ச்சிப்பல்
லினால்துக்கி வீணாகவுமிழ்கின்றார் அதிகப்பசியைத்தரம் உடை
யவரா யிருந்தாலும் அதைக்குறித்து ஒன்றும்பேசவில்லை நம
க்குமாமிசம் உண்ணக்கொடுக்குத்தன்மையையும் அறியார்மை
ற்றையிறைச்சியைப்புறத்தில்எறிந்துவிடுகிறார்.(எ-று) (௮௭௨)

தேவுமால்கொண்டானிந்தத்திண்ணன்மற்றிதனைத்தீர்க்க .. *
லாவதொன்றறியோர்தேவராட்டியைநாகனோடு ..... *
மேவிநாங்கொணர்ந்துதீர்க்கவேண்டுமவ்வேட்டைக்கானி. *
வேவலாட்களையுங்கொண்டுபோதுமென்றெண்ணிப்போனார்

(இதன்பொருள்.)

திண்ணனார்-தெய்வப்பயித்தியங்கொண்டார் இதனைத்தீர்க்கத்

நீங்கவழியொன்றையும் அறியாமல் நாம்போய்த் தேவராட்டி யை நாகரோடு அழைத்துக்கொண்டுவந்து இதை நிவிர்த்தி செய்யவேண்டும் ஆதலால் அந்தவேட்டையாடுகிற காட்டிலுள்ள ஏவல்செய்கிற மனிதர்களையும் கொண்டுபோவோமென்று நினைத்துப்போனார்கள்.—(எ-று) (ரூஉய)

னைவர்போனதோரார்கடிதினிற்கல்லையின்க.... .....*
னூனமுதலமைத்துக்கொண்டுமஞ்சனமாட்டவுன்னி.. .....*
மாநதிநன்னீர் தூயவாயினிற்கொண்டுகொய்த.....*
தூநறும்பள்ளித்தாமங்குஞ்சிமேற்றுறையக்கொண்டார் ..*

(இதன்பொருள்.)

கண்ணப்பசுவாமி தம்மருகிலிருந்த வேடர்கள்போனதைச்சுவாமியினிடத்தில் மனதைச்செலுத்தினதால் அறியாதவராய்ச் சேங்கிரத்திற்கல்லையில் அமிர்தம்போன்றமாமிசத்தைவைத்துக்கொண்டு திருமஞ்சன மாட்டவேண்டுமேயென்றுநினைத்துப் பெருமைபொருந்தியபொன்முகலியாற்றினது நல்ல நீரைசுத்தமாகியவாயிலைஎடுத்துக்கொண்டுசாத்துகிறதற்காகப் பரிசுத்தம்பொருந்திய அப்போதுமலர்ந்த புட்பங்களைக்கொய்து தமது தலையின்மயிரில் நிறையச்செருகிக் கொண்டார்.(எ-று)

தனுவொருகையில்வெய்யசரத்துடன்றாங்கிக்கல்லைப் .. ...*
புனிதமெல்லிறைச்சிதல்லபோனகமொருகையேந்தி .. ..*
யினியவெம்பிரானார்சாலப்பசிப்பரொன்றிரங்கியேங்கி.. ..*
தனிவிரைத்திறைவர்வெற்பைநண்ணினார்திண்ணனார்தாம் ..*

(இதன்பொருள்.)

ஒருகையில் அம்போடுவில்லும் ஏந்திதல்லஉணவாகமத்தொருகையில் கல்லையில் இட்டிருக்கும் களங்கமொன்றுமில்லாத மிருதுவாகிய மாமிசத்தையேந்தி இனியராகிய எமது ஆண்டவர் மிகவும்பசித்திருப்பரொன்று இங்கிவிசனப் பட்டுச்சீக்கிரதில்நடந்து சுவாமிவீற்றிருக்கு மலையை அடைந்தார் கண்ணப்பசுவாமி.—(எ-று) (ரூஉஉ)

இனைத்தனார்நாயனாரென்றீண்டச்சென்றெய்திவெற்பின் .. *
முனைத்தெழுமுதலைக்கண்டுமுடிமிசைமலரைக்காணில் .....*
வனைத்தபொற்செருப்பான்மாற்றிவாயின்மஞ்சனநீர்தன்னை *
யினைத்தவன்பும்நீங்கார்போலவிமலனார்முடிமேல்விட்டார். *

(இதன்பொருள்)

சுவாமிபசியினாற்களைத்திருப்பானொன்று விரைவாகப்போய் ம
லையில் எழுந்தருளியிருக்கின்ற சுவாமியைக்கண்டு அவரதுசிர
சில் சிவகோசரியானொன்பவரால் சாத்தப்பட்டிருந்தபுட்பங்க
ளைக்காலில்தரித்த அழகியசெருப்பினால் கீழேதள்ளிவாயில்லைய
த்திருந்த திருமஞ்சனநீரைத்தமக்குண்டாய் அடங்காமல் எழு
ந்த அன்பினை உமிழ்வதுபோல் பரமசிவனதுமுடியில் அபி
ஷேகஞ்செய்தார்.—(எ-று) (ாஉரு)

தலைமிசைச்சமந்தபள்ளித்தாமத்தைத்தடங்காளத்தி . . . . . *
மலைமிசைத்தம்பிரானார்முடிமிசைவணங்கிச்சாத்திச் . . . . . *
சிலைமிசைப்பொலிந்தசெங்கைத்திண்ணனார்சேர்த்தகல்லை *
யிலைமிசைப்படைத்தவூனின்றிருவமுதெதிரேவைத்து . . . . *

(இதன்பொருள்.)

சிவந்தகையினிடத்தில் பிரகாசிக்கின்றவில்லையுடைய திண்ணர்-
தலைமேல்வைத்திருந்த பஷ்பங்களை விசாலமாகிய மலையில் எ
ழுந்தருளியிருக்கின்ற திருக்காளஹஸ்திநாதருடைய சிரசில்வ
ணக்கத்தோடுசாத்தி இலைகளால் பொருத்தப்பட்ட கல்லையில்
இட்டுப் படைத்தஉணவமுதத்தைச் சன்னிதிக்கெதிரேவைத்து.
(எ-று) (ாஉச)

கொழுவியதசைகளெல்லாங்கோலினிற்றெரிந்துகோத்தங் *
கழலுறுபதத்திற்காய்ச்சிப்பல்லினாலதுக்கிநாவிற் . . . . . *
பழகியவினிமைபார்த்துப்படைத்தவிவ்விறைச்சிசால . . . . *
வழகிதுதாயனீரேயமுதுசெய்தருளுமென்றார் . . . . . *

(இதன்பொருள்.)

கொழுமையாகிய மாமிசங்களையெல்லாம் அம்பினாற் கோத்
துநெருப்பில் பக்குவமான பதத்தோடுகாய்ச்சி அதைப் பல்
லினால் அதுக்கி நாவின்பழக்கப்படி உருசிபார்த்துத் தேவரீ
ருக்குப்படைத்த இந்தமாமிசம் மிகவும் நன்றாயிருக்கின்றது.
ஆண்டவரே யமுதுசெய்தருள வேண்டுமென்று.(எ-று)ாஉடு

அன்னவிம்மொழிகள்சொல்லியமுதுசெய்வித்தவேடர் . . *
மன்னனார்திருக்காளத்திமலையினார்க்கினியதல்லா . . . . . *
னின்னமூர்வேண்டுமென்னுமெழுபெருங்காதல்கண்டு . . . *
பன்னெடுங்காங்கள்கூப்பிப்பகலவன்மலையிற்றாழ்ந்தான் . . *

(இதன் பொருள்.)

அப்படிப்பட்ட இந்தவார்த்தைகளைச்சொல்லி அன்பிருக்கவா மிலைய உண்ணும்படிசெய்த- வேடர்களுக்கு இறைவராகிய கண்ணப்பசுவாமி திருக்காளத்திமலையில் எழுந்தருளிய ஆண்டவர்க்கு இனிமையாகியதல்ல மாமிசம் இன்னும் வேண்டியிருக்கும் என்று எழுகின்ற பெரிய ஆசையைக்கண்டு -அடியார்க்குத்திரமம் உண்டாகுமென்பதனால்- பலவாகிய நீண்டகிரணங்களாகிய கைகளைக்கூப்பிக்கொண்டு அவ்தமனகிரியைச் சூரியன் அடைந்தார்.—(எ-று) (அமுதுசெய்வித்த வென்பதனால்) பரமசிவன் கண்ணப்பசுவாமியடைந்த திருவமுதை உண்டாரொன்க- அவருடைய அன்புஅப்படியிருந்ததுபற்றி. (௩௨௯)

அவ்வழியத்திமாலை யானதுமிரவுசேரும் ....*
வெவ்விலங்குளவென்றஞ்சிமெய்மையின்வேறுகொள்ளாச் *
செவ்வியவன்புதாங்கித்திருக்கையிற்சிலையுந்தாங்கி .....*
மைவரையென்னவையர்மருங்குநின்றகலாநின்றார். .....*

(இதன் பொருள்.)

அப்பொழுது மாலைக்காலம் வந்தமாத்திரத்தில் இனி ராத்திரிகாலத்தில் உயிர்களை ஊறுசெய்யச்சஞ்சரிக்கின்ற கொடிய மிருகங்கள் திரிந்தபடியே யிருக்கின்றன அதனால்சுவாமிக்கு ஒருவேளை தின்னுவருமென்று பயந்து உண்மையில் நின்றும் வேறுபடாத அழகிய அன்பைத்தாங்கித்திருக்கரத்தில்வில்லையுந்தாங்கிக் கருமையாகிய மலையைப்போல கண்ணப்பநாயனார்சுவாமியினுடைய பக்கத்தில்நின்றுநீங்காமலிருந்தார்.—(எ-று) (௩௨௰

சார்வருந்தவங்கள்செய்துமுனிவருமமரர்தாமுந் .....*
கார்வரையடவிசேர்ந்துங்காணுதற்கரியார்தம்மை.. .....*
யார்வமுன்பெருகவாராவன்பினிற்கண்டுகொண்டே.... ..*
நேர்பெறநோக்கியின்றார்நீலிருணீங்கநின்றார் .....*

(இதன் பொருள்)

முனிவர்களுந்தேவர்களும் மேலுள்ளாற்றாலுப்பட்ட மலையையும் வனத்தையுஞ்சேர்ந்து செய்தற்கருமையாகிய தவங்களைச்செய்தும் அறியக்கூடாத பரமசிவத்தை- ஆசையானது அதிகரிக்கக் குறைவில்லாத அன்பிருக்கியமனித்துக்கொண்டு வேறொன்றையும்பாராமல் சுவாமியின்திருமேனியே பார்த்துக்கொண்டு அணுகியாய்த்தொடர்ந்துவருகின்ற மலம்நீங்கநின்றார் கண்ணப்பசுவாமி.—(எ-று)

(௩௨௮)

கலைசொரிதரளக்குன்றிக்கதிர்நிலவொருபாற்பொங்க . . . . *
முலைபயாவுமிழ்ந்தசெய்யமணிவெயிலொருபான்மொய்ப்புத்
தலைகதிர்ப்பனிதியோடுஞ்சந்திரன்றலையுவாவித் . . . . . *
குலையணிகாதர்வெற்புக்கும்பிடச்சென்றுவொக்கும் . . . . *

(இதன்பொருள்.)

முங்கில்கள் சொரிந்த மணிகளைபோன்ற முத்துக்குவைகளினுடைய பிரகாசமானது ஒருபக்கத்தில் விளங்குதலினாலும் குன்றுகளிலிருக்கின்றசர்ப்பங்களுமிழ்ந்தசெய்ப்பாலியமணிகளினுடைய பிரகாசமானது ஓர்பக்கத்தில் நெருங்குதலினாலும் மிகுந்தகிரணங்களையுடைய சூரியனோடுகூடச்சந்திரனுமிருமாவாசைத்தினத்தில்சங்கக்குழையை அணிந்தகிருக்காதினையுடைய காளத்திநாதரது திருமலையைத்தரிசிக்கவந்ததற்கொப்பாகும். (எ-று) (ஈகூ)

விரவுபன்மணிகள்சான்றவிரிகதிர்ப்பிடலைபொங்க . . . . . *
மரகதமொளிவொள்நீலமணிகளுமிமைக்குஞ்சோதி . . . . . *
பொரவிருசுடருக்கஞ்சிப்போயினபுடைகடோறு . . . . . *
பிரவிருளொதுங்கினாலேபோன்றுளதெங்குமெங்கும் . . . . *

(இதன்பொருள்.)

இனமினமாகச்சேர்ந்த பலவகைமுத்துக்களினொளிகலந்த விரிந்த கிரணக்கூட்டங்களினால் பச்சைமணிகளும் காந்தவொளிந்திய நீலரத்தினங்களும் வீசுகின்ற பிரகாசமானது சந்திரசூரியர்களாகிய இரண்டுசுடர்களும் தன்வலிமைக்குறைந்து அதற்குப்பயந்து ஆழமாகிய குகைகள்தோறும் இரவுத்தூலத்தில் வருகின்ற இருளானது ஒளித்துக்கொண்டிருப்பதற்கொப்பாயிருக்கின்றது அந்தமலைகளினுடைய இடங்களெல்லாம். (எ-று) (ஈஎஅ)

செந்தழலொளியிற்பொங்குந்தீபமாமரங்களாலு . . . . . *
மந்திகண்முழையிலவைத்தமணிவிளக்கொளிகளாலு . . . . *
லைந்துமாடக்கியுள்ளாரரும்பெருஞ்சோதியாலு . . . . . *
பெந்தையார்திருக்காளத்திமலையினிரவொன்றில்லை . . . . *

(இதன்பொருள்.)

செந்தழலுக்கொப்பாகிய பிரகாசத்தினைப்போல் விளங்குகின்ற மரங்களினாலும் குரங்குகள் தங்கள்குகையாகியவிடங்களிலே வைத்திருக்கின்ற இரத்தினதீபங்களின் பிரகாசத்தாலும் பொருந்தியிருக்கின்றனவும். காமமுதலாகிய அறுவகைப்பகைகளையுமடக்கினவ

சிவாகிய முனிவர்களுடைய தேகத்தின் அருமையாகிய பெரிய பிரகாசத்தினாலும் எமது ஆண்டவராகிய பரமசிவனுடைய திருக்காளத்தி மலையினிடத்தில் எப்போதும் இராத்திரியென்பது இல்லை —(எ-று) (சோதிவிருட்சமென்பது) தெய்வத்தன்மைபொருந்திய பொதியமுதலான மலைகளிலிருந்து பகற்காலத்தில் தோன்றாமல் இராத்திரியில்மாத்திரம் பார்ப்போர்க்குச் சோதியாகத்தோன்றும்-அதன்சமீபத்திற்போயினால் கண்ணுக்குப்புலப்படாது- அந்தவிருட்சத்தினாற் காயசித்தி உண்டாகுமென்கின்றார்கள். (௩௩௧)

வருங்கறைப்பொழுதுநீங்கிமல்கியயாமஞ்சென்று ... ..*
சுருங்கிடவதிர்தபுள்ளின்சூழ்ச்சிலம்போசைகேட்டுக் .. .... *
கருங்கடலென்னநின்றகண்டுயிலாதவீர .... *
ாரும்பெறற்றம்பிரானார்க்கமுதுகொண்டணையவேண்டி .. *

(இதன்பொருள்.)

பகல்சென்றவுடனே வருகின்ற மாலைக்காலம்போய் நாழிகை மிகுந்த யாமக்காலமும்சென்றுகுறைய-விடியுநேரத்தையறிந்த பறவைகள் மிகுந்து ஒலிக்காநின்ற சத்தத்தைக்கேட்டு இரவுமுழுது நித்திரையில்லாமல் கறுத்தகடல்போல்நின்ற கண்ணப்பநாயனார் அடைதற்கரியகாளஹஸ்தீசுவரருக்குத்திருவமுது கொண்டுவாவேண்டுமென்று நினைத்து.—(எ-று) (௩௩௨)

ஏறுகாற்பன்றியோடுமிருங்கலைபுனமான்மற்றும் .... *
வேறுவேறினங்கள்வேட்டைவினைத்தொழிலவிரினாலே .. *
ஆறுசெய்காலஞ்சிந்தித்துருமிகத்தெரியாப்போதின் .... *
மாறடுசிலையுங்கொண்டுவள்ளலைத்தொழுதுபோந்தார் .. ..*

(இதன்பொருள்.)

செங்குத்தான குன்றுகளிலும் ஏறுங்காலினையுடைய பன்றிகளோடும் பெரிய கலைமானும்புனத்திலுள்ளமான்களும் இவையொழிந்த மற்றைமிருகசாதிகளை வேட்டையாடுவதில் சமர்த்தராயிருக்கிறதினாலே கொல்லுங்காலமிதுவென்று நினைத்து ஆளுருத் தெரியப்படாமலிருக்கும்விடியற்காலத்திலேயே பகைவரை வெல்லத்தக்க வில்லையும் எடுத்துக்கொண்டு சுவாமியை வணங்கிநடந்தார் கண்ணப்பசுவாமி.—(எ-று) (௩௩௩)

(வேறு.)

மொய்காட்டுமிருள்வாங்கிமுகங்காட்டுந்தேரிரவி .... *
மெய்காட்டுமன்புடையவிலலியார்தனிவேட்டை .... *

மெய்காட்டின்மாவளைக்கவிட்டகருந்திரையெடுத்துக் .... *
கைகாட்டுவான்போலக்கதிர்காட்டியெழும்போதில்.. .... *

(இதன்பொருள்)

மிகுந்த இருளைநீக்கித் தனது மண்டலத்தை வெளியில் தோற்றுகின்ற தேரினையுடைய சூரியன் மெய்ம்மையாகச் செய்யும் பத்தியினையுடைய கண்ணப்பசுவாமி தனியாக வேட்டைக்காகப்போகாநின்ற காட்டில்மிருகங்களைவளைக்கும்பொருட்டுச் சந்நிதியில் இடப்பட்டிருந்த கருநிறமுள்ள திரையைநீக்கிக் கையினால் அந்த மிருகங்களைக் காட்டுகிறவன்போலக் கிரணங்களைவிரித்து உதயமானபோதில்.—(எ-று) (௩௫)

எய்தியசீராகமத்திலியம்பியபூசனைக்கேற்பக் .... *
கொய்தமலரும்புனலுமுதலானகொண்டணைந்தார் .... *
மைதழையுங்கண்டத்துமலைமருந்தவழிபாடு.... .... .. *
செய்துவருந்தவமுடையமுனிவர்சிவகோசரியார் .... *

(இதன்பொருள்)

சுவாமியினால் அருளிச்செய்யப்பட்ட சிறந்த காமிகாதியாகமங்களில் விதித்திருக்கிறபிரகாரம் செய்கின்ற பூசைக்கு ஏற்றும்படி பரிசுத்தமாகப் பறித்த புட்பங்களும்-நீரும்-முதலானவைகொண்டு சுவாமியின் சன்னிதிக்குவந்தார்- நீலநிறம்பொருந்திய கண்டத்தையுடைய மலையில்வீற்றிருக்கும் அமிர்தம்போன்ற சுவாமியை வழிபாடுசெய்துகொண்டு வருகின்ற தபோமுனிவராகிய சிவகோசரியார்.—(எ-று) (௩௬)

வந்துதிருமலையின்கண்வானவர்நாயகர்மருங்கு .... *
சிந்தைநியமத்தோடுஞ்செல்கின்றார்திருமுன்பு .... *
வெந்தவிறைச்சியுமெலும்புங்கண்டகலமிதித்தோடி.. .... *
யிந்தவனுசிதங்கெட்டேனியார்செய்தாரென்றழிவார்.. .. *

(இதன்பொருள்)

சிவகோசரியார் திருக்காளஹஸ்திமலைக்குவந்து தேவர்களுக்கு நாதராகியசுவாமியின் சன்னிதிக்கு நியமம்பொருந்திய மனதோடும்போயினார் சுவாமியின்முன் வெந்திருக்கு மாமிசமும் எலும்புகளையுங்கண்டு தூரத்தில்கால்வைத்து ஓடி இப்படிப்பட்ட அனுசிதமானகாரியத்தையார்செய்தார்கள் கெட்டேனென்று விசனப்பட்டார்.—(எ-று) (௩௭)

மேவதோவாவஞ்சாவேடுவரேயிதுசெய்தார் ... ... *
தேவுதேவிசேனைதிருமுன்பேயிதுசெய்து ... ... *
போவதேயிவ்வண்ணம்புகுசநீதிருவுள்ள ... ... *
மாவுதேயெனப்பதறியழுதுவிழுந்தலமந்தார் ... ... *

(இதன்பொருள்.)

சன்னிதியை அடைகிறதற்கு மனம்நோவாமலும் அஞ்சாமலும் திருகிறவேடர்களேயிந்த அனுசிதஞ்செய் திருப்பார்கள் தேவர்களுக்கெல்லாந் தேவராயிருக்கிற ஆண்டவனே! உமது சன்னிதியின்முன்னே நாணையிப்படிப்பட்டதைச்செய்துபோகலாமா இதுஉன்மையான காரியஞ்சம்பவிக்கத்திருவுள்ளங்கொள்ளலாமா வென்றுமனம்பதறியழுதுவிழுந்துசுழன்றார் — எ-று) (௩௬௭)

பொருப்பிலெழுஞ்சுடர்க்கொழுந்தின்பூசனையுந்தாழ்க்கநா.*
னிருப்பதினியென்னென்றவ்விறைச்சியெலும்புடனிலையுஞ் *
செருப்படியுநாய்படியுந்திருவலகான்மாற்றியபின் ... ... *
விருப்பினொடுந்திருமுகலிப்புனல்மூழ்கிவிளைந்தணைந்தார். *

(இதன்பொருள்.)

மலையில்எழுந்த கொழுந்துபோலுள்ள சுடருருவமான பரமசிவனுக்குச்செய்ய வேண்டியபூசை வேளைசெல்ல நானிருப்பதில் என்னபிரயோசனமென்று அங்கு இறைந்து கிடக்கின்ற மாமிசம் எலும்பு இவைகளோடு செருப்புதரித்த காலின் அடையாளமும் கண்ணப்பசுவாமி வேட்டைக்கெழுந்துபோன வுடனே அந்த இறைச்சியைத் தின்னவந்த காட்டிலுள்ள நாய்களின் அடிகளையும் திருவலகுகொண்டு போகும்படிவிளக்கியபின்பு பத்தியோடு பொன்முகலியாற்றிலிறில ஸ்நானஞ்செய்து சீக்கிரமாகவந்தார் சிவகோசரியார். — (எ-று) கண்ணப்பசுவாமியோடுவந்த வேட்டைநாயின் அடியென்றுசிவர் கூறுகின்றார்கள் நாணன்-காடன்-இவ்விருவருமே கூடவந்தார்களெனமுன்செய்யுள்களிற் சொல்லியிருக்கிறபடியால் அதுபெருந்தாது. (௩௬௮)

பழுதுபுகுந்தனதுதீர்ப்பவிதிரமாஞ்செயல்புரிந்து ... ... *
தொழுதுபெறுவனகொண்டுதூயபூசனைதொடங்கி ... ... *
எழுவிதிருமஞ்சனமெழுதலாகவுரும்பூசை ... ... *
முழுதுமுறைமையின்முடித்துமுதல்வனார்கழல்பணிந்தார் *

(இதன்பொருள்)

சுவாமி எழுந்தருளியிருக்கும் இடத்திற்குச் சம்பவித்த அகில மானதுதிரும் படியாகப்பரித்தத்தச்செய்கையாகிய சப்புரோக்ஷணஞ்செய்து வணங்கிக் கிடைத்தவைகளைக்கொண்டு தூய்மையாகிய பூசைசெய்ய ஆரம்பித்துக் குற்றமற்றதிருமஞ்சனமுதலாகிய அருமையாகியபூசைமுழுதும் முறையோடுமுடித்து ஆண்டவருடைய பாதத்தில்வணங்கினார்.—(எ-று) (௩௩௬)

பணிந்தெழுந்துதனிமுதலாம்பரனென்றுபன்முறையாற் .. *
றுணிந்தீமறைமொழியாலேதுதிசெய்துசுடர்ததிங்க ..... *
ளணிந்தசடைமுடிக்கற்றையங்கணரைவிடைகொண்டு .... *
தணிந்தமனத்துருமுனிவர்தபோவனத்தினிடைச்சார்ந்தார். *

(இதன்பொருள்)

வணங்கி யெழுந்து ஒப்பற்றமுதலவராகியபரமனொன்று பலதரம் நிச்சயமாகச்சொல்லுகின்ற வேதவாக்கியங்களாலே ஸ்தோத்திரம்பண்ணிக்கிரணம்பொருந்திய சந்திரனைத்தரித்த கற்றையாகிய சடைமுடியையுடைய சுவாமியினிடத்தில் நின்றும் விடை பெற்றுக்கொண்டு அடங்கிய மனதையுடையசிவகோசரியார் தாம் தவம்பண்ணுகின்ற வனத்திற்குச் சேர்ந்தார். (எ-று) (௩௩௭)

இவ்வண்ணம்பெருமுனிவரோகிளரினியிப்பால் .... *
மைவண்ணக்கருங்குஞ்சிவனவேடர்பெருமானார் .... *
கைவண்ணச்சிலைவளைத்துக்கான்வேட்டைதனியாடு .... .. *
செய்வண்ணத்திறமொழிவேன்றீவினையின்திறமொழிவேன். *

(இதன்பொருள்)

இந்தப்பிரகாரம் பூசைசெய்து பெருமைபொருந்திய முனிவநாதவர் போயினர்-இனி-இவ்விடத்தில் மைபோல் கரியநிறத்தைப் பொருந்திய தலைமயிரினையுடைய வனத்திலுள்ள வேடர்களுக்கு இறைவராகிய கண்ணப்பசுவாமிகையில்ஏந்திய அழகுபொருந்திய வில்லைவளைத்துக் காட்டில் தனியாகவேட்டையாடுவதில் வெவ்வேறான வல்லமையைச்சொல்லத் தொடங்குவேன்-வலிபொருந்திய பாவங்கள் ஒழிய நிற்கின்றயான். (எ-று) (௩௩௮)

திருமலையின்புறம்பேரானதிண்ணனார்செறிதுறுகற் .... *
பெருமலைகளிடைச்சரியிற்பெரும்பன்றிபுனமேய்ந்து .... *

வருவனவுத் துணிபடுத்துமானினங்கள்கானிடைநின் . . . . . *
றொருவழிச்சென்றேறுதுறையொளிநின்றுகொன்றருளி . . *

(இதன்பொருள்)

தெய்விகமாகிய காளஹஸ்திக்குப் புறத்திற்போனகண்ணப்ப நாயனார்தெருங்கிய துறுங்கற்களையுடைய பெரிய மலைகளிடத்திலும் சரிவாயிருக்கின்றவிடத்திலும்புனத்திலுள்ள பலங்களை மேய்ந்துவருகின்ற பெரிய பன்றிகளையும் கொன்று மான்கள் காட்டினடுவில்நின்று ஒருவழியாகப்போயேறுகின்றவழியில் ஒளித்துநின்று அவைகளைக்கொலைசெய்து.—(எ-று) (௩௪உ)

பயில்விளியாற்கலையழைத்துப்பாடுபெறவூடுருவு . . . . . *
மயின்முகவெங்கணைபோககியடியொற்றிமரையினங்க . . . . *
டியிலிடையிற்கிடையெய்துதொடர்ந்துகடமைகளெய்து . . *
வெயில்படுவெங்கதிர்முதிரத்தனிவேட்டைவினைமுடித்தார்.*

(இதன்பொருள்.)

கூப்பிடும்பயிலோசையால் கலைமானைஅழைத்து வருத்தப்படத்தைத்து உருவத்தக்க கூர்மைபொருந்திய நுனியையுடையவெவ்விதாகிய அம்புகளைவிட்டு அடியினடையாளங்களைப் பற்றித்தொடர்ந்துநித்திரைசெய்யும்போது மரைமிருகங்களின்கூட்டத்தையெய்து குறிபற்றிக்கடமைமிருகங்களையுங் கொன்று காந்திபொருந்திய சூரியன் உச்சியில் வரும்போது ஒப்பற்ற வேட்டைத்தொழிலை முடித்தார்.—(எ-று) (௩௪௯)

பட்டவனவிலங்கெல்லாம்படர்வனத்திலொருசூழ . . . . . *
விட்டருகுதீக்கடைகோவிருஞ்சுரிகைதனையுருவி . . . . . *
வெட்டிநறுங்கோற்றேனைமிகமுறித்துத்தேக்கிலையால் . . . *
வட்டமுறுபெருங்கல்லைமருங்குபுடைபடவமைத்தார் . . . . *

(இதன்பொருள்.)

கண்ணப்பசுவாமி தம்மாற்கொல்லப்பட்ட மிருகங்களெல்லாம் மரங்கள்தெருங்கிய வனத்திலொருபுறத்தில் இட்டுப் பெருமைபொருந்திய தமதுவாளையுருவி தெருப்பையுண்டாக்குங் கோல் ஒன்றையேற்படுத்தி நல்லகொம்பிலுள்ள தேனைமிகவும்பிழிந்து தேக்கிலையினால் வட்டமாகத்தைக்கப் பட்டபெரிய கல்லையினிடத்தில் நிறையும்படிவார்த்தார்.—(எ-று) (௩௪௪)

இந்தனத்தைமுறித்தடக்கியெரிகடையுமரணியினில் . . . . . *
வெந்தழலைப்பிறப்பித்துமிகவளர்த்துமிருகங்கள் . . . . . *
கொந்தியயிலலகம்பாரிகுட்டமிட்டுக்கொழுப்பரிந்து . . . . *
வந்தனகொண்டெழுந்தழலில்வக்குவனவக்குவித்து . . . . . *

(இதன்பொருள்)

விறகைமுறித்து அடுக்கி நெருப்புக்கடையும் அரணிக்கோலால் வெப்பமாகிய நெருப்பை உண்டாக்கி அதிகமாக மூட்டித் தாங் கொண்டுவந்த மிருகங்களைக்கொந்திக் கொழுப்பாயுள்ள மாமிசத்தை அரிந்து கூர்மைபொருந்தியகவர்களையுடைய அம்பினாற் கோத்துக்கொண்டுவந்து அவைகளில் வதக்கவேண்டின உற்றை வதக்கி.—(எ-று) (வக்குவன)- வதக்கு என்னுஞ் சொல்லின் நடுக்குறைந்ததென்றும் கிராமிய மொழியென்றுஞ் சொலவார்கள். (௩௪௫)

வாயுப்பாலழியப்பதுவும்வருப்பதுவுஞ்செய்தவற்றி . . . . . *
லாயுதப்பிறைச்சியெல்லாமரிந்தொருகல்லையிலிட்டுக் . . *
காயநெடுங்கோல்கோத்துக்கனலின்கணுறக்காய்ச்சித் . . . . *
தூயதிருவமுதமைக்கச்சுவைகாணத்துடிக்கின்றார் . . . . . *

(இதன்பொருள்)

கூர்மைபொருந்தியஅம்பினால் அழித்தும்- கீறியும் வேறுக்கப்பட்ட அம்மிருகங்களின் கைகாலமுதலிய உறுப்புகளின் இறைச்சியெலலாம் துண்டித்து ஒருகலையிற்போட்டு நீண்டஅம்பிலே கோத்து நெருப்பில்காயும்படியாக மிகவுங்காய்ச்சிப் பரிசுத்தம்பொருந்திய திருவமுதுசுவாமிக்கு ஏற்படுத்த-அந்த மாமிசத்தை வாயிலிட்டுஉருசிபார்த்தார்.—(எ-று) (௩௪௬)

ஏன்னிறத்தகடவுளருக்கிடுமுணவுகொண்டேட்டும் . . . . . *
வன்னவெரிவாயின்கன்வைத்ததெனக்காளத்தி . . . . . *
யன்னலார்க்காம்பரிசதாஞ்சோதித்தமைப்பதற்குத் . . . . *
நின்னவுர்திருவாயிலமைத்தாரூன்திருவமுது . . . . . *

(இதன்பொருள்)

அளவில்லாததேவர்களுக்குஇடவேண்டியஉணவைத்தால்பெற்றுக்கொண்டுபின் புதுவர்களையுண்பிக்கும் நிறம்பொருந்திய அக்கினியானது- தன்வாயினிடத்தில் கொண்டுஉருசி பார்ப்பதுபோல்திருக்காளஹஸ்திமலையில் எழுந்தருளியிருக்கும் ப

சாமவேதனுக்கு - இவை-இவையாகும் எல்கிறதன்மையைப் பரி சோதித்துஎற்படுத்துவதற்குத் திண்ணனார்தமதுவாயில்சுவா மிக்குப்பண்டைக்கவேண்டிய ஊனுமியதிருவமுதையிட்டுக்கவை பார்த்தார்.(எ-று) யாகஞ்செய்யுங்காலத்தில்தேவர்களுக்குத் திர்ப்பியாக அவர்கள் பெயரைச்சொல்லி தெருப்பில் ஆகுதி பண்ணுதலால்அன்னமுதலானவைகளை அந்த அக்கினிதான்மு ன்னேசுவைபார்த்துத் தேவர்களுக்கு க்கொடுப்பது போல்ள ன்றார். (௧௪௮)

நல்லபதமுறவெந்துநாவின்கணிடுமிறைச்சி ..... *
கல்லையினிற்படைத்துத்தேன்பிழிந்துகலந்ததுகொண்டு .. *
வல்லிரைத்துபள்ளித்தாமமுந்தூயமஞ்சனமு .... *
மொல்லையினின்முன்புபோலுடன்கொண்டுவந்தணைந்தார் *

(இதன்பொருள்.)

நல்லபதமாகவெந்தபின்பு நாவில்இட்டு இனிப்பாயிருக்குமா மிசத்தைக் கல்லையில்படைத்துத் தேனைப்பிழிந்துஇரண்டினை யுங்கலத்து அதனைஎடுத்துக்கொண்டு விரைவாகச்சென்று பு ஷ்பங்களும்பரிசுத்தமாகிய நீரும் தொடிப்பொழுதில் முன் பு போல் குடுமி யிலும் வாயிலும் பெற்றுக்கொண்டு சுவாமி யினிடத்திற்குவந்தார்.— (எ-று) நல்லபதம் என்றது அபக் குவமும் அதிபக்குவமுமின்றியுள்ளதை. (௧௪௮)

வந்துதிருக்காளத்திமலையேறிவனசரர்க .... *
டந்தலைவனுரிமையோர்தலைவனுர்தமையெய்தி ..... *
யந்தணனுர்பூசையினைமுன்புபோலகத்தியபின் ..... *
முந்தைமுறைதம்முடையபூசனையின்செயன்முடித்தார் ... *

(இதன்பொருள்.)

வேடர்களுக்குத் தலைவராகிய திண்ணனார் திருக்காள ஹஸ்திம லையில் ஏறித் தேவர்களுக்குத் தேவராகிய சுவாமியைஅடைந் துசிவகோசரியார்சுவாமியின்திருமுடியில் அர்ச்சனைசெய்திரு ந்தமலர்களை முன்புபோல் தமதுசெருப்புக்காலால்நீக்கியபி ன்புதாம்செய்ய வேண்டிய பூசையைமுன்பு போல்செய்தா ர்—(எ-று) (௧௪௯)

ஊனமுதுகல்லையுடன்வைத்துமுன்னையினன்று ..... *
லேனமொடுமான்கலைகண்மரைகடமையிவையிவற்றி ..... *
லானவுறுப்பிறைச்சியமுதடியேனுஞ்சுவைகண்டேன் .... *
றேனுமுடன்கலந்ததுநித்திக்குமெனமொழிந்தார் ... *

(இதன்பொருள்.)

கல்லியில் இட்டிருக்கும் ஊனமிர்தத்தைச் சன்னிதியின்முன்னே வைத்து இந்தஅமுது முன்கொண்டுவந்ததுபோலன்றுபன்றியோடு மான்கலை மரையின்மாமிசம் இவை இவைகளாய் இவைகளில்அவற்றின்அவயவங்களின் அமுதம்போன்றஇறைச்சியை அடியேனும் உருசிபார்த்திருக்கின்றேன் இதுதேனுங் கூடக்கலந்திருக்கின்றது தேவரீருக்குத்தித்திப்பாயிருக்குமென்றுசொன்னார் —(எ-று) (௩௫)

இப்பரிசுதிருவமுதுசெய்வித்துத்தம்முடைய .....*
வொப்பரியபூசனைசெய்தற்றெறியிலொழுகுவா .....*
ரொப்பொழுதுமேன்மேல்வந்தெழுமன்பாற்காளத்தி ....*
யப்பரொதில்லுறங்கார் பகல்வேட்டையாடுவார்.. .....*

(இதன்பொருள்.)

நாள்தோறும் மேன்மேலாக உண்டானபத்தியினால்திருக்காளஹஸ்தியி லெழுந்தருளியிருக்கும் பரமசிவன் சன்னிதிக்கெதிரேநின்று இராத்திரிகாலமுழுவதும் நித்திரைசெய்யாதவராய்ப்பகற்பொழுதில் வேட்டையாடுகின்றகண்ணப்பநாயனார் இந்தப்பிரகாரம்அமுதுசெய்வித்துத்தாம்செய்யவேண்டிய ஒப்பில்லாதமந்திரைப்பூசையுஞ் செய்து அந்தமார்க்கத்தின்படி நடத்துகொண்டு வருவார்.—(எ-று) (௩௫௪)

மாமுனிவர்தாடோறும்வந்தணைந்துவனவேந்தர் .... ..*
தாமுறுமும்பூசனைக்குச்சாலமிகத்தளர்வெய்தித் ....*
தீமையெலாந்தீர்க்கிச்செப்பியவாகமவிதியா .....*
வாமுறையிலர்ச்சனைசெய்தற்றெறியிலொழுகுவாரால். ....*

(இதன்பொருள்.)

பெருமைபொருந்திய முனிவராகியசிவகோசரியார் நாள்தோறும்சுவாமிசன்னிதிக்குவந்துகண்ணப்பநாயனாமுயன்றுசெய்தபூசையைக்குறித்து அதிகமாகத்தளர்ச்சியை அடைந்து தீதாயிருக்கின்றதேயென்று அசுத்தமாய்க்கிடக்கின்ற வஸ்துக்களை நீக்கிப்பெருமையாகச்சொல்லப்பட்ட ஆகமவிதிப்பிரகாரம் முறையாக அர்ச்சனைசெய்து அவ்வண்ணமே நடத்துகொண்டுவந்தார்.—(எ-று) (௩௫௫)

தானவெருவோடனும்போய்தாகனுக்குச்சொல்லியபி- ....*
னானமுறச்சமுமின்றியனைக்குறவாளையுங்கொண்டு.....*

பேணுமகனார்தம்பால் வந்தெல்லாம்பேதித்துக் .... *
காணுதெரிதங்கன்றுறிவாராமற்கைவிட்டார் .. .. *

(இதன்பொருள்.)

தாணுவும் காடனும் போய்நாகனுக்குத் திண்ணருடையசெய்கையைச்சொல்லியபின்பு அவன் அன்னம் ஆகாரமில்லாமல் சிலஆட்களையும் தேவராட்டியையும் அழைத்துக்கொண்டு விருப்பமுள்ள தன் மகனாரிடத்துக்குவந்து வேண்டியவற்றையெல்லாஞ்சொல்லி அவர்மனதைப்பேதித்துத் தாங்கள்பெற வேண்டியநன்மை தங்கள் ஏண்ணப்படிநிறை வேறாதபடியால் கண்ணப்பசுவாமியைவிட்டுப் போய் விட்டார்கள்— (எ-று) (௩௬)

மூன்புதிருக்காளத்திமுதல்வனாருணோக்கா .... *
லின்புறுவேதகத்திரும்புபொன்னாற்போலியாக்கைத் .. *
தன்பரிசம்வினையிரண்டுஞ்சாருமலமூன்றுமற .... *
வன்புபிழம்பாய்த்திரிவாரவர்கருத்தினளவினரோ.... *

(இதன்பொருள்.)

மூதலில்திருக்காளஹஸ்தியில்வீற்றிருக்கும் பரமசிவனுடைய கிருபாகடாக்ஷத்தால்உயர்ந்தரசவேதையில்இரும்பானது பொன்னானதுபோல் உடலின்தன்மையும் நல்வினை தீவினையென்னும் இரண்டும் ஆணவம்-காமியம்-மாயை-என்கிற மும்மலங்களும் நீங்க அன்பின்கூட்டம் ஒருருக்கொண்டதுபோல் இருக்கின்றகண்ணப்பசுவாமி அவர்கருத்தினளவில் நிற்காதவரானார்.—(எ-று) இச்செய்யுள் இருவினையொப்பும் மலபரிபாகமும், கண்ணப்பசுவாமிகளுக்கு உண்டாயினவென்பது விளக்கிற்று(அவர்கருத்தினளவினரோ) என்பதினால் சுவாமியின் வசப்பட்டாரென்றுணர்க. (௩௭)

அந்திலையிலன்பனாரறிந்ததெறிபூசிப்ப .... *
மன்னியவாகமப்படியான்மாமுனிவரர்ச்சித்திங் .... *
தென்னுடையதாயகனேயிதுசெய்தார்தமைக்காணே .... *
னுன்னுடையதிருவருளாலொழித்தருளவேண்டுமெனா .... *

(இதன்பொருள்)

மேற்சொன்ன தெறியில்நிற்கின்ற கண்ணப்பசுவாமி தமக்குத்தெரிந்த அளவில் சுவாமிக்குப்பூசைபண்ணா நின்றபெரிய

நாகமவிதிப்பிரகாரம் சிவகோசரியார் அர்ச்சித்து நாம்முடைய ஆண்டவரே, இவ்விடத்தில் இப்படி அசிருத்தியத்தைச் செய்த மனிதர்களைப் பூர்க்கவில்லை ஆதலால் தேவரீர் துரிருபையால் இத்தன்மையான செய்கை இனி உண்டாகாமலிருக்க அருள்செய்ய வேண்டுமென்று சொல்லிப்போக.—(எ-று) (அறிந்ததெறிபுரிந்தலாவது) யாகத்திலன்றிதைவேத்தியமாக மாமிசத்தைச்சுவாமிக்குப்படைக்கலாகாதென்பதும், வாயிற்கொண்டுவருநீர் எச்சிலென்றும், தம்முடையதலையில்வைத்து சாத்தப்படாதென்றும், மிகவுங்குறைவுள்ளகாற்செருப்பு திருமுடியில்படக் கூடாதென்றும், அநுசாரமாயிருந்து சுவாமியின்விஷயமாகவொரு வேலையுஞ்செய்யக்கூடாதென்றும், அறிந்துகொள்ளாமல் தாம்முதலில் கைலாசபதியைத்தரிசித்தபோது சிரசில் நீர்வார்த்து மலரிட்டிருப்பதையும் ஒருபார்ப்பான் எதையோ கொண்டுவந்து படைத்தானென்று சொன்னதையும், உறுதியாக எண்ணி இப்படிச்செய்வதே சுவாமிக்குத் திருவுளமென்றுதாம் அவ்வாறு செய்யப்புறப்பட்டுப் பாத்திரம் இல்லாமையால் அபிஷேகத்துக்குஜலத்தை வாயில்வைத்துக்கொண்டு ஒருகையில் மாமிசமுந்தேனுந்தங்கிய கல்லையுந், மற்றொன்றில் அப்பும்விலங்கு மிருத்தலபத்திரக் கால்களாற்பத்திரபுஷ்பங்களை முடியிலிருந்து தள்ளியும், தாம்புலாலையுண்பதுபோல் கடவுளுண்பரென்று எண்ணிசாப்பிடுக சாப்பிடுகவென்றுவேண்டிக்கொண்டு, எங்குநிறைந்து முடிவிலாத ஆற்றலையுடையவராயாவரிடத்து நின்றும் பயமில்லாத சுவாமியைப்பார்த்து உமக்குத்துணையிலாமல் தனியாயிருக்கின்றீரோயென்று காத்தும் நடந்தசெய்கையாம். (௩௫)

அன்றிரவுகனவின்கணருமுனிவர்தம்பாலே . . . . . *
மின்றிகழுஞ்சடைமவுலிவேதியர்தாமெழுந்தருளி . . . . . *
வன்றிறல்வேடுவனென்றுமற்றவனைநீநினையேல் . . . . . *
நன்றவன்றன்செயறன்னைநாமுவைப்பக்கேளென்று . . . . *

(இதன் பொருள்.)

சிவகோசரியார் இந்தவண்ணம் மனஸ்தாபப்பட்டுக்கொண்டுபோன அன்றிராத்திரியில் மின்னலைப் போல்பிரகாசிக்கின்ற சடைமுடியையுடைய பரமசிவனுவர் சொப்பனத்தில் அவரிடத்துக் குஎழுந்தருளிவந்து வன்செய்கையுள்ளவேடுவனை நீ அவனைநினைக்காதே அவனுடையதல்ல செய்கைகளை நாம் சொல்லக்கேளென்று—(எ-று) (௩௬)

அவனுடையவடிவெல்லாநம்பக்கலன்பென்று.....*
மவனுடையவறிவெல்லாநமையறியுமறிவென்று .....*
மவனுடையசெயலெல்லாநமகினியவாமென்று.....*
மவனுடையநிலையிவ்வாறறிநீயென்றருள்செய்தார் .....*

(இதன்பொருள்)

நீவேடனுகநினைந்த அவனுடைய உருவமெல்லாம் நம்மிடத்தில்பொருந்தியிருக்கும் அன்பின்வடிவேயென்றும், அவனுடையஐம்புல அறிவுகளும் நம்மை அறிகிறதற்கு உண்டான அறிவேயென்றும், சாஸ்திரஷிரோதமாயிருந்தாலும் அவன்செயல்கள்நமகினியனவாயிருக்கின்றனவென்றும், அவனுடையஸ்திதியானது - இத்தன்மையாயிருக்கின்றது, அதைநீயறிந்துகொள்வென்று கட்டளையிட்டார்.—(எ-று) (௧௫௭)

பொருப்பினில்வந்தவன்செய்யும் பூசனைக்குமுன்பென்மே *
லரும்புறுமென்மலர்முன்னையவைநீக்குமாதரவால்.. .....*
பிருப்புறுமன்பெனும்வெள்ளக்கால்பெருகிற்றெனவீழ்ந்த *
செருப்படியவ்விளம்பருவச்சேயடியிற்சிறட்புடைத்தால் ..*

(இதன்பொருள்)

மலையிலேறிவந்து அவன்நமக்குப் பூசைசெய்வதற்கு முன்னாக எமதுமுடியில்சாத்தப்பட்டுள்ள அரும்பினதுநிறைவு பெற்று அன்றுமலர்ந்த உள்ளுல்முன்சாத்தப்பட்ட புஷ்பங்களைநீக்கித்தான்கொண்டுவந்தமலரைசாத்தரிக்கவேண்டுமென்கிற ஆசையினாலே விருப்பத்தைக்கொடுக்காநின்ற அன்பாகியசமுத்திரத்தினதுகாலானதுபெருகினதுபோன்று எமதுமுடியில்பட்ட அவனதுசெருப்பினையுடையகாலானதுமிக்க இளம்பருவத்தையுடையகுழந்தையினதுகால்படுவதைப்பார்க்கிலுமிகவுமானந்தமாயிருகின்றது - எ-று இளம்பருவச்சேய்-என்பதற்கு-எப்போதும் இளமைத்தன்மை நீங்காதசுப்பிரமணியரென்று பொருள்கூறி அவர்காலின்பரிசத்தைப் பார்கலிலும் இனியதாயிருக்கின்றதென்பது ஒருபட்சம். (௧௫௮)

உருகியவன்பொழிவின்றிறைந்தவவனுருவெல்லாம் .. ..*
பெருகியகொள்கலமுகந்தாற்பிறக்கியினிதொழுகுதலா ....*
பொருகுவினைவன்செவியுமிழுமுயர்கண்கைமுகந்தீர்த்தப்.. ..*
பொருபுனலினைக்கவர்தன்வாயுமிழும்புனல்புனிதம் ..*

(இதன்பொருள்.)

ஒருக்கத்தன்னுடைதவாகிய அன்பானது குறைவின்றி நிறைந்த அவனது தேகமாகிய பாத்திரத்தின் முகத்தில் வாயால் சுமக்காக உமிழப்பட்ட தீரானது பிரகாசித்து ஒழுகுகின்றபடியால் அது சன்னுவென்னுமொருமுனிவன் தனது காதினால் வெளியில் வரச் செய்த உயர்ந்த கங்கை முதலாகிய தீர்த்தங்களின் அலைகளால மோதுகின்ற நீரைப்பார்க்கிலும் நமக்குட்பரிசுத்தமுள்ளதாயிருக்கின்றது — எ-று. கீரதன் - பரமசிவனை நோக்கித் தவஞ்செய்து கங்கையை அவர் சடையில் நின்றும் பெற்றுக்கொண்டுவரும்போது கங்கை செல்லுமார்க்கத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த சன்னுவென்பவர் அத்தவத்திற்கு ஒரு இடையூறுண்டாகுமெனக்கருதிக் கங்கையைப் பானஞ்செய்து விட்டப்கீரதன் தன்பின்னே கங்கைவாராததைக்கண்டுரிஷியால் இப்படிநேரிட்டதென்றறிந்து அவரை நோக்கித் தவஞ்செய்தாலுக அப்போது சன்னுமுனி அவனுக்கிரங்கிக் கங்கையைக் காதின்வழியாகப் பூமியில்விட்டார்-ஆதலால் ஒருமுனிவன் செவியுமிழுமுயர்கங்கையென்றார். (௧௫)

இம்மலைவந்தெனையடைந்தகானவன்றனியல்பாலே .....*
மெய்மலருமன்புமேல்விரிந்தனபோல்விழுதலாற் ..... *
செம்மலர்மேலயனொடுமான்முதற்றேவர்வந்துபுனை... *
யெம்மலருமவன்றலையாலிடுமலர்போலெனக்கொள்வாம்...*

(இதன்பொருள்.)

இந்தமலையில் ஏறிவந்து எம்மையடைந்த அந்தவேடனானவன் உண்மையான பத்தியோடு இயற்கையாக அவன் இடுகின்ற புஷ்பங்களும் அன்பானது மேலேவிரிந்திருப்பதுபோல்விழுகின்ற படியால் சிவந்ததாமரைப்பூவில் வாசஞ்செய்கின்ற பிரமாவோடு விஷ்ணுமுதலாகிய தேவர்களும் வந்து அர்ச்சிக்கின்றஎப்படிப்பட்ட புஷ்பங்களும் அவன் தலையில் வைத்துக்கொண்டுவந்து இடுகின்றபுஷ்பங்களுக்குச் சமானமாக இருக்காதனவாம்—(எ-று) எம்மலருமென்பது எக்காலத்தும்வாடாமல் ஒருதன்மைத்தாய்த் தேன்பொழிந்து நறுமணர்வீசும் கற்பகமலர்முதலானவற்றைச் சொல்லியபடியாம். உறுதியானஅன்பின்றி அர்ச்சிக்கப்படும்அம்மலர்கள் இவ்வுலகத்திலுள்ளனவாய்க்காட்டில்வாசனையின்றிவாடிப்போகும்புஷ்பங்களாயினும் இவன் உண்மையானஅன்போடு தரித்தவால் இவைகளுக்கு ஒவ்வாமற்போயின. (௧௬)

வெய்யகன்றபதங்கொள்ளவெந்தனைதோவெனுமன்பால் .. *
தையுமனத்தினிமையினினையமிகவெண்ணிடலாற் .. .. *
செய்யுமறைவேள்வியோர்மூன்புதருத்திருத்தவியி .. .. .. *
வெய்யும்வரிச்சிலையவன்றனிட்டஆணைக்கினிய .. .. *

(இதன்பொருள்.)

வெப்பமாகியநெருப்பில் காய்ச்சி-பதமாகவெந்திருக்கின்ற தாரு அதைப் பரீட்சிக்கவேண்டுமென்னும் அன்பினாலேஉருக்கமுள்ளமனதோடு தையும்படிமெல்கிதபடியாக் வேதவிதிப் படியாகஞ்செய்கின்றபெரியவர்கள்கொடுக்கின்றதல்ல அவிர்ப்பாகமாகியஊனைப்பார்க்கிலும்மயிகின்றநீண்டசிலையுடையஇவ்வேடனானவன் படைத்தகாணிசம்மமக் கினியனவாயிருக்கின்றன.—(எ-று) (ஈஎஉ)

மன்பெருமாமறைமொழிகள்மாமுனிவர்மகிழ்ந்துரைக்கு .. *
மின்பமொழித்தோத்திரங்கண்மந்திரங்களியாவையினு .. .. *
மூன்றிருந்துமற்றவன்றன்முகமலர்வகைதெகிழ்ந்த .. .. *
வன்பினினைந்தெனையல்லாலறிவுறுமொழிநல்ல .. .. *

(இதன்பொருள்)

பெருமைபொருந்தி நிலைபெற்றதெய்விகமுள்ள வேதவாக்கியங்களும் தவத்திற்சிறந்தமுனிவர்கள் ஆன்றதத் தோடுசொல்கின்ற ஸ்தோத்திரரூபமாகிய அன்புள்ளமொழிகளும் இவைகளன்றி மந்திரங்களா யிருக்கின்றனவும் ஆகிய இவ்வெல்லாவற்றினும்,முன்பாகஇருந்துக்கொண்டுஅந்தவேடன்முகமலர்ச்சியையடைந்து-மனதுஉருக-அன்பாகநினைந்துவேறொருவனாயும்புகழாமல்தம்மைக்குறித்துப்புகழுஞ்சொற்களே இனியனவாம்.—(எ-று) வேதமுதலானவைகள் பலதேவரையும் ஒவ்வோரிடத்தில் அவர்களைச்சிறப்பிக்கும்பொருட்டுப் புகழ்தலாலும்பரமசிவனை மாத்திரம்புகழும்இவ்வார்த்தைகள் அவைகளுக்குச்சிறந்தனவாயின. (ஈஎஉ)

உனக்கவன்றன்செயல்காட்டநாளைநீயொளித்திருந்தா .. .. *
வெனக்கவன்றன்பரிவிருக்கும்பரிசெல்லாங்காண்கின்றாய் .. .. *
மனக்கவலையொழிகென்றுமறைமுனிவர்க்கருள்செய்து .. *
புனற்சடைமத்திருமுடியாரொழுந்தருளிப்போயினார் .. .. .. *

(இதன்பொருள்.)

உனக்கு அப்படிப்பட்ட அடியவனது செய்கையை நாம்காண்பிக்கிறதற்கு நாளை நீ இவ்விடத்தில்தானே யொளித்துக்கொண்டிருந்தால் நமதுவிஷயத்தில் அவன்செய்யும் அடிமைத்திறத்தின் தன்மையெல்லாம்பார்த்துக்கொள்வாய் ஆதலால் அவ்வேடன்செய்தது இழிவென்றுதோன்றியதனால் உண்டானமனோதுக்கத்தை யொழித்துவிடென்று பெருமைபொருந்தியசிவகோசரியார்க்கு அருள்செய்து கங்கையைத்தரித்தசடையையுடைய முடியாராகிய பரமசிவனெழுந்தருளினார். (எ-று)

கனவுநிலை நீங்கியபின் விழித்துணர்ந்துகங்குலிடைப் . . . . . *
புனைதவத்துமாமுனிவர் புலர்வளவுங்கண்டுயிலார் . . . . . *
மனமுறுமற்புதமாசிவரும்பயமுமுடனுகித் . . . . . *
துனைபரவித்தனித்தேர் மேற்றோன்றுவான்கதிர்தோன்ற . . *

(இதன்பொருள்.)

தவமேதமக்கு ஆபரணமாகவுடைய சிவகோசரியார் நடுராத்திரிப்பொழுதில் சொப்பனத்தினதுநிலை ஒழிந்தபின்பு விழித்துச் சுவாமி யருள்செய்ததை உணர்ந்துகொண்டுவிடியுமளவும் நித்திரைசெய்யாதவராய்த் தம்முடையமனதில் ஒருமிகுந்த ஆச்சரியமும் பயமும் உடனேஉண்டாகி யிருக்க விரைவாகச்செல்லுகின்ற குதிரைகள்பூட்டிய ஒப்பற்றதேர்மேல் தோன்றுகின்ற சூரியனதுஉதயமானது தோன்ற.—(எ-று) (௩௬௪)

முன்னைநாள் போலவந்துதிருமுகலிப்புனன்மூழ்கிப். . . . . *
பன்முறையுந்தம்பிரானருள்செய்தபடிநினைந்து . . . . . *
மன்னுதிருக்காளத்திமலையேறிமுன்புபோற் . . . . . *
பிஞ்ஞகனைப்பூசித்துப்பின்பாகவொளித்திருந்தார் . . . . . *

(இதன்பொருள்.)

முதல்நாள்போல்திருமுகலியாற்றிற்குவந்துஅதனீரில் மூழ்கிப் பரமசிவன் கனவில்வந்து கட்டளையிட்டருளியதன்மையைப்பலதரமும்நினைந்துகொண்டுநிலைபெற்ற திருக்காளஹஸ்திமலையிலேவந்துமுன்புபோல்சுவாமியைப்பூசித்துஅவர்க்குப்பின்புறத்தில்ஒளித்திருந்தார் சிவகோசரியார்.—(எ-று) (பின்பாக ஒளித்திருந்தார்) என்பதனால்சுவாமியின் பின்புறத்திலுள்ளமரங்கல்முதலானவை சார்பாக வொளித்தனனெனப் பொருள்கொள்க. பிஞ்சகன்-எது-பிஞ்ஞகனெனத்திரிந்தது. (௩௬௫)

(வேறு.)

கருமுகிலென்னநின்றகண்படாவில்லியார்தாம் . . . . . *
வருமுறையாறுநாளில்வருமிரவொழிந்தகாலை . . . . . *
யருமறைமுனிவனார்வந்தணைவதன்முன்புபோகித் . . . . . *
தருமுறைமுன்புபோலத்தனிப்பெருவேட்டையாடி . . . . *

(இதன்பொருள்)

கருமையாகியமேகம்போன்று உற்றங்கர்மல் சுவாமியைக்காத்துக்கொண்டுநிற்கின்ற திண்ணர் கிரமமாய்வருகின்ற ஆறும்நாளில் ஐந்தாநாள் இராத்திரிப்பொழுது விடிந்தபோதே அரிய வேதங்களைக்கற்றறிந்த சிவகோசரியார் பூசைசெய்ய வருகிறதற்குமுன்னே முன்நிகழும்போலும் வழக்கம்போலக்காட்டிற்குப்போய் ஒப்பற்றவேட்டையாடி.—(எ-று) (௧௬௬)

மாறிலானமுதுநூல்லமஞ்சனப்புனலுஞ்சென்னி . . . . . *
யேறுநாண்மலரும்வெவ்வேறியல்பினிலமைத்துக்கொண்டு *
தேறுவார்க்கமுதமானசெல்வனார்திருக்காளத்தி . . . . . *
யாறுசேர்சடையார்தம்மையணுகவந்தணையாநின்றார் . . . . *

(இதன்பொருள்.)

குற்றமற்றமாமிசமாகிய திருவமுதும் தெளிவாகிய திருமஞ்சனநீரும் திருமுடியில்சாத்துகிறதற்கு அப்பொழுது மலர்ந்த பூவும் வேறுவேறான தன்மையோடு அமைத்துத்தன்மை உண்மைக்கடவுளென்று தெளிந்து அன்பு செய்கின்றவர்களுக்கு அமிர்தம்போன்ற அஷ்டசித்தியாகிய பாக்கியத்தை யுடைய திருக்காள ஹஸ்தியில் எழுந்தருளியிருக்கின்ற கங்கையைத்தரித்த சடையினராகிய பரமசிவனை அடையும்படி வந்துகொண்டிருந்தார்.—(எ-று) (௧௬௭)

இத்தனைபொழுதுந்தாழ்த்தேனெனவிரைந்தேகுவார்முன் *
மொய்த்தபல்சகுனமெல்லாமுறைமுறைதீங்குசெய்ய . . . . *
வித்தகுதீயபுட்களீண்டமுன்னுதிர்ங்காட்டு . . . . . *
மத்தனுக்கென்கொல்கெட்டேனடுத்ததென்றசினயும்போதில்

(இதன்பொருள்.)

இவ்வளவுபொழுதும் சுவாமியினிடத்துக்குப்போகாமல்தாழ்த்தேனேயென்று சீக்கிரமாகப்போகின்றகண்ணப்பசுவாமிக்குமுன்னேமுறைமுறையாகத் தீங்கினைக்கொடுக்கும் பலபல

வாகிய சகுனங்களெல்லாம் உண்டாகப்பார்த்து இப்படிப்பட்ட கெடுதியான செய்கையை முன்னேதானே காட்டும்பறவைகள் அனேகம் என்கண்களுக்குமுன்னே தோன்றினபடியால் பரமசிவனுக்குதேகத்தில் உதிரம் உண்டாகுமே நானில்லாத போது என்ன அபாயஞ் சம்பவித்ததோவென்று வரும்போதில்—(எ-று) கண்ணப்பகவாமி சிலபறவைகளின் தீச்சகுனத்தைப்பார்த்தபோது தமக்குஉரியவரா யிருப்போர்களுக்கு உதிரங்கண்டவழக்கத்தால் இத்தகுதியபுட்க ளுந்நிமித்தங்காட்டும் என்றார். (௩௬௮)

அண்ணலார்திருக்காளத்தியடிகளார்முனிவனார்க்குத் .....*
திண்ணனார்பரிவுகாட்டத்திருநயனத்திலொன்று .....*
துண்ணெனவுதிரம்பாயவிருந்தனர்தூரத்தேயவ் .....*
வண்ணவெஞ்சிலையார்கண்டுவல்விரைந்தோடிவந்தார் ....*

(இதன்பொருள்)

திருக்காளஹஸ்தி மலையில் எழுந்தருளியிருக்கின்ற அடியார்களுக்கு அனுக்கிரகஞ்செய்யுஞ்சுவாமி சிவகோசரிமுனிவர்க்குக் கண்ணப்பசுவாமியினுடைய அன்பினைக்காட்டும் பொருட்டுத் தமதுதிருக்கண்களில் ஒருகண்ணிலிருந்து எல்லர்ரும்பயப்படத்தஞ்சொரியக்காணப்பட்டார் அழகியகொடுமையைச்செய்யும் வில்லையுடைய அந்தத்திண்ணர் தூரத்தேகண்டு சீக்கிரமாக ஓடிவந்தார்.—(எ-று) (௩௬௯)

வந்தவர்குருதிகண்டார்மயங்கினார்வாயினன்னீர் .....*
சிந்திடத்கையிலூனுஞ்சிலையுடன்சிதறிவீழக் .....*
கொந்தலர்பள்ளித்தாமங்குஞ்சிநின்றலைந்துசோரப் .....*
பைந்தழையலங்கன்மார்பர்நிலத்திடைப்பதைத்துவீழ்ந்தார்.

(இதன்பொருள்.)

பசுமைபொருந்திய தழையாற்செய்யப்பட்ட மாலையைத்தரித்தமார்பராகிய கண்ணப்பசுவாமிவந்தவுடனே சுவாமிகண்ணிலிருந்து உதிரம்பாய்ந்துகொண்டிருக்கப்பார்த்து இதற்கென்னசெய்வேனென்று மயங்கினார் வாயிற்கொண்டுவந்தநல்ல திருமஞ்சனநீரும் சிந்திப்போகக் கையிலிருக்கின்ற மாமிசமும் வில்லும் உடனேசிதறிவிழவும் கொத்துக்களாய் மலர்ந்திருக்கின்ற அர்ச்சனைமலர்களும் தலைமயிரில்நின்று அலைந்துவிழப்பூமியில்பதைத்துவிழுந்தார்.—(எ-று) (௩௬௰)

விழுந்தவரொழுந்துசென்றுதுடைத்தனர்குருதிவீழ்வ .....*
தொழுந்திடக்காணார்செய்வதறிந்திலாருயிர்த்துமீள .....*

வழிந்துபோய்வீழ்ந்தார்தெரியாமல்செய்தாரொன்று . . . . *
வெழுந்தனர்திசைகளெங்கும்பார்த்தனரெடுத்தார்வில்லும்.*

(இதன்பொருள்.)

மேலேவிழுந்தகண்ணப்பசுவாமி மற்றுபடியுமெழுந்து சுவாமியிடத்திற்குப்போய்க்கண்ணிலிருந்துவிழுகின்ற இரத்தமானது நிற்கும்படி துடைத்தார் அதனால் நில்லாமல் சொரியக்கண்டு அதற்கு மாற்றுகச்செய்வதொன்றையுமறியாதவராய்ப்பெருமூச்சுவிடுப்பின்னுந்தர்முடையபுத்திசிதறிக்கீழேவீழ்ந்தார்சிலதாழிகையின்பின் மூர்ச்சைதெளிந்து யாரிப்படிப்பட்டதுன்பத்தைச்சுவாமிக்குச்செய்தனரொன்று எழுந்திருந்துவில்லையுமெடுத்துக் கொண்டு எட்டுத்திக்கிலும்போய்ப் பார்த்தார். (எ-று) வில்லையெடுத்துகொண்டது சுவாமிக்கு ஊறுசெய்தோரைக்கொல்லுதற்கு. (ரஎக)

வானியுந்தெரிந்துகொண்டிம்மலையிடையெனக்குமாறு . . *
மீளிவெம்மறவர்செய்தாருளர்கொலோவிலங்கின்சாதி. . . . . *
யாளிமுன்னுகியுள்ளவிளைத்தவோவறியேனென்று. . . . . *
நீளிருங்குன்றச்சாரனெடிதிடைநேடிச்சென்றார் . . . . . *

(இதன்பொருள்.)

அம்புகளைத் தெரிந்தெடுத்துகொண்டு இந்தமலையினிடத்தில் எனக்குவிரோதமாஎற்பட்டுச்சுவாமியின்கண்ணிற்கு ஊறு செய்த வன்மைபொருந்தியகொடுஞ்செய்கையையுடையமறவர்கள்இங்கே இருக்கின்றார்களோ சிங்கமுதலான மிருகசாதிகளே இப்படிச்செய்தனவோ அறியேனென்று நீண்டிருக்கும் மலையின்பக்கத்தில் வெகுதூரமட்டும் தேடிப்போனார்.— (எ-று) (ரஎஉ

வேடரைக்காணார் தீயவிலங்குகண்மருங்குமெங்கு . . . . . .
தாடியுங்காணார்மீண்டுநாயனார்தம்பால்வந்து . . . . . .
நீடியசோகத்தோடுநிறைமலர்ப்பாதம்பற்றி . . . . . .
மாடுறக்கட்டிக்கொண்டுகதறினார்கண்ணீர்வாச . . . . . .

(இதன்பொருள்.)

வேடர்களைக்காணாமல் கொடுமைசெய்கின்ற மிருகசாதிகளைப்பக்கத்திலும்மற்றெவ்விடத்திலும்தேடிக்கூடக் காணாதவராய்திரும்பிப்பரமசிவனிடத்திற்குவந்து அதிகமான சோகத்தோடு பிராசம்நிறைந்த புட்பங்களையுடையதிருவடியைப்

டித்துக்கொண்டு சுவாமியினது திருமேனியின் கந்தப்புறமெல்லாம் பொருந்தக்கையினால் கட்டிக்கொண்டு கண்ணீர் சொரிய க்கதறியழுதார். — (எ-று) (௩௭௬)

பாவியேன் கண்டவண்ணம் பரமனார்க்கறுத்ததென்னே . . . . *
வாவியிலினிய வெங்களத்தனார்க்கறுத்ததென்னே . . . . . *
மேவினர்பிரியமாட்டார் விமலனார்க்கறுத்ததென்னே . . . . *
வாவதொன்றறிகிலேனென் செய்கேனென்றுபின்னும் . . *

(இதன் பொருள்.)

பாவியாகிய நான் கண்ட சகுனப்பிரகாரம் பரமனார்க்கு இப்படிப்பட்ட ஆறுதலுமேலுண்டாயிற்று. என்னுயிர்போன்றுள்ளகவாமிக்கு எந்தவகையாவிப்படி சம்பவித்தது. அடைந்தவர்கள் அன்பினால் பிரியாமலிருக்கின்றசுவாமிக்கு எந்தவகையாவிப்பத்தன்மைத் துன்பம்நேரிட்டது. இனித்தீர்ப்பதற்காகியமருந்தொன்றை நானறிந்திலன் ஆதலால் என்னசெய்வேனென்று விசனப்பட்டுப்பின்னும். — (எ-று) நான் இவ்விடத்திலுள்ளமலைகளுக்கு இராசாவாயிருக்கிறபடியால் அம்மலைகளிலிருக்கும் வேடரொருவரும் எனக்குவிரோதமாக இந்தச்செயல்கையைச் செய்யார்கள் இதுமற்றும்யாவரால் உண்டாயிற்று என்கிறசந்தேகத்தைப் (பரமனார்க்கறுத்ததென்னே) என்பதனாற்கொண்டார். அயல்நாட்டிலுள்ள சத்துருவேடர்கள் நம்மைப்பற்றி இப்படிச்சுவாமியின்கண்ணிற் புண்ணுண்டாக்கினார்கள்என- ஒருதுணிவுவந்தது. பலகவராயின் நமது குறிச்சியைப்பிடித்துக் காட்டையும் வசஞ்செய்து கொள்வார்கள். அல்லது நமக்குரிய பொருளைத்திருடுவார்கள் அன்றி, யானிப்போதிருக்கும் இவ்விடத்தில் நானில்லாதவேளையில் வந்துசுவாமிக்கொன்றுஞ் செய்யார்கள் ஆதலால்வேறொருவகையாவிலுநேரிட்டிருக்குமென்று சந்தேகங்கொண்டவர் இரண்டாமுறை, (எங்களுத்தனார்க்கறுத்ததென்னே) என்றார். அதன்பின் தமதுதகப்பனும் மற்றைவேடருங் கூடிக் குடுமித்தேவருக்கு ஓரிடையூறுண்டாக்கினால் அதைப்பார்த்துச் சகித்தங்கிராமல் குறிச்சிக்குவந்து சேருவானென்று இப்படிசெய்திருக்கலாமெனத் துணிந்தார். அங்ஙனமாயின் அவனுக்குச் சுவாமியினிடத்திலுள்ள அன்பின்மிகுதியால் அவர்க்கு ஓர்குறைவந்தால் பார்த்துச்சகிக்காமலிறந்து போவானேயன்றித் திரும்பி வாராதானென்று அவர்கள்குறியால் முன்னேதானே அறிந்தி

ருப்பார்களாதலால்அவர்கள்செய்ததன்றுமத்தையாரோவெ
ன்று ஐயங்கொண்டவர் மூன்றாவது (விமலனார்க்கடுத்ததென்
னோ)என்றார். (௩௭௪)

என்செய்தாற்றீருமோதானெம்பிரான்றிறத்துத்தீங்கு . . . . *
முன்செய்தார்தம்மைக்காணேன்மொய்கழல்வேடனென்று *
மின்செய்வார்பகழிப்புண்கடீர்க்குமெய்மருந்துநாடிப் . . *
பொன்செய்தாழ்வரையிற்கொண்டுவருவனானென்றுபோனார்

(இதன்பொருள்)

என்னசெய்தால் இந்தக்கண்ணில் இருந்துஒழுகுகிறஉதிரம்நிற்
கும்சுவாமியின்விஷயமாகஇந்தத்தீங்கானசெய்கையைச்செய்
தவர்களையும்நான்பார்க்க இல்லை பார்த்தால் நல்லமொழிகளை
வணக்கத்தோடு அவர்களுக்குச் சொல்லியாவது எந்தமருந்தி
னால் இந்தப்புண்தீருமென்று கேட்டுக்கொள்ளலாம் *ஆதலா
ல்தெருங்கிக்கோக்கப்பட்டிருக்கும் வீரமணிகளையுடையவே
டர்கள் எப்போதும் காந்தியையுடைத்தாய் நீண்டஅம்பினால்
உண்டான புண்களைத் தீர்க்கத்தக்க மெய்ம்மையான மருந்
தைத்தேடிப் பொற்பொடிகளைக்காட்டுகின்ற தாழ்வரையிற்
போய்க் கொண்டுவருவேனென்று போனார்.(எ-று) சுவாமிக்
குக் கண்ணிற் புண்ணுண்டாயிற்றே என்கிற துக்கத்தால்
ஊணைத்துக்குக்ஷணம் கண்ணப்பசுவாமிக்குமனம் வேறுபடுகி
ன்ற தென்பதுதெரிவித்தற்கு முன்பாட்டின்கருத்தால் பகை
வேடர்செய்யவில்லையெனத் துணிவுகொண்டானென்றாலும் இ
ப்பாட்டில் தீங்குமுன்செய்தார் தம்மைக்காணேனென்றார்.

நினைத்தனர்வேறுவேறுநெருங்கியவனங்களெங்கு . . . . *[ப்
பினத்திடைப்பிரிந்தசெங்கணேறெனவெருக்கொண்டெய்தி
புனத்திடைப்பதித்துக்கொண்டுபூதநாயகன்பால்வைத்த . . *
மனத்தினுங்கடிதுவந்துமருந்துகள்பிழிந்துவார்த்தார் . . . . *

(இதன்பொருள்)

தனது இனத்தைப்பிரிந்துவந்த சிவந்தகண்ணையுடைய ரிஷிப
ம்போல் சுவாமியை விட்டுவந்ததனால் வெருட்கொண்டவரா
ய் மரம்நெருங்கியிருக்கும் எல்லாவனங்களிலுஞ்சென்று புன
ங்களிலுள்ளவேறுவேறானபச்சிலைகளைத்தம்முடையமனதின்ட
டிநினைத்துப் பதித்துக்கொண்டு பூதகணங்களுக்குத்தலைவரா
யிருக்கின்றசுவாமியினிடத்தில் வைத்த மனைதைப்பார்க்கிலும்
அதிகவேகத்தோடுவந்து மருந்துகளைப்பிழிந்து கண்ணில்வா
ர்த்தார்.—(எ-று) (௩௭௫)

மற்றவர்பிழிந்துவார்த்தமருந்தினுந்திருக்காளத்திக் .....*
கொற்றவர்கண்ணிற்புண்ணீர்குறைபடாதொழுகக்கண்டு ..*
மிற்றையினிலைமைக்கென்னேவினிச்செயலென்றுபார்ப்பா.*
ருற்றநோய்தீர்ப்பதுனக்கூனெனுமுனாமுன்கண்டார். .. *

(இதன்பொருள்)

இவ்வகையாகக் கண்ணப்பசுவாமி பிழிந்துவார்த்த ஓர்மருந்தினாலேயும்திருக்காளஹஸ்திமலையில்எழுந்தருளியிருக்கும்பரமசிவனுடைய கண்ணில்நின்றும்இரத்தமானதுநில்லாமல் ஒழுகப்பார்த்து இப்படிச்சொரியுந்தன்மைக்கு இனிச்செய்யவேண்டியசெயல் யாதென்று ஆலோசித்துப்பார்த்தார் ஊனுக்கு உண்டான நோயைத்தீர்ப்பது ஊனேயென்று வழங்கும் பழமொழியைநினைத்துக்கொண்டார்.—(எ-று) (௱௭௭)

இதற்கினியென்கணம்பாலிடந்தப்பினென்றையார்க.. ... *
னைதற்கிதுமருந்தாய்ப்புண்ணீர்நிற்கவுமடுக்குமென்று .... *
மதர்த்தெழுமுள்ளத்தோடுமகிழ்ந்துமுன்னிருந்துதங்கண் .*
முதற்சரமெடுத்துவாங்கிமுதல்வர்தங்கணணிலப்ப... .... *

(இதன்பொருள்.)

இதற்காக இனிஎன்னுடையகண்ணை அம்பினால் பேர்த்துப்பதித்தால் எனதுசுவாமியின் கண்ணிற்குத்தகுந்தமருந்தாய்ஒழுகுகிறஇரத்தமும் நின்றுவிடுமென்று களிப்புக் கொண்டமனதோடுஉவிரும்பிச்சன்னிதியின்முன்னுக இருந்துகொண்டுதம்மிடத்திலுள்ள ஒப்பற்ற அம்பினையெடுத்துக் கண்ணைத்தோண்டிப் பரமசிவனதுகண்ணில் அப்பினை அளவில்.—(எ-று)

நின்றசெங்குருதிகண்டார்நிலத்தினின்றேறப்பாய்ந்தார் ..*
குன்றெனவளர்ந்ததோள்கள்கொட்டினார்கூத்துமாடி... ..*
நன்றுநான்செய்தவித்தமதியெனநகையுற்றோன்ற .... *
வொன்றியகளிப்பினாலேயுன்மத்தர்போலமிக்கார் .. ....*

(இதன்பொருள்.)

இதற்குமுன்ஒழுகிக் கொண்டிருந்தரத்தம் நின்றுவிடக்கண்டார் சந்தோஷித்தால் பூமியில்நின்றும் ஆகாயத்தில்எழும்பிக் குதித்தார்சுவாமியின்கண்ணுக்குத் துன்பம்நேரிட்டது என்று விசனத்தால்வாடிப் போனதோள்கள் மலைபோல் பருத்துவளர அவைகளைக்கொட்டிக்கொண்டு ஆனந்தக்கூத்தாடினார்தானிப்போது செய்தமதிக்கத்தக்க யுத்தியானதுநன்றாயிருக்கிற

துன்றுசிரிப்பும் உண்டாக அதிகமானசந்தோஷித்தால்பயித்
தியங்கொண்டவர்போல் ஒன்றுந்தோன்றாதவரானார்.-(எ-று)

வலத்திருகண்ணிற்றங்கணப்பியவள்ளலார்த .... *
நலத்தினைப்பின்னுங்காட்டநாயனார்மற்றைக்கண்ணி .. ...*
லுலப்பில்செங்குருதிபாயக்கண்டனருலகில்வேடர் .. ..*
குலப்பெருந்தவத்தால்வந்தகொள்கையினும்பர்மேலார் .. *

(இதன்பொருள்)

வலக்கண்ணில் தம்முடையகண்ணைப்பேர்த்து அப்பியகண்ணை
ப்பசுவாமியினது அன்பின்மிகுதியைமறுபடியும் சிவகோசரி
யார்க்குக்காட்டும்பொருட்டுப் பரமசிவனது மற்றைஇடக்கண்
ணிலும் அவர்திருவுள்ளத்தால் வற்றாதசிவந்தகுருதிசொரிந்து
கொண்டிருக்கப்பார்த்தார் இவ்வுலகத்தில்வேடரதுகுலத்தின
துபெருமைபொருந்திய தபோபலத்தால்அவதரித்து அன்பு
முதலியவைகளில் தேவர்களுக்குமேலாயிருக்கின்றகண்ணப்ப
சுவாமி.—(எ-று) (௩அ௬)

கண்டபின்கெட்டேனெங்கள்காளத்தியார்கண்ணொன்று .. *
புண்டருகுருதிநிற்கமற்றைக்கண்குருதிபொங்கி .. ..*
மண்டுமேற்றிதனுக்கஞ்சேன்மருந்துகைகண்டேனின்னு .*[று
முண்டொருகண்ணக்கண்ணை யிடந்தப்பி யொழிப்பேனென்

(இதன்பொருள்.)

பார்த்தபின்பு கெட்டேன் எங்கள்சுவாமியின் கண்களில் ஒரு
கண்ணில் புண்பட்டுவருகின்ற இரத்தமானது நின்றஅளவில்
மற்றோர்கண்ணிலிருந்து குருதிபொங்கி ஓடிவருகின்றது ஆ
னால் இதற்குப்பயப்படேன் தீர்க்குமருந்துகை கண்டிருக்கின்
றேன் எனக்குஇன்னுமொரு கண்ணிருக்கிறது அதையும்பேர்
த்து அப்பி ஆண்டவரதுகண்ணின் புண்ணைத்தீர்ப்பேனென்று
(எ-று) கைகாணல் அனுபவப்பட்டிருத்தல். (௩அ௭)

கண்ணுதல்கண்ணிற்றங்கணிடந்தப்பிற்காணுநேர்பா .. ...*
டெண்ணுவார்தம்பிரான்றன்றிருக்கண்ணிலிடக்காணுன்றி .. *
புண்ணிறைவிருப்பினோடுமொருதனிப்பகழிகொண்டு .... *
திண்ணனார்கண்ணி னூன்றத்தரித்திலர்தேவர்தேவர் .. .... *

(இதன்பொருள்.)

பரமசிவனாரதுகண்ணில் தம்முடையகண்ணைப்பெயர்த்து அப்
பும்போது தமக்கு இனி இரண்டு கண்ணும் இல்லாமற்போ

கிறபடியால் சுவாமியின்கண் இவ்விடத்தில் இருக்கிறதென்ப தறிகிறதற்காக எண்ணங்கொண்டு ஆண்டவரது குருதியொழுகிற கண்ணினருகில் இடக்காலை யூன்றிக்கொண்டு உள்ளநிறைந்த விருப்பத்தோடு ஒப்பற்ற அம்பினையெடுத்துக் கண்ணப்பசுவாமி தமதுகண்ணைத் தோண்டும்படி ஊன்றும்போது தேவர்களுக்கெல்லாந் தேவராகிய கயிலாசபதி தரியாதவராஞர்.—(எ-று) (௩அஉ)

செங்கண்வெள் விடையின்பாகன் றிண்ணனார்த் மெய்யாண்ட *
வங்கண்ன் திருக்காளத்தியம்புதன் றிருக்கையம்பாற் .. .. *
றங்கண்முன்னிடக்குங்கையத்தடுக்கமுன்றடுக்குநாக .. *
கங்கணனமுதவாக்குகண்ணப்பாநிற்கவென்ற .. .. *

(இதன்பொருள்.)

சிவந்தகண்களையுடைய வெள்ளியரிஷபவாகனத்தி லெழுந்தருளுகின்றசுவாமி-திண்ணனாரை ஆட்கொண்டஅழகியகிருபைக்கண்ணையுடையவர் திருக்காளஹஸ்தியில்வீற்றிருக்கின்றஅற்புதர்-தமது அடியவர்பிரதியக்ஷத்தில் அம்பினால்கண்ணைப்பெயர்க்கும் அழகியகையைத்தடுக்கும்பொருட்டு முன்கையில்தரிக்கப்பட்ட நாககங்கணத்தையுடையபரமருடையஅமிர்தவாக்கானது கண்ணப்பாநிற்கவென்றுபிறந்தது —(எ-று) மூன்றடுக்கு என்பது மூன்றுதரமென்பாருமுளர். (௩அரு)

கானவர்பெருமானார்தங்கண்ணிடந்தப்பும்போது .... *
மூனமுனிகற்றவையருற்றுமுன்பிடித்தபோதும்.. ..... *
ஞானமாமுனிவர்கண்டார்தான்முகன்முதலாயுள்ள.. .. .. *
வானவர்வளர்பூமாரிபொழிந்தனர்மறைகளார்ப்ப .... .. *

(இதன்பொருள்.)

வேடர்களுக்குத்தலைவராகிய கண்ணப்பசுவாமி தமதுகண்ணைத்தோண்டி சுவாமிகண்ணிற் பதிக்கும்போதும் ஊனுகியதிருவமுதை அடியவர்க்காக உண்ணவிரும்பின ஆண்டவர் பிரசன்னமாகிக்கையைப்பிடித்தபோதும் சிவஞானம்பொருந்தியசிவகோசரியார் பார்த்துக்கொண்டிருந்தார்-பிரமன் முதலாகியதேவர்கள் வேதங்கள்முழங்க விருத்தியாகின்ற புஷ்பமாரியிடைவிடாமற்சொரிந்தார்கள்.—(எ-று) (௩அச)

பேரினியிதன்மேலுண்டோபிரான்றிருக்கண்ணிலவந்த .. *
ஆறுகண்டஞ்சித்தங்கணிடந்தப்பவுதவுங்கையை .... *

யேறுயர்த்தவர்தங்கையாற்பிடித்துக்கொண்டென்வலத்தில் *
மாறிலாய்நிற்கவென்றுமன்னுபேரருள்புரிந்தார் ....*

(இதன்பொருள்)

ஆண்டவருடைய திருக்கண்ணி லுண்டாகிய கெடுதியைப்பார்த்துப்பயப்பட்டுத்தமதுடைய கண்ணைப்பெயர்த்துப் பதிக்க உதவியாயிருந்தகையை ரிஷபக்கொடியைப்பிடித்த பரமசிவன் தமதுகையால் பற்றிக்கொண்டு குற்றமில்லாத கண்ணப்பர் எமதுவலப்புறத்திலிருக்கக் கடவாயென்று நிலைபெற்றகிருபைபுரிந்தருளினார் - இதைப்பார்க்கிலும் அவர் பெறவேண்டிய பேறுயாது.—(எ-று) (௩அ௫)

மங்குல்வாழ்திருக்காளத்திமன்னனார்கண்ணிற்புண்ணீர்... .*
தங்கணால்மாற்றப்பெற்றதலைவர்தாடலைமேற்கொண்டே ..*
கங்கைவாழ்சடையார்வாழுங்கடவூரிற்கலையனாரும்.. .. ..*
பொங்கியபுகழின்மிக்கார்திருத்தொண்டுபுகலுற்றேன். ...*

(இதன்பொருள்.)

மேகங்கள்தவழ்கின்ற திருக்காளஹஸ்திமலையில் வீற்றிருக்கின்ற பரமசிவனது கண்ணிலிருந்து வந்தகுருதியைத்தமது கண்ணைப்பெயர்த்துஅப்புதலால் நிற்கும்படிசெய்யப் பேறுபெற்ற கண்ணப்பசுவாமிகளது திருவடிகளைச் சிரசின்மேற்கொண்டு கங்கையுலாவுகின்ற சடையையுடையவர் வாழ்கின்றதிருக்கடவூரில் நிறைந்தகீர்த்தியால்பெருமைபெற்ற குங்கிலியக்கலையனாரதுதிருப்பணிகளைச் சொல்லத்தொடங்கினேன்.—(எ-று)

கண்ணப்பநாயனார்புராண-முற்றிற்று

ஆ-திருவிருத்தம்-அ௩௫.

குங்கிலியக்கலையநாய்னார்புராணம்.

வாய்ந்தநீர்வளத்தாலோங்கிமன்னியபொன்னிநாட்டு ....*
சேய்ந்தசீர்மறையோர்வாழுமெயிற்பதியெயிறீர்க்கங்கை..*
தோய்ந்தநீள்சடையார்பண்டுதொண்டர்மேல்வந்தகூற்றைக்
காய்ந்தசேவடியார்நீடியிருப்பதுகடவூராகும் .....*

(இதன்பொருள்.)

நீர்வளம்பொருந்தி யிருப்பதனாலுயர்வுபெற்று நிலையாயிருக்கின்றசோளதேசத்தில் மேம்பாடாகிய சிறப்பினையுடைய பிராமணர்கள்வாழு மதில்சூழ்ந்த நகரமானது யாதெனின் அலைவீசுகின்றநீரினையுடையகங்கையை உலாவுகின்றநீண்டசடையையுடைய பரமசிவன்முற்காலத்தில் அடியாராகியமார்க்கண்டேயனைப் பிடித்தகூற்றுவனை உதைத்தசெவ்விய பாதத்தையுடைய சுவாமியெனுநாளாக வீற்றிருப்பது கடவூரென்றுசொல்லப்படும்.—(எ-று) (க)

வயலெலாம்விளைசெஞ்சாலிவரம்பெலாமலையின்முத்த. ...*
மயலெலாம்வேள்விச்சாலையணையெலாங்கழுநீர்க்கற்றை...*
புயலெலாங்கமுகின்காடப்புறமெலாமதன்சீர்பேர்ற்றல்....*
செயலெலாந்தொழில்களாறேசெழுந்திருக்கடவூரென்றும்.*

(இதன்பொருள்)

செழுமைபொருந்திய திருக்கடவூரில் என்றும் வயல்களிலெல்லாம் விளைந்திருக்கும்சிவந்தநெல்லும். வரம்புகளெல்லாம் அலைகளாலே ஒதுக்கப்பட்ட முத்துக்களும். பக்கங்களிலெல்லாம்யாகசாலைகளும். அணைகளின் அருகெல்லாம் செங்கழுநீர் மலர்க்கூட்டங்களும். கமுகின்காடெல்லாம் மேகக்கூட்டங்களும். அவைகளின் புறமெல்லாம் அவைகளைச்சீர்படுத்துகின்றபிரயத்தினங்களும். அவ்வூரார்செய்கைகளெல்லாம்நன்மார்க்கத்துக்குரிய செயல்களுமாயிருக்கின்றன.—(எ-று) (உ)

குடங்கையினகன்றவுண்கட்கடையெயிர்குழுமியாடு .... . *
மிடம்படைபண்வணதோறுமெழுவனமருதப்பாடல்.. ..*
வடம்புரிமுந்நூன்மார்பின்வைதிகமறையோர்செய்கை....*
சடங்குடையிடங்கடோறுமெழுவனசாமம்பாடல் ....*

(இதன்பொருள்.)

உள்ளங்கையைப்பார்க்கிலும் விசாலமாகிய மையைத்தரித்தகண்களையுடையபள்ளஸ்திரீகள் கூட்டமாகச்சேர்ந்துகுரவைக்கூத்தாடுகின்ற இடங்களில்அவர்களுடைய கூட்டங்களிலெல்லாம் மருதப்பண்ணின்பாடல்உண்டாவன. மூப்புரியாகிய பூணூலை மார்பில்தரித்த வேதசம்பந்தத்தையுடையபிராமணர்கள்உண்மையானசடங்குகளைச்செய்யும் இடங்கள்தோறும் சாமவேதத்தினதுகானம் உண்டாவன —(எ-று) (௩௨)

துங்கநீண்மருப்பின்மேதிபடிந்தபால்சொரிந்தவாவிச் ... *
செங்கயல்பாய்ந்துவாசக்கமலமுந்தீம்பரணுறு . .. . *
மங்குறேய்மாடச்சாலைமருங்கிறையொதுங்குமஞ்சு ..... *
மங்கவைபொழிந்தநீருமாகுதிப்புகையாலுறும் .... *

(இதன்பொருள்)

உயர்ந்தநீண்ட கொம்பினையுடைய எருமைகள் துளைந்து பால்பொழிந்தகுளத்தில் சிவந்தகெண்டைமீன்கள் பாய்ந்து வாசனைபொருந்திய தாமரைமலரும் இத்திப்பாகியபால்வாசனைமணக்கும் ஆகாயம்வரைக்கும் அளவுகின்ற பந்தியாயிருக்கின்றமேல்வீடுகளின் பக்கத்தில் மேகங்கள்ஒதுங்கும் அவைபொழிந்தநீரும் ஆகுதியின்புகையால் நாறும்.—(எ-று) (௩)

மருவியதிருவின்மிக்கவளம்பதியதனில்வாழ்வா ..... *
ருமறைமுந்நூன்மார்பினந்தணர்கலையமொன்பார் .. . ...*
பெருநதியணியும்வேணிப்பிரான்கழல்பேணிநாளு .. ... *
முருகியவன்புகூர்ந்தசிந்தையாரொழுக்கமிக்கார் . .. .. *

(இதன்பொருள்.)

நிலைபெற்ற பாக்கியத்தாற்சிறந்த வளம்பொருந்தியஅந்தணரத்தில் வாழ்கின்றவர் அரிதாகிய வேதசம்பந்தமாகிய பூணூலைத்தரித்த மார்பினையுடைய பிராமணராகிய கலையநாயனாரொன்பவர் பெருமைபொருந்திய கங்கையைத்தரிக்கின்ற சடையையுடைய சுவாமியினது திருவடியைவிரும்பி நாள்தோறும் இளகிய அன்புமிகுந்த மனதையுடையவராய் ஒழுக்கத்திற்சிறந்தவரானார்.—(எ-று) (௩)

பாலதான்மறையோன்போற்றப்பயங்கெடுத்தருளுமாற்றான்
மாலுநான்முகனுங்காணவடிவுகொண்டெதிரேவந்து. .... *

காலனுருயிர்செற்றார்க்குக்கமழ்தருங்கிலியத்தூபஞ். .. *
சாலவேநிறைந்துவிம்மவிடும்பணிதலைநின்றுள்ளார். .... *

(இதன்பொருள்.)

நான்குவேதங்களையுணர்ந்தபாலியவயதினையுடையமார்க்கண்டேயர் வணங்குதலால்பயத்தைநீக்கிக் கிருபைசெய்யும்பொருட்டு விஷ்ணுவும் பிரமனும் காணாத உருவத்தைக்கொண்டு எதிராகவந்தயமனுடைய உயிரைநீக்கினபரமசிவனுக்கு வாசனைபொருந்திய சாம்பிராணித்தூபமானது கோயிலிடமெல்லாம்மிகவும்நிறைந்துஅதிகப்படச்செய்யும்திருப்பணியை முக்கியமாகச்செய்ய ஏற்பட்டுள்ளவர்.—(எ-று) (௩)

கங்கைநீர்கலிக்குஞ்சென்னிக்கண்ணுதலெம்பிரான்குப் .. *
பொங்குகுங்கிலியத்தூபம்பொலிவுறப்போற்றிச்செல்ல .. *
வங்கவாருளினாலேவறுமைவந்தடைந்தபின்னுந் ....*
தங்கணாயனார்க்குத்தாமுன்செய்பணிதவாமையுய்த்தார் .... *

(இதன்பொருள்.)

கங்கையினதுநீர்முழங்குஞ் சிரசினையும் கண்பொருந்தியநெற்றியையும் உடைய எமதுஆண்டவர்க்கு வாசமெழும்புகின்றகுங்கிலியத்தூபத்திருப்பணி குறைவில்லாமல் நடப்பித்துக்கொண்டு போங்காலத்தில் அடியாரதுபெருமையை யாவர்க்கும்தெரிவிக்கும்பொருட்டு அந்தசுவாமி திருவுளங்கொண்டகிருபையால் இவர்க்குத்தரித்திரம் உண்டானபோதும் தமதுநாயகராகிய கபிலாசபதிக்குத்தாமுன்னேசெய்யும் பணிவிடைதவறாமல் நடத்திக்கொண்டிவந்தார் —(எ-று) (எ)

இந்நெறியொழுகுநாளிலிலம்பாடுநீடுசெல்ல ....*
நன்னிலமுற்றும்விற்றுநாடியவடிமைவிற்றும் .... *
பன்னெடுந்தனங்கண்மாளப்பயின்மனைவாழ்க்கைதன்னின். *
மன்னியசுற்றத்தோடுமக்களும்வருந்தினார்கள் ....*

(இதன்பொருள்.)

இந்தப்படி நடக்கும்நாளில் தரித்திரம்அதிகப்பட நல்லவளம்பொருந்திய தமதுநிலமெல்லாம்விற்றும் தேடியடிமையாகக்கொண்ட ஆள்களைவிற்றும் போதாமல்இன்னும் பலவகையானமிகுந்த சொத்துக்களும் செலவாகவிதியோடு நடக்கின்ற இல்வாழ்க்கையில் நிலைபெற்ற உறவினரும் மக்களும் உணவில்லாமல் வருந்தினார்கள்.—(எ-று) (அ)

யாதொன்றுமில்லையாகியிருபகலுணவுமாதிப் .... *
பேதுறுமைந்தரோடும்பெருகுசுற்றத்தைநோக்கிக் .. ...*
காதல்செய்மனைவியார்தங்கணவனார்கலையனார்கைக் .... *
கோதின்மங்கலநூர்ரூலிகொடுத்துநெற்கொள்ளுமென்றார் *

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் இருக்கும்நாளில் ஒருநாள் போசனத்துக்கு வேண்டியவஸ்துக்களை வாங்குவதற்குப்பொன் வெள்ளிமுதலியயாதொன்றுமில்லாமல் இரண்டுநாள்பட்டினியிருந்துவருந்துகின்றபிள்ளைகளோடுதங்களுக்குச்சேவனமில்லாமல்வந்தடைந்திருக்கின்ற திரளாகியசனங்களையுடைய குற்றத்தாரையும் பார்த்துக் குலிகியக்கலையனாராகியதம்கணவர்கையில் அன்புள்ள அவர்மனைவியார் குற்றமற்றமங்களகரமானகயிற்றில்கோத்த தாலியைக் கழற்றிக்கொடுத்து இதற்கு நெல்வாங்கிக்கொண்டுவாருமென்றார்.—(எ-று) (௯)

அப்பொழுததனைக்கொண்டுநெற்கொள்வானவரும்போக..*
வொப்பில்குங்கிலியங்கொண்டோர்வணிகனுமெதிர்வந்துற்றார்
னிப்பொதியென்கொலென்றாருள்ளவாறியம்பக்கேட்டு . . . *
மூப்புரிவெண்ணூன்மார்பர்முகமலர்ந்திதனைச்சொன்னார். *

(இதன்பொருள்.)

பெண்சாதிதாலியைத் தன்கையிற் கொடுத்தபோது அதைவாங்கிக்கொண்டுநெல்லுக்கொள்ளும்படி அந்தக்குங்கிலியக்கலையநாயனார் போய்க்கொண்டிருக்கும்போது ஒப்பில்லாமையால்உயர்வுபெற்றகுங்கிலியப்பொதிகொண்டுஒருவர்த்தகனார் இவர்க்குஎதிராகவந்தான்அடியவர் இந்தப்பொதியென்னவென்றுவர்த்தகனைக்கேட்டு அவன் உள்ளபடிசொல்லக்கேட்டுமூப்புரியாய்வெண்மைபொருந்தியஉபவீதத்தைத் தரித்தமார்பினையுடையவர்முகமலர்ச்சியை அடைந்து இப்படிப்பட்டவார்த்தையைச்சொன்னார்.—(எ-று) (௰)

ஆறுசெஞ்சடைமேல்வைத்தவங்கணர்பூசைக்கேற்ற . . . . . *
தாறுகுங்கிலியமீதேநானின்றுபெற்றேனல்ல . . . . . *
பேறுமற்றிதன்மேலுண்டோபெறுப்பேறுபெற்றுவைத்து[ர்
வேறினிக்கொள்வதென்னென்றுரைத்தெழும்விருப்பினிமிக்கார்

(இதன்பொருள்.)

செவ்வியசடையின்மேல் கங்காநதியைத்தரித்த பரமசிவனது பூசைக்கு ஏற்றதாய் மணக்கின்றகுங்கிலியத்தை இதோ நான்

இன்றைத்தினத்தில் பெற்றுக்கொண்டேன் இதைப்பார்க்கிலு மேலான பேறுண்டோ ஒருவராலும்பெறக்கூடாத பேற்றி னைப் பெற்றுவைத்துக்கொண்டு இனி வேறேகொள்வதென்ன வென்றுசொல்லி யெழுகின்ற களிப்பிற்சிறந்தவரானார். (எ-று)

பொன்றாத்தாருமென்றுபுகன்றீடவணிகன்றானு .... *
மென்றாலிசைந்ததென்னத்தாலியைக்கலையரீந்தார்... ...*
ரன்றவனதனைவாங்கியப்பொதிகொடுப்பக்கொண்டு .. ..*
நின்றிலர்விரைந்துசென்றார்நிறைந்தெழுகளிப்பினோடும்.. ..*

(இதன்பொருள்.)

பொன்னுபரணம் கொடுக்கின்றேன் அதற்குக் குங்கிலியம் கொடுமென்று அடியவர்சொல்ல வர்த்தகனும் என்னபொற்ப ணிகொடுக்க இசைந்தீரென்றுசொல்லக்குங்கிலியககலையநாய னார் தாலியைக்கொடுத்தார் அப்போது அவன் அதைவாங்கி க்கொண்டுஅந்தச்சாம்பிராணிப்பொதியைக்கொடுப்பப்பெற் றுக்கொண்டு விரைகதின்று பொழுதுபோக்காமல் நிறைந்து எழும்பியசந் தோஷத்தோடும் சீகிரமாகப்போனார். (எ-று)

விடையவர்வீரட்டானம்விரைந்துசென்றெய்தியெல்லை .. *
யுடையவரெம்மையாளுமொருவர்கம்பண்டாரத்தி .... *
லடைவுறவொடுக்கியெலலாமார்ந்தெழுமன்புபொங்கிச் .. *
சடையவர்மலர்த்தாள்போற்றியிருந்தனர்தமக்கொப்பில்லார்

(இதன்பொருள்.)

ரிஷபத்தைவாகனமாகவுடைய பரமசிவனது எட்டுவீரட்டா னத்தில் ஒன்றாகியதிருக்கடவூர்க்கு விரைவாகப்போய் அடை ந்துஎன்னை அடிமையாகஉடையவரும் எம்போலியமற்றையா வரையும் ஆட்கொள்பவருமாகிய சுவாமிக்கு நித்தியதைமித்தி யங்களுக்குவேண்டிய பூசாதிரவியமுதலானவைகளை வைத்தி ருக்கும்சாலையில்குங்கிலியமுழுதும் அடங்கும்படிசெய்துதெ ஞ்சகத்தில் நிறைந்தெழுந்த அன்புண்டாகிச்சடையையுடைய சுவாமியினது மலர்போன்ற திருவடிகளை வணங்கித் தமக் கொப்பில்லாதகுங்கிலியக்கலைய நாயனார் அங்கேதானேயிரு ந்தார் - வீரஸ்தானம், வீரட்டானமாயிற்று. (௩௬)

அன்பாங்கிருப்பதம்பரருளினுலளகைவேந்தன் .... *
றன்பெருநிதியந்தூர்த்துத்தாணிமேனெருங்கவெங்கும் .. *
பொன்பயில்ஞவையுதெல்லும்பொருவில்பல்வளனும்பொங்கி
மன்பெருஞ்செல்வமாக்கிலைத்தனன்மனையினிடை .. .. ..*

(இதன்பொருள்)

யமனைமாயுங்படி உதைத்ததிருவடியை யுடையபரமசிவன் த
ரும்புகின்ற அன்புபொருந்தியசிந்தையையுடைய அடியவரா
கியகலையனார் அறிந்துகொள்ளும்படிமிகவும் நீபசித்திருக்கின்
றாய் உனதுவிசாலமாயிருக்கும்வீட்டிற்குப்போய்ப் பாலோ
டுஇனிமையாகிய சோற்றைஉண்டுஇன்பத்தையொழியென்று
சொன்னார்.—(எ-று) (௩௭)

கலையனாரதனைக்கேளாக்கைதொழுதிறைஞ்சிக்கங்கை .... *
யலைபுனற்சென்னியார்தமருண்மறுத்திருகவஞ்சித் .... *
தலைமிசைப்பனிமேற்கொண்டுசங்கரன்கோயினின்று .... *
மலைநிகர்மாடவீதிமருங்குதம்மனையைச்சார்ந்தார் .... ..*

(இதன்பொருள்)

குங்கிலியக்கலையநாயனார் அதைக்கேட்டுக் கைகூப்பிவணங்
கிக்கங்கையினது அலைகின்றநீரினையுடைய திருமுடியாராகிய
சுவாமிகட்டளையிட்டதை மறுத்துவிட்டிருக்கப் பயப்பட்டு
அந்தப்பனியைத்தலைமேற்கொண்டு சுவாமியினதுகோயிலிரு
ந்து மலைகள்போன்றிருக்கின்றமேல்வீதிகளையுடைய வீதியி
ல் தம்முடையமனையை அடைந்தார்.—(எ-று) (௩௮)

இல்லத்திற்சென்றுபுக்காரிருநிதிக்குவைகளார்ந்த .... *
செல்வத்தைக்கண்டுதின்றுதிருமனையாளைநோக்கி .. .. *
வில்லொத்தநுதலாயிந்தவிளைவெலாமென்கொலென்ன .. *
வல்லொத்தகண்டனெம்மானருள்தரவந்ததென்றார் .. .... *

(இதன்பொருள்)

குங்கிலியக்கலையநாயனார் தமதுவீட்டுக்குள்ளேபுகுந்து அங்
கே நிறைந்து இருக்கின்ற பெருமைபொருந்திய பொற்குப்
பையுமுதலாகிய செல்வத்தைப்பார்த்து அழகியபெண்சாதியை
ப்பார்த்து வில்லொத்த நெற்றியையுடைய பெண்ணேயிப்ப
டிப்பட்ட சம்பத்தெல்லாம் எப்படியுண்டாயிற்றென்று கே
ட்க இருள்நிறம்பொருந்தியகழுத்தினையுடைய எமதுசுவாமி
ருபைசெய்ததால் வந்ததென்றுசொன்னார்.—(எ-று) (௩௯)

மின்னிடைமடவார்கூறமிக்கசீர்க்கலையனார்தா .... *
மன்னியபெருஞ்செல்வத்துவளமலிசிறப்பைநோக்கி .... *
யென்னையுமாளுந்தன்மைகெந்தையெம்பெருமானீசன். *
றன்னருளிருந்தவண்ணமென்றுகைதலைமேற்கொண்டார் .. *

(இதன்பொருள்)

மின்னொத்த இடையையுடைய மாதரானவர்சொல்லக் கேட்டு மிகுந்த குங்கிலியக்கலையநாயனார் - தமக்கு உண்டாகிய பெருமைபொருந்திய செல்வத்தினது வளமாகிய சிறப்பைப்பார்த்துப் பத்தியிற்குறைந்த அடியேனையுமாளும்பொருட்டு எம்போலவாருடைய உற்பத்திக்கு மூலமாகியும் தலைவராகியும் மற்றைச் சகலதேவர்க்கும் இறைவராகியுமிருக்கின்ற பரமசிவனது கிருபையிருந்தவண்ணம் இப்படி தான்போலுமென்று கையத்தலைமேல்வைத்துக்கொண்டார்.—(எ-று) (உ௰)

பதுமநற்றிருவின்மிக்கார்பரிகலந்திருத்திகொண்டு .....*
கதுமெனக்கணவனாக்கண்ணுதற்கன்பரோடும் .. .. ..*
விதிமுறைதீபமேந்திமேவுமின்னடிசிலூட்ட ....*
வதுமகர்ந்தின்பமார்ந்தாரருமறைக்கலையனார்தாம்.....*

(இதன்பொருள்)

தாமரைமலரிலிருக்கின்ற லட்சுமியைக்காட்டிலும் அழகில்சிறந்தகுங்கிலியக்கலையநாயனார்மனைவி-உண்ணுகிறதற்காகக் கலத்தைச்சுத்திசெய்து சீக்கிரமாகச்சிவனடியார்களோடு கணவனை விதிப்பிரகாரம் தீபதூபமுதலிய ஆராதனைசெய்து விரும்பத்தக்க இனிமையாகிய சோறு கறிகளையுண்பிக்க அவர்கள் சாப்பட்டு இன்பமடைந்தார்-அரிதாகிய வேதங்களையுணர்ந்த குங்கிலியக்கலையநாயனார்.—(எ-று) (உக)

ஊர்தொறும்பலிகொண்டுய்க்குமொருவனதருளினாலே .. *
பாரினிலார்ந்தசெல்வமுடையராம்பண்பினீடிச்... .... .. *
சீருடையரிசிநல்லசெழுங்கறியிரெய்பாலா .....*
லார்தருகாதல்கூர்வடியவர்க்குதவுநாளில்.. .....*

(இதன்பொருள்)

ஊர்களோறும் பிட்சை கொண்டு அவர்களைப் பிழைக்கச் செய்கின்ற ஒப்பற்ற பரமசிவனது கிருபையால் பூமியில் நிறைந்த செல்வத்தையுடையவராயிருக்கின்ற தன்மையில் நீடித்திருந்து மறுவில்லாத சோறும் நல்லசுவையுள்ள கறிகளும் தயிரும், நெய்யும், பாலும் முதலிய இவைகளால்மிகுந்த அன்புண்டாகச் சிவபக்தர்களுக்குப் போசனஞ் செய்துவிக்குநாளில்.—(எ-று) (உஉ)

செங்கண்வெள்ளேற்றின்பாகன்திருப்பனந்தாளின்மேவு .. *
மங்கணன்செம்மைகண்டுகும்பிடவரசனார்வந் .. .. *
பொங்கித்தன்வேழமெல்லாம்பூட்டவும்நேர்நில்லாமைக் .. *
கங்குலும்பகலுந்தீராக்கவலையுற்றழுங்கிச்செல்ல .... *

(இதன்பொருள்)

சிவந்த கண்களையுடைய வெண்ணிறமாகிய விருஷபவாகனத்தி லெழுந்தருளுகிறவராய்த் திருப்பனந்தாள் என்னும் ஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற சுவாமி - சாய்ந்திருப்பதில் நின்றும் நேராக நிற்கும் தரிசனத்தைப்பெற்று வணங்கச் சோழராஜாவானவர் ஆசைமிகுந்து தன்யானைகளெல்லாவற்றையும் பூட்டியிழுக்கவும் நேராக நிற்காதபடியால் இரவும்பகலும்தீராத துன்பத்தை யடைந்து நைந்து விசனப்பட.—(எ-று) (திருப்பனந்தாளில் சுவாமிசாய்ந்திருந்ததற்குக் காரணம்யாதெனின்) அந்தக்கடவுளுக்குப் பூசைசெய்யுஞ் சைவப்பிராமணர் பலருள் ஒருவரிறக்க அவர்பங்குக்கு உரியநாள்களைத்தாங்கள்கவர்ந்து கொள்ளும்படி அத்தினங்களில்யாவரும் பூசைபண்ணுமல்கட்டுப்பாடுசெய்துகொண்டு இறந்தவர்க்குச்கிறத்தாராய் அயலூர்களில் இருப்பவர்களையும் பூசிப்பதற்கு வரவொட்டாமற்செய்ய அதுகண்டு அப்பங்கிற்குரிய இறந்தவர்மனைவி நான் பெண்ணாயிருந்தாலும் ஆராதிக்கின்றேன் பரமசிவனுக்குத் திருவுள்ளமில்லாவிட்டால் எனக்கோர் இடையூறுண்டாகட்டுமெனச்சன்னிதிக்குப்போய் அபிஷேகஞ்செய்து புஷ்பமாலையை இரண்டுகைகளாலும் எடுத்துச் சுவாமிக்குச் சாத்தப்போகும் போது இடையிலுள்ள ஆடை சற்றுநழுவ அதை இரண்டுமுழங்கைகளாலும் இடுக்கிக்கொண்டாள் அதனால் மாலைசாத்துதற்குக் கைகளெட்டாமற்போயின அதைச்சுவாமி கடைக்கணித்து நமக்காக இந்தப்பெண் வருத்தப்படுகிறாளேயென்று முடியை வணக்கிச்சாய்த்தார் அப்பொழுது அந்த அம்மை மாலையைத் தரித்துப் பூசைசெய்துசென்றாள் என்று சம்பிரதாயமாக ஒரு சரித்திரஞ்சொல்லக்கேட்டிருக்கின்றோம்-அந்தஸ்தலத்தினது புராணத்திலும் இப்படியிருக்கிறதாகக்கேள்வி. (௨௯)

மன்னவன்வருத்தங்கேட்டுமாசறுபுகழின்மிக்க .... *
நன்னெறிக்கலையநார்தாநாதனைநேரேகாணு .... *
மந்நெறிதலைநின்றானென்றரசனைவிரும்பித்தாமு .... .. *
மின்னெறித்தனையவேணிவிகிர்தனைவணங்கவந்தார் .... .. *

(இதன்பொருள்)

இராசன் வருத்தப்படுகிறதைக்கேள்விப்பட்டுக் குற்றமற்றபுகழ்நிறைந்த சன்மார்க்கத்தையுடைய குங்கிலியக்கலையநாயனார் பரமசிவனை நேராக நிற்கப்பார்க்கவேண்டுமென்று அதற்குச் செய்யவேண்டிய முயற்சியில் ஊற்றமாயிருக்கிறாரென்று இராசாவைக்குறித்துச் சந்தோஷப்பட்டுப் பிரகாசிக்கின்றமின்னலுக்கொத்த சடையினையுடைய பரமசிவனை வந்தனஞ்செய்கிறதற்குவந்தார்.—(எ-று) (உச)

மழுவுடைச்செம்பவளகையர்கோயிலின்மருங்குசென்று .... *
தொழுதுபோற்றன்பினோடுந்தொன்மறைவிதிவழாமை .. *
முழுவலகினையும்பேணுமுன்னெறிபுரப்பார்வாழுஞ் ... *
செழுமலர்ச்சோலைசூழ்வித்திருப்பனந்தாளைச்சேர்ந்தார் .. *

(இதன்பொருள்)

மழுவாயுதத்தைத்தரித்த சிவந்தகையினையுடைய சுவாமி வீற்றிருக்குங் கோயிலுக்குச்சென்று தொழுதுவிட்டுவந்து அன்புடனே பழமைபொருந்திய வேதநெறிதவறாமல் உலகமுழுவதையுங் காக்கும்பொருட்டு முவகையாகிய அக்கினியை வளர்க்கின்றபிராமணர்கள்வாழ்கின்ற செழுமைபொருந்திய புஷ்பச் சோலைசூழ்ந்த திருப்பனந்தாளென்னும் ஸ்தலத்தைச்சேர்ந்தார்.—(எ-று) (உரு)

காதலாலரசனுற்றவருத்தமுங்களிதீர்வேடு .... *
தீதில்வன்சேனைசெய்யுந்திருப்பணிநேர்படாமை ..... *
மேதினிமிசையேயெய்த்துவிழ்ந்திளைப்பதுவுநோக்கி .... *
மாதவக்கலையர்தாமுமனத்தினில்வருத்தமெய்தி .... *

(இதன்பொருள்)

சுவாமி நேராக நிற்கவேண்டுமென்கிற ஆசையால் அரசன் அடைந்த வருத்தமும் யானைகளோடு குற்றமில்லாத வலியசேனைகள் செய்யுந் திருப்பணியானது நேராய்முடியாமல் பூமியின்மேல் வலிகுறைந்து விழுந்து இளைப்பதையும்பார்த்துமகத்துமிய தவத்தையுடைய கலையநாயனார் - தம்முடையமனதில் துன்பத்தை அடைந்து.—(எ-று) (உசு)

சேனையுமானைபூண்டதிரளுமெய்த்தெழாமைநோக்கி .... *
யானுமிவ்விளைப்பற்றெய்க்குமிதுபெறவேண்டுமென்று .. *

தேனலர்கொன்றையார்தந்திருமேனிபூங்கச்சேய்ந்த .. .. *
மானவன்கயிறுபூண்டுகழுத்தினுல்வருந்தலுறுர் ..... *

(இதன்பொருள்)

யானைக்கூட்டமும் சேனைகளும் இழுக்கவும், எழுந்து நேர்நிலாமல் இருப்பதைப்பார்த்து அடியேனும் இப்படிப்பட்ட இளைப்பை அடைந்து இந்தத்திருப்பணி செய்யப் பெறவேணடுமென்று சேன்மனக்கின்ற கொன்றையாலையத்தரித்த சுவாமியின்திருமேனியில் மிருதுவாகக்கச்சுச்சாத்திய கயிறுகளோடு முடியப்பட்டிருக்கும் வலியகயிற்றைத்தம்முடைய கழுத்தில்கட்டிக்கொண்டு இழுக்கத்தொடங்கினுர். (எ-று) (உஎ)

நண்ணியவொருமையன்பிருருபாசத்தாலே ..... *
திண்ணியதொண்டர்பூட்டியினைத்தபின்றிறம்பிறிந்க ..... *
வொண்ணுமோகலையனுர்தமொருப்பாடுகண்டபோதே .. *
யண்ணலார்தேரோதின்ருரமாரும்விசும்பிலார்த்தார் ..... *

(இதன்பொருள்)

பொருந்திய ஒப்பற்ற அன்பாகிய கயிற்றினுலே பத்தியின்திறமிகுந்த அடியவர் சுவாமிபாற்பூட்டியினைத்தபின்புதவறிநிற்கக் கூடுமோகுங்கிலியக்கலையநாயனுரது ஒப்பில்லாதமுயற்சியைக் கண்டபொழுதே பரமசிவன் தாழ்ந்திராமல் செவ்வையாக எழுந்து நின்ருர்-தேவர்களும் ஆகாயத்தில் கோஷஞ்செய்தார்கள்.—(எ-று) (உஅ)

பார்மிசைநெருங்கவெங்கும்பரப்பினேர்பயில்பூமாரி .. .... *
தேர்மலிதானமன்னன்சேனையுங்களிறுமெல்லாங் .. .. .. *
கார்பெறுகானம்போலக்களித்தனகைகள்கூப்பி .... *
வார்கழல்வேந்தன்றொண்டர்மலரடிதலைமேல்வைத்து .... *

(இதன்பொருள்)

பூமியின் நாற்புறத்திலும் நெருங்கும்படி புஷ்பமாரியைப் பொழிந்தார்கள்-திரளாகிய தேர்களையுடைய வலிபொருந்திய அரசனது சேனைகளும் யானைகளுமாகிய எல்லாம் மழைபொழிதலை அடைந்த காடுபோலக்களிப்பை அடைந்தன-ஒழுங்காகக்கட்டிய வீரமணியைத்தரித்த காலினையுடைய அந்த இராசா அஞ்சலிசெய்து குங்கிலியக்கலையநாயனுரது மலர் ஒத்த பாதத்தைத்தலைமேல்வைத்துக்கொண்டு.—(எ-று) (உகூ)

விண்பயில்புரங்கள்வேவவைதிகத்தேரின்மேருத் . . . . . *
திண்சிலைகுனியநின்றார்செந்நிலைகாணச்செய்தீர் . . . . . *
மண்பகுத்தவனுங்காணா மலரடியிரண்டும்யாரே . . . . . *
பண்புடையடியாரல்லாற்பரிந்துநேர்காணவல்லார் . . . . . *

(இதன்பொருள்)

ஆகாயத்தில்சஞ்சரித்த முப்புரங்களும் வேகும்படி வேதசம்பந்தமாகியதேரில் மேருவாகிய வலிமையான வில்லுவளையும்படி நின்றபரமசிவனை நேராகநிற்கச்செய்தீர் பூமியைத்துளைத்துச்சென்ற விஷ்ணுவுங்காணக்கூடாத புஷபம்போன்ற பாதமிரண்டும் நற்குணங்களுடைய அடியவர்களல்லாமல் யாவர் விரைவாக நேரேகாணவல்லவர்கள்.—(எ-று) (௩௫)

என்றுமெய்த்தொண்டர்தம்மையேத்தியங்கெம்பிரானுக் . *
கொன்றியபணிகள்மற்றுமுள்ளன பலவுஞ்செய்து . . . . . *
நின்றவெண்கவிகைமன்னனீங்கவுநிகரிலன்பர் . . . . . *
மன்றிடையாடல்செய்யுமலர்க்கழலவாழ்த்திவைகி . . . . . *

(இதன்பொருள்)

என்றுசொல்லி மெய்மைபொருந்திய தொண்டரைப் புகழ்ந்து அங்கேபரமசிவனுக்குச்செய்யவேண்டியதிருப்பணிகளும் அவைகளன்றி மற்றுஞ்செய்யத்தக்கவைகளுஞ்செய்து நிலைபெற்றவெள்ளைக்குடையையுடைய சோழராஜன் அந்தஸ்தலத்தில் நின்று நீங்கவும்ஒப்பில்லாத அன்பராகிய குங்கிலியக்கலைநாயனார்- பொன்னம்பலத்தில் நர்த்தனம்பண்ணுகின்ற மலர்போன்ற பாதங்களை வணங்கி இருந்து.—(எ-று) (௩௬)

சிலபகல்கழிந்தபின்புதிருச்கடவூரினண்ணி . . . . . *
நிலவுதம்பணியிற்றங்கிநிகழுநாள்நிகரில்காழித் . . . . . *
தலைவராம்பிள்ளையாருந்தாண்டகச்சதுராகு . . . . . *
மலர்புகழரசுங்கூடவங்கெழுந்தருளக்கண்டு . . . . . *

(இதன்பொருள்)

சிலநாள்கள்போயினபின்பு திருக்கடவூருக்குவந்து குறைவின்றிநடக்கின்ற தமதுபணிசெய்தலில் அமர்ந்து வாழுகிறநாளையில் ஒப்பில்லாத சீர்காழியை ஜன்மதேசமாகவுடைய சைவசமயத்தலைவராகிய திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளும் பரவியபுகழினையுடைய அப்பர்சுவாமிகளும் சேர்ந்து அந்தவிடத்திற்கு எழுந்தருளிவரக்கண்டு.—(எ-று) (௩௭)

மாறிலாமகிழ்ச்சிபொங்கவெதிர்கொண்டுமனையிலெய்தி .. *
யிறிலாவன்பின்மிக்கார்க்கின்னமுதொக்குமாற்று ..... *
லாறுநற்சுவைகளோங்கவமைத்தவரருளேயன்றி .... *
நாறுபூங்கொன்றைவேணிநம்பர்தம்மருளும்பெற்றார் .....*

(இதன்பொருள்)

குங்கிலியக்கலையநாயனார்- குறைவில்லாத சந்தோஷமுண்டாகித்திருஞானசம்பந்தசுவாமியையும்அப்பர்சுவாமியையும் எதிர்கொண்டு அழைத்து வீட்டிற்குவந்து கெடாத அன்பிற்சிறந்த அவ்விருவர்க்குர் இனிய அமிர்தம்போல் அறுசுவைக்கறிகளும் அன்னமும் தன்னுக்கச்செய்துபடைத்து அவர்கள்கிருபையைப்பெற்றம்தயன்றி மணக்கின்ற கொன்றைமாலையைத்தரித்த சடையினையுடைய பரமசிவனது கிருபையையும் பெற்றார் —(எ-று) (௩௩)

கருப்புவில்லோனைக்கூற்றைக்காய்ந்தவர்கட ஆர்மன்னி .... *
விருப்புறுமன்புமேன்மேலமிக்கெழுவேட்கைக்கூர .... .. *
வொருப்படுமுள்ளத்தன்மையுண்மையாற்றமக்குநேர்ந்த .. *
திருப்பணிபலவுஞ்செய்துசிவபதநிழலிற்சேர்ந்தார் .. .... *

(இதன்பொருள்)

கருப்புவில்லையுடைய மன்மதனையும் யமனையும் வென்ற பரமசிவன் வீற்றிருக்கின்ற திருக்கட ஆரில்நிலைபெற்று யாவருக்கும் விருப்பத்தை உண்டாக்குகின்ற அன்பானது மேன்மேல் விருத்தியாகி ஆசையுண்டாக உறுதிப்பட்ட உண்மைபொருந்தியமனதோடுதமக்குக்கூடினவரையில்செய்யத்தக்கபலதிருப்பணிகளையுஞ்செய்து சகல ஐசுவரியமுங்கொடுக்கின்ற சிவபதத்தை அடைந்தார்.—(எ-று) (௩௪)

தேனகக்கோதைமாதர்திருநெடுந்தாலிமாறிக் ..... *
கூனற்றண்பிறையினார்க்குக்குங்கிலியங்கொண்டுய்த்த .... *
பான்மைத்திண்கலையனாரைப்பணித்தவரருளினாலே .... . *
மானகஞ்சாறர்மிக்கவண்புகழ்வழுத்தலுற்றேன் .....*

(இதன்பொருள்)

தேன்பொருந்திய உட்புறத்தையுடையமாலையைத்தரித்தகூந்தலுள்ளமனைவியாரது சிறப்புப்பொருந்தியநெடியதாலியை மாறிவளைவாய்க்குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத்தரித்தவரா

மிக்குச்குங்கிலியங்கொண்டு தூபமிட்ட சிவபத்தித் தன்மையினையுடைய வலியகுங்கிலியக்கலையனார் வணங்கி அவர்திருமையிலுள் மானக்கஞ்சாற நாயனாது வளம்பொருந்திய புகழ்ச்சியாகியசரித்திரத்தைச் சொல்லத்தொடங்குகின்றேன்—(எ-று)

குங்கிலியக்கலைய நாயனார்புராண முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-அரளை.

மானக்கஞ்சாற நாயனார்புராணம்.

மேலாறுசெஞ்சடைமேல்வைத்தவர்தாம்விரும்பியது .... *
நூலாறுநன்குணர்வார்தாம்பாடுதோலிமையது.. . .... *
கோலாறுதேன்பொழியக்கொழுங்கனியின்சாறொழுகும் .. *
காலாறுவயற்கரும்பின்காமஞ்சாறூர்கஞ்சாறூர் .... *

(இதன்பொருள்)

மரக்கொம்புகள் தம்மிடத்தில் கட்டப்பட்டிருக்குந் தேனடைகளால் ஆறுபோல்தேனைச்சொரியக்கொழுமைபொருந்திய மாம்பழமுதலான பழங்களின்சாறும் ஒழுகுதலால் ஆறுகி வாயிற்பாய அலைகளில் விளைகின்ற கரும்பினதுசாறு இவ்வாசனையேமணக்கும் ஊராகிய கஞ்சாறூரானது பெருமை பொருந்தியகங்காநதிலயச் சிவந்தசடையில்தரித்தபரமசிவனால் விரும்பப்பட்டிருப்பது நீன்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும்நன்றாக அறிந்தவர்கள் புகழ்ச்சிசெய்கின்றநன்மையையுடையது.—(எ-று) (க)

கண்ணிலக்கடைசியர்கள்கடுங்களையிற்பிழைத்தொதுங்கி ...*
புனனீர்மைப்புணர்ச்சிக்கண்ணுறைத்துமலர்க்கண்சிவக்குந்.
தனனீர்மென்கழுநீர்க்குத்தடஞ்சாலிதலைவணங்கு.....*
மண்ணீர்மைநலஞ்சிறந்தவளவயல்களுளவயல்கள் .... .. *

(இதன்பொருள்)

நீலோற்பலம்போன்ற கண்களையுடைய பள்ளஸ்த்ரீகள் களைகின்ற மிகுந்தகளைகளில் தப்பியொதுங்கி உள்வேதிலவுகின்ற நீர்மைப்புணர்ச்சியினிடத்துப்பிணங்கிப் பூவாகிய கண்கள்சிவ

ப்பையடையும் குளிர்ச்சிபொருந்தியகழுநீர்மலராகிய தாயகி க்கு - வளர்ந்தநெற்பயிராகிய தாயகன் பிணக்குத்தீரும்படி த் தலையாலேவணங்குகின்ற மண்ணினது வளம்பொருந்திய வயல் கள் பக்கங்களிலிருக்கின்றன.—(எ-று) உண்ணீர்மைப்புணர் ச்சிகண் என்பதற்கு வயலிலுள்ள நீரின் சம்பந்தத்தால் என் றும் - உள்ளதினது நெகிழ்கின்ற அன்பு ஒத்த புணர்ச்சி யென்றுஞ் சிலேடைசெய்க. (௨)

புயல்காட்டுங்கூந்தல்சிறுபுறங்காட்டப்புனமயிலி .. .... *
னியலகாட்டியிடையொதுங்கவினங்காட்டுமுழத்தியர்கண் *
முயல்காட்டுமந்தோறருமுகங்காட்டககண்மூரிக் ... .. *
கயல்காட்டுந்தடங்கள்பலகதிர்காட முந்தடம்மணைகள்.. .... *

(இதன்பொருள்)

மேகம்போன்ற கூந்தலானது இடம்போதாத பின்பறத்தில் தாழ்ந்திருக்கட்புனத்திலிருக்கின்ற மயிலினது சாயலைத்தேடித் தாற்காண்பித்து இடைதளர்க்கூட்டமாகவருகின்றபள்ளஸ்திரீக ள் தன்னிடத்தில்மூயலைவகித்துக்கொண்டிருக்கின்றசந்திரன் ஒ ப்புமயில தோற்கிறதற்கேதுவாயிருந்த முகங்களால்கண்க ளைக்காண்பிக்கக்கண்கள்போலவலியகெண்டை மீன்களைக்கா ட்டிக்கொண்டிருக்கிற பலதடாகங்களும் நெற்கதிர்களைக்காட் டிக்கொண்டிருக்கிற விசாலம்பொருந்திய பலவயல்களுமிருக் கின்றன.—(எ-று) (௩)

சேறணிதண்பழனவயற்செழுநெல்லின்கொழுங்கதிர்போய் *
வேறருகுபிடைவேலிப்பைங்கமுகின்பிடறுரிஞ்சி ..... *
மாறெழுதிண்குலைவளைப்பவண்டலைதண்டலையுழவர் .... .. *
தாரரியுநெடுங்கொடுவாளனையவுளதனியிடங்கள் .... *

(இதன்பொருள்)

சேறுபூசப்பெற்ற குளிர்ச்சிபொருந்திய வயலில் விளைந்திருக்கி ன்ற செழுமையற்ற நெற்களின் கொழுமையற்ற கதிர்கள் செ ன்று ஓரத்தில்வேறாக வேலிபோல் நெருங்கிய பசுமைபொ ருந்திய கமுகமரத்தின் கழுத்தில்உராய்ந்துமாறாக எழும்பிய பெருத்தகுலைகளைவளைக்க அவைவண்டுகள்சஞ்சரிக்கின்றசோ லையிலிருக்கும் உழவர்கள்குலைகளை அரிகின்றகொணலாகிய நீ ண்டகொளித்தாக ஒத்தனவாக இருக்கின்றன அநேகஇடங்களில். (எ-று) (௪)

பாங்கின்மணிப்பலவெயிலும்சுலவெயிலுமுளமாட .. .... *
ஞாங்கரணி துகிற்கொடியுநகிற்கொடியுமுளவரங்க .....*
மோங்குநிலைத்தோரணமும்பூரணகும்பமுமுளவாற் .. .. *
பூங்கணைவீதியிலணைவோர்புலமறுகுஞ்சிலமறுகு..... *

(இதன்பொருள்)

மேல்வீடுகளில் குற்றமற்றபல இரத்தினங்களின் பிரகாசமும் கற்றியிருக்கின்ற மதியும் உண்டாயிருக்கின்றன சபைகளில் அழகுபொருந்திய வஸ்திரக்கொடிகளும் ஸ்தனங்களையுடைய மாதராகியகொடிகளும் இருக்கின்றன மன்மதனது நேராகச்செல்கின்ற புஷ்பபாணங்களை யேற்றுக்கொள்ளத்தக்க பருவத்தையுடைய புருஷர்களது புத்திபிரமிக்குஞ்சிலவீதியில் நீண்டமகரதோரணங்களும் பூரணகும்பங்களு முண்டாயிருக்கின்றன.—(எ-று)வீதி-ஒழுங்கு-புலமறுகுஞ்சிலமறுகுஎன்றதனால் உருத்திரகணிகையர் வாழும்வீதியெனப்பொருள்பெற்றும்.

மனைசாலுநிலையறத்தின்வழிவந்துவளம்பெருகும் .....*
வினைசாலுமுழவுதொழின்மிக்கபெருங்குடிதுவன்றிப் .... *
புனைசாயன்மயிலனையார்நடம்புரியப்புகல்முழவங் ... .*
கனைசாறுமிடைவீதிக்கஞ்சாறூர்விளங்கியதால்..... ....*

(இதன்பொருள்)

பெருமைபொருந்திய நிலையையுடைய இல்லறத்தின்மார்க்கத்திற்கு ஒத்துநடந்துவரத்தக்கமுயற்சியுற்ற பயிரிடுந்தொழிலிற்சிறந்த பெரியகுடிகள்நெருங்கி அலங்காரமாகிய சாயலையுடையமயில்போன்றமாதர்கள் ஆட, சொல்லப்பட்ட மத்தளமுதலானவாத்திய முழங்குவதற்கு ஏதுவாகிய திருவிழாக்கள் ஓயாமல் நடக்கின்ற கஞ்சாறூர்விளங்கினது.—(எ-று)சாறு-திருவிழா. (௪)

அப்பதியிற்குலப்பதியாயரசர்சேனாபதியாஞ் .... *
செப்பவருங்குடிவிளங்கத்திருவவதாரஞ்செய்தார் .... [மை
மெய்ப்பொருளை யறிந்துணர்ந்தார் விழுமியவேளாண் குடி
வைப்பனையமேன்மையினார் மானக்கஞ்சாறனார் .... *

(இதன்பொருள்.)

அந்த ஊரில் சிரேஷ்டமாகிய தலைமைபொருந்தி அரசர்களுக்குப் பரம்பரையாகச் சேனாதிபதி உத்தியோகத்தில் அமர்ந்துள்ள சொல்லுதற்கரிய குடியானது விளக்கத்தை அடை

ய அவதாரஞ்செய்தருளினார் மெய்மைபொருந்திய தெய்வ
ர் இன்னதென்று அறிந்தவர் சிறந்தவேளாளராகு மரபினுக்கு
திலகம்போன்றுள்ள மேன்மையை உடையவர் மானக்கஞ்சாற
நாயனார் — எ-று) (எ)

பணிவுடையவடிவுடையார்பணியினெடும்பணிமதியி.... ..*
ணணிவுடையசடைமுடியார்க்காளாகும்பதம்பெற்ற.....*
தணிவில்பெரும்பேறுடையார்தம்பெருமான்கழல்சார்ந்த .*
துணிவுடையதொண்டர்க்கேயேவல்செயுந்தொழில்பூண்டார்
(இதன்பொருள்)

பெரியவர்களுக்கு வணங்குதலைச்செய்கின்ற தேகத்தை யுடை
யவர்-பாம்போடுகுளிர்ச்சிபொருந்திய சந்திரனையுந் தரிக்கின்
ற சடைமுடியையுடைய பரமசிவனுக்கு அடிமையாகிய யோ
க்கியதையைப்பெற்றுத்தாழ்வில்லாத ஒப்பற்றமோக்ஷத்தையு
ம் பெற்றுத்தருகிறவர்தமது ஆண்டவராகியசுவாமியின் பாதமே
கதியென்று அடையத்துணிவுள்ள தொண்டர்களுக்கே பணிவி
டைசெய்தல் நற்செய்கையாகவெண்ணி ஏற்றுக்கொண்டவர்.
(எ-று) (அ)

மாறில்பெருஞ்செல்வத்தின்வளம்பெருகமற்றதெலா.....*
மாறுலவுஞ்சடைக்கற்றையத்தணர்தம்மடியாரா.....*
மீறில்பெருந்திருவுடையாருடையாரொன்றியாவையுநேர் ..*
கூறுவதன்முன்னவர்தங்குறிப்பறிந்துகொடுத்துள்ளார்.. ..*
(இதன்பொருள்)

கெடுதலில்லாத பெரியசெல்வமானது நாளுக்குநாள் விருத்தி
யையடைய அந்தச்செல்வமுழுதிற்கும் - கங்கையுலாவுகின்ற
கற்றையாகிய சடையையுடையசுவாமிக்கு அடியவராகுதலே
ஒன்றுதபெரியசெல்வமாக நினைத்திருக்கும் பெரியவர்களே
உரியவர்களென்றுஎல்லாப்பொருளையும் அவ்வடியார்கள்இது
வேண்டுமென்று எதிரேவந்துசொல்லுதற்குமுன்னே அவர்க
ள் கருத்தறிந்து கொடுக்கின்றவர் — (எ-று) (கூ)

விரிகடல்சூழ்மண்ணுலகில்விளக்கியவித்தன்மையராம்....*
பெரியவர்சகுமுன்சிலநாட்பிள்ளைப்பேறின்மையினு.....*
லரியதியாமலர்க்கழல்களறியாமையதியாதார்.....*
வருமகவுபெறற்பொருட்டுமனத்தருளால்வழுத்தினார்....*
(இதன்பொருள்)

பரப்பாயிருக்குஞ் சமுத்திரஞ்சூழ்ந்த பூலோகத்தில் இப்படி

ப்பட்டசிவநேசத்தன்மையைவிளக்கியமானக்கஞ்சாறநாயனார்க்குச்சிலநாள் வளர்க்கும் பிள்ளையிலாமையினால்விஷ்ணுவினால் அறியப்படாததிருவடிகளின் பெருமையைஅறிந்தவராகிய இந்தச்சிவபத்தரானவர் குலம்விருத்தியாசிறந்தற்குஏதுவாகியபிள்ளையைப் பெறும்பொருட்டு மனதிலுறிறைந்த அன்போடுசுவாமியைஸ்தோத்திரஞ் செய்தார் —(எ-று) (ய)

குழைக்கலையம்வடிகாதிற்கூத்தனாருளாலே.....*
மழைக்குதவும்பெருங்கற்பின் மனைக்கிழத்தியார்தம்பர....*
விழைக்குந்வினைப்பயன்சூழ்ந்தவிப்பிறவிக்கொடுஞ்சூழல் .*
பிழைக்குநெறிதமக்குதவப்பெண்கொடியைப்பெற்றெடுத்தார்

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனார் குண்டலம்அலைகின்ற நீண்டகாதினையுடைய நடேசரதுகிருபையினால் மழைபெய்யென்றுத் பெய்யத்தக்க பெருமைபொருந்திய கற்பினையுடைய மனைவியாரிடமாக முன்பிறப்பிற்செய்த வினைப்பயனானது சூழ்ந்துகொண்டிருக்கும் இந்தப்பிறவியினதுமிகுந்த கொடியதுன்பத்தில்நின்றும்தப்பிச்செல்லும் நல்லமார்க்கத்தைத்தமக்குக் கொடுக்கும்பொருட்டுக் கொடிபோன்ற ஒருபெண்குழந்தையைப்பெற்றெடுத்தார்.— எ-று) கொடுஞ்சூழல்கொடுமையாகிய எண்ணங்களுக்கு இடமாகிய என்று பொருள்கூறி ப்பிறவியோடுஇயைபுசெய்தலும்ஒன்று.குழைக்குஎன்பதில்-கு-சாரியை(ய௪)

பிறந்தபெருமகிழ்ச்சியினாற்பெருமூதூர்களிசிறப்பச்....*
சிறந்தநிறைமங்கலதூரியமுழங்கத்தேவர்பிரா.....*
னறந்தலைநின்றவர்க்கெல்லாமளவிலவளத்தருள்பெருக்கிப்..*
புறந்தருவார்பலர்போற்றப் பொற்கொடியைவளர்க்கின்றார் *

(இதன்பொருள்)

குழந்தைபிறந்த அதிகசந்தோஷத்தால் பெருமைபொருந்திய அந்தப்பழமையாகிய ஊரில் மகிழ்ச்சியினால்நிறையச்சிறப்புற்றமங்கலவாத்தியங்கள் கோஷிக்கப்பரமசிவனால்அருளிச்செய்யப்பட்டிருக்கும் சைவாகம விதிப்படி நடக்கின்றவர்களுக்கெல்லாம் அளவில்லாதவளத்தையுடைய கொடையினால் சவுக்கியமுண்டாகச்செய்து புறத்திலுள்ளபலரும் ஸ்தோத்திரம்பண்ணப் பொற்கொடிபோன்றபெண்ணை வளர்க்கின்றார். (ரு-று) (ய௨)

காப்பணியுமிளங்குழவிப்பதநீங்கிக்கமழ்சுரும்பின் .. .... *
பூப்பயிலுஞ்சுருட்குழலும்பொலன்குழையுமுடன்றாழ.... *
பாப்புறுமென்சிறுமணிமேகலையணிசிற்றாடையுடன் ... [சி
கோப்பமைகிண்கிணியரையக்குறுந்தளிர்மெல்லடி யொதுங்

(இதன்பொருள்.)

காப்புத்தரிக்கின்றஇளங்குழந்தைப்பருவம்நீங்கிவண்டுமுழங்கும் வாசனைபொருந்திய புஷ்பங்களை அணிந்த சுருண்டிருக்கின்றகூந்தலும், பொன்னாற்செய்யப்பட்டகுண்டலமும், காற்றுதொங்கச் சிறியமணிகளால்கட்டப்பட்டமேகலாபரணமுமிருதுவாகியசிற்றாடையோடுகோக்கப்பட்டிருக்கும்கிண்கிணியானது அரையும்படிசிறியதளிர்போன்றமென்மையாகிய பாதங்களினாலே ஒதுங்கிநடந்து.— (எ-று) (௩௬)

புனைமலர்மென்கரங்களினாற்போற்றியர்தாதியர்நடுவண் . . . *
மனையகத்துமணிமுன்றில் மணற்சித்திலிழைத்துமனிக். . . . *
கனைகுரனூர்புரமலையக்கழல் முதலாப்பயின்றாமலை . . . . *
நனைமுகஞ்செய்முதற்பருவநண்ணினளப்பெண்ணமுதம். . *

(இதன்பொருள்)

அலங்காரஞ்செய்யத்தகுதியாயிருக்கின்றமிருதுவாகியகைகளினால் எடுத்துவளர்க்கின்றதாதியர்களுக்கு நடுவில் விட்டிலுள்ளிடமாகியரதிவங்கள்பதிப்பிக்கப்பட்டிருக்குமுற்றங்களில் மணல்கொண்டுசிறுவீடு கட்டி முழங்குமோசையை உடைய மணிகளிழைத்தசிலம்புகள் அலையக்கழங்காடல்முதலியவிளையாடல்களைச் செய்துஸ்தனமானது அரும்பினதுநுனிபோல்தோன்றுகின்றஒப்பற்றபருவத்தை அடைந்தாள் - அந்தஅமிர்தம் போன்றபெண் — (எ-று) கழல்வழக்கத்தில் கழற்சிக்காய்முதலாவென்பதனால் அம்மனைபற்றாடலுங்கொள்க. முதற்பருவம் என்பதற்கு - பேதைப்பருவம்என்பாருமுளர், எழுவயதில் அப்பருவம்வருதலால் அக்காலத்தில் பெண்களுக்கு ஸ்தனம் அரும்புபோலப்பருக்கிறது கூடாமையென்றுமறுக்க.(௩௭)

உறுகவின்மெய்ப்புறம்பொலியுவொளிநுசப்பைமுலைவருத்த
முறுவல்புறமலராதமுகிண்முத்தநகையென்னு . . . . . *
நறுமுகைமென்கொடிமருங்குனலிர்ச்சுருளந்தளிர்ச்செங்கை
மறுவிலகுலக்கொழுந்திலுக்குமணப்பருவம்வந்தணைய. . . . *

(இதன்பொருள்)

மிகுந்தஅழகானதுதேகத்தின்புறத்தில்விளங்க, காந்தியுள்ள இ

டையைமூலையான து பாரத்தால்வருத்த, புறத்தில்மலராதஅரும்பினையும் ஒளியையுடையமுத்தினையும் ஒப்பிடப்படுமென்கிறதத்தங்களையும், வாசனைபொருந்திய அரும்பினையுடையமெல்லியகொடிக்குநிகராகிய இடையையும் மணம்ஊட்டியநெய்யினால்குளிர்ச்சிபொருந்திய கூந்தலையும் அழகாகியதளிர்போன்ற சிவந்தகையையுமுடைய களங்கமற்ற-மானக்கஞ்சாறநாயனார் குலத்துக்குக் கொழுந்துபோன்றிருக்கும் பெண்ணுக்குக்கலியாணஞ்செய்யும் பருவம்வந்ததையை.— எ-று) (௰௫)

திருமகட்குமேல்விளங்குஞ்செம்மணிபின்தீபமெனு .....*
மொருமகளைமன்னுலகிலோங்குகுலமரபினராய்க் .....*
கருமியற்றுமறையவனார்தமராயகழலேயர் ....*
பெருமகற்குமகட்பேசவந்தணைந்தார் பெருமுதியோர் ...*

(இதன்பொருள்)

லட்சுமிக்கு மேலாகவிளங்கும் உருவ நினையுடையமாணிக்கவிளக்குப்போன்ற ஒப்பற்ற தன்மகளை நிலைபெற்ற உலகத்தில்உயர்ந்தவேளாளர்குலத்தில்பிறந்தவராகிய-கண்டதினையுடைய-வேதங்களைத் திருவாய்மலர்ந்தருளிய சுவாமிக்குஅன்பராகிய வீரகண்டையபத்தரிற்கலினையுடையராய்ந்து பெருமைபொருந்திய குமாரராகியகலிக்காமநாயனாருக்குப் பெண்பேசவந்தடைந்தார் பெருந்தன்மையையுடையவிருத்தர்கள். (எ-று) (௰௬)

வந்தமுதறிவோனைமானக்கஞ்சாறனார் ....*
முந்தைமுறைமைபின்விரும்பிமொழிந்தமணத்திறங்கேட்டே
யெந்தமதுமரபினுக்குத்தகும்பரிசாலேயுமெனச் .... ..*
சிந்தைமகிழ்வுறவுரைத்துமணநேர்ந்துசெலவிட்டார் .... *

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனார் தம்மிடத்துக்குவந்த அறிவில் மூதிர்த்தபெரியோரை விரும்பி வரவழைத்து வெகுநாளாக உறவாயிருப்பதைப்பற்றிச்சொல்லிய கலியாணவார்த்தையைக் கேட்டுஎம்முடைய வமிசத்துக்குத் தகுதியாயிருக்கிறபடியால் கலிக்காமநாயனார்க்குப் பெண்ணைக்கொடுக்கத்தகுமென்று மனது மகிழ்ச்சியடையச்சொல்லி மணஞ்செய்து கொடுக்கச் சம்மதப்பட்டு வந்தவர்களை அனுப்புவித்தார்.—(எ-று) (௰௭)

சென்றவருங்கஞ்சாறர்மணமிசைந்தபடிசெப்பக் .... .. *
குன்றனையபுயத்தேயர்கோனருமிகவிரும்பி ....*

நின்றநிலைமையினிரண்டுதிறத்தார்க்குநேராய.....*
மன்றலவிணைமங்கலநாணமதிநூலவலவர்வகுத்தார்.. ..*

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனார் - பெண்கொடுக்க ஒப்புக்கொண்டதைப்போலவர்கள்சொல்ல, மலைபோலஉயர்ந்த தோளினையுடைய ஏயர்கோன் என்பவர் மிசவஞ்சந்தோஷிப்பட்டு அவருத்தரவால இரண்டுதிறத்தார்களும் ஒத்திருக்கும் நிலைமையைப் பார்த்துவிவாகஞ்செய்யத்தகுந்த மங்கலகரமான நாளைப்புத்திமையுடைய சோதிஷசாஸ்திரமுணர்ந்த பெரியோர்கள்நிச்சயித்தார்கள் (எ-று) (௩அ)

மங்கலமாஞ்செயலவிரும்மெகட்பயந்தவள்ளலார்.. .. ..*
தங்குலநீள்கற்றமெலாந்தயங்குபெருங்களிசிறப்பப்....[கச்
பொங்கியவெண்முளைப்பெய்து பொலங்கலங்களிடைநெருங்
கொங்கலர்த்தண்பொழின்மூதூர்வதுவைமுகங்கோடித்தார்

(இதன்பொருள்)

மகளைப்பெற்றதனால் இனி ஒப்பற்ற கொடையின்பெருமையை அடையும் மானக்கஞ்சாறநாயனார் தமதுமரபிலுள்ள பரப்பாயிருக்கின்ற சுற்றத்தாரெல்லாம் மிகுந்தகளிப்பினை சிறப்பை அடைந்து பிரகாசிக்க எழுப்புகின்ற வெண்மையைபொருந்திய முளையுண்டாகும்படிபாலிலகலவைத்துப் பொன்னுரித்தெய்யப்பட்ட பாத்திரங்கள் அவ்விடத்தில்சடங்கு செய்வதற்காக நெருங்க-வாசனைபொருந்தியபுஷ்பங்களையுடைய சோலைசூழ்ந்தபழமைபொருந்தியகஞ்சாவூர் என்பதனைக்கலியாணத்துக்குச்சிறப்பாக அலங்காரஞ்செய்தார்கள்.—(எ-று) (௩௧)

கஞ்சாறர்மகட்கொடுப்பக்கைப்பிழக்கவருகின்ற.....*
வெஞ்சாதபுகழ்ப்பெருமையேயர்குலப்பெருமானுந் ....*
தஞ்சாலபுதிறைசுற்றந்தலைநிறையமுரசியம்ப.....*
மஞ்சாலுமலர்ச்சோலைக்கஞ்சாற்றின்மருங்கணையவ. .....*

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனார் தம்மூடையமகளைக்கொடுக்க விவாகஞ்செய்துகொள்ளவருகின்ற குறையாதபுகழினையுடையகலிக்காமநாயனாரும் பெருமைபொருந்திய சுற்றத்தார் கூட்டமாயிவர முரசவாத்தியமுழங்க மேகங்கள்தவழ்கின்றபுட்பங்களையுடைய சோலைசூழ்ந்த கஞ்சாறு என்னு மூரில்வந்துசேர. (எ-று) (௩௨)

வள்ளலார் மணமலர்ச் மருங்கணையாமுன் மலர்க்க .... *
ணெஞ்விழையைப்பயந்தார்தந்திருமனையிலொருவழியே. .*
தெள்ளுநுரை நீருலக முய்வதற்குமந்நறவர்த ... . *
முள்ளதிலைப்பொருளாயவும்பர்பிரான்றுமணைவார் .... .. *

(இதன்பொருள்)

கலிக்காமநாயனார் கலியாணஞ்செய்துகொள்ள அவ்வூர்க்குவருகிறதற்குமுன்னே நீலோற்பலம்போன்ற கண்களையும் பிரகாசம்பொருந்திய ஆபரணங்களையும்உடையபெண்ணைப்பெற்றமானக்கஞ்சாறநாயனாரது அழகாகியவீட்டில்-ஒப்பற்ற தன்மையாகச் சங்குமுதலானவைகளைக்கொழிக்கின்ற அலைகளையுடைய கடல்சூழ்ந்த உலகமானது பிழைக்கும்பொருட்டு அவ்வடியாரது பணிவிடைசஞ்செய்கின்ற பொருளாகிய தேவர்களுக்கு தாதரான பரமசிவன் எழுந்தருளுகிறதற்குத் திருவுளங்கொண்டார்.—(எ-று) (உக)

(வேறு)

முண்டகிறைநெற்றியின்மேல்முண்டகத்திருமுடியிற் .... *
கொண்டசிலைமுச்சியின்கட்கோத்தணிந்தவெற்புமணிப் .. *
பண்டொருவனுடலங்கட்பரித்தநாளதுகடைந்த ... . *
வெண்டரளமெனக்காதின்மிசையலையுங்குண்டலமும் .... *

(இதன்பொருள்)

விடுதியின்பூச்சு நிறைந்தநெற்றிமேலாக கௌரம்பண்ணி மிருக்கின்ற சிரசினுச்சியில் வைகக்பட்டிருக்கின்ற குடுமியில் கோத்துத்தரிக்கப்பட்ட எலும்பினாற்செய்யப்பட்டமணியும் முற்காலத்தில் விஷ்ணுவின் முதுகெலும்பை எடுத்து வைரவர் அணிந்தகாலத்தில் அதனால் முத்தின்வடிவாகக்கடைந்த மணிபோல்காதின்மேலாக அசைகின்றகுண்டலமும். (எ-று) (உஉ)

அவ்வெண்பிறைவளிமணிகோத்தணிந்தநிருத்தாழ்வடமும் .. *
பைவன்பேரரவொழியத்தோளிலிடும்பட்டிகையும் .... *
மைவந்தநிறக்கேசவடப்பூணூலுமனச்..... .... *
செவ்வன்பர்பவமாறுந்தருநீறுறுப்பொக்கணமும்..... *

(இதன்பொருள்)

முன்சொல்லப்பட்ட எலும்பினாற் செய்யப்பட்டஒளிபொருந்திய மணிகளைக்கோத்துத்தரிக்கப்பட்ட தாழ்வடமும் படம்பொருந்திய வலியபாம்பில்லாமல் தோளில்தரித்த யோகப்

பட்டையும்கருமையாகியநிறத்தையுடையமயிரினாற்செய்யப் பட்டுவடம்போன்றிருக்கின்றபூணூலும்நல்லவழியிற்செல்கின் ற அடியார்கள்து பாவத்தைப்போக்குகின்றதிருநீற்றுப்பையும்.—(எ-று) (௨௧)

ஒருமுன்கைத்தனிமணிகோத்தணிந்தவொளிர்ருத்திரமும் . . *
மருமறைநூற்கோவணத்தின்மிசையசைந்ததிருவுடையு . . . . *
மிருநிலத்தின்மிசைதோய்ந்தவெழுதரியதிருவடியும் . . . . . *
திருவடியிற்றிருப்பஞ்சமுத்திரையுத்திகழ்ந்திலங்க . . . . . *

(இதன்பொருள்)

முன்னங்கை ஒன்றில் ஒன்றி ருத்திராக்ஷமணியைக் கோத்துத் தரித்த பிரகாசிக்கின்றருத்திரமும், அரிதாகியவேதமே உருவங்கொண்ட கோவணத்தின் மேலாக அசைகின்ற அழகிய உடையும், பெருமைபொருந்திய பூமியின்மேல் நன்றாக அழுந்தியநிலைக்கிறதற்கெட்டாத திருப்பாதங்களும், அந்தப்பாதங்களில் பஞ்சாயுதங்களும் பிரகாசிக்க.—(எ—று) ருத்திரம்-யிறு (பஞ்சாயுதம்) அவை தண்டாயுதம்-வாள்-சங்கு-சக்கரம்-வில்.

பொடிபூசுமெழிலென்னதிருமேனிதனிற்பொலிந்த . . . . . *
படிநீடுருநீற்றின்பரப்பணிந்தபான்மையராய்க . . . . . *
கொடிநீடுமறுகணைந்துதமுடையகுளிர்கமலத் . . . . . *
தடிநீடுமனத்தன்பர்தம்மனையினகம்புகுந்தார். . . . . *

(இதன்பொருள்)

சர்ம்பல்பூசியதெருட்புப்போல்-உலகத்தார்விருத்தியடைகிறதற்கேதுவாகிஇயற்கையாகமகிமையை உடையதிருநீற்றின்பரந்த உத்தூளனத்தைக்கொண்ட தன்மைபொருந்தியதிருமேனியையுடையவராய்க்கொடிகள்கட்டிய நீண்ட வீதியில்சேர்ந்துதம்முடையகுளிர்ச்சிபொருந்தியதாமரைமலரையொத்ததிருவடிகள் தங்கியமனத்தையுடைய அடியாராகியமானக்கஞ்சாறநாயனாருடைய வீட்டிற்புகுந்தார்.—(எ-று) (௨௫)

வந்தணைந்தமாவிரதமுனிவரைக்கண்டெதிரெழுந்து . . . . . *
சிந்தைகளிகூர்ந்துமகிழ்சிறந்தபெருந்தொண்டனு . . . . . *
றொந்தைபிரான்புரிதவத்தோரிவ்விடத்தேயெழுந்தருள . . . *
வுய்ந்தொழிந்தேனடியேனென்றுருகியவன்பொடுபணிந்தார்

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனார் தமதுமனையில்வந்தமாவிரதமதத்தில்

சம்பந்தப்பட்டிருக்கின்றமுனிவனைக்கண்டவுடனே எழுந்தெதிராகப்போய் மனதுமிகவுஞ்சந்தோஷித்து விருப்பத்தையடைந்த பெருமைபொருந்திய தொண்டானவர் எமக்கு ஆண்டவராகிய பரமசிவனிடத்தில் அன்புள்ளீதவத்தினையுடைய பெரியவர் - இவ்விடத்திற்கு எழுந்தருளிவந்ததனாலே அடியேன் பாவத்தில்நின்றும் நீங்கிப்பிழைத்தேன் என்று உருக்கமுற்ற அன்போடுபணிந்தார்.—(எ-று) (உஎ)

நற்றவராம்பெருமானார் நலமிகுமன்பாரோக்கி.....*
யுற்றசெயன்மங்கலமிங்கொழுகுவதென்னெனவடியேன் ..*
பெற்றதொருபெண்கொடிதன்வருவையெனப்பெருந்தகைய *
மற்றுமக்குச்சோபனமாகுவதென்றுவாய்மொழிந்தார்.. ..*

(இதன்பொருள்.)

நல்லதவத்தினையுடையவராகவேடங்கொண்டபரமசிவன்நற்குணங்கள்மிகுந்த அன்பரைப்பார்த்தருளி இப்போதுமங்களகரமானசெயல்செய்வதுள்ளதற்காகவென்றுகேட்க அதற்குமானக்கஞ்சாறநாயனார் அடியேன்பெற்றகொடிபோன்ற பெண்ணிற்குக் கலியாணம் நடக்கப்போகிறது என்றுசொல்ல முனிவரும் உமக்கு நன்மையுண்டாகக்கடவதென்று திருவாய்மலர்ந்தருளினார்.—(எ-று) (உஎ)

ஞானச்செய்தவரடிமேற்பணிந்துமனையகதண்ணி .... .. *
மானக்கஞ்சாறனார்மணக்கோலப்புனைந்திருந்த ....*
தேனக்கமலர்க்கூந்தற்றிருமகளைக்கொண்டணைந்து ....*
பானற்கற்றாமறைத்துவருமவனாப்பணிவித்தார் ....*

(இதன்பொருள்)

மானக்கஞ்சாறநாயனாரானவர் ஞானம்பொருந்தியதவத்தினையுடையசுவாமியின் பாதத்தின்மேல்வணங்கிவிட்டிற்குள்வந்து மணக்கோலங்கொண்டிருந்த தேன்பிரகாசிக்கின்ற மலர்களைத்தரித்தகூந்தலையுடையதமதுமகளை அழைத்துக்கொண்டுவந்து நீலோற்பலபுஷ்பம்போல் கருமையாகிய கழுத்தை மறைத்துவருகின்றசுவாமியைப் பணியும்படிசெய்வித்தார்.—(எ-று)

தஞ்சரணத்திடைப்பணிந்துதாழ்ந்தெழுந்தமடக்கொடிதன்*
மஞ்சுதழைத்தெனவலைந்தமலர்க்கூந்தற்புறநோக்கி.... ...*
யஞ்சலிமெய்த்தொண்டரைப்பார்த் தணங்கிவடன்மயிர்நமக்
பஞ்சவடிக்காமென்றார்பாவவடித்தலங்கொடுப்பார் .. [கும்

(இதன்பொருள்.)

வணங்கினவர்களுக்குத் திருவடியை அருள்செய்கின்றவராகிய சுவாமியானவர் தம்முடையபாதத்தில் தாழ்ந்து நமஸ்காரஞ் செய்து எழுந்த இளமைபொருந்திய கொடிபோன்ற பெண்ணினது மேகம்பரவினதுபோல் அலைகின்ற புஷ்பங்களைத் தரித்த பின்பக்கத்திலுள்ள கூந்தலைப்பார்த்து-அஞ்சலிசெய்து கொண்டிருக்கின்ற உண்மைபொருந்திய அடியவரைநோக்கி இப்பெண்ணினது தலைமயிர் நமது பஞ்சவடிக்கயிற்றுக்குத் தக்கதாயிருக்கிறதென்றார்.—(எ-று) (௨௬)

அருள்செய்தமொழிகளாவடநீழலிகைதனையுருவிப் .....
பொருள்செய்தாமென்றெனைக்கொண்டுபூங்கொடிதன்
னிருள்செய்தசருங்கூந்தலடியிலிருந்தெதிர்நின்ற .....*
மருள்செய்தபிறப்பறுப்பார்மலர்க்கரத்தினிடைநீட்டல்....*

(இதன்பொருள்.)

பரமசிவன் அருளிச்செய்த வார்த்தையைக்கேள்விப்பட்டுயுத்தஞ்செய்வதற்குக் கருவியாகிய வாளை உருவி அடியார் இப்படிக்கேட்டதைக் கொடுப்பது முற்பிறப்பிற்செய்த தல்ல கருமத்தால் ஆகவேண்டியது ஆதலால் என்ன புண்ணியஞ்செய்தேனோவென்று எண்ணிப்பூங்கொடிபோலிருக்கிறஅப்பெண்ணினுடையஇருளொத்தகருமையாகியகூந்தலினடியில்அரிந்து எதிராகநின்ற மயக்கத்தை உண்டாக்கும் பிறப்பொழிக்கவல்ல சுவாமியினது மலர்போன்றகையில்நீட்டல்.—(எ-று) (௨௭)

வாங்குவார்போனின்றமறைப்பொருளாமவர்மறைந்து ....*
பாங்கின்மலைவல்லியுடன்பழையமழவிடையேறி.. .... ..*
யோங்கியவிண்மிசைவந்தாரொளிவிசும்பினிலெதிருங்கத் ..*
தூங்கியபொன்மலர்மாரிதொழும்பர்தொழுவதுதர்விழுந்தார்

(இதன்பொருள்.)

வேதத்தின் பொருளாயிருக்கின்ற சுவாமியானவர் வாங்குகிறவர்போல்நின்று மறைந்து பெருமைபொருந்தியபார்வதியோடு பழமையாகிய இளமையுள்ள ரிஷபவாகனத்தில் எழுந்தருளி உயர்ந்த ஆகாயத்தில் வந்தார்-பிரகாசம்பொருந்தியஆகாயத்தில்நின்றும் பூமியில்தெருங்கும்படி பொன்னிறமாயிருக்கின்ற கற்பகபுஷ்பங்களின் வருஷஞ் சொரியப்பட்டன அப்போது அடியார்நிராகப்பூமியில்பணிந்துதொழுதார்.(எ-று)

விழுந்தெழுந்துமெய்ம்மறந்தமெய்யன்பர்தமக்குமதிக் ..*
கொழுந்தலையவிழுங்கங்கைகுறித்தசடைக்கூத்தனு ....*
மொழும்பரிவினம்பக்கலுணக்கிருந்தபரிசிந்தக் ....*
செழுப்புவனங்களிலேறச்செய்தோமென்றருள்செய்தார் ..*

(இதன்பொருள்.)

இப்படிபூமியிற்படித்துஎழுந்துமெய்மறந்த மெய்மையாகிய அன்பரான மானக்கஞ்சாறநாயனார்க்கு மூன்றும்பிறை அலையவிழுகின்ற கங்கைதங்கிய சடையையுடைய நடேசர் மிகுந்த அன்போடு தம்மிடத்தி லுணக்கிருந்ததன்மையைச் செழுமைபொருந்திய உலகங்களில் விளங்கச்செய்தோமென்றுதிருவாய்மலர்ந்தருளினார்.—(எ-று) (௩௨)

மருங்குபெருங்கணநாதர்போற்றிசைப்பவானவர்க .... ..*
ணொருங்கவிடைமேற்கொண்டுநின்றவர்முன்னின்றவர்தா ..*
மொருங்கியநெஞ்சொடுகாங்கஞ்சியில்மேர்ருவித்தையர் *
பெருங்கருணைத்திறம்போற்றும்பெரும்பேறுநேர்பெற்றார் *

(இதன்பொருள்.)

அருகில் பெருமைபொருந்திய சிவகணத்தலைவர்கள் வணங்கித்துதிக்கவும், தேவர்கள்சூழவும், ரிஷிபவாகனத்தின்மேலெழுந்தருளிநின்ற பரமசிவன்முன் நின்ற மானக்கஞ்சாறநாயனார் ருவித்தமனதோடு கைகளைத் தலைமேல்வைத்துக் குவித்துக் கொண்டு சுவாமியினது உயர்ந்த கிருபையினது திறத்தைப் புகழ்ந்துகொண்டிருக்கும் பேற்றைப்பெற்றார்.—(எ-று) (௩௩)

தொண்டனார்தமக்கருளிச்சூழ்ந்திமையோர்துதிசெய்ய .. .*
விண்டைவார்சடைமுடியாரெழுந்தருளிப்போயினார் .... *
வண்டுவார்குழற்கொடியைக்கைப்பிடிக்கமணக்கோலங் .. ..*
கண்டவர்கள்கண்களிப்பக்களிக்காமனார்புகுந்தார் .... . *

(இதன்பொருள்.)

அடியார்க்கு இவ்விதமாக அருள்செய்து தேவர்கள் நாற்புறத்திலுஞ்சூழ்ந்து துதிக்க, இண்டைப் பத்திரத்தைத்தரித்ததீண்டுசடைமுடியையுடைய பரமசிவன் மறைந்த திருக்கோலங்கொண்டார். தடவிய வாசனை நெய் ஒழுகுகின்ற வண்டுகள் மொய்க்குங் கூந்தலையுடைய கொடிபோன்ற மானக்கஞ்சாறநாயனார்மகளைக் கல்யாணஞ்செய்யும்பொருட்டுக்கொண்ட ம

ணக்கோலத்தைப்பார்த்தவர்கள் கண்கள் களிகூரகலிக்காம நாயனார் வந்தடைந்தார்.—(௧-௩) (௩௪)

வந்தணைந்தவேயர்குலமன்னவனார்மற்றந்தச் .... *
சிந்தைநினைவரியசெயல்செறிந்தவர்பாற்கேட்டருளிப் .. *
புந்தியினான்மிகவுவந்துபுனிதனாரருள்போற்றிச் .... *
சிந்தைதளர்ந்தருள்செய்ததிருவாக்கின்றிறங்கேட்டு.. .... *

(இதன்பொருள்)

கஞ்சாறென்னும் ஊருக்குவந்து சேர்ந்த கலிக்காமநாயனார்-மனதால்நினைக்கிறதற் கருமையாகிய அப்படிப்பட்ட தெய்விகச்செயலை அங்கு இருக்கிறவர்களிடத்தில் கேட்டு அவரைமனதோடுமிகவும்விரும்பிச் சுவாமியின்கருணை அவ்வடியார்விஷயமாக இப்படியிருந்ததைப்பற்றி ஸ்தோத்திரஞ்செய்து மனதுதளர்ச்சியை அடைந்து சுவாமி சொல்லியருளிய திருவாக்கினைக்கேட்டு —(௧-௩) (புந்தியினான் மிகவுவந்தலாவது) பரம்சிவனானுக்கிரகம்பெற்ற தொண்டருடைய மகள் தமக்குப்பாரியாக ஏற்பட்டாளேயென்று சந்தோஷித்தை அடைதலாம். கலிக்காமநாயனார் அந்தப்பெண்ணைக் கலியாணம் பண்ணிக்கொண்டபின்பு சுவாமிவந்து கேட்டாளைக்கேட்டதை அரிந்து கொடுக்கத் தமக்கதிகாரம் உண்டாயிருக்கும். அதனால் தாம் அவளையவேண்டிய பேறு தமது மாமனாரிடம் பெற்றுக்கொண்டாரொன்று வருந்தினாரென்பதைச் சிந்தைதளர்ந்து என்பதனால்தெரிவித்தார். பரமசிவனுக்குச் சிறந்த அன்பராகிய பரமகஞ்சாறநாயனார் தம்முடைய மகள் கலியாணத்துக்கு இல்லாமல் கயிலாசத்துக்குச் சென்றதைக்குறித்தும் அதற்காகச் சுற்றத்தார்முதலியோர் ஒருவகையாயிருப்பதுபற்றியும் விசனப்பட்டாரொன்றாலும் பொருந்தும். (திருவாக்கின்றிறமாவது) சுவாமி அசரீரியாய்க்கலிக்காமா நீ தக்கப்படாதே மனங்களிப்பாக அந்தப்பெண்ணை விவாகஞ்செய்துகொள்ளென்று எழுந்தருளினார்த்தையாம். (௩௫)

மனந்தளருமிடர்நீங்கிவானவர்நாயகரருளாற் .... *
புனைந்தமலர்க்குழல்பெற்றபூங்கொடியைமணம்புணர்ந்து .* *
தனம்பொழிந்துபெருவதுவையுலகெலாந்தலைசிறப்ப ... *
விளம்பெருகத்தம்முடையவெயில்மூதூர்சென்றணைந்தார் *

(இதன்பொருள்.)

கலிக்காமநாயனார்-மனத்துக்குத்தவிர்ச்சியைஉண்டாக்குந்து

றதற்கு இடமாகியஒப்பில்லாத நகரமானது ஆண்வண்டுகள்பெண்வண்டுகளோடுஞ்சேர்ந்து ஒலிக்கக்கருப்புகள் தமதுமென்மையானகணுக்கள்பிளர்ந்து மிகுதியாகமதுரமாகியசாற்றைச் சொரிகின்ற கணமங்கலமென்னும் நகரமாம் — (எ-று) (க)

செந்நெலார்வயல்காட்டச்செந்தாமரை .... *
முன்னர்நற்றுமிழ்முத்தஞ் சொரிந்திடத் ...., ... *
துன்னுமள்ளர்கைமேற்கொண்டுதோன்றுவார் ..... *
மன்னுபங்கய மாநிதிபோன்றுளார் ....*

(இதன்பொருள்.)

செந்நெற்பயிர்வளர்கின்ற வயல்கள் செந்தாமரை மலர்களைப் புட்பிக்க அந்தமலர்களின்மேல் சங்குகள் தாங்கள் பெறுகின்ற முத்துகளைச்சொரிய நெருங்கியபள்ளர்கள் அந்தமுத்துக்களையுடைய தாமரைமலர்கள்கையில் ஏந்திக்கொண்டுவருவார்கள் நிலைபெற்றபதுமநிதியை உடையவர்கள்போல் — (எ-று)

வளத்தினாலீடிப்பதியதன்கண்வரி .... *
யுளர்தமைமம்பாலுடையோர்முகத்தினும் .. .. *
களத்தின்மீதுங்கயல்பாய்வயலயற் .... *
குளத்துநீளுங்குழையுடைநீலங்கள் .... *

(இதன்பொருள்)

பலவளங்களாலும் மிகுந்த பெருமை அடைந்திருக்கின்ற அந்தநகரத்தில் வண்டுகள்கிண்டுகின்ற கூந்தலையுடைய ஸ்திரீகள்முகத்திலும், அவர்கள்கழுத்திலும் கெண்டைமீன்கள்பாய்கின்ற வயல்களுக்கு அயற்புறத்திலுள்ள குளங்களில் இலைகளையுடைய நீலோற்பலங்கள் நீண்டுவளர்ந்திருக்கும். — (எ-று) (ஙு)

அக்குலப்பதிதன்னிலறநெறித் .... *
தக்கமாமனைவாழ்க்கையிற்றங்கினார் .... *
தொக்கமாநிதித்தொன்மையிலோங்கிய .... *
மிக்கசெல்வத்துவேளாண்டலைமையார் .. .. *

(இதன்பொருள்)

அந்தச் சிரேஷ்டம்பொருந்திய நகரத்தில் தருமவழியில்செல்லுதலால் தகுதியை அடைந்திருக்கிற பெருமைபொருந்திய இல்வாழ்க்கையில் தங்கினவர் தலைமுறை தலைமுறையாகத்

ஆவித்திருக்கும் அளவற்ற திரவியத்தால் பெருமைபெற்ற சம்பத்தினையுடைய வேளாளர்குலத்துக்குத் தலைமைபூண்டவர். (எ-று) (ச)

தாயனொனாமந்தரித்துளார்.....*
சேயகாலந்தொடர்ந்துந்தெளிவிலா.....*
மாயனார்மன்கிளைத்தறியாத்தவத்.....*
தூயதாண்மலர்ப்பாதந்தொடர்ந்துளார்.....*

(இதன்பொருள்.)

தாயனொன்கின்ற பேரைத்தரித்தவர் ஞானமில்லாத விஷ்ணுவாகவர் பன்றியின் அவதாரங்கொண்டு அனேககாலமாகப் பூமியைத்தோண்டி யறியக்கூடாத பரமசிவனது மகிமையைபொருந்திய பரிசுத்தமாகிய அன்றுமலர்ந்த தாமரைப்பூவையொத்த பாதத்தை அநிந்திருக்கின்றவர்.—(எ-று) (ரு)

மின்னுசெஞ்சடைவேதியர்க்காமென்று.....*
செந்நெலின்னமுதோடுசெங்கீரையு.....*
பன்னுபைந்துணர்மாவடுவுங்கொணர்ந்.....*
தன்னவென்றுமமுதுசெய்விப்பரால்.....*

(இதன்பொருள்)

பிரகாசிக்கின்ற சிவந்தசடையையுடைய கைலாசபதிக்கு ஆகுமென்று செந்நெலரிசி அன்னத்தோடு சிவந்தகீரையும் நிலைபெற்ற பசுமைபொருந்திப் பூங்கொத்துக்களையுடைய மாமரத்தில்காய்க்கின்ற வடுவுங் கொண்டுவந்து இப்படிப்பட்டவைகளை எப்போதும் படைத்துக்கொண்டு வருவார்.—(எ-று)

இந்தநன்னிலையின்னல்வந்தெய்தினுஞ்.....*
சிந்தைநீங்காச்செயலினுவந்திட.....*
முந்தைவேதமுதல்வர்வர்வழி.....*
வந்தசெல்வமறியாமைமாந்தினார்.....*

(இதன்பொருள்.)

இந்தப்படிசுவாமிக்குப்படைத்துக்கொண்டுவருகிறதைத் தரித்திரம் வந்தகாலத்திலும் மனத்தளர்ச்சி செய்கையோடு விரும்பி நடப்பித்துவரப் பழமையாகிய வேதங்களையுண்டாக்கிய மூதன்வராகிய பரமசிவன் அந்த அடியவரிடத்திலிருந்த செல்வமெல்லாம் இப்படிப்போயிற்றென்று ஒருகாரணமுந் தெரிந்துகொள்ளக்கூடாமலேயே மாறிப்போகச்செய்தார் (எ-று)

மேவுசெல்வங்களிறுண்விளங்கனி..... .... *
யாவதாகியழியவுமன்பினாற் ....*
பாவலர்க்கர்க்குமுன்புபயின்றவித்.... .... *
தாவில்செய்கைதவிர்ந்திலர்தாயனார் ....*

(இதன்பொருள்.)

தாயனார் பெற்றிருந்தபாக்கியம் முதலில் விர்த்தியாவதுபோலத்தோன்றிப் பின்பு யானையுண்ட விளாம்பழம்போல் நிலைகெட்டு அழியவும், பத்தியினாலே பார்வதீசமேதராகிய பரமசிவனுக்குத் தரித்திரமில்லாதகாலத்தில் கெடுதலில்லாத செய்கையோடுசுவாமிக்குநடப்பித்துக்கொண்டுவந்தபடி செந்நெலரிசியுமாவடுவும் கீரையும்தவறாமல் நைவேத்தியத்துக்குக்கொடுத்துக்கொண்டுவந்தார்.—(எ-று) (அ)

அல்லனல்குரவாயிடக்கூலிக்கு ....*
நெல்லறுத்துமெய்நிடியவன்பினா..... .....*
வல்லசெந்நெலிற்பெற்றனநாயனார்க்..... .....*
கொல்லையின்னமுதாக்கொண்டொழுகுவார் .... *

(இதன்பொருள்)

நாயனார் மிகுந்ததரித்திரத்தை அடைந்து அவ்வூரிலேதானே கூலிக்காக நெல்லறுத்து-உண்மையாகவளர்ந்துள்ள பக்தியினால்தாம்கூலியாகப்பெற்ற சிவட்புநெல்லை அரிசியாக்கிச்சுவாமிக்குச்சீக்கிரத்தில் இனிமைபொருந்தியஅன்னமாகச்செய்வித்து வருவார்.—(எ-று) அல்லனல்குரவாயென்பதனால் வீடு-பொன்-நிலம்-மாடு-முதலியவெல்லாம் இழந்ததரித்திரரானாரென்பதுபெற்றாம். செந்நெல்லென்பதுவழக்கத்தில்சம்பாநெல்லாம்

சாலிநேடியறுத்தவைதாம்பெறுங்..... .....*
கூலியெல்லாந்திருவமுதாக்கொண்டு..... .....*
நீலநெல்லரிக்கூலிகொண்டுண்ணுநாண்..... ....*
மாலயர்க்கரியாரதுமாற்றுவார்..... ....*

(இதன்பொருள்)

செந்நெல்-எவர்கள்வயலில்விளைந்திருக்கின்றதென்றுதேடி அதற்கு உரியவர்களைக்கண்டு உத்தரவுபெற்று நெற்கதிர்களை அறுத்து அதற்காக அந்தநெல்லாகவேபெறுகின்றகூலியெல்லாம் சுவாமிக்குப்படைக்கும் அன்னமாகச்செய்வித்துப் பின்பு காத்தநெல்லை அறுத்துக்கூலியாகப்பெறுகின்ற அந்தநெல்லினரிசியி

ருள்சேவனம்பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில்விஷ்ணுவிற்கும்பிரமனுக்கும்அரியவராகிய பரமசிவன் அதைதீக்கத்திருவுள்ளங்கொண்டார் (எ-று) சுவாமிக்குச்சம்பாவரிசியன்னம்படைத்தலால் தாமும் அவ்வரிசியன்னத்தைப் புசிக்கிறதற்குப் பாத்திரமன்றென்று காரிசிச்சோறு சாப்பட்டுக்கொண்டு வந்தாரென்று இச்செய்யுளால்விளங்கிற்று-கார்நெல்விளைந்திருக்கிற கழனிகளிருக்கிறபடியாலன்றோ, இவன் அவ்வரிசியன்னத்தைப்புசிக்கின்றான் அக்கறுட்புநெல்லெல்லாம் சிவப்புநெல்லாயிருக்க மாற்றுவோமென்றுதிருவுள்ளங்கொண்டாரென்பதற்கு அதுமாற்றுவாரென்றார். (ம)

(வேறு.)

நண்ணியவயல்களெல்லாநாடொறுமுன்னங்காண..... ..*
வண்ணவார்கதிர்ச்செஞ்சாலியாக்கிடமகிழ்ந்துசிந்தை ....*
யண்ணலாரமுதகூலிகொண்டிடுதடியேன்செய்த .....:*
புண்ணியமென்றுபோதவமுதுசெய்விப்பாரானார் .... ..*

(இதன்பொருள்)

அவ்வூரிலுள்ளவயல்களிலெல்லாம் அன்றைத்தினமுதலாகவருகின்றநாள்கள்தோறும்-மானக்கஞ்சாறநாயனாருடையகண்ணுக்குமுன்னே தோன்றும்படி அழகும் நீட்சியும்பொருந்தியகதிர்களையுடைய சம்பாநெல் விளைச்சலாகச்செய்ய அவ்வடியவர் மனமகிழ்ந்து நெல்வயலிலேசென்று அறுத்த கூலியைப் பெற்றுக்கொண்டு இப்படிக்கிடைத்தது அடியேன்செய்த புண்ணியத்தாலென்று சுவாமிக்கு மிகவும் அமுது செய்விக்கத் தொடங்கினார். (எ-று) தம்முடையசிவனத்துக்காகக் கார்நெல்விளைச்சலின் அறுப்புக்கிடைக்காதபடியால் நாள்முழுதும் சம்பாநெல்லை அறுத்துக்கூலியெல்லாம்சுவாமிக்கேஉபயோகப்படுத்தலால் போதவமுதுசெய்விப்பாரென்றார். (ய)

வைகலுமுணவிலாமைமனைப்படப்பையினிற்புக்கு .....*
நைகுறவில்லாவன்பினங்கைமற்றடகுகொய்து.....*
பெய்கலத்தமைத்துவைக்கப்பெருந்தகையருந்தித்தங்கள்.*
செய்கடன்முட்டாவண்ணந்திருப்பணிசெய்யுநாளில்.....*

(இதன்பொருள்.)

மேற்சொன்னபிரகாரம் நடக்கின்றபடியால் நாள்முழுதும் சாப்பாடுஇல்லாமைபற்றிவிட்டின் பின்புறத்திலுள்ளதோட்டத்திற்குப்போய்க் குறைவில்லாத அன்பினையுடைய அரிவாள்

டாய நாயனாருடைய மனைவியார் கீரைகொய் துசமைத்து இலையிலிடப்பெருமைபொருந்தியகுணத்தையுடைய அடியாரானவர் அதைப்புசித்துத் தினம்செய்யவேண்டியகடன்தடைபடாமலிருக்கும்படி அப்படிப்பட்டதிருப்பணிவிடைசெய்துகொண்டு வருநாளையில்—(எ-று) (செய்கடனாவது) சுவாமி நைவேத்தியத்துக்காக அரிசி- மாவடுகீரைகொண்டுபோய்ச் சமர்ப்பித்தலாம். (௩௨)

மனைமருங்கடனுமாளவடநெடுவானமீனே . . . . . .*
யனையவர்தண்ணிர்வார்க்கவமுதுசெய்தன்பனாரும் . . . . . .*
வினைசெயன்மூடித்துச்செல்லமேலுநாளொருநாண்மிக்க [ன்
முனைவனார்தொண்டர்க்கங்குதிழ்ந்ததுமொழியப்பெற்றே*

(இதன்பொருள்)

தோட்டத்திலுள்ள கீரையெல்லாம் அற்றுப்போக அருந்ததிக்குச்சமானமாகிய அந்தமாதரானவர்-சுத்தஜலத்தைத் தம்முடையகணவருக்கு வார்க்க அதனைப்பானம்பண்ணி அடியவரும் சுவாமிபூசைக்கு வேண்டிய அரிசிக்காகச்செய்யுஞ் செய்வகையுமூடித்து நடப்பிக்கச் செல்லுகொண்டிருக்கும் நாள்களில் ஒருநாள் ஒப்பற்ற பரமசிவனால் பக்தருக்குச் சம்பவித்ததைச் சொல்லத்தொடங்குகின்றேன்.—(எ-று) (கீரை-அற்றுப்போகிறதற்குக்காரணம்யாதெனின்,பின்னும்பாத்திரங்கோலிக் கீரைவிரைத்து நீர்வார்க்கிறதற்குப் பொழுதில்லாமல்காலமெல்லாம் நெல்லறக்கிறதிலே போயினபடியாலென்க. வடமீன்-அருந்ததி. நெடுவானம்-நெடிய ஆகாயம். (௩௩)

முன்புபோன்முதல்வனாயமூதுசெய்விக்கமூரு . . . . . .*
மன்புபோற்றூயசெந்நெலரிசிமாவடுமென்கீரை . . . . . .*
துன்புபோமனத்துத்தொண்டர்கூடையிற்சுமந்துபோகட்டு.*
பின்புபோமனைவியாரான்பெற்றவஞ்சேத்திச்சென்றார் . . . .*

(இதன்பொருள்.)

தூமக்குச் செல்வமிகுந்த காலத்திற்போல் ஆண்டவர்க்கு அமுதுசெய்விக்க-எழுகின்றபத்திபோலப் பரிசுத்தமாகிய செந்நெல்லரிசியும், மாவடுவும், மேன்மையாகிய கீரையும், துன்பத்தை ஒழித்த அடியவர் கூடையில்வைத்துச் சுமந்துகொண்டு போகஅவர்பின்னாகப்போகின்றமனைவியாரானவர் சுவாமிக்குப்பஞ்சகவ்வியம்எடுத்துக்கொண்டுநடந்தார்.—(எ-று) ஆன்பெற்ற ஐந்து-பசுவாலுண்டாகியஐந்து. அவை-பால்-தயிர்-நெய்-கோசலம்-சாணமாம். (௩௪)

போதராநின்றபோதுபுலர்ந்துகாறளர்ந்துதப்பி..... ...*
மாதரார்வருந்திவீழ்வார்மட்கலமூடுகையாற்.. ....*
காதலாலணைத்துமெல்லாங்கமரிடைச்சிந்தக்கண்டு..... .....*
பூதநாயகர்தீந்தொண்டர்போவதங்கினியென்னென்று.. ...*

(இதன்பொருள்)

தாயனார் கூடையெடுத்துக்கொண்டு போகும்போது உணவி ல்லாமையால் தேகம்உலர்ந்து கால்தள்ளாடித்தவறிவிழுந்தார் அவர்பெண்சாதி பஞ்சகவ்வியம் வார்த்திருக்கின்ற கலயத் தை மூடிக்கொண்டிருக்கிறகையால்அன்போடு அவரைகட்டிக் கொண்டும் எல்லாம்கமரில்சிந்திப்போகக்கண்டு பூதகணங்களு க்குத்தலைவராகிய சுவாமியின்தொண்டரானவர் இனிச்சுவாமியி ன்சன்னிதிக்குப்போவதனாற்பயன்யாதென்று. (எ-று) கமர் எ ன்பதுவெடிப்பு வெறுநிலத்தில் அரிசிசிந்தினாலும்எடுத்துமண் கல்-போக்கிச்சுவாமிக்குஉபயோகப்படுத்தலாம்-பூமியின்வெ டிப்பில்கொட்டுண்டபடியால் கோவிலுக்குப் போவதற்குக ருத்தில்லாதவராயிருந்தாரொன்பார் (போவதங்கினியென்னெ ன்றார்) (௫௬)

நல்லசெங்கோதூயமாவடுவரிசிசிந்த..... .....*
வல்லநீர்த்தாளவல்லாரமுதுசெய்தருளுமப்பே.....*
றெல்லையிறீமையேனிங்கெய்திடப்பெற்றிலேனென்... .....*
றொல்லையிலரிவாட்பூட்டியூட்டியையரியலுற்றார்.....*

(இதன்பொருள்)

தன்மையாகிய செங்கோரையும் தூய்மையாகியமாவடுவும் அரிசி யும் சிந்திப்போதலால்-பிறவித்துன்பத்தைநீக்கி ஆளவல்லகை லாசபதிஅமுதுசெய்யும் உயர்ந்தபேறுஅளவில்லாததீமையை உடையநான் அடையும்படிபெற்றிலேனென்று விரைவில் ஆரி வாளைத்தம்முடைய ஊட்டியில்சேர்த்து அதை அறுக்கத்தொ டங்கினார்.(எ-று) தம்முடைய உயிருள்ளவரைக்கும்அரிசிமா வடுகோரை சுவாமிக்கு அமுதுசெய்துகொண்டு வரவேண்டுமெ ன்றுநினைவுற்றவர் உயிருள்ளபோதே தடைபட்டபடியால் பி ராணனைவிடவேண்டுமென்று அரிவாளால் கழுத்தையறுத்து க்கொள்ளத்தொடங்கினார்.ஊட்டிகழுத்தின்முன்பக்கம் (௫௭)

ஆட்கொள்ளுமையர்தாமிங்கமுதுசெய்திலர்கொலென்னப் *
பூட்டியவரிவாட்பற்றிப்புரையறவிரவுமஞ்சு.....*
காட்டியநெறியினுள்ளத் தண்டறக்கழுத்திலேடே.... ...*
பூட்டியுமரியாநின்றாருறுபிறப்பரிவாரொத்தார்.. .....*

(இதன்பொருள்.)

தம்மைஆட்கொண்ட பரமசிவன் இங்கு அமுது செய்யமாட்டா ரொன்று பூட்டிய அரிவாளைக்கொண்டு குற்றமறக்கலந்த அன்பு பொருந்தியநல்லவழிபிற்செல்கின்றமனதொத்து ஊட்டியோ டுகழுத்தையும் நிகவுமறுப்போக அறுத்துக்கொண்டமர் ஆனபடியால் அந்த அடியார் துன்பமிகுந்ததமதுபிறப்பை அறுத்து நீக்குகிறவர் போலானார்.—(எ-று) (ரச)

மாசறுசிந்தையன்பர்கழுத்தரியரிவாளட்பற்று . . . . . *
மாசில்வண்கையை மாற்றவம்பலத்தாடுமையர் . . . . . *
விசியசெய்யகையுமாவடுவிடேல்விடேலென . . . . . *
றோசையுங்கமரினின்றுமொக்கவேயெழுந்ததன்றே . . . . . *

(இதன்பொருள்.)

களங்கமில்லாதமனதையுடைய அடியார்தம்முடையகழுத்தையறுத்துக் கொள்ளுகிறதற்காக அரிவாளைபிடித்தகுற்றமற்றகையை மாற்றும்படியாகப் பொன்னம்பலத்தில் நடனஞ்செய்கின்றசுவாமியானவர் உயரவீசியகையிலிருந்தகையும் மாவடுவைக்கடிப்பதனால உண்டாகும் விடேலென்னும் ஓசைபோன்ற ஓசையும் கமரிலிருந்து ஏககாலத்திலே எழும்பியது.—(எ-று) (ரஅ)

திருக்கைசெல்லாரிவாட்பற்றுந்திண்கையைப்பிடித்தபோது *
வெருக்கொடங்கூறுநீங்கவெவ்வினைவிட்டுநீங்கிப் . . . . . *
பெருக்கவேமகிழ்ச்சிநீடத்தம்பிரான்பேணித்தந்த . . . . . *
வருட்பெருங்கருணைநோக்கியஞ்சலிகூப்பிநின்று . . . . . *

(இதன்பொருள்)

பரமசிவனது அழகியகையானது வெளியில்வந்து கழுத்தையறுத்துக்கொள்ள அரிவாளைப் பிடித்துக்கொண்டிருக்கும் பலம்பொருந்திய கையைப்பிடித்தபோது அவ்விடத்தில் அடியார்பயங்கொண்டு அடைந்ததுன்பம்நீங்கவெட்பமாகியகொடியவினையை யொழித்துச் சந்தோஷம்பெருகிவளரப்பரமசிவன் விருப்பத்தோடு அனுக்கிரகஞ்செய்த பெருமைபொருந்தியதிருப்பூவிசேஷத்தை ஆலோசித்து அஞ்சலிகூப்பிக்கொண்டு நின்று.—(எ-று) (ரகூ)

அடியனேனதிலிலாமைகண்டுமென்னடிமைவேண்டிப் . . . . *
படிமிசைக்கமரில்வந்திங்கழுதுசெய்பரனேபோற்றி . . . . . *
துடியிடைபாகமானதூயநற்சோதிபோற்றி . . . . . *
பொடியணிபவளமேனிப்புரிசடைப்புராணபோற்றி . . . . . *

(இதன்பொருள்.)

அடியேன் மூடனாயிருக்கிறதை யறிந்திருந்தும் என்னை யடிமைகொள்ளவிரும்பிப்பூமியின்மேல் கமரிலே எழுந்தருளிவந்து அமுதுசெய்தருளிய ஆண்டவரே- உமக்குவந்தனம், உடுக்கைபோன்ற இடையையுடைய பார்வதியின் பாகத்திலிருக்கும் பரிசுத்தமாகிய சோதியானவரே வந்தனம், விபூதியைத்தரிக்கின்ற பவளம்போன்ற நிறமுள்ள-முறுக்காகிய சடையையுடைய ஆதியாயிருக்கின்றவரே வந்தனம்.—(எ-று) (உய)

என்றவர்போற்றிச்செய்யவிடைபவாகனராய்த்தோன்றி....*
நன்றுநீபரிந்தசெய்கைநன்னுதலி-னேகூட... ... .*
வொன்றிநர்முலைகில்வாழ்வாயென்றவருடனேறுன்னை ....*
மன்றுளேயாடுமையர்மழவிடையுகைதனிச்சென்றார். ....*

(இதன்பொருள்.)

இந்தப்பிரகாரம் அடியவர்போற்றிவணங்கப்பொன்னம்பலத்தில் நடனஞ்செய்தருளிய சுவாமி- ரிஷபவாகனரூடராய்க் காட்சியுற்று நீ செய்த அன்பின்செய்கையானது நன்றாயிருகின்றது உன் மனைவியோடு வந்து நமது சிவலோகத்தில் வாழ்வாயென்றருளிச்செய்து அப்படியே பத்தர் சுவாமியோடுவர இளமை பொருந்தியரிஷபத்தை நடத்திச்சென்றார்.—(எ-று)

பரிவுறுசித்தையன்பர்பாரம்பொருளாகியுள்ள.. .. . .*
பெரியவரமுதுசெய்யப்பெற்றிலேனென்றுமாவின், ...*
வரிவடுவிடேலென்றுமுனவன்கழுத்தரிவாள்பூட்டி.. .. ....*
யரிதவாலரிவாட்டாயரையினார் தூயநாமம்.. ....*

(இதன்பொருள்.)

சுசித்த மனதினையுடைய அடியாரானவர்- பரம்பொருளாயிருக்கின்ற பெரியவர்-அமுதுசெய்யப் புண்ணியஞ் செய்திலேனென்று நீண்ட மாவடுவினது விடேலென்கிற சப்தங் கேட்காததற்குமுன் வலியகழுத்தில் அரிவாளைப்பூட்டி அரிந்தபடியால் அரிவாட்டாயனென்கிற பரிசுத்தநாமத்தை யுடையவரானார்.—(எ-று) (உஉ)

முன்னிலைகமரேயாகமுதல்வனாரமுதுசெய்யச்.. .....*
செந்தெனினரிசிசிந்தச்செய்யுறவடுவிடேனை .....*
யந்திலைகேட்டதொண்டரடியிணைதொழுதுவாழ்த்தி .. ... *
மன்னுமானாயர்செய்கையறிந்தவாவழுதுதனிற்றேன்.... .*

(இதன்பொருள்.)

கமோ முன்னிலையாயிருக்கப் பாடசிலன் அமுதுசெய்யச்சம் பாநெல்லின் அரிசிசிந்த வடுவின் கடிபட்ட ஓசையானது அப்போதேகேட்ட அடியவரது இரண்டுபாதத்தையும்வணக்கி ஸ்தோத்திரஞ்செய்து நிலைபெற்ற ஆனாயனாரது பக்தியின் திறத்தை எனக்குத்தெரிந்தஅளவில் சொல்லத் தொடங்கினேன். (எ-று) (உங)

அரிவாட்டாயதாயனார்புராண-முற்றிற்று.

ஆ திருவிருத்தம்-கூஙய.

ஆனாயநாயனார்புராணம்.

மாடுவிளைப்பொலிசோலையின்வள்ளமதிவந்தேறச் .... .. *
சூடுபரப்பியபண்ணைவரம்புசுரும்பேற் .... *
வீடுபெருக்கியபோர்களில்மேகமிளைத்தேற .. .. *
நீடுவளத்ததுமேன்மலைநாடெனுநீர்நாடு .. .. *

(இதன்பொருள்)

பக்கத்திலிருக்கும் வாசனைபொருந்திய சோலையில் வெண்மையாகிய சூந்திரன் ஏறிச்செல்லுதலாலும், நெல்லரிகளைப் பரப்பியிருக்கின்ற வயல்களின் வரப்பில் வண்டுகள் ஏறிமொய்த்தலாலும் ஒன்றுக்கொன்று சமானமாக உயர்ந்திருக்கும்நெற்போர்களில் மேகங்கள் இளைப்போடு ஏறுதலாலும் நீண்ட வளம் பொருந்தியதாயிருக்கின்றதுமேன்மையுள்ளமலைநாடென்று சொல்லப்பட்ட நீரினையுடையநாடு.—(எ-று) (க)

நீவிநிதம்பவுழத்தியர் நெய்க்குழலன்மைச்சூழன் .... *
மேவியுறங்குவமென்சிறைவண்டுவிளாக்கஞ்சப் .... *
பூவினுறங்குவரீள்கயல்பூமலிதேமாவின் .... *
காவினுறங்குவிர்நீழலுறங்குவகார்மேதி .... *

(இதன்பொருள்)

கொய்சகத்தைத்தரித்த இடையின் பின்புறத்தையுடைய பன்னஸ்த்ரீகளுடைய வாசனைபொருந்திய கூந்தலாகிய இருண்டவி

டத்தில் மெல்லிய சிறையையுடைய வண்டுகளடைத்து நித்தி லாபண்ணும் நீண்ட கெண்டைமீன்கள் வாசனைபொருந்திய தாமரைப்பூவினுறங்கும்புட்பங்கள் நிறைந்திருக்கும் தேமா மாத்தினது சோலையின் குளிர்ச்சிபொருந்திய நிழலில் கரு மையாகிய எருமை நித்திரைசெய்யும்.—(எ-று) (உ)

வன்னிலைமள்ளருகைப்பவெழுந்தமரக்கோவைப் .....*
பன்முறைவந்தெழுமோசைபயின்றமுழக்கத்தா .... *
லன்னமருங்குறைதண்டுறைவாவியதன்பாலைக் ... .*
கன்னலடும்புகையான்முகில்செய்வகரும்பாலை .....*

(இதன்பொருள்.)

வலிமைபொருந்திய பள்ளர்கள் மாடுகள்பூட்டி யோட்டுதலால் சுற்றுகின்ற கரும்பாலையின் அவயவமாக இணைத்திருக்கும் மரங்களிடத்திருந்து எழுந்தபாதின்ற அதிர்ச்சியோடுகூடிய ஓசையினாலும் அன்னங்கள்வாசஞ்செய்கின்ற குளிர்ச்சிபொருந்திய துறையையுடைய தடாகங்களின்பக்கங்களில் கருப்பஞ்சாற்றைக்காய்ச்சுகின்ற புகையாலும், மேகத்தின்றுபோன்ற முழக்கமும், உருவமும்புலப்படுகின்றன.—(எ-று) (ஐ சாரியை.

பொங்கியமாநதிநீடலையுந்துபுனற்சங்கந் ... . *
துங்கவிலைக்கதலிப்புதன்மீதுவதாடச்சிப்போய்த் .... .. *
தங்கியபாசடைசூழ்கொடியூடுதவழ்ந்தேறிய.. .. ..*
லைங்கமுகின்றலைமுத்தமுதிர்க்குவபாளையெனக் .....*

(இதன்பொருள்)

பிரவாகமாகப்பொங்குகின்ற பெரியநதியினுடைய அலைகளால் ஒதுக்கப்பட்ட நீரிலிருக்கின்றசங்குகள் உயர்வாகிய கதலிப் புதலின்மீதுதவழ்ந்துபோய் அவ்வாழைஇலையைச்சுற்றியகொடிகளின்வழியாகத் தவழ்ந்து பசுமைபொருந்திய கமுகமரத்தின்தலைமேல் ஏறி அம்மரத்தின்பாளை புஷ்பத்தையுதிர்ப்பதுபோல் முத்துகளைச்சொரிகின்றன.—(எ-று) (ச)

அல்லிமலர்ப்பழனத்தயனாளைவானீனு. .....*
மொல்லைமுழுப்டையுகைப்பினுழக்குமுழக்கன்று .....*
சொல்லைமடக்குறுமான்மறியோடுகுதித்தோடு. .....*
மல்குவளத்ததுமுல்லையுடுத்தமருங்கோர்பால் ....*

(இதன்பொருள்)

அல்லிமலர்களையுடைய வயல்களின்பக்கத்தில் மிகவும்இளமை

பொருந்திய பசுவான து பெறுகின்ற-சீக்கிரத்தில்கர்ப்பப்பை யை உறைத்துக் கலக்கிய இளங்கன்றான து கொல்லையிலிருக்கும் அறியாமையுள்ள சிறியமான்கன்றுகளோடு குறித்தோடுகின்ற நிறைந்த வளத்தையுடையது- முல்லைநிலத்தை அடுத்திருக்கின்ற ஒருபுறம்.—(எ-று) (கு)

தண்மலர்காவிளர்பாயவிருப்பனகார்முல்லைத் . . . . . *
தண்ணறைகைவெண்முகைமேவுசுரும்புகடஞ்சாலிப். . . . . *
பண்ணைபெழுங்கயல்பாயவிருப்பனகாயாவின். . . . . *
வண்ணறறுஞ்சினைமேவியவம்சிறைவண்டானம். . . . . *

(இதன்பொருள்.)

கார்காலத்தில் மலர்கின்றமுல்லையின்-குளிர்ச்சியும் பிரகாசமும் வெண்மையுமுள்ள அரும்பை அடைந்திருக்கின்ற வண்டுகள் தேன்தங்கியநீலோற்பலமலர்களில் பாய்ந்திருக்கின்ற வலிய சிறகினையுடைய பட்சிகள் நெற்பயிர்வளர்கின்ற விசாலமாகிய வயல்களிலிருந்து எழுகின்ற மீன்கள்பாய - காயாமரத்தினது அழகிய வாசனைபொருந்திய கிளைகளில் மேவியிருக்கின்றன —(எ-று) (சு)

பொங்கரில்வண்டுபுறம்பலைசோலைகண்மேலோடும். . . . . *
வெங்கதிர்தங்கவிளங்கியமேன்மையுறன்றாடா . . . . . *
மங்கலமாமலைவின்றருங்கலமாகவதற்கேயோர் . . . . . *
மங்கலமானதுமங்கலமாகியவாழ்மூதூர் . . . . . *

(இதன்பொருள்.)

மரக்கொம்பிலிருக்கின்ற வண்டுகள்புறத்தில் விலகுகின்ற சோலைகளின்மேல் ஓடுகின்ற வெவ்விதாகிய சூரியன்தன்படுதலால்- சிறிதுபொழுது தங்கவிளங்குகின்ற மேன்மைபொருந்திய மழைநாடென்றுருநாடு- அந்தநாடானது பூலோகத்திற்கு அருமையாகிய ஒரு ஆபரணமாகவிளங்க அதற்கு மங்களமாயிருக்கின்றது மங்கலமென்றுசொல்லப்பட்டு யாவரும் வாழ்தற்கிடமாகிய ஒப்பற்றபழமையாகிய ஊர்.—(எ-று) (எ)

ஒப்பில்பெருங்குடிநீடியதன்மையிலோவாமே. . . . . *
கப்பில்வளங்கள்பெருகியறம்புரிசால்போடுஞ். . . . . *
செப்பவுயர்ந்தசிறப்பின்மலிந்ததுசீர்மேவு. . . . . *
மப்பதிமன்னியவாயர்குலத்தவரானாயர். . . . . *

(இதன்பொருள்.)

சிறப்புப்பொருந்திய மங்கலமென்கின்ற அந்தநகரத்தில்நிலை

பெற்றுவாழ்கின்ற ஆயர்குலத்தில்அவதரித்த ஆனாயனொன் பவருடைய ஒப்பில்லாத பெருமைபொருந்திய குடியானது விருத்தியாகிற தன்மையினின்றுங் குறையாமல் குற்றமற்ற இலாபத்தைநிறையஅடைந்து தருமஞ்செய்தலோடு சொல்லுதற்கரிய சிறப்புகளாலும் விளங்கினது.—(எ-று) (அ)

ஆயர்குலத்தைவிளக்கிடவந்துதயஞ்செய்தார் .....
தூயசுடர்த்திருநீறுவிரும்புதொழும்புள்ளார் .....
வாயினின்மெய்யின்வழுத்துமனத்தின்வினைப்பாலிற்
பேயுடனாடுபிரானடியல்லதுபேணாதார் .....
(இதன்பொருள்.)

ஆயருடையகுலத்தைப் பிரசித்தமாகச் செய்யும்பொருட்டு வந்துஅவதரித்தவர்.பரிசுத்தமான பிரகாசத்தையுடைய திருநீறுவிரும்பித்தரிக்கும் பத்தியையுடையவர் - வாக்கு-காயம்-மனது-இவைகளால்துதித்தலும்,வணங்குதலும்,நினைத்தலுமாகிய செய்கையோடு பேயோடு ஆடுகின்ற பரமசிவனதுபாதமல்லதுவேறொன்றையும் விரும்பாதவர்.—(எ-று) (கூ)

ஆனிரைகூடவகன்புறவிற்கொடுசென்றேறிக் ...
கானுறைதீயவிலங்குறுநோய்கள்கடிந்தெங்குந் ...
நூறறுமென்புலருந்திவிரும்பியநூறீறுண் ...
நீனமிலாயமுலப்பிலபல்சுவைவித்துள்ளார் .....
(இதன்பொருள்)

மாட்டுமந்தைகள் முழுதும் அகன்ற இடத்தையுடையகாட்டிற்கொண்டுபோய்க் காட்டிலுள்ளபுலிமுதலானதீயமிருகங்களால் உண்டாகிறதுன்பத்தைதீர்க்கி எங்கும்- பரிசுத்தமாகிய நல்லமென்மையுள்ள புல்லைத்தின்று விரும்பத்தக்கநீராயுண்டுகெடுதியில்லாத குறைவற்ற கூட்டமாய் விருத்தியாகக் காப்பாற்றுகின்றவர்.—(எ-று) (ஙு)

கன்றொடுபால்மறைநாகுகறப்பனபாலாவும் ...
புன்றலைமென்சினையாலெடுநீடுபுனிற்றாவும் .....
வென்றிவிடைக்குலமோடுமினத்தொடும்வெவ்வேறே ...
துன்றிநிறைந்துளசூழலுடன்பலதோழங்கள் .....
(இதன்பொருள்)

கன்றுகளும்,பால்மறந்த மாடுகளும், நாகுகளும்,பால்கொடுக்கின்ற மாடுகளும், அதிபமாகியமயிர்களுள்ள தலையினையுடைய சினைமாடுகளும், நூதனமாகக் கன்றினையீன்ற மாடுகளும்,

பலம்பொருந்திய ரிஷிபக்கூட்டங்களும், இனமாகச்சேர்ந்து வெவ்வேறாக நெருங்கி நிறைந்திருக்கும் அனேக இடங்களும், பலதொழுவங்களும் இருக்கின்றன.—(எ-று) (மக)

ஆவினிரைக்குலமப்படிபல்கவளர்த்தென்றுங் ....*
கோவலரோவன்புரிந்திடவாயர்குலம்பேணுங்... ....*
கரவலர்தம்பெருமானடியன்புறுகானத்தின் ....*
மேவுதுளைக்கருவிக்குழல்வாசனைமேல்கொண்டார் ... .*

(இதன் பொருள்.)

மாடுகளின்கூட்டம் இவ்விதமாக விருத்தியடையக் காப்பாற்றி யெந்நாளும் இடையர்கள் இட்ட வேலைசெய்ய ஆயர்குலத்தை ரக்ஷிக்குந்தலைவராகிய ஆனையனார்-தமக்கு ஆண்டவராகிய பரமசிவனது திருவடியைக்குறித்துத் துளைக்கருவியாயிருக்கும் புள்ளாங்குழலின் வழியாக இசைபாடவேண்டுமென்னும் விருப்பத்தை மேஷ்மையாக உட்கொண்டார்.—(எ-று) (மஉ)

(வேறு)

மூந்தைமலறநூன்மரபின்மொழிந்தமுறையெழுந்தவே ..*
யந்தமுதனுரிரண்டிலரிந்துநரம்புறுதானம் .....*
வந்தகுளைநிரையாக்கிவாயுமுகல்வழங்குதுளை ....*
யந்தமில்சீரிடையிட்டினங்குலியெண்கவினமைத்து .....*

(இதன் பொருள்)

புராதனமாயிருக்கின்ற காந்தருவவேதத்தில் சொல்லியிருக்கின்றபிரகாரம் நன்றாகவளர்த்திருக்கு மூங்கிலில் நுனியில்-நாலுபங்கும், அடியில் இரண்டுபங்கும், ஒழிந்த நடுவிலுள்ள பாகத்தை அறுத்துக்கொண்டு*மெட்டுக்களிருக்கவேண்டிய இடங்களில் வரிசையாகத் துவாரங்களையுண்டாக்கிக் காற்றுண்டாகிறதற்கு ஓர் துளையையும் அமைத்துத் துவாரத்திற்கும் துவாரத்திற்கும் நடுவில் ஒவ்வோர் அங்குல அளவு இருக்கக் குற்றமில்லாத சிறப்பினையுடையதாகச் செய்து —(எ-று)(அந்த முதனுரிரண்டிலரிந்து என்பதற்கு) ஒருமூங்கிலைப்பன்னிரண்டுபங்காக்கி அடியில்நாலுபங்கும், நுனியில் நாலுபங்குந்தள்ளி நடுவிலிருக்கும் நாலுபங்கினையும் அறுத்தெடுத்துக்கொண்டு என்பாருமுளர். இச்செய்யுளால் மூவகைச் சோதனையில் வஸ்துசோதனை-காலசோதனையென்கிற இரண்டும் பெறப்பட்டன. அவற்றுள் வஸ்துசோதனையாவது-புள்ளாங்குழல் இன்ன இன்ன மரங்களில் செய்யப்படவேண்டுமென்றும் இவ்வளவு அங்குலமுள்ளதா யிருக்கவேண்டுமென்றுந் அறிதலாம்.

* மெட்டு-இராகம்.

காலசோதனையாவது-எல்லாத் தாளங்களும் இசையும்படி பாடத் துவாரங்களைத் தகுந்த இடத்தில் ஏற்பட்ததி நிச்சயித்தல்.

எடுத்தகுழற்கருவியினிலெம்பிரானெழுத்தஞ்சுந் . . . . . *
பொடுத்தமுறையேழிசையின் கருதிபெறவாகித்துத் . . . . . *
தடுத்தசாரசரங்களெல்லாந்தங்கவருந்தங்கருணை . . . . . *
யடுத்தவிசையமுதளித்துச்செல்கின்றாரங்கொருநாள் . . . . *

(இதன் பொருள்)

மேற்சொன்னபடி அமைக்கக் கையிற்பிடித்த புள்ளாங்குழலால் எமக்கு ஆண்டவராகிய கைலாசபதியினது ஐந்தெழுத்தைந்தினையும் முறையாக இருக்கின்ற ஏழுசுரங்களின் அமைவு பெறக் கேள்செய்து பூமியில் சிருஷ்டிசெய்து வைக்கப்பட்டிருக்கும் சாரமும், அசாரமுமாகிய எல்லாவற்றிலும் சிறந்திருக்கும் தமக்கு உண்டாயிருக்கும் அன்பினால் பாடுகின்ற இசையாகிய அமிர்தமுதைக்காதுள்ளழியாகப் புகட்டிப்போய்க்கொண்டிருக்கின்றவர் அப்படியிருக்கையில் ஒருநாள். எ-று (மச)

வாசமலர்ப்பிணைபொங்கமயிர்தழுதிமருங்குபரர்த . . . . . *
தேசுமை யசிகழிகையிற்செறிகணணிதொடைசெருக்கி . . . *
பாசிலை மென் கொடியின்வடம்பயிலுறுவிலிபுனைந்து . . . *
காசறுநாணதற்கயலேகருஞ்சுருளினபுறங்கட்டி . . . . . *

(இதன் பொருள்)

மணம்பொருந்திய மலர்களாற் பிணைக்கப்பட்ட மாலையான து பிரகாசிக்க-கோதப்பட்டு உயர்வும் காந்தியும் உண்டாக-முடிக்கப்பட்ட மயிர்முடியில் நெருக்கமாகக் கட்டப்பட்டிருக்கும் கண்ணிமாலையைச்செருகி மேன்மையாகிய பச்சிலைக் கொடியை வடமாகத்தரித்து நறுவிலியிலையைத் தரித்துக் ருத்திரமற்ற சாபித்தினால் கருமையாய்ச் சுருளாயிருக்கிற பச்சிலைகளின்புறத்திலகட்டி.—(எ-று) (மரு)

வெண்கோடலிலைச்சுருளிற்றைபந்தோட்டுவினைத்தோன்றித் . *
தண்கோலமலர்புனைந்தவடிகாதினொளிதயங்கத் . . . . . *
திண்கோலநெற்றியின்மேற்றிருநீற்றினொளிகண்டோர் . . . . *
கண்கோடலிறைந்தாராக்கவின்விளங்கவிசையணிந்து . . . . . *

(இதன்பொருள்.)

வெண்காந்தளினிலையைச் சுருளாகச்செய்து அதில் பசுமையாகிய புறவிதழையுடைய மணமுள்ளசெங்காந்தட் பூவையைத் துத்தரித்த நீண்டகாதினது பிரகாசமின்ன மிகுந்த அழகுள்ள நெற்றியின்மேலாகத் திருநீற்றினது காந்தியைக்கண்டவர்க

னுடைய கண்கள் நன்றாகப்பார்த்தும் திருத்தியில்லாமலிருக்
கத்தக்க அழகுண்டாக அந்த விபூதியைத் தேகத்திலுந் தரித்
து.— (எ-று) (டஅ)

நிறைந்தநீறணிமார்பினிளமுலைமுகைசுருக்கிச் . . . . . .*
செறிந்தபுனைவடந்தாழ்த்திர்மேனின்புடையலங்க. . . . . .*
லுறைந்தசுரும்பிசையருர்பவளாயுடுத்தமரவுரியின். . . . . .*
டறந்தழையின்மலிதானைப்புனைப்பட்டுப்பொலிந்தசையம். . .*

(இதன்பொருள்.)

நிறைவாக விபூதியைத்தரித்தமார்பில் முலையரும்பை நிரை
யாகவைத்துக் கட்டிச்சுருக்கியதால் நெருங்கிய மாலையானது
தேனுண்ணவிழைந்தவண்டுகளின் இசையொழுங்பத்தரிக்கப்பட்
டதாழ்வடத்தோடு தாழ இடையிலுத்தரித்த மரவுரியின் பின்புற
த்தில பச்சைப்பூப்பட்டுப்பொலிசாகிப்பத் தழையாற்செ
ய்யப்பட்ட ஆடைவிளங்கி அசைந்துகொண்டிருப்ப —(எ-று)

சேவடியிற்றொடுமிதோ ஞ்செங்கையினிவெண்கோலு. . .*
மேவுமிசைவேய்ங்குழலுமிசைவிளங்கவினைசெய்யுங் . . . . .*
காவலபுரிவலலாயர்கன்றுடையாவிளாசூழப். . . . . .*
பூவலர்தார்க்கோவலனார் நிலாவாகக்கட்புறமபோந்தார் . . . *

(இதன்பொருள்)

சிவப்பாகிய பாதத்திற்றாத் தரிக்கின்றசெருப்புச்செய்யகையி
லவெண்மைபொருந்திய கோலும், இசைபாடுகின்ற புள்ளாங்
குழலும், மிகவும்பிரகாசிக்க,மேய்க்குந்தொழிலைச்செய்துகா
க்கின்ற வலிய இடையர்கள் கன்றுகளையுடைய மாட்டுமந்தை
யைச் சூழ்ந்துகொண்டுவர மலர்கள் விளங்கிய மாலையைத்
தரித்த ஆனையநாயனார் - அந்தநிலையைக்காக்கும்படி புறத்தில்வந்
தார்.—(எ-று) (டஅ)

நீலமாமஞ்சுளையேங்கநிலாக்கொடிபுறவம்பாடக். . . . . .*
கோலவெண்முகையேர்முல்லைக்கோபம்வாய்முறுவல்காட்ட*
வாலுயின்னிடைசூழ்மாலைப்பசியாதரமசையவந்தாள் . . . .*
ஞாலநீடரங்கிலாடக்காரொளிப்பருவநல்லாள்... . . . . .*

(இதன்பொருள்)

பெருமைபொருந்திய நீலநிறத்தையுடைய மயிலானது சப்தி
க்க,வரிசையாகக்கொடிகளையுடைய முல்லைநிலம்பாட-இந்திர
கோபமாகிய வாயையும்அழகும்வெண்மையுமுள்ளமுல்லையரு
ம்பாகிய பற்களையும்காண்பித்து சலிக்கின்ற மின்னலாகியஇ
டையோடு சூழ்ந்த மாலைப்பசியோதாம் அசையும்படியாக வந்

தான்-பூமியாகிய நீண்ட நாட்டியசபையில், கார்காலமாகிய பெண்ணானவள்.—(எ-று) இதனால் மழைக்காலம்வந்ததென்பதாம். மாலைப்பயோதரத்திற்கு மாலைக்காலத்தில் தோன்றுகின்றமேகம் அசையவெனவும், மாலையைத்தரித்தஸ்தனங்கள் குலுங்கவெனவும், சிலேஷைப்பொருள் செய்துகொள்க. (ம௯)

எம்மருங்குநிலாபரப்பவெடுத்தகோலுடைப்பொலுவர் . . . *
தம்மருங்குதொழுதனையத்தண்புறவில்வருந்தலைவ . . . . . *
சாம்மருங்குதாழ்தசினையலர்மருங்குமதுவுண்டு . . . . . *
செம்மருந்தண்கரும்புசுழல்செழுங்கொன்றைமருங்கணைந்தார்

(இதன்பொருள்)

நாற்புறத்திலும் மாட்டினிரையானது பரவக் கையிற் கோலைபிடித்திருக்கும் இடையர்கள்தம்மிடத்தில் தொழுதுவணங்கக்குளிர்ச்சிக்கிடமாகிய முல்லைநிலத்தினது காட்டிலவருகின்றஆனையனார்-அவ்விடத்தில் தாழ்ந்திருக்கலுங்கொம்புகளிற் பூத்தமலர்களில் உள்ள தேனையுண்டு களிப்படைந்து வண்டுகள்சுழல்கின்ற செழுமைபொருந்திய கொன்றைமரத்தின் சமீபத்தில் போனார்.—(எ-று) (உ௰)

சென்றணைந்தவானையர்செய்தவினைத்தாமமென . . . . . *
மன்றன்மலர்த்துணர்தூக்கிமருங்குதாழ்சடையார்போ . . . . *
லின்றநறுங்கொன்றையினைநேர்நோக்கிநின்றுருகி . . . . . *
யொன்றியசிந்தையிலன்பையுடையவர்பான்மடைதிறந்தார் . *

(இதன்பொருள்)

சமீபத்தில்போயின ஆனையர் கட்டப்பட்ட வாசனைபொருந்திய மாலையைப்போல்பரிமளமாயநீண்ட பூங்கொத்துக்களைத் தாங்கிப்புறத்தில்தாழ்கின்றசடையினையுடையபரமசிவன்போல்நிற்கின்ற கொன்றைமரத்தை நேராகப்பார்த்துநின்று உருக்கத்தையடைந்து பொறிகளின்வழியிற்செல்லாமல் அடங்கிய மனதில்அன்பினையுடையவராய்ச்சுவாமியைக்குறித்துக் கடல்மடைதிறந்ததுபோல் சங்கீதம்பாடத் தொடங்கினார்.—(எ-று)

அன்பூறிமிசைபொங்குமமுதமிசைக்குழலொலியால் . . . . . *
வன்பூதப்படையாளியெழுத்தைந்துமெழுத்திந்தா . . . . . *
முன்பூதிருமுளவின்முறைமையேயெவ்வுயிரு . . . . . *
மென்பூகைநாத்துருக்குமின்னிசைவேய்ங்கருவிகளில் . . . . *

(இதன்பொருள்)

அன்பினாலேஊறி மேலேபொங்குகின்ற அமிர்தம்போன்ற ச

நீதேத்தைத்தருகின்ற புள்ளாங்குழலின் ஒலியினால் வலியபூதங்களைப் படையாகவுடைய பரமசிவனது ஐந்தெழுத்தையும் ஸ்தோத்திரஞ்செய்து தாம்- மூன்புஊதிக்கொண்டுவருகின்றமுறைமைப்படி எல்லாவுயிர்களும் எலும்புங்கரைந்துருகும்படி செய்கின்ற இனிய இசையையுடைய துளைக்கருவியாகியபலவகைப் புள்ளாங்குழல்களில்.—(எ-று) பலவகைப்புள்ளாங்குழலாவன-முப்பத்திரண்டு துவாரங்களையுடைய ஷட்சாதி *முரளியும் ஒன்பது துவாரங்களையுடைய பஞ்சமாதிமுரளியு முதலானவைகளாம். (உஉ)

எழுவிரலிடையிட்டவின்னிசைவங்கியமெடுத்துத் . . . . . *
தாழுமலர்வரிவண்டுதாதுபிடிப்பனபோலச் . . . . . *
சூழுமுரன்றெழுதின்றுதூயபெருந்தனித்துளையில். . . . . *
வாழியநற்றோன்றலார்மணியதரம்வைத்துத . . . . . *

(இதன்பொருள்.)

ஒவ்வொருதுளைக்குப் புறத்திலும் ஒவ்வொருவிரலளவு இடம் விட்டிருக்கும் எழுதுவாரங்களைப்பொருந்திய இனிய இசையையுடைய வங்கியமென்னும் ஒருவகைப் புள்ளாங்குழலையெடுத்து மலரில்விழுகின்ற வரிபொருந்தியவண்டுகள் அந்தமலர்களின் தாதுக்களைப்பிடித்துக்கொண்டு அசையாமல் (ஊதுதல்போல) நாற்புறமும் குற்றமற்ற சங்கேதத்தொனியானது நிறைய சொல்லிய லக்ஷணந்தவறாமல் பெருமைபெற்றபுள்ளாங்குழலின் துவாரத்தில் அழகுபொருந்திய அதரத்தைவைத்து ஊதுவது.—(எ-று) வங்கியமென்றதனால். இக்காலத்தில் பெரும்பான்மை வழங்குகின்ற குழலென்பதாயிற்று. (உரு)

முத்திரையேமுதலனைத்துமுறைத்தானஞ்சோதித்து. . . . . *
வைத்ததுளையாராய்ச்சிவककானைவழிபோக்கி . . . . . *
யொத்ததிலையுணர்ந்ததற்பினொன்றுமுதல்படிமுறையால் . . *
மத்தகைமையாயோசையமரோசைகளினமைத்தார் . . . . . *

(இதன்பொருள்)

முத்திரையென்கிற-ஸ்தானமுதலாக முறையாகவுள்ள எல்லா ஸ்தானங்களையுஞ் சோதித்து ஏற்படுத்தப்பட்ட துளைவழியே இராகசோதனையாகிய விரல்களைச்செலுத்தி அந்தஸ்வரங்களெல்லாம் ஒத்து இசைக்கக்கண்டபிறகு சட்ச்சத்தில் நின்று வரிசையாக நிஷாதம்வரைக்கும் எச்சு- தக்கு-என்னும் இவ்விரண்டு ஓசைகளையும் அந்தச்சுரங்கள் பெறும்படி யமைத்து

*முரளி=புள்ளாங்குழல்.

உயர்வானதருதியாகப் பாடினார்.—(எ-று) வக்கானையென்பது-எல்லாராகங்களும் இந்த ஆறுதுவாரங்களினாலேயே உண்டாகும்படி விரல்களினால துளைகளின்முன்பக்கமும், பின்பக்கமும், அழுத்தியும், மெலித்தும், சமஞ்செய்தும்சோதித்தல்.இது-இராகசோதனையைத் தெரிவித்தது. முதிதிரையென்பது-ஆரோகணமுறையில்- இரண்டாந்துளை. அதற்கு முதலிலிருக்குந்துளை அனுசரணியென்றுசொல்லப்படும். (உச்)

மாறுமுதற்பண்ணினபின்வளர்முல்லைப்பண்ணுக்கி.. .... *
பேறியதாரமுமழையுங்கிழமைகொளவிடுத்தன .... *
மாறுலவுஞ்சடைமுடியாரஞ்செழுத்தினிசைபெருகக். ... *
கூறியபட்டடைக்குரலாங்கொடிப்பாலையினிசைமுத்தி ... .. *

(இசைபொருள்.)

முதலில்விஷமமாகப்பாடிலபின்பு அந்நிலத்திற்றுரியமுல்லைப்பண்ணைப்பாடியயர்வாகியதாரம்-உழையென்கிறதுவிண்டு இசையின் உரிமையைத்தெரிவிக்கின்ற ஸ்தானவழியாக கங்கையுலாவுகின்றசடைமுடியையுடையபரமசிவனது ஐந்தெழுத்தையுங்கானம்பண்ணுதல்விருத்தியடைய அழுத்தமுள்ள குரலாகிய கொடிப்பாலைப்பண்ணில் நிறுத்தி.— எ-று) தாரம்-உச்சவிசை. அதுமூக்கால் உண்டாவது உழை. தலையை யிடமாகவுடைய இசை. (கொடிப்பாலைப்பண்ணாவது நெஞ்சையிடமாகவுடைய இளியென்னும்பண்ணே குரலாகஎழும்புவது. உரு)

ஆயவிசைப்புகலுங்கின்மைந்தபுகல்வகையெடுத்து..... *
மேயதுளைப்பற்றுவனவிடுவனவாம்விரனிரையிற்.... .. *
பேசயவொளியிடையலையத்திருவாளனெழுத்தஞ்சுந் .... .. *
தூயவிசைக்கிளைகொள்ளுந்துறையஞ்சின்முறைவிளைத்தார். *

(இதன்பொருள்)

மேன்மைபொருந்திய ஸ்திதி-பிரக்கிரமம்-சஞ்சாரம்-மூர்ச்சனையென்கிற நான்குவகைகளையும் தருதியான பிரகாரம் எடுத்துப் புள்ளாங்குழலின் துளைகளைப்பொத்துதலும் விடுதலுஞ்செய்கின்ற நிலையாயிருக்கின்ற விரலில் அவ்விரல்களின் செய்யபிரகாசமான நடுவில்-நடுவில்-தடும்பிவிளங்க-பரமசிவனது ஐந்தெழுத்தையுங்குறிமறாஇசையினதுபிரிவாயிருக்கின்ற ஐவகைத்துறையினு முறையாகப்பாடினார்.—(எ-று) இசைத்துறை ஐந்து-ஆயத்தம், எடுப்பு-உத்திரகம்-சஞ்சாரம்-இடாயம் என்பனவாம், ஆயத்தம் மந்தாரத்தில்நின்றும் அனுமந்தாரமாகிய கீழ்ஸ்தாயிவரைக்குஞ் செல்லு முன்ஸ்தானத்தி

லைவத்து முடிந்தது; உடுப்பு - மந்தாரத்திலிருந்து பஞ்சமசா ம்ஸ்வாக்கும்போய் மறுபடியும் மந்தாரத்தில்வந்து முடிவது. உதிசாகம் - மந்தாரமுதற்கொண்டு தாரகஸ்தானம் வரைக்கும் போய்ப் பின்னுமந்தாரத்தில் வந்து முடிவது. சஞ்சாரம் மந்தாரத்திலிருந்து மந்திமம்-தாரகம்-இவ்விரண்டிலும் போய் இற்றைப் பின்தேஸ்தாயியான அனுமந்தாரத்திலுஞ் சென்று மீண்டு மந்தாரத்தில்வந்து நிற்பது இடாயம், மந்தாரஸ்தானத்தையே முதன்மையாகச்செய்துகொண்டு- மந்திமதாரகம் இவ்விரண்டிலுஞ்சென்று பின்பு மந்தாரத்தையே வலியுறுத்தி அனுமந்தாரத்திற்சென்று மீண்டு மந்தாரத்தில்முடிவது. (உஉ)

மந்தாரத்துமத்திமத்துந்தாரத்துமம்வரன்முறையாற்.. ..... *
றந்திரிகண்மெலிவித்துஞ்சமங்கொண்டுவலிவித்து .. .... *
மந்தரத்துவிரற்றொழில்களளவுபெறவசைத்தியக்கிச்.. .... *
சுந்தரச்செங்கனிவாயுந்துளைவாயுந்தொடக்குண்ண ..... *

(இதன்பொருள்.)

மந்தாரம், மத்திமம், தாரகம், இம்மூன்றுசுருதிகளையும் வரன்முறையாகத் தெரிவிக்கும் துவாரங்களை விரலால் மென்மையாகப்பொத்தியும், சமமாகச்செய்தும், அதன்பின்வன்மையாகப்பொத்தியும், இம்மூன்றுதுவாரமுமல்லாத மற்றைத் துளைகளில் விரல்களால் சுருதிகளின் அளவுகுறையாமல் அசைத்து இயங்குவித்தும் அழகுபொருந்திய சிவப்பாகிய வாயும் புள்ளாங்குழலின் துவாரவாயும் ஒன்றுபட்டிணங்க. (எ-று) (மந்தாரம்) தாழ்ந்தசுருதி. (மத்திமம்)சம்மாகியசுருதி. (தந்திரி) ஆகுபெயர்.

(உஎ)

எண்ணியநூற்பெருவண்ணமிடைவண்ணம்வனப்பென்னு.ம்*
வண்ணவிசைவகையெல்லாமாதுரியநாதத்தி .... *
ன்னணியபாணியுமியலுந்தூக்குநடைமுதற்கதியிற்.. .... *
ப்பண்ணமையவெழுமோசையெம்மருங்கும்பரப்பினுர்.... *

(இதன்பொருள்.)

உயர்வாக நினைக்கும்படி சொல்லியிருக்கும் சாஸ்திரத்தில் பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு என்கின்ற மூவகையிசையோடுமற்றவைகளெல்லாம்இனிப்பாகியநாதத்தால் இராகமும், அதன்மூர்ச்சனையும், ஏற்றமும்விளம்ப கதியின் உற்றுப்பொருந்த எழுகின்ற ஓசையை நான்குபுறத்திலும் பரவச்செய்தார். —(எ-று) பெருவண்ணம்- நெட்டெழுத்துக்களையே தொடுத்துப்பாடுவது. இடைவண்ணம்-இடையெழுத்தே மி

குதியாகவருவது. வளப்பு-எழுத்துக்கள் ஒன்றினொடொன்று பிணவுபடாம லிசைந்து அழகுபொருந்தியிருப்பது. (உஅ)

வள்ளலார்வாசிக்குமணித் துளைவாய்வேய்ங்குழலி .. .:... *
னுள்ளுறையஞ்செழுத்தாகவொழுகியெழுமமுதவொலி .. *
வெள்ளநிறைந்தெவ்வுயிர்க்குமேலமர்தருவிளைதேன் . *
றெள்ளமுதினுடன்கலந்துசெவிவார்ப்பதெனத்தழைக்க .. *

(இதன்பொருள்.)

ஆலயனார் வாசிக்கின்ற அழகிய துவாரங்கள்பொருந்திய புள்ளாங்குழலினுள்ளே சொல்லத்தக்க மொழி பஞ்சாக்ஷரமாகி அதைக் கானம்பண்ணுதலால் எழுகின்ற இனிதாகிய ஓசைவெள்ளமானது நிறைவுபெற்று மேன்மைபெற்ற தேவதருவின் தேனைத்தெளிந்த அமிர்தத்துடனே கலந்து காதில்வார்ப்பது போல் சுலவயுண்டாய் நிறைய.—(எ-று) (உஙு)

ஆனிரைகளறுகருந்தியசைவிடாதணைந்தயரப் .... *
பானுனைவாயித்தாய்முலையிற்பதிறுமிளங்கன்றினமுந் ..... *
தானுணவுமறந்தொழியத்தடமருப்பின்விடைக்குலமு .... *
மான்முதலாங்கான்விலங்குமயிர்முகிழித்துவந்தணைய... .. *

(இதன்பொருள்.)

பசுக்கூட்டங்கள் அறுகம்புற்களை உண்டு அசைவு இடாமல் இவளை அடைந்து உருக்கத்தினால் மெய்மறக்க - வெளுப்பாகிய நுரையினை வாயினுடையனவாகித் - தாயின்முலையைப்பற்றிக் கொண்டிருக்கும் இளமையாகிய கன்றுகளின் இனமும், பாலுண்ணுதலைமறந்துவிட்டுஇசைகேட்டுக்கொண்டிருக்க-விலாசமாகிய கொம்புகளை உடைய ரிஷப்க்கூட்டங்களும், மான்முதலாகிய காட்டுமிருகங்களும், மயிர் சிலிர்த்துக்கொண்டுவந்து சேர.—(எ-று) (ஙூ)

ஆடுமயிலினங்களுமங்கசைவயர்த்துமருங்கணுக .... *
ஆடுசெவியிசைதிறைந்தவுள்ளமொடுபுள்ளினமு.. .... *
மாடுபடிந்துணர்வொழியமருங்குதொழில்புரிந்தொழுகுங்.. *
கூடியவன்கோவலருங்குறைவினையின்றுறைதின்றார் .. .... *

(இதன்பொருள்.)

காட்டில் ஆடுகின்ற மயிற்கூட்டங்களும், ஆடுதலொழிந்து சமீபத்தில்வரப் பலவகைப்பட்சிகளும், காதில்வழியாகப்போய் ஹிதம்நிறைந்த அகத்தோடுஅருகில்வந்துஉணர்வொழிந்து நிற்க-பக்கத்தில மாடுமேய்த்தல் முதலிய தொழிலைச் செய்து கொண்டிருக்கும் வலிய இடையர்களும், தாங்கள்செய்யும்வே

லூரில் நின்றும் ஒழித்து கானத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.—(எ-று) (௩௪)

பணிபுவனங்களினுள்ளார் பயில்பிலங்கள் வழிபணைந்தார். .. *
மணிவரைவாழ் மரகதவிர் மருங்குமயக்கினர்மலிந்தார் .... *
தனிவிலொலிவிஞ்சையர்கள் சாரணர்கின்னரமா .... *
சலிவிகம்பினையர் வெய்திவிமானங்கண்மிசையணைந்தார் .. *

(இதன் பொருள்.)

நாகலோகத்திலுள்ளவர்கள் இந்தப்புள்ளாங்குழலி விசையைக் கேட்டுத் தங்களுக்கு ராகலியம் ஒழியாயிருக்கிறபிலங்களின் வழியாகப் பூலோகத்திற்குவந்தார்கள்-அழகுபொருந்திய மலைகளில் இருக்கும் தேவப்பெண்கள் அருகில்வந்து நிறைந்ததேத்தால மயக்கத்தை அடைந்தார்கள்-குறைவில்லாத தேகவாத்தியமுடையவித்தியாதரர்களும் சாரணர்-கின்னரர்-தேவர்களும் மெய்மறந்து அழகிய ஆகாயவுலகத்தில் நின்றும் விமானங்களி லேறிவந்து அடைந்தார்கள் —(எ-று) (௩௬)

சரமாளிர்கதிபகப்பூஞ்சோலைகளின்மருங்கிருந்து .... .. *
சாமலரினழுதூட்டுக்கனிவாயிமெங்கிள்ளையுடன் ..... *
விரவுற்றுங்குழலிலையிமானங்களிவாந்தேதிப் .... *
பாவியவேழிசையமுதஞ்செவிமடுத்துப்பருகினார் .... .. *

(இதன் பொருள்)

தேவஸ்திரீகள் புஷ்பங்களையுடைய கற்பகச்சோலைகளினிடத்தினின்று மலர்போன்ற கைகளில் அமிர்தத்தையெடுத்து ஊட்டுகின்ற-பழம்போல் சிவப்பாகிய வாயினையுடைய மெல்லிய கிளிகளுடன்வாசனைநிரவியும் பூசியிருக்கிறகூந்தலையுடைய தேவமாலைகளில் துரிதப்பட்டு எரிநாடிபுறத்திலும்பரந்தவேழுசுரங்களாலுண்டாகிய சங்கீதமாகிய அமுதத்தைச் செவியினால்நிறைய உண்டார்கள்—(எ-று) (௩௭)

நலிவாருமெலிவாருமுணர்வொன்றுநயத்தலினான் .. .... *
மலிவாய்வெள்ளெயிற்றாலமயிலிமுமருண்டுவிழுஞ் .. .... *
சலியாதநிலைபரியுந்தடங்கரியுமுடன்சாரும் .. .. *
புலிவாயின்மருங்கணையும்புல்வாயபுல்வாயும் ... ... *

(இதன் பொருள்)

இடையூறுசெய்யத்தகவலியுடையவர்களும், அந்த இடையூற்றுக்கு உட்படுகின்ற எளியவர்களும், பேதமில்லாமல்மனம் ஒன்றுபட்டிருப்பதைக்கொண்டதனால் அன்றவாயையும்

வெண்மையாகிய பற்களையும் உடைய பாம்புகள் பயமில்லாமல் மயில்களின் மேல் மயங்கி விழும்படி சலிக்காத பலத்தையுடைய சிங்கமும் பெரிய யானைகளும் பகையில்லாமல் ஒன்றாகச் சேரும் சிறிய உடலினையுடைய மான்களும், புலியினிடமாகச் சேரும் —(எ-று) (௩௪)

மருவியகால்விசைத்தசையாமரக்கண்மலர்ச்சினைசலியா ...*
கருவரைவீழருவிகளுங்கான்யாறுங்கலித்தோடா .. .... *
பெருமுகிலிலைகுலங்கள்புடைபெயர்வொழியப்புனல்சோரா*
விருவிசும்பினிடைமுழங்காவெழுகடலுமிடைதளும்பா .. *

(இதன்பொருள்.)

ஆனையானாது புள்ளாங்குழலினிசைபிறழ்-சஞ்சரிக்கின்ற காற்றானது விசைகொண்டு அசையாமலிருந்தது, மரங்களிலிருக்கும் புஷ்பங்களையுடைய கொம்புகளும் அசையாமலிருந்தன; நுமையாகிய மலைகளிலிருந்து விழுகின்ற அருவிகளும், காட்டாறுகளும்-முழங்கி ஓடாமலிருந்தன, பெரியமேகக்கூட்டங்கள் இடத்ிலிருந்து மற்றொரிடத்திற்குப் போகாதொழிந்து நீர்பொழியாமலிருந்தன-பெருமைபொருந்திய ஆகாயத்தில் முழக்கங்கள் உண்டாகாமலிருந்தன. எழுசமுத்திரமும் நிலைமையிடத்தில்-தளும்பாமலிருந்தன.—(எ-று) (௩௫)

இவ்வாறுநிற்பனவுஞ்சிப்பனவுமிசைமயமாய் .. ..*
மெய்வாழும்புலன்கணிலைமேவியவொன்றுபினவால் .... *
மொய்வாசநறுங்கொன்றைமுடிச்சடையாரடிதொண்டர் *
செய்வாயின்மிசைவைத்தநாகுமுழவாசனையுருக்கு. .... *

(இதன்பொருள்)

இந்தப்பிரகாரம் நிலையாயிருக்கின்ற மரங்கள்-மலைகள்-முதலானவைகளும் சஞ்சரிக்கின்ற மனிதர் விலங்குபட்சி முதலானபொருள்களும் சங்கேதத்தின்மயமாகித்தேவர்களிடமாகிய ஐம்பொறிகளும் அந்தக்காரணங்களுக்கேட்பதில் ஒன்றுபட்டுப்போயினவாசனை மிகுந்த நல்லகொன்றை மலர்மாலையையணிந்த சடைமுடியையுடைய பரமசிவனது பாதத்துக்கு அன்பாகிய ஆனையனார் தமது சிவப்பாகியவாயில் வைத்ததும் அழகுபொருந்திய புள்ளாங்குழலின் நாதமானது உருகச்செய்யப்படியாவது.—(எ-று) (௩௬)

மெய்யன்பர்மனத்தன்பின்விளைந்தவிசைக்குழலோசை.. *
வுவயந்தன்னையுதிறைத்துவனத்தன்வயமாக்கிப் .....*

பொய்யன்புக்கெட்டாதபொற்பொதுவினடம்புரியு..... *
வையமுந்தன்திருச்செவியினருணையப்பெருகியதால் .... *

(இதன்பொருள்.)

மெய்ம்மைபொருந்திய அடியாராகிய ஆனாயனாருடைய மனதிலுள்ள அன்பினால் உண்டாகிய புள்ளாங்குழலின் ஓசையானது பூமியையும் திரப்பி ஆகாயத்தையும் அப்படியே செய்து பொய்யாக அன்புசெய்தலுக்கு எட்டாதபொன்னம்பலத்தில் நடனஞ்செய்தருளுகின்ற நடேசனது திருச்செவியிற்சென்று நிறைந்தது.—(எ-று) (ருஎ)

ஆனாயர்குழலோசைகேட்டருளியருட்கருணை ..... *
தானாயநிருவுள்ளமுடையதவவல்லியுடன் .... *
கானாதிகாரணராங்கண்ணுதலார்விடையுகைத்து ..... *
வானாறுவத்தணைந்தார்மதிநாறுஞ்சடைதாழ .... *

(இதன்பொருள்)

ஆனாயநாயனாருடைய புள்ளாங்குழலினோசையைக்கேட்டு-கிருபைபொருந்திய உள்ளத்தையுடைய தவமிகுந்தபார்வதியோடு ஏழுந்தவனத்தில் எல்லாவற்றிற்கும் ஆதிகாரணராயிருக்கின்ற கைலாசபதி சிவபத்தைநடத்தி ஆகாயமார்க்கத்தில் எழுந்தருளிவந்தார் ஏந்திரன்தங்கிய சடையானது தாழும்படி. (எ-று)

திசைமுழுதுங்கணநாதர்தேவர்கட்குமுன்னெருங்கி .... *
மிசைமிடைந்துவரும்பொழுதுவேற்றொலிகள்விரவாமே.. *
யசையவெழுங்குழலுநந்தனுஞ்செழுந்தாற்றமைப்பாவு ... *
மிசைவிரும்புங்கூத்தனுமொழுந்தருளியெதிர்நின்றார் ..... *

(இதன்பொருள்)

எல்லாத்திசைகளிலும் சிவகணங்கள் தேவர்களுக்கு முன்னாகவந்து நெருங்கி மேலேநிறைந்துவரும்போது மற்றெந்த ஒலிகளும் உண்டாகாமல் அசைந்து எழுகின்ற புள்ளாங்குழலினுடைய நாதத்தில் ஐந்தெழுத்துக்களாலும் தம்மைவிளிந்தோத்திரம்பண்ணுகின்ற பாட்டினை இச்சித்தருளிய சுவாமியெழுந்தருளி யெதிராகநின்றார்—(எ-று) (ருஅ)

முன்னின்றமழவிடைமேன்முதல்வனாரொப்பொழுதுஞ் .. *
சென்றிந்நடனப்பெரியோர்திருக்குழல்வாசனைகேட்க .... *
வித்தின்றநிலையேதம்பாலணைவர்பெணவவரும் .. .. *
மந்திரன்றநிலையெயர்ப்பாணாயர்திருமருங்கணைந்தார் .... *

(இதன்பொருள்.)

இடைமைபொருந்திய திவ்ய[illegible]

திக்கிலாசபதி ஆனையைநோக்கிமனதில் கனக்கமிகுவாகு
பெருமைபொருந்திய அடியார்கள் உனது புள்ளாங்குழலின்
இசையைக்கேட்கும்பொருட்டு இப்பொழுது இவ்விடத்தில்தி
ருப்பூவேதம்மிடத்துக்குவருகவென்று அருளிச்செய்ய அவ
ரும் அம்போதுதமக்குண்டாயிருந்தபிறவித்துன்பத்தை யொ
ழித்தவிரும்பினவராய்ச்சுவாமியினிடஞ் சேர்ந்தார். — (எ-று)

விண்ணவர்கண்மலர்மாரிமிடைந்துலகமெல்லாவிளங்க ... *
வெண்ணிலவருமுனிவர்குழாமிருக்குமொழியெடுத்தேத்த .. *
வண்ணவார்குழற்கருவியருணிசைகூடக்குடன்செலலப் .... *
புண்ணியனு வாழ்த்தருளிப்பொற்பொதுவினிடைப்புகுவார். *

(இதன்பொருள்.)

தேவர்கள்பொழிந்த பலபலவருஷம் புலோகத்தில் நிறைந்து
விளங்க அருமைபொருந்திய அளவற்றமுனிவர்களின் கூட்டங்
கள் வேதவாக்கியங்களால் ஸ்தோத்திரஞ்செய்ய அருகில்ஆனா
யருடு புள்ளாங்குழலைவாசித்துக்கொண்டு உடனேபோகப்பர
மசிவ ஆர் எழுந்தருளிப் பொன்னம்பலத்தில் பிரவேசித்தரு
விரு. — (எ-று) (சஎ)

(வேறு)

நீதுகொள்வினைக்குவாரோன் செஞ்சடைக்கூத்தர்தம்மைக் *
காதுகொள்குவமுகள்விகங்கரிர்நிலவிருள்காள்சீப்ப ..... *
மாதுகொள்புலவிநீக்கு மனையிடையிருகாத்செல்லத் .. * [வார்
ஓதுகொள்பகராதாலைத் தொழுர்புகொண் நிலைமைகொள்

(இதன்பொருள்)

சிவப்பாகியசடையினையுடைய பரமசிவனைச்செவியில்தரித்தி
ருக்கின்ற குண்டலங்கள் பாப்புகின்றதிரணங்களின்பிரகாசமா
னது இருளைப்பற்றுதலைத் துடைக்கப்பரவுதாச்சியார்கொண்ட
பிணக்கினைத்தீர்க்கவல்லவருடையமாளிகைகளு இரண்டுதாம்போ
லுப்படி தாதாக அறுப்புவிளக்கு கத்தாமூர்த்தி சுவாமியேநம்
மையுடுலகைக்கொண்டு தமக்குஉரியராகுவார் (எ-று) (சஎ)

ஆனாயநாயனார்புராணமுற்றிற்று.

இலைமலிந்தசருக்க முற்றுமுற்றிற்று.

திருவிருத்தம் கூறாயிரம்.

பெரியபுராணம்-படல அகராதிகள்.

பக்கம்	அடிவரி	புராணவட்டவணை.	கவிகள்
௧௫	௧௫	பாயிரம்	௩
௭	௨	திருமலைச்சிறப்பு	௪௩
௨௪	௯	திருநாட்டுச்சிறப்பு	௯௫
௪௩	௪	மனுநீதிகண்டபுராணம்	௫௩
௪௩	௫	சேவாசிரியமண்டபச்சிறப்பு	௩௪
௪௫	௬	தடுத்தாட்கொண்டபுராணம்	௨௯௯

இது திருவிருத்தம், ௯௪௪௩.

திருவாரூர்த்தனர்சருக்கம்,

பக்கம்	அடிவரி	புராணவட்டவணை.	கவிகள்
௯௪௩	௧	திருவாரூர்த்தனர்புராணம்	௩
௯௪௪	௨	திருநீலகண்டநாயனார்புராணம்	௪௫
௯௪௨	௯	இயற்பகைநாயனார்புராணம்	௯௬
௨௧௧	௪	இளையான்றன்குடிமாறநாயனார்புராணம்	௨௭
௨௨௨	௫	மெய்ப்பொருள்நாயனார்புராணம்	௨௪
௨௯௯	௬	விறன்மிண்டநாயனார்புராணம்	௩௪
௨௯௮	௭	அமர்நீதிநாயனார்புராணம்	௪௪

இது படலம்-௩௯-இ-திருவிருத்தம்-௫௩௩.
திருவாரூர்த்தனர்சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது-

இலைமலிந்தசருக்கம்.

பக்கம்	அடிவரி	புராணவட்டவணை.	கவிகள்
௨௫௮	௮	எறிபத்தநாயனார்புராணம்	௫௭
௨௮௩	௧௦	ஏனாதிநாயனார்புராணம்	௪௨
௨௯௯	௩	கண்ணப்பநாயனார்புராணம்	௮௪௯
௯௭௪	௩௪	குங்கிலியக்கலையநாயனார்புராணம்	௯௫
௯௮௪	௩௨	மானக்கஞ்சாறநாயனார்புராணம்	௯௭
௯௯௮	௩௯	அரிவாட்டாயநாயனார்புராணம்	௨௯
௪௭௭	௩௪	ஆனாயநாயனார்புராணம்	௪௨

இது படலம்-௭-இ-திருவிருத்தம்-௪௨௩௨
இலைமலிந்தசருக்கம்-முற்றிற்று.

பக்கம்	வரி	பிழை	திருத்தல்
௫	௨௭	னீமழி	னீழி
௭	௩௨	வரியரனென்று	வரியாரனென்று
௩௪	௨௪	படிகளின்வழி	படிகளின்றீண்டவழி
௩௨	௪	யிருகின்றவர் பூதம்	யிருக்கின்றவர் யா } ரொன்பூதம் }
௩௨	௮	தலைவராக	தலைவராகிய
௩௨	௨௨	நீண்ட	நீண்ட [யுடையமுன்
௩௯	௨	மாலையாகமுன்றும்	மாலையாகக்கையை.சுளை
௩௯	௨௫	தாமநிற்ற	தாராநிற்ற [லைகரு
௪ ௫	௩௭	கட்டப்பட்டமாலைக்	கட்டப்பட்ட ஒரு மா
௪௪	௨௪	இருக்கிறவ	இருகின்றன
௪௪	௩௯	துற்றத்தடவனா	துற்றதடவனா
௪௮	௩௫	மாருமிபாதங்களெ	மாருபோதகங்களெ
௪௮	௩௫	போதங்களெங்கும்	போதகங்களெங்கும்
௪௩	௨௯	செய்வார்களால்	செய்வோர்களாய்
௪௭	௮	அர்ப்பிதம்	அர்ப்பணம்
௪௭	௩௩	நிரந்தரமாய்நுளா	நிமந்தமதாய்
௫௨	௨௯	செல்லப்பட்டவ் [ல்	செல்லப்பட்டே
௫௨	௧௪	குப்பரின்	யும்பரின்
௫௫	௩௯	மூதலிய	முதலிய
௫௭	௨௪	பிதால்வவினை	பிதால்வினை
௫௮	௩	பிரபம்	பிரமம்
௫௩	௨௩	பெதைமை	பேதைமை
௫௯	௨௪	சாயத்திரம்	சாயத்தனம்
௬௨	௨௫	சேர்த்து	சேர்த்துக்
௬௨	௨௫	ருடையறுசிகுழந்	ருடையசிறுகுழந்தை
௬௪	௯	யுடையத	யுடைய
௬௪	௨௩	கொவுரு	கோவுரு
௬௯	௩	முத்த	மூத்த
௬௨	௯௩	யாரும்	யாவரும்
௬௭	௮	செய்த	சேய
௭௩௭	௩௪	நிருதகனை	நினைதகனா [லத்தை
௭௩௭	௨௩	நகரத்தை	நினைநகரமெய்ஞ்ஞத்

பக்கம்	வரி	பிழை	திருத்தல்
௩௨௬	௫	பதல்	பத்தல்
௩௬௫	௨௬	சாத்தி	சாத்தி
௩௬௬	௫௮	ஜெயசம்பத்தாகிய	ஜயசம்பத்தாகிய
௩௬௭	௨௪	வெகாப்பத்த	வெகாம்பத்த
௩௬௭	௨௫	ஸ்ரீபகவ்கீதை	ஸ்ரீதன் பகவுள்
௩௬௯	௫௫	வெகிவிகபாகிய	வெகிவிகபாகிய
௩௬௯	௨௨	தலிமாகுவிச	தலிமாக்குவிச
௩௭௫	௩௨	உரிலக்கள்	உரிலவுகள்
௩௭௪	௫௨	பலிகலை	பலிகலை
௩௭௭	௩௬	பொருளியாகத்த	பொருளியாத்தத்
௩௭௯	௪	சேமத்தல்	சேமத்தல்
௩௭௭	௫௪	ஸ்ரீகிருஷ்ணரு	ஸ்ரீகிருஷ்ணரு
௩௭௭	௨	வாகியாகிருஷ்ணரு	வாகியாகிருஷ்ணரு
௩௭௯	௫௫	பனபாபிச	பனபாபிச
௩௭௯	௨	நிலைருட்டு	நிலைருட்டு
௩௭௭	௩௨	பிறருக்கும்	பிறருக்கும்
௩௭௭	௨௪	பேதுர்	பேதுர்
௩௭	௨௭	பேபாரிகவாகி	பேபாரிச்சுவாகி
௩௭௯	௩௭	கிவாரிதிறம்	கிவாரிதிறம்
௩௭௭	௫௪	இவர்கிளாகி	இவர்கிளாகி
௩௭௫	௪	பவண்ணு	பவாணணு [ணுர்
௩	௫	சாய்க்கடென்ணுர்	திரு சாய்க்கடென்
௩௭௭	௫௪	விரவில்	விரைவில
௩௭௭	௨௨	பெய்விகமாகிய	பெய்விகமாகிய
௩௭௯	௭	ரிஷிபவாகதத்தில்	ரிஷிபவாகதத்தில்
௩௭௯	௨	ஆயிதிறம்	ஆயிவவாம்
௩௭௯	௨௭	கோவிமன் றிறஞ்சி	கோவெவன்றிறஞ்சி
௩௭௯	௪	யென்றுவணங்கிஞர்	என்னசெய்வேவென்
௩௭௯	௫௪	பொல்லாங்கை	பொல்லாங்கை [றுவ
௩௨௪	௩௫	சாமர்த்தியத்தினுற்	சாமர்த்தியத்தினுல்
௩௩௪	௪	சோழ	சேர
௩	௨௪	சொல்லிபரம	சொல்லிப்பரம
௩௭௫	௫	ஆகிகள்	ஆகிக்கள்
௩௭௭	௨௫	ரூகயி	ருருயி